

# முஸ்லிம் நூல் தமிழ்

## ஹதீஸ் எண்:1–500

# SAHIH MUSLIM

## TAMIL TRANSLATION

### COMPILED BY ER.SULTHAN

# பொருளடக்கம்


ஈமான் பற்றிய நூல்  ஹதீஸ் எண் : 1 - 100 ......................... 3

ஒளு (சுத்தம்) பற்றிய நூல்  ஹதீஸ் எண:101 - 180 ..........99

ஹைளு (மாதவிடாய்) பற்றி நூல் ........................................ 132

தொழுகை பற்றிய நூல்  ஹதீஸ் எண் : 181 - 400 ........... 147

தொழுகை நூல் ......................................................................... 152

ஜும்ஆவின் பாடங்கள் ஹதீஸ் எண் : 401-420................ 293

இரு பெருநாட்கள், பிரயாணியின் தொழுகை.................. 308

ஜனாஸாவின் சட்டங்கள் பற்றிய நூல் ஹதீஸ் எண் : 441-
-500 ......................................................................................... 320

**ஹதீஸ் எண் : 1**

அப்துல்லாஹ்பின் அப்பாஸ் ரளியல்லாஹூ அன்ஹூ அவர்களுக்கும் ஜனங்களுக்கும் மத்தியில் மொழி பெயர்ப்பாளராக நான் (அபிஜம்ரா) இருந்தேன். ஒரு பெண் அவர்களிடம் வந்து ஈத்தம்பழம், திராட்சை ஆகியவற்றின் சாறுகளை ஊறவைக்கப் பயன்படுத்தப்படும் களிமண்ணால் ஆக்கப்பட்ட பானைகளைப் பற்றிக்கேட்டனர். அதற்கவர்கள் (கீழ்கண்ட சம்பவத்தைப் கூறினார்கள்)

நிச்சயமாக அப்துல் கைஸ் கூட்டத்திலிருந்து ஒரு குழுவினர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தனர். இக் குழுவினர் (அல்லது இம்மக்கள்) யார்? என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டனர். 'ரபிஆ' என அவர்கள் கூறினார்கள். இழிவுபடுத்தப்படாமலும் கைசேதமில்லாத நிலையிலும் இக்குழுவினருக்கு அல்லது இம்மக்களுக்கு நல்வரவு உண்டாகட்டும் என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் (முகமன்) கூறினார்கள் (அப்போது அக்குழுவினர்)

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் நீண்ட கடுமையான பயணத்தை மேற்கொண்டு உங்களிடம் வருகிறோம். உங்களுக்கும் எங்களுக்கும் மத்தியில் 'முளர்' (இனத்தைச் சார்ந்த) காபிர்கள் (தடையாக) உள்ளனர். (ஆகவே) போர் செய்வது தடை செய்யப்பட்ட புனித மாதங்கள் தவிர (மற்ற நேரத்தில்) உங்களிடம் வர இயலாதவர்களாக நாங்கள் இருக்கின்றோம். (எனவே) தெளிவான கட்டளைகளை எங்களுக்கு இடுங்கள். எங்களுக்கு அப்பால் இருப்பவர்களுக்கும் நாங்கள் அதைப்பற்றிச் சொல்வோம். அதன் மூலம் நாங்களும் சுவனம் புகுவோம் என்றனர்.

(நபி ஸல்லல்லாஹ்ஹ அலைஹி வஸல்லம்) அவர்கள் நான்கு காரியங்களை (ச் செய்யுமாறு அவர்களுக்கு கட்டளையிட்டனர் நான்கு காரியங்களை (தவிர்த்துக் கொள்ளுமாறு) தடுத்தனர்.
அல்லாஹ்வை  அவன் தனித்தவன் என விசுவாசம் கொள்ளுமாறு அவர்களுக்கு கட்டளையிட்டனர். அல்லாஹ்வை அவன் தனித்தவன் என விசுவாசம் கொள்வது என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கேட்டனர். அதற்கு (அக்குழுவினர்) 'அல்லாஹ்வும் அவனது தூதரும் மிகத் தெரிந்தவர்கள்' என்றனர். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும்  நிச்சயமாக முஹம்மது அவர்கள் அல்லாஹ்வின் தூதர் எனவும் (உறுதியான நம்பிக்கைக் கொண்டு) சாட்சி கூறுவதும், தொழுகையை நிறைவேற்றுவதும், ஜகாத்தை வழங்குவதும், ரமளானில் நோன்பு நோற்பதும், போரில் கிடைத்த பொருட்களில் ஐந்தில் ஒரு பங்கை வழங்குவதுமாகும் என்றனர்.
மது தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சுரைக்குடுக்கைகள், பச்சை நிறம் பூசப்பட்ட ஜாடிகள், தார் பூசப்பட்ட பாத்திரங்கள், மரக்கட்டைகளின் அடிபாகங்களை குடைந்து (செய்து எடுக்கப்பட்ட பாத்திரங்கள் (-என அநேகமாக கூறியிருக்கலாம் என ஷுஃபா கூறினார்) ஆகிய நான்கு வகைப் பாத்திரங்களை உபயோகப்படுத்துவதை தடைசெய்தனர்.
மேலும் இவற்றைப் பேணிக்கொள்ளுங்கள், உங்களுக்கு அப்பால் உள்ளவர்களுக்கும் இதுபற்றி தெரிவித்துவிடுங்கள் எனக் கூறினார்கள்.
(மேற் கூறப்பட்ட ஹதீஸைப்பற்றி) இப்னு முஆத் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் தனது ஹதீஸில் தனது தந்தை அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அப்துல்கைஸ் கூட்டத்தைச் சேர்ந்த அஷஜ்ஜீ என்பவரை நோக்கி, நிச்சயமாக உம்மிடம் அல்லாஹ் விரும்பும் இரண்டு குணங்கள் உள்ளன. அவை பொறுமையும் 1நிதானமும் ஆகும் என கூறினார்கள் என 2அறிவித்ததாகக் கூறுகிறார்.

அறிவிப்பவர் : அபீஜம்ரா ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு : 1 'ஹில்மு' என்ற வார்த்தைக்கு 'பொறுமை' என்பது பொருளாகும். ஒரு சில அறிஞர்கள் 'அறிவு' எனவும் பொருள் கொள்கின்றனர்.
2இப்னு முஆத் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பில் இவ்வார்த்தையை அதிகமாகக் கூறியுள்ளார்.

## ஹதீஸ் எண் : 2

ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனங்களுக்கு மத்தியில் இருந்தார்கள். (அப்போது) ஒரு மனிதர் அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! 'ஈமான்' என்றால் என்ன? எனக்கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் 'அல்லாஹ்வையும் அவனது (மலக்குகளை) அமரர்களையும், அவனது வேதத்தையும், அவனது சந்திப்பையும், அவனது தூதர்களையும் நம்பிக்கை கொள்வதும், இறுதியாக எழுப்பப்படுவோம் என்பதை நீ நம்பிக்கை கொள்வதுமாகும்' என்றனர்.
அல்லாஹ்வின் தூதர் அவர்களே! 'இஸ்லாம்' என்றால் என்ன? என (வந்திருந்தவர்) கேட்டார். (அதற்கு) அல்லாஹ்வின் தூதர் அவர்கள் 'அல்லாஹ்வை நீ வணங்குவதும், அவனுக்கு நீ எதையும் கூட்டாக்காமல் இருப்பதும், விதியாக்கப்பட்ட தொழுகைகளை நீ நிறைவேற்றுவதும், விதியாக்கப்பட்ட ஜகாத்தை நீ நிறைவேற்றி வருவதும், ரமளானில் நீ நோன்பு நோற்பதுமாகும்' என்றனர்.
'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இஹ்ஸான் என்றால் என்ன என (வந்திருப்பவர்) கேட்டார். (அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள்) நிச்சயமாக நீர் அல்லாஹ்வைக் காண்பது போன்றே வணங்குவதாகும். நிச்சயமாக நீர் அல்லாஹ்வைப் பார்க்கவில்லையாயினும், அல்லாஹ் நிச்சயமாக உம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்' என்றனர்.
(வந்திருந்தவர்) 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ('கியாமத்' எனப்படும்) இறுதி நாள் எப்போது'? எனக் கேட்டனர். (அதற்கு

அல்லாஹ்வின் தூதர் அவர்கள்) 'கேட்டவரை விட கேட்கப்படுபவர் இது பற்றி மிக அறிந்தவரல்லர். ஆயினும் அதன் அடையாளங்களைப் பற்றி உமக்கு அடுத்து அறிவிக்கிறேன் (எனக்கூறி) அடிமைப்பெண் தனது எஜமானனைப்பெற்று விடுவாளாயின் அது அந்நாளின் அடையாளங்களில் உள்ளதாகும். ஆடையில்லாதவர்களும் காலில் செருப்பணியாதவர்களும் மக்களுக்குத் தலைவர்களாக ஆகிவிடுவார்களாயின் அது(வும்) அந்நாளின் அடையாளங்களில் உள்ளதாகும். ஆடு மேய்த்துத் திரிபவர்கள் மிக உயர்ந்த நீண்ட கட்டிடங்களுக்கு உரிமையாளர்களாகி விடுவார்களாயின் அது(வும்) அந்நாளின் அடையாளங்களில் உள்ளாதாகும். (இன்னும்) ஐந்து விஷயங்கள் - அவைகளை அல்லாஹ்வையன்றி வேறு யாரும் அறியமாட்டார்கள்' (எனக் கூறிவிட்டு) பிறகு 'நிச்சயமாக அல்லாஹ்விடமே இறுதிநாள் பற்றிய அறிவு உண்டு. அவனே மழையை இறக்கி வைக்கிறான். மேலும் கர்ப்பங்களில் உள்ளவற்றையும் அவனே அறிகிறான். எந்த ஆத்மாவும் நாளை எதைச் செய்யும் என அதற்கு தெரியாது. எந்த ஆத்மாவும் பூமியில் இறப்பெய்தும் என்பதையும் அது அறியாது. நிச்சயமாக அல்லாஹ் நன்கறிந்தவனாகவும் (செய்திகளை) அறிவிப்பவனாகவும் இருக்கிறான்' அல்குர்ஆன் : 31: 34 என்ற வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

அதன் பிறகு (வந்திருந்த அந்த ) மனிதர் திரும்பச் சென்றுவிட்டார். அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் 'அந்த மனிதரை மீண்டும் என்னிடம் அழைத்து வாருங்கள்' என்றனர். அவரைத் திரும்ப அழைத்துவரச் சென்றவர்கள் யாரையும் (அம்மனிதரைக்) காணவில்லை என்றனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'இவர்கள்தான் (வந்து சென்றவர்தான்) ஜிப்ரீல், மனிதர்களுக்கு அவர்களது மார்க்கத்தைக் கற்றுத்தருவதற்காக வந்தனர்' என்றார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## ஹதீஸ் எண் : 3

அபூதாலிபின் மரணவேளையின்போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அவரிடம் வந்தார்கள். அவரிடத்தில் அபூஜஹ்லும், அப்துல்லாஹ் பின் அபீஉமய்யா பின் முகிராவும் (அங்கே) இருக்கக் கண்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் அவர்கள், 'என் தந்தையின் சகோதரரே! 'லாஇலாஹ இல்லல்லாஹ்' எனக் கூறுவீராக! இக்கலிமாவைக் கொண்டு உமக்காக அல்லாஹ்விடம் சாட்சி கூறுவேன்' என்று கூறினார்கள்.

அப்துல் முத்தலிபுடைய மார்க்கத்தை விட்டும் அபூதாலிபே நீர் புறக்கணிக்கிறீரா ? என அபூஜஹ்லும், அப்துல்லாஹ் பின் உமைய்யாவும் கூறினர். அவருக்கு அ(க்கலிமாவை)தை எடுத்துக்காட்டி திரும்பத்திரும்ப அக்கூற்றைக் கூறிக்கொண்டே அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இருந்தனர். எதுவரையெனில், அவர்களோடு கடைசியாக அபூதாலிப், அப்துல் முத்தலிப்பின் மார்க்கத்தில் தான் இருப்பதாக கூறிவிட்டு லாஇலாஹ இல்லல்லாஹ்வை கூற மறுத்துவிட்டதாக கூறும்வரையாகும். அதன்பின் அல்லாஹ்வின் தூதர் அவர்கள், 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உம் விஷயத்தில் நான் (இறைவனால்) தடுக்கப்படாத வரையிலும் உமக்காக நான் பாவமன்னிப்புத் தேடுவேன் என்பதை நீர் தெரிந்துகொள்வீராக!' எனக் கூறினார்கள். அப்போது கண்ணியமும் மரியாதைக்குமுரிய அல்லாஹ், நிச்சயமாக! அ(இணைவைப்ப)வர்கள் நரகத்தை உடையவர்கள்தான் என்பது தெளிவானபிறகு, நபியவர்களோ, விசுவாசிகளோ அந்த இணைவைப்பவர்களுக்காக - அவர்கள் நெருங்கிய உறவினர்களாயிருப்பினும் (சரியே) - பாவமன்னிப்பு கேட்பது கூடாது என்ற வசனத்தை இறக்கிவைத்தான்.

அபூதாலிபின் விஷயத்தில், உயர்வான அல்லாஹ், தனது தூதர் அவர்களுக்கு:

'நீர் விரும்பியவர்களை நேரான வழியில் செலுத்திட நிச்சயமாக உம்மால் முடியாது. எனினும் அல்லாஹ் தான் விரும்பியவர்களை நேர்வழியில் செலுத்துகிறான். அவனே,

நேர்வழி பெற்றவர்கள் யார்? என்பதை மிகவும் நன்கறிந்தவனாக இருக்கிறான்' என்ற வசனத்தை இறக்கிவைத்தான் என ஸயீது பின் அல்முஸய்யிப் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் தன் தந்தை அறிவித்ததாகக் கூறுகிறார்.

'லாஇலாஹ இல்லல்லாஹ் என அவர்கள் கூறும் வரை ஜனங்களோடு போர் செய்யுமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்' என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண ;: 4

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இறப்பெய்தியபின், அவர்களுக்கு பிறகு அபூபக்கர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்டனர். அரபியர்களில் நிராகரிப்பவர்கள் (ஜகாத்தை கொடுக்க மறுத்ததன் மூலம்) நிராகரித்துவிட்டனர்.1

உமர் பின் கத்தாப் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் அபூபக்கர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்களைப் பார்த்து, 'அல்லாஹ்வின் தூதர் அவர்கள் லாஇலாஹ இல்லல்லாஹு (வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறெவருமில்லை) என அவர்கள் கூறும்வரை அவர்களோடு போர் செய்யுமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். 'யார் லாஇலாஹ இல்லல்லாஹு' எனக் கூறிவிட்டாரோ? அவர் என்னிலிருந்து அவரது பொருளையும் உயிரையும் காப்பாற்றிக் கொண்டவராவார். அந்த உரிமையைக் கொண்டல்லாமல் அவருடைய கணக்கும் அல்லாஹ்விடம் உள்ளது. எனக் கூறியிருக்க நீங்கள் எவ்வாறு ஜனங்களோடு போர் செய்வீர்கள்'? எனக் கேட்டார்கள்.

யார் தொழுகைக்கும், ஜகாத்துக்குமிடையில் வித்தியாசத்தைக் கற்பித்தாரோ, அவரோடு நான் போர் செய்வேன் (காரணம்) நிச்சயமாக ஜகாத், பொருளின் மீதுள்ள உரிமையாகும். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் (ஜகாத்தாக) கொடுத்து வந்த ஒட்டகம் கட்டுகின்ற கயிறைக்கூட தடுப்பார்களேயாயின், அதை அவர்கள் தடுத்துக்கொண்டதற்காக

போர் செய்வேன்?' என அபூபக்கர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் கூறினார்கள்.
இதைக் கேட்ட உமர் பின் கத்தாபு ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள், 'அல்லாஹ் மீது சத்தியமாக! அபூபக்கர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்களின் மனதை அல்லாஹ் போர் செய்யத் தெளிவு செய்துவிட்டான் என்பதைத் தவிர வேறெதையும் நான் காணவில்லை. அதோடு அவர்களின் கூற்று உண்மை எனவும் தெரிந்துகொண்டேன்' எனக் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு: 1இறை நிராகரிப்பு செய்து மதம் மாறிவிட்டவர்கள் இரு சாராராக இருந்தனர். மார்க்கத்தை தூக்கி எறிந்து விட்டு மதம் மாறி இறை நிராகரிப்பிற்கே திரும்பிவிட்ட அவர்களைப்பற்றித்தான் 'அரபிகளில் நிராகரிப்பவர் நிராகரித்துவிட்டனர்' என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். இவர்களில் இரு கூட்டத்தவர் இருந்தனர்.
1. பனி ஹனிபாவைச் சார்ந்த முஸைலமா என்பவனைச் சார்ந்தவர்கள், அவனது நபித்தத்துவத்தை உண்மை என நம்பியவர்கள்: இவர்கள் ஒரு சாரார்
2 யமனைச் சேர்ந்த அஸ்வது அல் அன்ஸியை நபி என ஏற்றுக்கொண்டவர்கள்: இவர்கள் மற்றொரு சாரார்.
இவ்விரு சாராருமே நபி முகம்மது ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவத்தை நிராகரித்து காபிர்களாகி விட்டவர்கள்.
அபூபக்கர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள், இவ்விரு சாராரோடு போர் செய்து, முஸைலமாவை அல்லாஹ் யமாமாவில் வைத்தும், அல் அனஸியை, ஸன்ஆவில் வைத்தும் (அபூபக்கர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் மூலமாக) கொன்று விட்டான். அதன் தொடரில் அவ்விருவரை சார்ந்தோர்கள் எல்லோரும் சிதறடிக்கப்பட்டுவிட்டனர்.
மூன்றாவது கூட்டதினர், தொழுகைக்கும் ஜகாத்திற்கும் வித்தியாசம் கற்பித்து தொழுகையை மட்டும் ஏற்றுக்கொண்டு ஜகாத்தை மறுத்தனர். இவர்கள் அனைவரோடும் அபூபக்கர்

ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் போர் செய்து சத்திய இஸ்லாத்தின் சகல கடமைகளையும் நிலைநாட்டிவிட்டனர். அல்லாஹ் அவர்களுக்கு மகத்தான நற்கூலியை நல்குவானாக! ஆமீன்.

**ஹதீஸ் எண் : 5**

'வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லையென்றும், நிச்சயமாக முகம்மது ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் அவர்கள் சாட்சியம் கூறி (மேலும்) தொழுகையையும் நிறைவேற்றி ஜகாத்தையும் கொடுக்கின்ற வரையிலும் நான் ஜனங்களோடு போர் செய்யும்படியாக கட்டளையிடப்பட்டுள்ளேன். ஜனங்கள் இதைச் செய்வார்களாயின் என்னிலிருந்து அவர்கள், தமது உயிரையும் பொருளையும் பாதுகாத்துக் கொண்டவர்களாவார்கள். அதன் உரிமையைக் கொண்டல்லாது அவர்களின் கணக்கும் அல்லாஹ்விடமே இருக்கிறது.' என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : இப்னு உமர் பின் அல்கத்தாபு ரளியல்லாஹு அன்ஹுமா

**காபிர்களில் உள்ள ஒரு மனிதரை 'லாஇலாஹ இல்லல்லாஹு' என அவர் கூறிய பிறகு அவரைக் கொன்றுவிட்டால் அவரின் நிலை என்ன என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண ;: 6**

'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! காபிர்களில் ஒரு மனிதரை நான் சந்திக்க நேர்ந்தது அவர் என்னை கொலை செய்ய முயற்சித்து, வாளால் எனது இருகைகளில் ஒரு கையையும் அவர் வெட்டிவிடுகிறார். அதன் பிறகு ஒரு மரத்தின்பால் ஒதுங்கி என்னிடம் பாதுகாப்புத் தேடியவராக, 'இறைவனுக்காக முற்றிலும் என்னை நான் ஒப்படைத்து (இஸ்லாத்திலாகி)விட்டேன்' என்கிறார். அவ்வாறு அவர் அவ்வார்த்தையை கூறியபிறகு நான் அவரை கொல்லலாமா?. என (அல்மிக்தாது பின் அல் அஸ்வது) நான் கூறினேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், 'அவரைக் கொல்ல வேண்டாம் '

என்றனர். அப்போது நான், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிச்சயமாக அவர் என் கையை அவர் துண்டித்துவிட்டார். அவ்வாறு துண்டித்துவிட்ட பிறகு அவ்வார்த்தையைக் கூறுகிறார். (ஆகவே) நான் அவரைக் கொல்லலாமா?' எனக் கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள், 'அவரைக் கொல்லக்கூடாது. காரணம் அவரை நீர் கொன்று விட்டால், அவரைக் கொல்வதற்கு முன்பே அவர் உன் ஸ்தானத்திற்கு (இஸ்லாத்திற்கு) வந்துவிடுவார் மேலும் அவர் எந்த வார்த்தையை கூறினாரோ, அதைக் கூறுவதற்கு முன் அவர் இருந்த இடத்தில் (காபிராக) நீர் ஆகிவிடுவீர் ' எனக் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அல்மிக்தாது பின் அல் அஸ்வது ரளியல்லாஹு அன்ஹு
அவ்ஜாஇய்யி, இப்னு ஜுரைஜ் இவ்விருவரின் ஹதீஸில் 'இறைவனிடம் என்னை நான் ஒப்படைத்து விட்டேன்' எனவும், மஃ;மரில் ஹதீஸில், 'அவரைக் கொல்ல நான் எத்தனித்த போது லாஇலாஹ இல்லல்லாஹு எனக் கூறினார்' எனவும்

வந்துள்ளது.

**ஹதீஸ் எ ண் : 7**

மூன்று பேர் கொண்ட ஒரு குழுவாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களை அனுப்பி வைத்தார்கள். நாங்கள் அதிகாலையில் ஜுஹைனா என்ற ஊரிலுள்ள ருகாத் என்ற இடத்தை அடைந்தோம். அப்போது ஒரு மனிதரை நான் (உஸாமா) சந்தித்தேன். அவர் லாஇலாஹ இல்லல்லாஹு எனக் கூறினார். அப்போது அவரை நான் தாக்கினேன். அந்த சம்பவம் என் மனதில் ஆழமாக பதிந்துவிட்டது. (பின்னர்) அச்சம்பவத்தை நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் நினைவு படுத்தினேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் லாஇலாஹ இல்லல்லாஹு எனக் கூறியவரை கொலை செய்து விட்டீரே! என்றார்கள்.

'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆயுதத்திற்கு பயந்து அவ்வாறு (அதை) அவர் சொல்லியிருக்கலாம் ' என்றேன். 'அவர் அதற்காகத்தான் சொன்னாரா? இல்லையா? எனத் தெரிந்துகொள்ள அவர் இதயத்தை நீர் பிளந்து பார்த்திரா? என திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டே இருந்தனர். அன்றைய தினம் நான் முஸ்லிமாகி இருக்கக் கூடாதா? (அவ்வாறு இஸ்லாத்தை ஏற்றிருந்தால் இதற்கு முன் ஏற்பட்ட இப்பாவம் மன்னிக்கப்பட்டு விடுமே) என (நினைத்து) ஆசைப்பட்டேன்.

(அப்போது) ஸஅது அவர்கள் 'அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உஸாமா கொலை செய்யும்வரை ஒரு முஸ்லிமை நான் கொல்லமாட்டேன்'; என்று கூறினார்.

(அப்போது மற்றொரு) மனிதர் 'எந்த குழப்பமும் இல்லாமலாகி மார்க்கம் முழுவதும் இறைவனுக்காக ஆகும்வரை அவர்களை கொல்லுங்கள்,' என அல்லாஹ் கூறவில்லையா? எனக் கேட்டார். (அதற்கு) எந்த குழப்பமும் இல்லாமல் ஆவதற்காக வேண்டி நாங்கள் கொலை செய்தோம். நீரும் உமது தோழர்களும் குழப்பங்களை உண்டாக்குவதற்கென்றே போர் செய்துள்ளீர்கள்.' என ஸஅது ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் (பதில்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : உஸாமா பின் ஸைது ரளியல்லாஹு அன்ஹுமா

**ஹதீஸ் எண் : 8**

இப்னு ஜுபைரின் குழப்ப காலத்தில் ஜுன்துப் பின் அப்துல்லாஹ் அல் பஜலி என்பவர், அஸ்அஸ் பின் ஸலாமாவின்பால் (ஒருவரைத் தூது) அனுப்பி 'உமது சகோதரர்களில் சிலரை அழைத்து ஒன்றாக சேர்ப்பீராக! நான் அவர்களுக்கு ஒரு செய்தியை அறிவிக்க வேண்டும்' என்ற செய்தியை, அறிவிக்க செய்தார். பின்னர் ஒரு தூதரை (தமது சகோதரர்களில் ஒருவரை) அவர்களின்பால் அஸ்அஸ் அனுப்பி வைத்தார்.

அவர்களெல்லாம் ஒன்றாக கூடியிருந்தபோது, ஜுன்துப் அங்கே வந்தார். அவர் தலையோடு சேர்த்து அணிந்துகொள்ளும் மஞ்சள் நிற ஜிப்பா அணிந்திருந்தார். ' நீங்கள் பேச வேண்டியவைகளை பேசிக்கொள்ளுங்கள் ' என்றார். அவர்கள் பேசிக்கொண்டிருந்த

போது தலையுறையை அகற்றி விட்டு, 'நிச்சயமாக உங்கள் நபியவர்களை பற்றியல்லாது வேறெதையும் உங்களுக்கு அறிவிக்க நான் விரும்பவில்லை. (அதற்காகத்தான்) உங்களிடத்தில் வந்தேன்' என்றார். பின்னர் கீழ்கண்டவாறு செய்தி அறிவித்தார்.

'நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் முஷ்ரிகீன்களில் ஒரு சாரரின்பால் ஒரு குழுவை அனுப்பிவைத்தனர். நிச்சயமாக அவர்கள் (போர் முனையில்) சந்தித்து கொண்டனர். முஷ்ரிகீன்களில் ஒருவன் முஸ்லிம்களில் யாரைக் கொல்ல வேண்டும் என்று விரும்பினானோ அவரிடம் நெருங்கி அவரைத் தாக்கி, கொன்று விட்டான். (அதைப்போன்றே) முஸ்லிம்களில் ஒருவர் (முஷ்ரிகீன்களில் ஒருவரைத் தாக்க) சந்தர்ப்பம் பார்த்து வாளை உயர்த்துகிறார். அவர்தான் உஸாமா பின் ஸயிது என நாங்கள் எங்களுக்குள் பேசிக்கொண்டோம். அப்போது அவன் (முஷ்ரிக்) லாஇலாஹ இல்லல்லாஹு எனக் கூறினான். (அதன்பிறகு) அவர் (உஸாமா) அவனைக் கொன்று விடுகிறார்'.

'செய்தி சொல்பவர் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார். அவரிடம் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் செய்தி கேட்டபோது அந்த மனிதர் (உஸாமா) எவ்வாறு செய்தாரோ (கொன்றாரோ) அந்த செய்தியை நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தெரிவித்தார். அப்போது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த மனிதரை அழைத்து, 'நீர் அவரை ஏன் கொலை செய்தீர்?' எனக் கேட்டார்கள். (அதற்கவர்) 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவன் முஸ்லிம்களில் பலரை சங்கடப்படுதினார்.' சில நபர்களின் பெயரைக் குறிப்பிட்டு சொல்லி 'இன்னின்னவரை கொலையும் செய்து விட்டார். (எனவேதான்) அவரை நான் உறுதியாகத் தாக்கினேன். வாளைப்பார்த்த பின்னர்தான் லாஇலாஹ இல்லல்லாஹு எனக் கூறினார்.' என்றுறைத்தார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'அவரைக் கொலை செய்தீரா?'

எனக் கேட்டார்கள். அதற்கவர் ஆம் என்றார். 'மறுமை நாளில் (அவர் இஸ்லாம் ஆகிவிட்டார் என்று) லாஇலாஹ இல்லல்லாஹு (வாதம் செய்ய)வருமேயானால் அதனோடு நீ என்ன செய்வாய்?' என்றார்கள்.
அதற்கவர் 'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! எனக்காக பாவமன்னிப்பு கேட்பீர்களாக! ' என்றுறைத்தார்.
'லாஇலாஹ இல்லல்லாஹுஷ என்பது மறுமையில் வந்தால் என்ன செய்வீர ' என்று கேட்டார்கள் (அதாவது) லாஇலாஹ இல்லல்லாஹு என்பது மறுமையில் வந்தால் அதனோடு என்ன செய்வீர?' என்று கூறினார்கள், அதைவிட வேறு எதையும் அதிகமாக சொல்லவில்லை.
அறிவிப்பவர் : ஸஃப்வான் பின் முஹ்ரிஜ் ரளியல்லாஹு அன்ஹு

**சந்தேகமின்றி ஈமான் கொண்ட நிலையில் உயர்வான அல்லாஹ்வை யார் சந்திக்கின்றாரோ? அவர் சுவனம் புகுந்து விட்டார் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 9**

'வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறெவருமில்லை என உறுதியாக தெரிந்தவராக (விசுவாசம் கொண்டு) யார் இறப்பெய்திவிட்டாரோ, அவர் சுவனம் புகுந்துவிடுவார். ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உஸ்மான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**ஹதீஸ் எண் : 10**

ஷதபூகூஷ யுத்தம் நடந்தபோதுஇ மக்களுக்கு கடும்பசி ஏற்பட்டது. அப்போது நபித்தோழர்கள் "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் அனுமதி அளித்தால் தண்ணீர் சுமக்கும் ஒட்டகைகளை அறுத்து உண்ணலாம். (அதன் கொழுப்பை) எண்ணெய்யாக நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் " என்று கூறினார்கள். "அவ்வாறே செய்து கொள்ளுங்கள் " என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். உடனே உமர் ரளியல்லாஹு

அன்ஹு அவர்கள் வந்து “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவ்வாறு செய்தால் வாகனப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும் எனினும் அவர்களிடம் எஞ்சியுள்ள உணவுகளை கொண்டு வரச்செய்து அதில் அவர்களுக்கு பரக்கத் (அபிவிருத்தி) ஏற்படுமாறு அல்லாஹ்விடம் நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள் அதில் அல்லாஹ் அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடும் என (உமர் ரளியல்லாஹ் அன்ஹு ) அவர்கள் கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஆம் என்று கூறிவிட்டு ஒரு தோல் விரிப்பபை எடுத்து வரச் செய்து அதை விரித்தனர். பின்னர் அவர்களிடம் எஞ்சியிருந்த உணவுகளை கொண்டு வருமாறு கூறினார்கள். சிலர் கையளவு முத்துச்சோளம் கொண்டு வந்தனர். சிலர் கையளவு பேரித்தம்பழங்களை கொண்டு வந்தனர். மற்றும் சிலர் ரொட்டித்துண்டுகளைக் கொண்டு வந்தனர். இப்படியாக விரிப்பில் சிறிதளவு உணவுப் பொருட்கள் சேர்ந்தன. அபிவிருத்திக்காக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஷதுஆஷ செய்தனர். ’உங்கள் உணவுப்பைகளில் நிரப்பிக்கொள்ளுங்கள் ’ என்று கூறினார்கள். எல்லோரும் அவரவர்களின் பாத்திரங்களில் நிரப்பிக்கொண்டனர். எதுவரை எனில் போர்களத்திலிருந்த எந்த பாத்திரத்தையும் நிரப்பாது அவர்கள் விட்டுவைக்கவில்லை. வயிறு நிரம்ப சாப்பிட்டனர். பின்னரும் சிறிது மீதமிருந்தது. அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ’வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை என்றும், நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதர் என்றும் உறுதியாக நம்பி, எவ்வித சந்தேகமும் கொள்ளாமல் ஒரு அடியான் அல்லாஹ்வை சந்தித்தால் சுவர்க்கத்தைவிட்டும் அவன் தடுக்கப்படமாட்டான். ’ என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஸஈத் அல் குத்ரி ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 11**

உபாதா பின்ஸாமித் மரணிக்கும் தருவாயில் இருந்தபோது அவரிடம் நான் (அஸ்ஸீனாபிஹி) சென்று அழுதேன்.

’பொறுத்திரு! ஏன் அழுகிறாய். அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் சாட்சியாக்கப்பட்டால், நிச்சயமாக உனக்காக சாட்சி கூறுவேன். நான் பரிந்துரை செய்விக்கப்பட்டால், நிச்சயமாக உனக்காக பரிந்துரைப்பேன். என்னால் முடிந்தால், நிச்சயமாக! உனக்கு பயனாக இருப்பேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் இருந்து கேட்ட, எந்த ஹதீஸையும் நான் அறிவிக்காமல் இருந்ததில்லை ’ஒரே ஒரு ஹதீஸைத்தவிர. இன்றைய தினம் அதை உங்களுக்கு நான் அறிவிக்கிறேன். நிச்சயமாக எனக்கு மரணம் நெருங்கிவிட்டது ’.

’வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும், நிச்சயமாக முகம்மது ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் யார் சாட்சி கூறினாரோ, அவர் மீது நரகத்தை அல்லாஹுத்தஆலா ஹரமாக்கி விட்டான். இன்று அவர்கள் சொல்லிக்கொண்டிருக்க நான் செவியுற்றேன் ’ என்பதாக உபாதா பின்ஸாமித் ரளியல்லாஹு அன்ஹு கூறினார்கள்.

அறிவிப்பவர் : அஸ்ஸீனா பிஹி ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 12**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களைச் சுற்றி நாங்கள் அமர்ந்திருந்தோம். சுயீல நபர்களோடு எங்களுடன் அபூபக்கருக்கும், உமரும் இருந்தனர். எங்களிடமிருந்து அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து சென்றார்கள். அவர்கள் திரும்பிவர தாமதமானது. எங்களது எதிரிகளினால் அவர்கள் சங்கடப்படுத்தப்படுவார்களோ எனப் பயந்து திடுக்கமுற்று எழுந்தோம். அவ்வாறு திடுக்கிட்டவர்களில் முதலாமவனாக நான் (அபூஹுரைரா) இருந்தேன். ஆகவே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை தேடிக்கொண்டு பனின்னஜ்ஜார் கிளையிலுள்ள அன்சாரி ஒருவருக்குரிய தோட்டத்தை வந்து அடைந்தேன். அதற்கு எங்கேயும் வாசல் இருக்கிறதா ? என்று தேடிப்பார்த்தேன்.

காணவில்லை. வேலியில் இருந்த கிணற்றிலிருந்து கால்வாய் ஒன்று சுவற்றின் துவாரத்தின் வழியாக நுழைவதைக் கண்டேன். குள்ளநரியைப்போன்று என்னை ஒடுக்கிக்கொண்டு (அதில் நுழைந்து) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தடைந்தேன். 'அபூஹுரைராவா?' எனக் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆம் என்றேன். என்ன செய்தி? எனக் கேட்டார்கள். 'எங்களுக்கு மத்தியிலிருந்து எழுந்து சென்ற நீங்கள் (திரும்பி) வரத் தாமதமானதால் உங்களுக்கு, இணைவைப்பவர்களால் ஏதேனும் சங்கடம் ஏற்பட்டு இருக்குமோ! என்று நாங்கள் பயந்தோம். திடுக்கிட்டு எழுந்தவர்களில் நான் முதலாமவன். ஆகவே இந்த தோட்டத்திற்கு வந்து குள்ளநரி ஒடுங்குவது போன்று ஒடுங்கி உள்ளே நுழைந்து விட்டேன். ஜனங்களெல்லாம் எனக்கு (சுவற்றிற்கு) அப்பால் உள்ளார்கள். அபூஹுரைராவே! என அழைத்து அவர்களது இரு காலணிகளையும் (தம்மைப் பார்த்ததற்கு அடையாளமாக) கொடுத்து இவ்விரு காலணிகளையும் கொண்டு செல்வீராக! வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்பதை மனதால் உறுதி கொண்டு சாட்சி கூறும் எவரையாவது நீர் இந்த சுவற்றுக்கப்பால் சந்தித்தால் அவருக்கு சுவனத்தைக் கொண்டு நற்செய்தி கூறுவீராக! என்றனர்.

(அதற்குப் பிறகு) முதலில் நான் சந்தித்த மனிதர் உமராவார். (உமர் அவர்கள் என்னைப் பார்த்ததும்) 'அபூஹுரைராவே! இந்த இரு பாதஅணிகள் என்ன?' என்று கேட்டார்கள். இவை இரண்டும் அல்லாஹ்வின் தூதருடைய காலணிகளாகும். இவ்விரண்டையும் கொடுத்து என்னை அனுப்பினார்கள். லாஇலாஹ இல்லல்லாஹு என மனதால் உறுதிகொண்டு சாட்சி கூறுபவரை நான் சந்தித்தால் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி கூறுவேன் என்றேன்.

உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் எனது நடுமார்பில் அடிக்க நான் பின்புறமாக கிழே விழுந்தேன். 'அபூஹுரைராவே! நீர் திரும்பிச்செல்லும்' என்றனர். அதன்பின் அல்லாஹ்வின்

தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் திரும்பிச் சென்று அழுதவாறு சேர்ந்தனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அபூஹுரைராவே! உமக்கு என்ன நேர்ந்தது? என்றனர். 'உமரை சந்தித்தபோது எதைக் கொண்டு செல்லுமாறு கூறினீர்களோ அதைத் தெரிவித்தேன். என் நடுமார்பில் ஓர் அடி அடித்தார். பின்புறமாய் நான் விழுந்துவிட்டேன்' திரும்பிச் செல் என என்னிடம் அவர் கூறினார். உமர் அவர்களைப் பார்த்து 'இவ்வாறு செய்ய உம்மைத் தூண்டியது எது?' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டதற்கு 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய பெற்றோர் தங்களுக்கு அர்பணமாகட்டும். லாஇலாஹ இல்லல்லாஹு என்பதை மனதில் உறுதிகொண்டு சாட்சி கூறும் யாரைச் சந்தித்தாலும் சுவனத்தைக் கொண்டு நன்மாராயம் கூறுவதற்கென்று அபூஹுரைராவிடம் தங்களது காலணிகளை கொடுத்தனுப்பினார்களா?' எனக் கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஆம் என்றனர். (அதற்கு உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள்) 'அவ்வாறு தாங்கள் செய்ய வேண்டாம். காரணம் ஜனங்கள் அதையே சார்ந்து நின்றுவிடுவர். (ஆகவே) அவர்களை செயல்பட விடுங்கள்' என்றனர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், 'அவர்களை(ச் செயல்பட) விட்டுவிடுங்கள்' என்றனர்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் தாமாக கூறவில்லை, நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து கேட்டுவந்துதான் கூறுகிறார்கள் என்பதற்கும், அக் காலணிகள் இல்லாமலே அவர்கள் கூற்று ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருப்பினும், அக் காலணிகளை பார்ப்பவர்களின் மனதில் இது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடையது தான், ஆகவே அவரின் கூற்று நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்றேதான்

என்பது மனதில் பதிவதற்காகவும் இவ்வாறு கொடுத்தனுப்பினார்கள்.

**ஹதீஸ் எண் : 13**

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பின்னால் (வாகனத்தில்) அமர்ந்திருந்தேன். அவர்களுக்கும் எனக்கும் இடையில் வாகனத்தில் கட்டப்பட்டிருக்கும் குச்சியைத் தவிர வேறெதுவும் இல்லை. (அப்போது) 'முஆது பின் ஜபல் அவர்களே! ' என்றழைத்தனர். 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களது அழைப்பிற்கு இதோ ஆஜர் ஆகியிருக்கிறேன். உங்களுக்கு கீழ்ப்படிகின்ற மகிழ்ச்சிக்காக ஆவலாக காத்திருக்கிறேன்.' எனக் கூறினேன். பிறகு சிறிது நேரம் சென்றனர். பிறகு 'முஆது பின் ஜபல் அவர்களே! ' என்றனர். 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களது அழைப்பிற்கு இதோ ஆஜராகியிருக்கிறேன். உங்களுக்கு கீழ்பணிகின்ற மகிழ்ச்சிக்காக ஆவலாக காத்திருக்கிறேன்' என்றேன். பிறகு சிறிது நேரம் (வாகனத்தில்) சென்றனர். 'முஆது பின் ஜபல் அவர்களே!' என்றனர். 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உங்களது அழைப்பிற்கு இதோ ஆஜராகியிருக்கிறேன். உங்களுக்கு கீழ்படிகின்ற மகிழ்ச்சிக்காக ஆவலாக காத்திருக்கிறேன் ' என்றேன். 'அடியார்கள் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய கடமை என்ன என்பது உனக்கு தெரியுமா? ' என்றார்கள். 'அல்லாஹ்வும் அவனது தூதரும் மிகத் தெரிந்தவர்கள் ' என்றேன். 'நிச்சயமாக அடியார்கள் அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடமை, அவனை வணங்குவதும் அவனுக்கு எதையும் இணையாக்காமல் இருப்பதாகும் ' என்றனர். பிறகு சிறிது நேரம் வாகனத்தில் சென்றனர். 'முஆது பின் ஜபல் அவர்களே! ' என்றழைத்தனர். 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதோ உங்கள் அழைப்பிற்கு ஆஜராகியிருக்கிறேன். உங்களுக்கு கீழ்பணிகின்ற மகிழ்ச்சிக்காக ஆவலாக காத்திருக்கிறேன் ' என்றேன்.

'அடியார்கள் அவ்வாறு நடந்து கொண்டால் அடியார்களுக்கு அல்லாஹ் செய்ய வேண்டிய கடமை என்ன தெரியுமா? ' எனக்

கேட்டார்கள். 'அல்லாஹ்வும் அவனது தூதரும் மிகத் தெரிந்தவர்கள்' என்றேன். 'அவர்களை அவன் தண்டிக்காமல் இருப்பதேயாகும்.' என்றனர்.
அறிவிப்பவர் : முஆது பின் ஜபல் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 14**

நான் (மஹ்மூது பின் அர்ரபீஃஉ) வெளியூரிலிருந்து மதினாவிற்கு வந்தேன். இத்பான் பின் மாலிக் அவர்களைச் சந்தித்து 'உங்கள் வழியில் எனக்கு ஒரு ஹதீஸ் கிடைத்தது' எனக் கூறினேன். (அதற்கு இத்பான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கீழ்கண்டவாறு பதிலுரைத்தார்கள்)
என் பார்வையில் பழுது ஏற்பட்டதால் 'என் வீட்டில் வந்து தாங்கள் தொழு வேண்டும். அந்த இடத்தை நான் தொழுமிடமாக ஆக்கி கொள்ள விரும்புகிறேன்.'என்ற செய்தியை ஒருவர் மூலமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அனுப்பினேன்.
நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களது தோழர்களில் அல்லாஹ் யாரை நாடினானோ அவர்களும், என்னிடம் வந்தனர். (அப்போது) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் என் வீட்டில் நுழைந்து தொழுது கொண்டிருந்தனர். தோழர்கள் தங்களுக்கு மத்தியில் பேசிக்கொண்டிருந்தனர். (அப்போது) அவர்கள் நயவஞ்சகம் பற்றியும் அவர்களது அருவருப்பான செயல்கள் பற்றியும், அவர்கள் மூலமாக முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தீமைகள் பற்றியும் பேசிக்கொண்டிருந்தனர். அதன் பெரும்பகுதி (முக்கியமான பேச்சுகள்) மாலிக் பின் துக்ஷும் என்பவரைப் பற்றியதாக இருந்தது.அவர்கள் பேச்சில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அவருக்கு தீய பிரார்த்தனை செய்து அதன்மூலம் அவர் (மாலிக் பின் துக்ஷும்) அழியட்டும், அல்லது அவருக்கு தீங்கு ஏற்படட்டும் என்பதை விரும்பினர்.
இதற்கிடையில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை முடித்துக்கொண்டு 'வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை

எனவும் அல்லாஹ்வின் தூதர் எனவும் அவர் (மாலிக் பின் துக்ஷும்) சாட்சி கூறவில்லையா?' எனக் கேட்டனர். அதற்கவர்கள் நிச்சயமாகவே 'அதை அவர் கூறுகிறார். ஆனால் அவர் மனதில் அது இல்லை ' என்றனர்.

'வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை எனவும், நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதர் எனவும் யார் சாட்சி கூறுகிறாரோ அவர் நரகத்தில் நுழைய மாட்டார். அவரை நரகம் திண்ணாது.' எனக் கூறினார். எனக்கு இந்த ஹதீஸ் (மிக நன்றாக நினைவில்) ஆச்சரியமாக இருந்தது. எனவே என் மகனிடம் எழுதுமாறு கூறினேன். அவர் அதை எழுதி விட்டதாக கூறினார்.

அறிவிப்பவர்: மஹ்மூது பின் அர்ரபீஃஉ ரளியல்லாஹு அன்ஹு

**ஈமான் என்றால் என்ன? என்பது பற்றியும் அதன் காரியங்கள் பற்றிய விளக்கமும் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 15**

அப்துல் கைஸ் கூட்டத்தைச் சேர்ந்த சில மனிதர்கள் பயணத்தில் இருந்து நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து 'அல்லாஹ்வின் நபி அவர்களே! நிச்சயமாக நாங்கள் ரபிஆ கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கும் உங்களுக்கும் மத்தியில் முளர் (கூட்டத்தைச் சேர்ந்த) காபிர்கள் உள்ளனர். புனிதமான மாதங்களிலாவது உங்களிடம் வர நாங்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறோம். எங்களுக்கு (சில) கட்டளையை இடுவீர்களாக! எங்களுக்கு அப்பால் இருப்பவர்களுக்கு அக் கட்டளைகளைச் செய்யுமாறு ஏவுவோம். அதன்படி நடந்தால் அதை வைத்து சுவனத்திலும் பிரவேசிப்போம்' என்றனர்.

'உங்களுக்கு நான்கு (விஷயங்களை செய்யுமாறு) கட்டளையிடுகிறேன். நான்கு (விஷயங்களைச் செய்வதிலிருந்தும்) தடுக்கிறேன். அல்லாஹ்வை (மட்டுமே) வணங்குங்கள் அவனுக்கு யாதொன்றையும் இணை வைக்காதீர்கள். தொழுகையை நிலை நாட்டுங்கள். ஜகாத்தைக் கொடுங்கள்.

ரமளான் (மாதத்தில்) நோன்பு வையுங்கள். போர்களத்திலிருந்து கிடைத்த பொருட்களில் ஐந்தில் ஒன்றை கொடுத்து விடுங்கள். (பழரசங்கள் ஊற வைப்பதற்காக) சுரைக்குடுக்கைகள், மண் (மர) ஜாடிகள், தார்பூசப்பட்ட பாத்திரங்கள் (பீப்பாய்கள்), ஈச்ச மரத்தின் அடிக்கட்டையிலிருந்து குடைந்தெடுக்கப்பட்டவைகள் ஆகிய நான்கை உபயோகிப்பதிலிருந்து உங்களை நான் தடுக்கிறேன்.' என்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
(அதற்கவர்கள்) அல்லாஹ்வின் நபி அவர்களே! 'ந(க்)கீரை உங்களுக்கு தெரியுமா?' எனக் கேட்டனர். 'ஆம்! ஈச்சமரத்தின் அடியை குடைந்தெடுப்பீர்கள். பின்னர் அதில் ஈத்தம்பழ வகைகளில் சிறியவைகளை போடுவீர்கள். (ஈத்தம் பழத்தை அதில் போடுகிறீர்கள் எனவும் (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) கூறினார்கள் என்பதாக மற்றொரு அறிவிப்பில் வந்துள்ளதாக ஸஈது குறிப்பிடுகிறார்) அதன்பின் அதில் தண்ணீரை ஊற்றுவீர்கள். அதன் கொதிப்பு அடங்கிவிட்டதும் அதை குடிப்பீர்கள். போதை தலைக்கேறியதும் அவர்களில் (அல்லது உங்களில்) ஒருவர் அவரது சிறிய தந்தையின் மகனையும் வாளால் வெட்டிவிடுவார்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியது போன்றே காயம் அடைந்த மனிதரும் அந்த கூட்டத்தில் இருந்தார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து நான் வெட்கம் அடைந்தவனாக அதை மறைத்துவிட்டேன் என (பின்னர்) அவர் கூறினார்.
அதன்பிறகு நான் (அறிவிப்பவர்) 'எந்த பாத்திரத்தில் நீர் அருந்துவது? எனக் கேட்டேன். 'அதன் வாய்கள் கயிற்றினால் கட்டப்பட்டிருக்குமோ அத்தகைய பதனிடப்பட்ட தோல் பைகள் (மூலமாக)' என்றனர்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! எங்கள் பூமியில் எலிகள் அதிகம் உண்டு. தோல் பைகளை குடிக்கும் பாத்திரங்களாக உபயோகித்தால் நிலைத்திருக்காது (எலிகள் கடித்து வீணாக்கி விடும்.) ' என்றேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'எலிகள் அதை கடித்து விட்டாலும் சரி! எலிகள் அதை கடித்து விட்டாலும் சரி! எலிகள் அதை கடித்து விட்டாலும் சரி! என உரைத்தனர்.
பின்னர் 'அப்துல் கைஸின் அஷஜ்ஜு! '(என்பவரைப் பார்த்து) 'நிச்சயமாக உம்மிடம் இரண்டு குணங்கள் உண்டு. அவ்விரண்டும் அல்லாஹ் விரும்புகிறான். அவை சகிப்பத்தன்மை (அறிவு)ம், நிதானமும் ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபு ஸஈது அல் குத்ரிய்யி ரளியல்லாஹு அன்ஹு

'அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வதும் செயல்களில் மிக மிகச் சிறந்ததாகும் ' என்பது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 16

'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! அமல்களில் மிகச் சிறந்தது யாது?'என நான் (அபுதர்ரு) கேட்டேன்.
'அல்லாஹ்வை நம்புவதும் அவனது பாதையில் அறப்போர் செய்வதும் ஆகும்.' என்றனர்.
'அடிமைகளை உரிமை விடுவதில் 1மிகச் சிறந்தது எது ?' என நான் கேட்டேன்.
'அதற்குரியவர்களிடம் மிக உயர்ந்ததும் அவற்றில் கிரயத்தால் மிகக் கூடியதும் ஆகும்.' என்றனர்.
'அதை நான் செய்யவில்லையானல் ?' என நான் கேட்டேன்.
'தொழில் செய்பனுக்கு உதவுவீராக! அல்லது தொழில் இல்லாதவனுக்கு தொழிலை (ஏற்படுத்தி) கொடுப்பீராக! ' என்றனர்.
'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! சில செயல்களை செய்வதிலிருந்து நான் பலகீனம்

அடைந்து விட்டால்?’(நான் என்ன செய்ய வேண்டுமெனச் சொல்கிறீர்கள்) என கேட்டேன்.
’மனிதர்களை விட்டும் உன் தீமையை தடுத்துக்கொள். அது உனக்கு செய்து கொள்ளும் தர்மமாகும். ’என்றனர்.
அறிவிப்பவர் : அபுதர் ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு : 1ஒரு கிரயத்தை நிர்ணயம் செய்து அக்கிரயத்தை நிறைவேற்றிவிடின் அவர் உரிமை பெற்றவராக ஆகிவிடுகிறார். இவ்வாறு எழுதப்பட்டவர்களைப் பற்றித்தான் இங்கு கூறப்படுகிறது.

’ஈமானைப் பற்றிய கட்டளையும், ஷைத்தானின் ஊசலாட்டத்தின் போது அல்லாஹ்வைக் கொண்டு காக்கத் தேடுவதும் ’1 என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 17

ஜனங்கள் அறிவைப் பற்றி உங்களிடம் கேட்டவராக இருப்பர். எதுவரை எனில் ’இவன் அல்லாஹ்! (அவ்வாறு எனில்) அல்லாஹ்வைப் படைத்தது யார்?’ எனக் கேட்டும் வரை என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
ஒரு சந்தர்ப்பத்தில் நான் (ஹதீஸை அறிவிப்பவர்) பள்ளியில் இருந்தேன். அப்போது கிராமத்து அரபிகளில் சிலர் என்னிடம் வந்து,’அபூஹுரைராவே! இதோ அல்லாஹ் நம்மைப் படைத்தான், அவ்வாறெனில் அல்லாஹ்வைப் படைத்தது யார்?’ எனக் கேட்டார்கள்.
(இவ்வாறு அவர்கள்) கேட்டதுமே நான் எனது முன்கையில் பொடிகற்களை எடுத்து அவர்கள் மீது எறிந்துவிட்டு ’எழுந்திருங்கள்! எழுந்திருங்கள்!! எனது உற்ற நண்பர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையே உரைத்தார்கள் எனக் கூறினேன்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு: 1 இப்பாடத்தில் கூறப்பட்ட ஹதீஸில் காக்கத்தேடுவது பற்றியோ விசுவாசம் கொள்வது பற்றியோ கூறப்படவில்லை. முஸ்லிமில் வேறொரு அறிவிப்பில் ’எனஅவ்வாறு யாருக்கேனும்

மனதில் தோன்றினால் ஷஆமன்(த்)து பில்லாஹு எனக் கூறவும் என்பதாக வந்துள்ளது. பிறிதொறு அறிவிப்பில் அந்நிலையை அடைந்து விட்டால் அல்லாஹ்றவைக் கொண்டு காக்கத் தேடவும், அதிலிருந்து விலகிக் கொள்ளவும் ' என வந்துள்ளது.

**ஹதீஸ் எண் : 17**

ஜனங்கள் உங்களிடம் அறிவைப்பற்றி கேட்பவர்களாகவே இருப்பர். 'இதோ அல்லாஹ்! அவன் நம்மைப்படைத்தான். (அவ்வாறு எனில்) அல்லாஹ்றவைப் படைத்தது யார்?' என கேட்கும் வரை

அல்லாஹ்வும், அவனின் தூதரும் உண்மையே உரைத்தனர். (இதற்கு முன்பு ஒருவர் இதுபற்றி) என்னிடம் கேட்டிருந்தார். இவர் இரண்டமானவராவர். வந்தவர்களில் ஒரு மனிதரின் கையை அவர் (அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு) பிடித்தவராக இருக்க கூறினார்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

'அல்லாஹ்றவை நம்பிக்கை கொள்வதும் அதில் நிலைத்திருப்பதும் 'என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 18**

'அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! இஸ்லாத்தில் ஒரு சொல்லை எனக்கு சொல்லித்தாருங்கள். உங்களுக்கு பிறகு அது பற்றி யாரிடமும் நான் கேட்க மாட்டேன். ' எனக் கேட்டேன்.

(அபீ உஸாமா ரளியல்லாஹ் அன்ஹு அவர்களின் அறிவிப்பில் உங்களைத் தவிர வேறு யாரிடமும் நான் கேட்கவே மாட்டேன் என கேட்டதாக உள்ளது)

'அல்லாஹ்றவை நம்பிக்கை கொண்டுள்ளேன் எனக் கூறி அதன் பிறகு அதில் நிலைத்திருப்பாயாக' என (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : சுஃப்யான் பின் அப்துல்லாஹ் அத்தகஃபி ரளியல்லாஹு அன்ஹு

## நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய அத்தாட்சி (அற்புதங்)கள் பற்றியும், அவற்றை விசுவாசம் கொள்வதும் பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 19**

நபிமார்களில் ஒவ்வொரு நபிமீதும் மனிதர்கள் விசுவாசம் கொள்ள வேண்டும் என்பதற்காக அத்தாட்சிகள் (அற்புதங்கள்) கொடுக்கப்பட்டதே தவிர வேறில்லை. இதை மனிதர்கள் விசுவாசித்தனர். (மகத்துவமும் கண்ணியமும் பொருந்திய அல்லாஹ்வால்) எனக்கு கொடுக்கப்பட்டதெல்லாம் வஹீ (எனும் அறிவிப்பாகிய அல்குர்ஆன்) தான். அதை எனக்கு அல்லாஹ் அறிவித்தான். மறுமை நாளின்போது அவர் (அந்த நபிமார்)களையெல்லாம் விட மிகக் கூடுதலான பின்பற்றுபவர்களை (உம்மத்துகளை) உடையவனாக நான் இருக்க (அல்லாஹ்விடம்) ஆதரவு வைக்கிறேன் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 20**

முஹம்மதின் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ? அவன் மீது சத்தியமாக! 'இந்த சமுகத்தில் யூதரோ, கிருஸ்த்தவரோ என்னைப்பற்றி கேள்விபட்ட பின்னரும் நான் எ(ந்த மார்க்கத்)தைக் கொண்டு அனுப்பப்பட்டேனோ அதை விசுவாசம் கொள்ளாது, இறந்துவிடுவாராயின் அவர் நரக வாசிகளில் ஒருவராக ஆகிவிட்டவராகவே தவிர வேறில்லை. ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 21**

குராசான் நாட்டைச் சேர்ந்தவர்களில் ஒரு மனிதரை நான் கண்டேன். அவர் ஷஅபீயிடம் 'அபா அம்ரு அவர்களே! நமக்கு முன் இருந்த குராசான்வாசிகள் 'ஒரு மனிதர் தன் அடிமையை

உரிமை விட்ட பிறகு அவளைத் திருமணம் செய்துகொண்டால் தனது சவாரிக்குரிய மிருகத்தை புணர்ந்தவனைப் போன்றவனாவான். ' எனக் கூறக்கூடியவர்களாக இருந்தனர் எனக் கூறினார்.

அதைக் கேட்ட ஷஅபீ அவர்கள்,

'நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், மூன்று சாரார்களுக்கு இரு முறை அவர்களது கூலி நல்கப்படும் என்பதாக கூறி வேதக்காரர்களில் ஒரு மனிதர் தனது நபியையும் விசுவாசங்கொண்டு (இந்த) நபியைப்பெற்றுக்கொண்ட பின்னர் இவர்களையும் விசுவாசங்கொண்டு, இவர்களைப் பின்பற்றி, இவர்களை உண்மைப்படுத்தினால், அந்த மனிதருக்கு இரு கூலி உண்டு என்றும்,

ஒரு அடிமையானவன், கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ் தன் மீது கடமையாக்கியவற்றை நிறைவேற்றி வருவதோடு, தனது எஜமானருக்கு செய்ய வேண்டிய கடமைகளையும், நிறைவேற்றி வந்தால் அவருக்கு இரு கூலி உண்டு என்றும்,

ஒரு மனிதருக்கு ஒரு அடிமைப்பெண் இருந்து. அவளுக்கு உணவளித்து, அவளுக்கு உணவளிப்பதில் நல்ல முறையில் நடந்து, அவளுக்கு நல்ல ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுத்து, பிறகு உரிமையும் விட்டுவிட்டு, அவளை அவர் திருமணம் செய்து கொண்டால் அவருக்கு(ம்) இரு கூலிகள் உண்டு என்றும் கூறியதாக, தனது தந்தை அறிவித்தார், என அபுதர்தா பின் அபீமூஸா அவர்கள் (எனக்கு) அறிவித்தார்கள்.' என (குராசான் நாட்டவரைப் பார்த்து) கூறினார்கள்.

(வந்திருந்த) குராசான் நாட்டைச் சேர்ந்தவரைப் பார்த்து'எந்த பிரதிபலனுமின்றி இந்த ஹதீஸை எடுத்துக்கொள்வீராக! காரணம் (உமக்கு முன் வந்த மற்றொரு) மனிதர் இது (இச் செய்தியு)வுமில்லாமல் மதீனாவுக்கு பயணமாகியுள்ளார் ' என்றனர்.

ஷஅபீ அவர்களைப் பற்றிய இந்த ஹதீஸை

அறிவிப்பவர் : ஸாலிஹ் பின் ஸாலிஹ் அல்ஹதானி ரளியல்லாஹு அன்ஹு

**'மூன்று காரியங்கள் யாரிடம் உள்ளதோ அவர் ஈமானின் இன்பத்தைப் பெற்றுவிடுகிறார் ' என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 22**

மூன்று காரியங்கள் யாரிடம் இருக்கிறதோ அவர் அவைகளின் மூலமாக ஈமானின் இன்பத்தைப் பெற்றுவிடுகின்றார்.

1. அவ்விருவரல்லாத மற்றனைத்தையும்விட அல்லாஹ்வையும் அவனது தூதரும் அவருக்கு மிகப்பிரியமானவர்களாக இருக்க வேண்டும்.
2. அவர் மனிதரை நேசிப்பார் அந் நேசம் அல்லாஹ்வுக்காக அன்றி (மற்றெவருக்காகவும்) இருக்காது.
3. (குப்ர் எனும்) இறை நிராகரிப்பிலிருந்து அல்லாஹ் அவரைக் காப்பாற்றிக் கரை சேர்த்தபின் நரகத்துக்குள் போடப்படுவதை வெறுப்பதுபோன்று, மீண்டும் குப்ர் (இறை நிராகரிப்பு)க்குள் திரும்பச் செல்வதை அவர் வெறுக்கவேண்டும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 23**

'தன் பிள்ளை(களை)விட, பெற்றோர்களைவிட, மற்றுமுள்ள ஏனைய ஜனங்களைவிடவும் அவருக்கு நான் மிக விருப்பமுள்ளவராக ஆகும்வரை, உங்களில் எவரும் ஈமான் கொண்டவராக ஆகமாட்டார் ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 24**

'எனது உயிர் எவன் கரத்திலிருக்கிறதோ அவன்மீது சத்தியமாக, ஒரு அடியான் தனக்கு எதையெல்லாம் விரும்புகிறாரோ அதை தனது அண்டை வீட்டாருக்கு ( அல்லது தனது சகோதரருக்கு)

எனக் கூறியிருக்கலாம். அவர் விரும்பாதவரை (அவர்) ஈமான் கொண்டவராக ஆகமாட்டார் ' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

**ஹ தீஸ் எண் : 25**

'யார் அல்லாஹ்வை இரட்சகனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மது அவர்களைத் தூதராகவும் பொருந்திக் கொண்டாரோ அவர், ஈமானின் சுவையை சுகித்தவராவார் ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற செவியுற்றதாக, அப்பாஸ் பின் அப்துல் முத்தலீப் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**'நான்கு விஷயங்கள் யாரிடம் இருந்ததோ அவர் கலப்படமற்ற நயவஞ்சகராகிவிட்டார் ' என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 26**

'நான்கு விஷயங்கள் யாரிடம் இருந்ததோ அவர் கலப்படமற்ற நயவஞ்சகராகிவிட்டார். அவற்றில் ஏதாவது ஒன்று யாரிடம் இருக்கிறதோ, அவர் அதை விட்டு விடும்வரையிலும் நயவஞ்சகத்தில் ஒரு பகுதி அவரிடம் இருக்கும்.

'அவர் பேசினால் பொய்யுரைப்பார். ஒப்பந்தம் செய்தால் மோசடி செய்வார். வாக்கு கொடுத்தால் மாறி விடுவார். தர்க்கம் செய்தால் உண்மையை மறைக்க முற்பட்டுவிடுவார்.' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ஆயினும் நிச்சயமாக ஸுப்யானுடைய ஹதீஸில் அவைகளில் ஒரு குணம் அவரி(டத்தி)ல் இருப்பின் நயவஞ்சகத்தின் ஒரு குணமும் அவரிடத்தல் இருக்கும் என வந்துள்ளது.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ்பின் உமர் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 27**

'நயவஞ்சகனின் அடையாளம் மூன்றாகும். அவன் பேசினால் பொய் பேசுவான். அவன் வாக்களித்தால் அதற்கு மாற்றம் செய்வான். அமானிதம் கொடுக்கப்பட்டால் மோசடி

செய்துவிடுவான்.’ என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.
அறிவிப்பவர்: அபுஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

’முஃமீனுக்கு உவமை பயிர் போன்றது. முனாஃபிக் மற்றும் காஃபிருக்கு உவமை அர்ஜத்(மரம்) போன்றது.’ என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 28

முஃமீனுக்கு உவமை பயிர்களில் தண்டு மெலிந்துள்ள பயிர் போன்றதாகும். அப்பயிரானது உலர்ந்துபோகும்வரை காற்று அதை வலப்பக்கமும் இடப்பக்கமும் ஆடவைத்து (பின்னர்) அதன் சமநிலையில் விட்டுவிடுகிறது.
காஃபிருக்கு உவமை அடித்தளத்தில் தண்டு கடினமானதாக ஸ்திரமானதாக உள்ள அர்ஜத்(மரம்) போன்றதாகும்.ஒரே தடவையாக (காற்று) அதைப் பிடுங்கும்வரை அது நிமிர்ந்ததாகவே இருக்கும்.
பிறிதொரு அறிவிப்பில் அதன் காலம் வரும்வரை ஒரே சமமாக இருக்கும் மேலும் நயவஞ்சகனுக்கு உவமை ’அடித்தளத்தில் தண்டு கடினமானதாக உறுதியானதாக உள்ள அதை எதுவும் தொடாத அர்ஜத்(மரத்தைப்) போன்றதாகும் ’. என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக கஅபு பின் மாலிக் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

ஹதீஸ் எண் : 29

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்தோம். (அப்போது) முஸ்லீமுக்கு ஒப்பான அல்லது முஸ்லீமான மனிதரைப்போன்றுள்ள ஒரு மரத்தைப் பற்றி எனக்குத் தெரிவியுங்கள் அதன் இலைகள் (கீழே) விழாது எக்காலத்துக்கும் அதன் பலனை கொடுத்துக்கொண்டிருக்கும் எனக் கூறினார்கள்.
’அது நிச்சயமாக ஈச்ச மரம்தான் என என் மனதில்பட்டது. அபூபக்கர் உமர் இருவரும் போசமல் இருந்ததைப் பார்த்து நான் பேசி எதையாவது கூறுவதை வெறுத்தேன். ’

நீர் அதைச் சொல்லியிருந்தால் எனக்கு இன்ன இன்னதையெல்லாம்விட மிக விருப்பமானதாக இருந்திருக்கும் என (எனது தந்தை) உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹு அன்ஹு
'வெட்கம் ஈமானில் உள்ளதாகும்' என்பது பற்றிய பாடம்.
ஹதீஸ் எண் : 30
'ஈமான் எழுபதுக்கும் மேற்பட்ட அல்லது அறுபதுக்கும் மேற்பட்ட கிளை(களை) உடையதாகும். அவற்றில் மிகச்சிறந்தது ஷலாஇலாஹ இல்லல்லாஹ்னு (எனும் கூற்றாகும்) அதில் மிகக்குறைந்தது, பாதையை விட்டும் இன்னல் தருவதை அகற்றுவதாகும். வெட்கமும் ஈமானின் ஒரு கிளையாகும் ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு
ஹதீஸ் எண் : 31
ஒரு கூட்டத்தில் இம்ரான் பின் ஹுஸைனுடன் நாங்கள் இருந்தோம்.எங்களில் புஷைர் இப்னுகஅபு என்பவரும் இருந்தார். 'வெட்கம் என்பது முழுக்க முழுக்க நன்மையானது அல்லது வெட்கம் அது முழுவதுமே நன்மையானது என்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் ' என அன்றைய தினம் இம்ரான் எங்களுக்கு அறிவித்தார்.
அதைக் கேட்ட புஷைர் பின் கஅபு வெட்கத்தில் உயர்வான இறைவனிடத்தில், அமைதியை நல்கக்கூடியவையும் கண்ணியத்தையும் நல்கக்கூடியவையும் உண்டு. அதில் பலவீனத்தைத் தரக்கூடியவையும் உண்டு என சில நூல்களில் அல்லது சில தத்துவங்களில் நிச்சயமாக நாம் காண முடிகிறது' எனக் கூறினார்.
அதைக் கேட்ட இம்ரான் அவர்கள் அவரது இரு கண்களும் சிவக்கின்ற அளவுக்கு கோபமடைந்து விட்டார். 'உனக்கு நான் அல்லாஹ்வின் தூதர் அவர்களின் ஹதீஸை அறிவித்துக்

காட்டுகிறேன் என்பதை நீ தெரிந்துகொள். அதை நீ குறுக்கீடு செய்கின்றாய் அல்லவா?' என்று கூறிவிட்டு மீண்டும் இம்ரான் (அந்த) ஹதீஸை அறிவித்தார்.
;புஷைர் (தான்) சொன்னதையே திரும்பக் கூறினார். இம்ரான் கோபமடைந்து விட்டார். 'அபா நுஜைதே! அவர் நம்மைச் சேர்ந்தவர்தான் ' எனவும் ' நிச்சயமாக அவரைப்பற்றி பரவாயில்லை (கோபப்படாதிர்கள்) எனவும் நாங்கள் கூறிக் கொண்டிருந்தோம்.
அறிவிப்பவர்: அபுகதாதா ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு: இதே பொருள்பட வார்த்தை முன்னும் பின்னுமாக ஒரு அறிவிப்பில் வந்துள்ளது.

**அண்டை விட்டாரோடு அழகாக நடந்துகொள்வதும் விருந்தினரை உபசரிப்பதும் ஈமானில் உள்ளதாகும் என்பத பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 32**

'அல்லாஹ்வையும் இறுதி நாளையும் யார் நம்பிக்கைக் கொண்டாரோ அவர் தனது அடுத்த வீட்டுக்காரரிடம் அழகாக நடந்துகொள்ளவும்.
அல்லாஹ்வையும் இறுதி நாளையும் யார் நம்பிக்கைக் கொண்டாரோ அவர் தனது விருந்தினரைக் கௌரவிக்கவும்.
'அல்லாஹ்வையும் இறுதி நாளையும் யார் நம்பிக்கைக் கொண்டாரோ அவர், நல்லதைச் சொல்லவும், அல்லது வாய் மூடி மௌனமாக இருக்கவும்.' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபீஷுரைஹ் அல் குஜாஇ ரளியல்லாஹு அன்ஹு

**'எவரது இடையூறுகளிலிருந்து அவரது அடுத்த வீட்டுகாரர் பயமற்று இருக்கவில்லையோ அவர் சுவனம் புக மாட்டார்' என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 33**

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'எந்த மனிதரின் இடையூறுகளிலிருந்து

1அவரது அடுத்த வீட்டுகாரர் பயமற்று இருக்க வில்லையோ அந்த மனிதர் சுவனம் புகமாட்டார். ' என கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1அடுத்த வீட்டுக்காரருக்கு கஷ்டங்கள் (இடையூறு) கொடுப்பது என்பதற்கு அவனை அழிக்கும் அல்லது அவனது நிம்மதியைக் குலைக்கும் காரியங்களைச் செய்தல் என்பது பொருளாகும்.

'(மார்க்கத்தில்) தடுக்கப்பட்டவைகளை கையால், நாவால், மனதால் மாற்றுவது ஈமானில் உள்ளது' என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 34**

பெருநாளன்று தொழுகைக்கு முன்பு குத்பா பிரசங்கத்தை ஆரம்பித்தவர் மர்வான் என்பராவார்.

அவரின்பால் ஒரு மனிதர் எழுந்து சென்று ஷகுத்பாவுக்கு முன்பு தொழுகை நடத்தப்பட வேண்டும். இங்கே அது விடப்பட்டுவிட்டது.ஞ எனக் கூறினார்.

அதற்கு அபூஸஈது அவர்கள், 'தெரிந்துகொள். எது அவர் மீது கடமையோ அதை (இவர்) கூறி முடித்துவிட்டார். ' என்று கூறி விட்டு,

'உங்களில் யாரேனும் மறுக்கப்பட வேண்டியதை (நடக்கக்) கண்டால் அதை அவரது கையால் மாற்றவும். அதற்கு அவருக்கு சக்தியில்லையென்றால் அவரது நாவால் (அதை மாற்றவும்). அதற்கும் அவருக்கு சக்தியில்லையானால் அவரது மனதால் (அதை வெறுக்கவும்) அது ஈமானில் மிகப்பலவீனமாதாகும். என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன். ' என அபூ ஸஈத் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் கூறுகிறார்.

அறிவிப்பவர் : தாரீக் பின் ஷிஹாப் ரளியல்லாஹு அன்ஹு.

**ஹதீஸ் எண் : 35**

எனக்கு முன்னுள்ள சமூகத்தில் அல்லாஹ் அனுப்பி வைத்த எந்த நபிக்கும் உதவியாளர்களும் தோழர்களும் இல்லாமல் இருந்ததில்லை. அவர்கள் அந்நபியின் வழிமுறையை எடுத்து நடக்ககூடியவர்களாகவும் அவரது கட்டளையை ஏற்று

செயலாற்றக்கூடியவர்களாகவும் இருந்தனர். அவர்களுக்குப்பிறகு அவ்வும்மத்தில் வருபவர்கள் அவர்கள் செய்யாதவற்றை (மற்றவர்களுக்கு) சொல்லக்கூடியவர்களும் (அந் நபியால்)கட்டளையிடப்படாததை செய்யக்கூடியவர்களாகவும் இருப்பர்.

(அச்சமயத்தில்) யார் அவர்களோடு தனது கரத்தால் அறப்போர் செய்தாரோ அவர் விசுவாசங் கொண்டவராவார்.

மேலும் யார் அவர்களோடு தனது நாவினால் அறப்போர் செய்தாரோ அவரும் விசுவாசங் கொண்டவராவார்.

அதற்கும் அப்பால் ஈமானில் கடுகளவுகூட (மீதம்) இல்லை என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் நிச்சயமாகக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு

அப்துல்லா பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்களுக்கு இச்செய்தியை நான் (அபூராபிஉ) கூறினேன். அதை அவர்கள் (என் கூற்றை) மறுத்துக் கூறினார்கள். அப்போது இப்னு மஸ்ஊது அவர்கள் மதினாவில் ஒரு பள்ளத்தாக்கில் இறங்கி(த்தங்கி)யிருந்தார்கள்.

அப்துல்லா பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் இப்னு மஸ்உதை நலம் விசாரிக்க என்னையும் தம்மைத் தொடர்ந்து வரச் சென்னார்கள். அப்துல்லா பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்களுக்கு செய்தியை அறிவித்துவிட்டு அவர்களுடன் நானும் நடந்தேன்.

நாங்கள் இருவரும்( இப்னு மஸ்ஊதிடம் சென்று) அமர்ந்தபின் இந்த ஹதீஸைப்பற்றி இப்னு மஸ்ஊதிடம் நான் கேட்டேன் இப்னு உமர் அவர்களுக்கு நான் எவ்வாறு அறிவித்தேனோ அதே போன்று எமக்கு இந்த ஹதீஸை இப்னு மஸ்ஊது அறிவித்தார்கள் என அபுராஃபிஉ ரளியல்லாஹ் அன்ஹு கூறினார்.

’விசுவாசியைத் தவிர மற்றவர் அலி ரளியல்லாஹ் அன்ஹு அவர்களை விரும்ப மாட்டார். நயவஞ்சகனை தவிர மற்றவர் அவரை வெறுக்க மாட்டார்’ என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 36**

வித்தைப் பிளக்கச் செய்தவனும் உயிர் கொடுத்தவனுமாகிய அவன்மீது சத்தியமாக! 'விசுவாசியைத் தவிர (மற்றெவரும்) என்னை விரும்பமாட்டார் நயவஞ்சகனைத் தவிர (மற்றெவரும்) என்னை வெறுக்கமாட்டார் ' என்பது நிச்சயமாக உம்மி நபி அவர்கள் என்பால் செய்துகொண்ட உறுதியான ஒப்பந்தமாகும் என அலி பின் அபீதாலிப் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் கூறியதாக ஜர்ரு பின் ஹுபைஷ் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

'அன்ஸார்களை விரும்புவது ஈமானின் அடையாளமாகும். அவர்களை கோபப்படுவது நயவஞ்சகத்தின் அடையாளமாகும் ' என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 37**

அன்ஸார்கள் விஷயத்தில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக பராஉ ரளியல்லாஹ் அன்ஹு அவர்களிடம் நான் செவியுற்றேன்.

விசுவாசங் கொண்டவரைத் தவிர (மற்றவர்கள்) அவ(அன்ஸா)ர்களை விரும்பமாட்டார்கள். முனாஃபிக்குகளைத் தவிர (மற்றவர்கள்) அவ(அன்ஸா)ர்களை கோபப்படமாட்டார்கள். (அதாவது) யார் அவர்(அன்ஸார்)களை விரும்புகிறாரோ அவரை அல்லாஹ் விரும்புகிறான் யார் அவ(அன்ஸா)ர்களை கோபப்படுகிறாரோ அவரின் மீது அல்லாஹ்வும் கோபப்பட்டு விடுகிறான்.

அறிவிப்பவர் : அதிய்யு பின் தாபித் ரளியல்லாஹ் அன்ஹு

'ஈமான் மதினாவின்பால் நிச்சயமாக ஒதுங்கும்'; என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 38**

'பாம்பு தன் புற்றின்பால் ஒதுங்குவது போன்று. நிச்சயமாக ஈமான் மதினாவின்பால் ஒதுங்கும் ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அதிய்யு பின் தாபித் ரளியல்லாஹு அன்ஹு

**'ஈமான் யமன் தேசத்தையுடையதாகும் ஹிக்மத்தும் யமன் தேசத்தை உடையதேயாகும் ' என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 39**

(இஸ்லாத்தைத் தழுவ) யமன் தேசத்தவர் (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம்) வந்தனர். அவர்கள் இரக்கம் கொண்ட இதயங்களையும், 1மெல்லிய மனங்களையும் உடையவர்களாவர். 'ஈமான் யமனைச் சேர்ந்ததாகும் (யமன் வாசிகள் விரைவாக விசுவாசங் கொண்டனர்) ஹிக்மத்2தும் யமனைச் சேர்ந்ததாகும். அமைதி என்பது ஆட்டுக்கு சொந்தக்காரர்களிடம் (ஏழைகளிடம்) இருக்கிறது. பெருமையும், அகம்பாவமும், சூரிய உதயத்திற்கு முன்பே பெரும் சப்தத்தை எழுப்புவார்களே அத்தகைய ஒட்டகங்களையும் குதிரைகளையும் சொந்தமாகக் கொண்டவர்களிடம் இருக்கிறது.' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற தான் கேட்டதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

குறிப்பு:

1. அவர்களின் இதயத்தின் உட்பகுதிகூட, அல்லாஹ்வின் பயத்தைப்பற்றி எடுத்துக்கூறப்படும்போது அதை துரிதமாக ஏற்கக்கூடிய நிலையில் உள்ளது என்பதை தெரிவிக்கவே மெல்லிய மனங்களை உடையவர்கள் என வர்ணிக்கப்பட்டுள்ளது.
ஷரஹ் நவவீ. பாகம் 2 பக்கம் 34

2.' ஹிக்மத் ' என்பதற்கு பல விளக்கங்கள் கூறப்பட்டுள்ளது.
மனதை பக்குவப்படுத்தி அம்மனதில் உண்மையை உறுதிப்படுத்தி செயல்படுவதும், மனம்போன போக்கு, உண்மைக்கு மாற்றமானவற்றை கொள்கையாக ஏற்றல் ஆகியவைகளைத் தடுத்துக்கொண்டு, அல்லாஹ்வைப்பற்றி அவன்

கூறியவற்றையெல்லாம் மனதில்கொண்டு அவன் கூறிய தெளிவில் அவனைத்தெரிந்துகொள்ளும் வகையைத்தான் 'ஹிக்மத் ' எனக் கூறப்பட்டுள்ளது. ஷரஹ் நவவீ பாகம் 2 பக்கம் 33

தெளிவான இதயசுத்தியோடு கேட்கப்பட்ட விஷயங்கள் மனதில் பதிந்து செயல்படும்போது மனிதன் தவறிழைப்பது குறைந்துவிடலாம். அந்நிலையிலிருக்கும்போது 'ஹிக்மத்' துடையவர் எனக் கூறலாம்.

மனிதர்களுக்கு மத்தியில் உள்ள முறைப்படி 'சாதுர்யம் ' என்ற பொருளைக்கூறலாம்.

நாட்டுபாஷையில் யூனானீவைத்தியம் செய்பவர்களை 'ஹக்கீம்' என்கிறார்கள் என்பதும் ஒரு பொருள்.

**ஹதீஸ் எண் : 40**

'வெறுக்கின்ற தன்மையுள்ள கடினமான இதயங்கள் கொண்டவர்களும், குறைகாணும் குணமுடையவர்களும் கிழக்குப்பகுதியில் உள்ளனர். ஈமான் ஹிஜாஸ்1 நாட்டைச் சேர்ந்தவர்களிடமாகும்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹ் அன்ஹுமா

குறிப்பு: 1ஹிஜாஸ் என்பது மக்கா, மதீனா, தாயிப் ஆகிய ஊர்களைக் குறிக்கும்.

## 'யார் விசுவாங்கொள்ளவில்லையோ அவருக்கு நற்செயல்கள் பயனளிக்காது' என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 41**

';அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இப்னு ஸத் ஆன் என்பவர் (இஸ்லாத்திற்கு முன்னுள்ள) அறியாமை காலத்தில் சுற்றத்தார்களை சேர்த்து நடக்ககூடியவராகவும் மிஸ்கீனுக்கு (வறியவர்களுக்கு) உணவளிப்பவராகவும் இருந்தார். அது அவருக்கு பயன்தருமா ? ' எனக் கேட்டேன்.

';அது அவருக்கு பயனளிக்காது. நிச்சயமாக அவர் ஒரு நாளில் கூட, எனது இரட்சகா! மறுமை நாளின்போது எனது குற்றத்தை

மன்னித்து அருள்வாயாக! ' எனக் கூறவில்லை, என (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா.

'நீங்கள் விசுவாங்கொள்ளும்வரை சுவனத்தில் பிரவேசிக்க முடியாது' என்பது பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 42

'நீங்கள் விசுவாசங் கொள்ளும்வரை சுவனம் செல்லமாட்டீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் நேசிக்கும்வரை விசுவாங்கொண்டவர்களாக ஆக மாட்டீர்கள் ஒரு செயலை நீங்கள் செய்வீர்களானால் ஒருவருக்கொருவர் நேசித்துக் கொள்வீர்கள். அச்செயலை உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா? (அதுவே) உங்களுக்கு மத்தியில் ஸலாமைப்1 பரப்புங்கள் ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

குறிப்பு: 1ஸலாம் என்பது ஷஅஸ்ஸலாமு அலைக்கும்ஹு என்பதைக் குறிக்கும்.

'விபச்சாரம் செய்பவன் விபச்சாரம் செய்யும்போது மூஃமினாக இருக்க விபச்சாரம் செய்வதில்லை' என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 43

'விபச்சாரம் செய்பவன், விபச்சாரம் செய்யும்போது மூஃமினாக இருக்கும் நிலையில் விபச்சாரம் செய்வதில்லை. திருடன் திருடுகின்ற போது மூஃமினாக இருக்கும் நிலையில் திருடுவதில்லை.

மேலும் அவன் (குடிகாரன்) மதுவருந்தும்போது, மூஃமினாக இருக்கும் நிலையில் மதுவருந்துவதில்லை.' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

'மரியாதைக்குரிய ஒரு விஷயத்தின் மரியாதையைக் குறைக்கும்போது. மனிதர்கள் அதன்பால் தங்களது பார்வையை உயர்த்தி (அதிருப்தியுற்று) பார்ப்பார்களே அதுபோன்ற

விஷயத்தின் மரியாதையை ஒருவன் மூஃமினாக இருக்கும்போது குறைத்துப் பங்கப்படுத்த மாட்டான் '(மேற்கூறப்பட்ட ஹதீஸோடு) அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் இதையும் சேர்த்து கூறக்கூடியவர்களாக இருந்தார்கள்.
ஹம்மாம் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் ஹதீஸில் 'ஒரு விசுவாசி அதைப்பங்கப்படுத்தக் கூடிய நிலையில் மூஃமின்கள் தங்களது கண்களை அதன்பால் உயத்துவார்கள் ' என வந்துள்ளது.
'போர்களத்தில் கிடைத்த பொருளை உங்களில் யாரேனும் மூஃமினாக இருக்கும் நிலையில் திருட மாட்டார் உங்களை எச்சரிக்கிறேன்! எச்சரிக்கிறேன்! என்று இதை ஹம்மாம் அவர்கள் அதிகப்படுத்திக் கூறியுள்ளார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

ஹதீஸ் எண் : 44

'ஒரே துவாரத்தில் (புற்றில்) விசுவாசி இருமுறை கொட்டுப்படமாட்டான் ' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு
'மனதில் ஏற்படும் ஊசலாட்டம் (ஒருவரின் மனதில் அல்லாஹ்வைப்பற்றி பல எண்ணங்கள் இவன் பார்ப்பவற்றையெல்லாம் நினைத்து இவன் கற்பனையில் வருவதையெல்லாம் முன்வைத்து அல்லாஹ் இப்படி இருப்பானோ? அல்லது அப்படி இருப்பானோ? என்ற ஊசலாட்டங்கள் மனதில் ஏற்பட்டுவிட்டால் அதை அத்தோடு தவிர்த்து விட்டு விடவேண்டும் அதற்கு மேலும் வளர்ந்தால் அதிலிருந்து காக்கத்தேடுவதும் கட்டாயமாகும்) ஈமானில் உள்ளதாகும்' என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 45

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் ஸஹாபாக்களில் சிலர் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து எதைப்பற்றிப் பேசுவதை எங்களில் ஒருவர் மிகப்பெரிதாக கருதிகிறாரோ அத்தகைய

விஷயத்தை எங்களது மனங்களில் பெற்றுள்ளோம் (அஃதென்னவென்று) கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'அதைப் பெற்றுவிட்டீர்களா?' என்றனர். அதற்கவர்கள் ஷஆம்னு என்றனர். 'அதுதான் தெளிவான ஈமான்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

'பெரும்பாவங்களில் மிகப்பெரியது அல்லாஹ்விற்கு இணை வைத்தலாகும்' என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 46**

நாங்கள் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்தோம். அப்போது அவர்கள், 'பெரும்பாவங்களில் மிகப்பெரிய பாவத்தை உங்களுக்கு (எதுவென்று) அறிவித்துத்தரட்டுமா?' என மும்முறை கூறிவிட்டு, 'அல்லாஹ்விற்கு இணை வைப்பதும், பெற்றோர்களைக் கொடுமைப்படுத்துவதும், பொய்சாட்சி கூறுவதும் அல்லது பொய்கூற்றை கூறுவதுமாகும்' என்றனர். சாய்ந்து அமர்ந்திருந்த நபி ஸல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இதைக் கூறும்போது நிமிர்ந்து அமர்ந்து கொண்டனர். அவர்கள் அதைக் கூறுவதை விட்டுவிட்டால் நன்றாக இருக்குமே என கூறும்வரை அதை திரும்ப திரும்பக் கூறிக்கொண்டே இருந்தனர்.
இதை அப்துல் ரஹ்மான் பின் அபிபக்ரா ரளியல்லாஹ் அன்ஹு என்பவர் தனது தந்தை அறிவித்ததாக கூறுகிறார்.

**ஹதீஸ் எண் : 47**

'அழிவை உண்டாக்கும் ஏழு விஷயங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவைகள் யாவை? எனக் கேட்கப்பட்டது. (அதற்கு)
'அல்லாஹ்விற்கு இணை வைப்பது, சூனியம் வைப்பது, அல்லாஹ் எந்த உயிரை கொலை செய்வதை விலக்கியுள்ளானோ அத்தகைய உயிரை உரிமையின்றி கொலை செய்தல், வட்டியை

உண்ணுதல், அனாதைகளின் சொத்தை விழுங்குதல், போர் மூண்டு நிற்கும் நாளில் (புற முதுகு காட்டி) திரும்பி விடுதல், விசுவாசிகளான ( கெட்டவைகளை விட்டும் மறந்து விலகி இருக்கும்) பத்தினிப் பெண்களை அவதூறு பேசுதல் ஆகியவைகளாகும் ' எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

'எனக்குப்பின் உங்களில் சிலர் சிலரின் கழுத்தை வெட்டுவதன் நிமித்தம் காஃபிர்களாக திரும்பி விடாதீர்கள் ' என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 48**

உங்களுக்கு அல்லாஹ் அருள் செய்வானாக![1] அல்லது உங்களுக்கு கேடு உண்டாகட்டுமே! எனக்கு பிறகு உங்களில் சிலர், சிலரின் கழுத்துகளை வெட்டும் காஃபிர்களாக திரும்பி விடாதிர்கள்' என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சயமாக இறுதி ஹஜ்ஜின் போது கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹுமா

குறிப்பு : [1]இவ்விரு வார்த்தைகளைக் கூறுவதன் நோக்கம் சாபம் அல்ல. ஆபத்தில் சிக்கிக்கொண்டவனுக்கு அல்லாஹ்விடம் அருள் வேண்டி கூறப்படும் வார்த்தைதான் வைஹ அழிவைத்தேடிச் செல்பவருக்கு வைல் 'கேடு' என்பது உபயோகமாகிறது. அச்செயலில் உம்மத்தவர் விழுந்துவிடாமலிருக்க அருள்கோரியும், விழுந்துவிட்டவருக்கு தண்டனை உண்டு என்பதை எச்சரிக்கவே இரு வார்த்தைகளை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் உபயோகித்திருக்கிறார்கள் என்ற கருத்தை இந்த ஹதீஸிற்கு அடிக்குறிப்பில் இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹ் அலைஹி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

'தனது தந்தையை யார் வெறுக்கிறாரோ? அது இறை நிராகரிப்பு' என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 49**

’இஸ்லாத்தில் தன் தந்தையல்லாத ஒருவரை (யாரைத் தந்தை என்கிறாரோ அவர் இவருக்கு தந்தையில்லை என) நன்கு தெரிந்திருக்க. ஷதனக்கு தந்தைதான்ஹு என யாரேனும் வாதிட்டால் அவருக்கு சுவனம் விலக்கப்பட்டதாகிவிடும். ’ என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் தன் காதால் கேட்டதாக ஸஅது அபிவக்காஸ் கூற நிச்சயமாக நான் செவியுற்று இருக்கிறேன். அவ்வாறு இருக்க இது போன்ற காரியத்தை செய்து விட்டீர்களே! ஏன்? என ஜியாது1 என்பவரைப் பற்றி விவாதிக்கப்பட்டபோது அபூபக்ராவை நான் சந்தித்து கேட்டேன். அதற்கவர் நானும் அவ்வாறே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து செவியுற்றேன்.’ என்றார்.

அறிவிப்பவர் : அபி உஸ்மான் ரளியல்லாஹ் அன்ஹு

குறிப்பு: 1உண்மையில் ஜியாத் என்பவர் உபைது அத்தகபீயின் புதல்வராவர். பிறகு முஆவியா அவர்கள் ஜியாத் தனது தந்தை அபுசுபியானின் மகன்தான் என அவரையே (ஜியாதையே) கூறவும் வைத்துவிட்டார். இந்த நிலை தவறு என விளக்கி கூறவே இந்த ஹதீஸ் வந்துள்ளது.

**ஹதீஸ் எண் : 50**

’ஒரு மனிதன் தன் தந்தை அல்லாதவரை (அவருக்கு தான் மகன் இல்லை என) நன்கு தெரிந்திருக்க தன்னை அவர் மகனாக வாதிப்பாரேயானால், அவர் கா.:.பிராகவிட்டவரே தவிர வேறில்லை.

தன்னுடையதல்லாத ஒன்றை ஒருவர் தனக்குரியதென வாதிப்பாரேயானால் அவர் நம்மைச் சேர்ந்தவரல்லார்.அவர் தனது ஒதுங்குமிடத்தை நரகமாக்கி கொள்ளட்டும்.

ஒருவர் அவ்வாறு இல்லாமல் இருக்க அவரை ஒரு மனிதர் கா.:.பிர் என்றோ அல்லது அல்லாஹ்வின் எதிரி என்றோ கூறினால் அதை சொன்னவருக்கே அது திரும்பி விடுகிறது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறும்போது நான் செவியுற்றேன்.

அறிவிப்பவர் : அபூதர்ரு ரளியல்லாஹ் அன்ஹு

**ஹதீஸ் எண் : 51**

'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்விடத்தில் பாவத்தில் மிகப்பெரிய பாவம் எது?' என ஒரு மனிதர் கேட்டார்.
'அல்லாஹ் உன்னைப் படைத்திருக்க அவனு(அல்லாஹ்வு)க்கு சமமாக வேறொன்றை (வணங்குவதற்காக) அழைப்பது.' என்றார்கள்.
'அதற்கு பிறகு எது?' என அம்மனிதர் கேட்டார்.
'உன்னுடன் அவன் உணவருந்துவதைப் பயந்து உன் பிள்ளையை நீ கொல்லுவதாகும்' என்றனர்.
'அதற்குப் பிறகு எது?' என அம்மனிதர் கேட்டார்.
'உனது அடுத்த வீட்டுக்காரரின் மனைவியை விபச்சாரம் செய்வதாகும்' என்றனர்.
அதை உண்மைப்படுத்தும் விதமாக கண்ணியத்திற்கும், மகத்துவத்திற்குமுரியவனான அல்லாஹ் (தன் திருமறையில்) அவர்கள் (ரஹ்மானின் அடியார்கள்) அல்லாஹ்வுடன் வேறொரு வணங்கப்படுபவனை அழைக்கமாட்டார்கள். இன்னும் அல்லாஹ் விலக்கிய எந்த உயிரையும் உரிமையின்றி கொல்லமாட்டர்கள். விபச்சாரம் செய்ய மாட்டார்கள். இவற்றில் எதையேனும் யாரேனும் செய்வாரேயானால் அப்பாவத்தின் பலனை (நரகத்தில்) சந்திப்பார்கள்' (அல்குர்ஆன் 25:68) என்ற வசனத்தை இறக்கி வைத்தான்.
அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹ் அன்ஹு

**'அல்லாஹ்விற்கு எதையும் இணைவைக்காது இறப்பெய்தியவர் சுவனம் புகுந்து விட்டார்' என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 52**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு மனிதர் வந்து 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இரண்டையும் (சுவனத்தையும், நரகத்தையும்) கடமையாக்கி வைக்கக்கூடியது (பற்றிய காரியங்கள்) எது ?' எனக் கேட்டார்.
அல்லாஹ்விற்கு எதையும் இணைவைக்காது யார் இறப்பெய்து விட்டாரோ அவர் சுவனம் புகுந்துவிட்டார். அல்லாஹ்விற்கு

எதையும் இணை வைத்தவராக இருக்க ஒருவர் இறப்பெய்து விட்டால் அவர் நரகம் புகுந்து விட்டார்.' எனக் (அல்லாஹ்வின் தூதர் அவர்கள்) கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹ் அன்ஹு

**ஹதீஸ் எண் : 53**

நான் (அபூதர்ரு) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தேன். அவர்கள் உறங்கிக்கொண்டு இருந்தனர். அவர்கள் வெள்ளை நிற உடையை அணிந்திருந்தனர். பிறகு (இரண்டாம் முறை) வந்தேன். அப்போதும் அவர்கள் உறங்கிக் கொண்டு இருந்தனர். மற்றொரு (மூன்றாம்)முறையும் வந்தேன். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தூக்கத்திலிருந்து விழித்து விட்டனர். அவர்களுக்கு அருகில் அமர்ந்தேன். (அப்போது) 'எந்த அடியானும் லாஇலாஹ இல்லல்லாஹு எனக் கூறி அதன்பிறகு அதிலேயே இறந்துவிட்டாரேயானால் அவர் சுவனம் புகாமல் இருப்பதில்லை' எனக் கூறினார்கள்.

'அவர் விபச்சாரம் செய்தாலும் திருடினாலுமா?' எனக் கேட்டேன். அவர் விபச்சாரம் செய்தாலும் திருடினாலும் தான் என்றனர். இரண்டாம் முறையும் மூன்றாம் முறையும் கேட்டேன். அதே பதிலையே கூறினாார்கள். நான்காவது முறையாக நான் கேட்கும்போது அபூதர்ரின் மூக்கு மண்ணைத்தொட (அவருக்கு அது இஷ்டமில்லையெனினும்) என்றார்கள். இதைக் கேட்ட நான் அபூதர்ரின் மூக்கு மண்ணைத்தொட்டாலும் (அவருக்கே அது இஷ்டமில்லையெனினும்) என்று கூறிக்கொண்டே நான் (அபூதர்ரு) அங்கிருந்து வெளியேறிவிட்டேன்.

இச்சம்பவத்தை அபூதர்ரு ரளியல்லாஹ் அன்ஹு அவர்களே தனக்கு அறிவித்ததாக அபுல் அஸ்வது அத்தீலி ரளியல்லாஹ் அன்ஹு அறிவிக்கிறார்கள்.

'யார் மனதில் அணுவளவு பெருமை இருந்ததோ அவர் சுவனம் புகமாட்டார்' என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 54**

'யார் மனதில் அணுவளவு பெருமை இருந்ததோ அவர் சுவனம் புகமாட்டார் ' என நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
'நிச்சயமாக ஒரு மனிதன் தனது உடை அழகாக இருக்க வேண்டும் எனவும் தனது காலணி அழகாக இருக்க வேண்டுமெனவும் விரும்புகிறார்' (அது பற்றி என்ன ?) என ஒரு மனிதர் கேட்டார்.
(அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சயமாக அல்லாஹ் அழகானவன். (அவன்) அழகானதையே விரும்புகிறான். பெருமை என்பது அகம்பாவம் கொண்டவன் உண்மையை மறுப்பதும், மனிதர்களைக் கேவலமாக (இழிவாக)க் கருதுவதுமாகும் என்றனர்.
அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹ் அன்ஹு

வம்சாவழியைக் குறைகூறுவதும் ஓலமிட்டு அழுவதும் இறை நிராகரிப்பாகும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 55**

மனிதர்களுக்கு மத்தியில் இரண்டு விஷயங்கள் உள்ளன. இவை இரண்டும் அவர்களிடத்தில் இருப்பின் அது இறை நிராகரிப்பை குறிக்கும். அவை வம்சாவழியைக் குறைகூறுவதும் மையித்தின் நிமித்தம் ஓலமிட்டு அழுவதும் ஆகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

கிழக்கு நட்சத்திரம் விழுந்தால் மழை பெய்தது என யார் கூறினாரோ ? அவர் இறை நிராகரிப்பு செய்து விட்டார் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 56**

ஹுதைய்பியாவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு பஜ்ரு தொழுகை வைத்தார்கள். அந்த இரவில் மழை பெய்து ஈரமாக இருந்தது. அவர்கள் தொழுகையை முடித்துவிட்டு ஜனங்களை நோக்கி வந்தார்கள். 'உங்களது இரட்சகன் என்ன கூறினான் என்று உங்களுக்கு தெரியுமா ?' எனக்

கேட்டார்கள். அதற்கு (அங்கிருந்தவர்கள்) 'அல்லாஹ்வும் அவனது ரசூலுமே மிகத் தெரிந்தவர்கள்' என்றனர். (அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) 'எனது அடியார்களில் என்னை விசுவாசித்தவர்களும் என்னை நிராகரித்தவர்களும் காலைப்பொழுதை அடைந்துவிட்டனர். (அதாவது)' அல்லாஹ்வின் பேரருளாலும், அவனுடைய கிருபையாலும் தான் மழை பொழிவிக்கப்பட்டோம் என யார் கூறினார்களோ அவர் என்னை விசுவாசித்தவரும், நட்சத்திரங்களை நிராகரித்தவரும் ஆவார். எவர் 'அதிகாலையில் கிழக்கு பகுதியில் நட்சத்திரம் விழுந்ததினால்தான் மழை பொழிவிக்கப்பட்டோம் எனக் கூறினாரோ அவர் என்னை நிராகரித்து விட்டு நட்சத்திரத்தை நம்பியவராவார் என அல்லாஹ் கூறினான்' என கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜைதுபின்காலிக் அல்ஜுஹைன் ரளியல்லாஹ் அன்ஹு

## அடிமை ஓடி ஒளிந்துகொள்வது இறை நிராகரிப்பு என்பது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 57

'எந்த அடிமையாயினும் தனது எஜமானர்களிடமிருந்து ஓடிவிடுவாரேயானால் அவர் மீண்டும் தமது எஜமானர்கள்பால் திரும்பும்வரை கா∴பிராகவே இருக்கிறார்.' என்று ஜரீர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் சொல்லும்போது தான் கேட்டதாக ஷஅபீ ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

உறுதியாக அல்லாஹ்வின் மீது சத்தியமாக (முஸ்லிமில் ருவிய என இருப்பதை அடிப்படையாக வைத்து) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரை உயர்த்தப்பட்ட நிலையில் தான் இந்த ஹதீஸ் அறிவிக்கப்பட்டுள்ளது எனினும் நான் அறிவித்ததாக இங்கே பஸராவில் அறிவிக்கப்படுவதை நான் வெறுக்கிறேன் என மன்ஸூர் ரளியல்லாஹ் அன்ஹு கூறுகிறார்.

குறிப்பு : இந்த ஹதீஸை மன்ஸூர் ரளியல்லாஹ் அன்ஹுக்கு ஷஅபீ ரளியல்லாஹ் அன்ஹு கூறியதாக ஷஅபீ ரளியல்லாஹ்

அன்ஹுக்கு ஜரீர் ரளியல்லாஹ் அன்ஹு கூறியதாக அறிவித்து விட்டு, அறுதியிட்டு சத்தியம் செய்து உறுதியாக சொல்கிறார். இந்த ஹதீஸ் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரை உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டதுதான் ஆயினும் பஸராவில் ஈமான் உடையவர்கள் பாவம் செய்யின் அவர்கள் 'நிரந்தரமாக நரகத்தில் இருப்பர் என மு:தஜிலா கவாரிஜ் ஆகிய குழுவினர் கூறிக்கொண்டு இருந்ததால் இந்த ஹதீஸை பஸராவில் அறிவிப்பதை நான் வெறுக்கிறேன் ' என மன்ஸுர் ரளியல்லாஹ் அன்ஹு கூறுகிறார்.

நூல் ஷரஹ்நவவீ பாகம் 2 பக்கம் 59

**ஹதீஸ் எண் : 58**

ஒரு அடிமை (தனது எஜமானர்களிடமிருந்து) ஓடிவிட்டால் அவரது தொழுகை அங்கீகரிக்கப்படமாட்டாது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஜரீர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**எனது காரியஸ்தன் அல்லாஹ்வும் விசுவாசிகளில் நல்லவர்களும் ஆவார் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 59**

'தெரிந்துகொள்ளுங்கள்! எனது தந்தையின் குடும்பத்தவர்(களில் இன்னவர்) எனது காரியஸ்தர்களல்லர் எனது காரியஸ்தன் அல்லாஹ்வும், விசுவாசிகளில் நல்லவர்களும் ஆவார்' என பகிரங்கமாக ஒளிவுமறைவுமின்றி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்ல நான் கேட்டேன்.

அறிவிப்பவர் : அம்ரு பின் அல்ஆஸ் ரளியல்லாஹ் அன்ஹு

**மு:மினானவருக்கு அவரின் நல்லவை(அமல்)களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நற்கூலி உண்டு. கா:பிரானவர் செய்த நல்லவைகளுக்கு இம்மையிலேயே துரிதமாக கூலி கொடுக்கப்பட்டுவிடும் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 60**

மு.ஃமினானவருக்கு அவர் செய்த நல்லவை(அமல்)களுக்கு பகரத்தை இவ்வுலகில்(மட்டும்) கொடுத்துவிட்டு மறுமையில் கொடுக்காமல் நிச்சயமாக அல்லாஹ் அநீதி இழைக்க மாட்டான். 'கா.ஃபிரானவருக்கு அவர் (அல்லாஹ்விற்கென) செய்த நல்லவைகளுக்கு பகரமாக இவ்வுலகிலேயே உணவளிக்கப்படுகிறார். அவர் மறுமையின் பால் சேர்ந்துவிட்டால் (மரணித்துவிட்டால்) நற்கூலி நல்கப்படுவதற்குரிய எந்த ஒரு நன்மையும் அவருக்கு இருக்கவே இருக்காது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்

## இஸ்லாம் என்றால் என்ன? என்பது பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் உள்ள பாடம்

### ஹதீஸ் எண் : 61

'நஸ்த்' (மாகாண) வாசி ஒருவர் தலைவிரிகோலமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார். அவரது உரத்த சப்தத்தை (சப்தமிட்டு பேசுவதை) நாங்கள் செவியுற்றோம். (ஆனால்) அவர் என்ன கூறுகிறார் என்பது எங்களுக்கு (சரியாக) விளங்கவில்லை. (வந்தவர்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பக்கத்தில் நெருங்கி வந்து அப்போது இஸ்லாத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இரவிலும் பகலிலும் ஐந்து தொழுகைகள் என்கிறார்கள் (அதைக்கேட்டுவிட்டு வந்தவர்) அதல்லாத மற்ற (கடமை) ஏதேனும் என்மீது உண்டா? எனக் கேட்டார். (அதற்கு) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'உபரியாகச் செய்தாலே தவிர வேறு இல்லை' என்றனர். அடுத்து 'ரமளான் மாத நோன்பு' என்றார்கள் 'அதல்லாது வேறு ஏதேனும் என்மீது உண்டா?' என (வந்திருந்தவர்) கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'உபரியாகச்

செய்தாலே தவிர வேறு இல்லை' என்றார்கள். அவருக்கு 'ஜகாத்தைப்பற்றி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.' அப்போது அதல்லாத ஏதேனும் என்மீது உண்டா? என (வந்திருந்தவர்) கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'உபரியாகச் செய்தாலே தவிர வேறு இல்லை எனறார்கள்.' (அதைக்கேட்ட) அந்த மனிதர், அல்லாஹ்வின மீது சத்தியமாக இதைவிட அதிகமாக செய்யவும் மாட்டேன் அதிலிருந்து எதையும் குறைக்கவும் மாட்டேன் என சொல்லிக்கொண்டு திரும்பிச் சென்றார் (அதைக்கேட்ட) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர் உண்மையாகவே (இதை போன்றே) நடந்து கொண்டாரேயானால் வெற்றி பெற்று விட்டார் என்றார்கள். மற்றொரு அறிவிப்பில் அவரது தந்தையின் மீது சத்தியமாக அவர் உண்மையாக நடந்து கொண்டால் அவர் வெற்றி பெற்று விட்டார் எனவும் அல்லது அவரது தந்தையின் மீது சத்தியமாக அவர் உண்மையாக நடந்து கொண்டால் அவர் சுவனம் புகுந்து விட்டார் எனவும் உள்ளது.

குறிப்பு : பெற்றோர்களைக்கூறி சத்தியம் செய்வது விலக்கப்படாமலிருந்த காலத்தில் தந்தையின் மீது சத்தியமாக என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அவ்வாறு சத்தியம் செய்வது விலக்கப்பட்டுவிட்டதால் தவிர்க்கப்பட வேண்டும் என்பது தெளிவு.

அறிவிப்பவர்: தல்ஹாபின் உபைதுல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு

## இஸ்லாம் ஐந்து அடிப்படைகள் மீது அமைக்கப்பட்டுள்ளது என்பது பற்றி பாடம்

### ஹதீஸ் எண் : 62

இஸ்லாம் ஐந்து மீது அமைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் ஒருவன் என (உறுதி) கொண்டு தொழுகையை நிறைவேற்றி, ஜகாத்தும் கொடுத்து, நோன்பு (நோற்று)ம் ஹஜ்ஜும் (செய்ய) வேண்டும்

என்ற ஐந்து அடிப்படைகள் மீது அமைக்கப்பட்டுள்ளது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் அப்போது ஒரு மனிதர், ஹஜ்ஜையும் ரமளான் நோன்பையுமா? எனக்கேட்டார். அதற்கவர்கள் இல்லை ரமளான் நோன்பும், இன்னும் ஹஜ்ஜும் என்றனர் இவ்வாறுதான் அல்லாஹ்வின் தூதரிடம் நான் செவியுற்றேன் என இப்னு உமர் ரளியல்லாஹ் அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**எந்த இஸ்லாம் சிறந்தது என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 63**

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் எந்த இஸ்லாம் சிறந்தது? எனக் கேட்டனர். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உணவை உண்ணக் கொடுப்பாய் உனக்கு தெரிந்தவர் தெரியாதவர் (யாவருக்கும்) நீ ஸலாம் கூறுவாய் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லா இப்னு அம்ரு ரளியல்லாஹ் அன்ஹுமா

**இஸ்லாம், ஹஜ்-ஹிஜ்ரத் ஆகிய(இ)வை அதற்கு முன்புள்ளவற்றை (பாவங்களை) அழித்து விடுகிறது என்பது பற்றி பாடம்**

**ஹதீஸ் எண் : 64**

மரணத்தருவாயிலிருந்த அம்ருபின் அல் ஆஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் நாங்கள் ஆஜரானோம். அவர் நீண்ட நேரம் அழுதவாரக அவர் முகத்தை சுவற்றின்பால் திருப்பிக்கொண்டார். அதைக் கண்ட அவர் மகன். என் தந்தையே! இன்னதையெல்லாம் கொண்டு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களுக்கு நற்செய்தி கூறவில்லையா? அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இன்னதையெல்லாம் கொண்டு நன்மாறாயம் கூறவில்லையா? என அவரின் மகனார் கூற ஆரம்பித்தார். அதைக் கேட்ட அவர் தனது முகத்தை (எங்கள்பால்) திருப்பினார்.

நிச்சயமாக நாம் சேகரித்து வைத்திருப்பதில் மிகச்சிறந்தது வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறுயாருமில்லை, நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார் என சாட்சி கூறுவதேயாகும். நிச்சயமாக நான் மூன்று நிலைகளில் இருந்தேன்.
அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (விஷயத்தில்) மீது என்னைவிட கடும் கோபம் கொண்டவர் எவரும் இல்லை என்றும், எந்த விதத்திலாவது அவர்களிலிருந்து நான் சக்தி பெற்றுவிட்டால் (என் கையில் அகப்பட்டுக் கொண்டால்) நான் அவர்களைக் கொலை செய்து விடுவதும் எனக்கு மிக விருப்பமானதாக இருந்தது என்றும் என்னை நான் கண்டேன். அந்நிலையில் இருந்திருந்தால் நிச்சயமாக நான் நரகவாசிகளில் இருந்திருப்பேன் கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ். இஸ்லாத்தை என் இதயத்திலாக்கிய பிறகு நான் நபி ஸல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து உங்களின் வலக்கரத்தை விரியுங்கள் நான் உங்களிடம் உடன் படிக்கை செய்து கொள்கிறேன் எனக்கூறினேன். அவர்கள் வலக்கரத்தை நீட்டியதும் என் கரத்தை இழுத்துக்கொண்டேன.; அம்ரே! உனக்கு என்ன நேர்ந்தது? எனக் கேட்டார்கள். நான் நிபந்தனையிட விரும்புவதாக கூறினேன். என்ன நிபந்தனையிடப்போகிறாய்? எனக் கேட்டார்கள். எனது பாவம் பொறுக்கப்படவேண்டும் என்றேன்.
நிச்சயமாக இஸ்லாம்: அதற்கு முன்னுள்ளவற்றை(பாவங்களை)யும், ஹிஜ்ரத், அதற்கு முன்னுள்ளவற்றை(பாவங்களை)யும் ஹஜ் அதற்கு முன் உள்ளவற்றை (பாவங்களை)யும், அழித்துவிடுகிறது என உங்களுக்கு தெரியாதா? எனக் கேட்டார்கள். (அவ்வாறு அவர்கள் கூறியதுமே) அல்லாஹ்வின் தூதரைவிட எனக்கு விருப்பமானவர்களோ, அவர்களைவிட என்கண்ணில் மிகுந்த கண்ணியத்தை உடையவர்களாகவோ (நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர) வேறொருவருமில்லை என என் நிலை ஆகிவிட்டது.

அதைப்பற்றி எவ்வாறு சொல்வதென்றால் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைவிட மிக விருப்பமானவர்களோ, அவர்களைவிட என் கண்ணில் மிகுந்த மகத்துவமுடையவர்களோ வேறு எவரும் இல்லை என ஆகிவிட்டது, அவர்களின் கண்ணியத்தை எனது இரு கண்களில் நிரப்பிக் கொள்ள நான் சக்தியற்றவனாக ஆகிவிட்டேன். அதை வர்ணனை செய்துகாட்ட என்னிடம் கூறப்பட்டால் எனக்கு அதை வர்ணிக்க சக்தியற்றவனாகி இருப்பேன் காரணம் அவர்கள் பற்றிய கண்ணியத்தை எனது இரு கண்களிலும் நிரப்பிக் கொள்ளவே என்னால் இயலவில்லை. அந்நிலையில் நான் இறப்பெய்திருந்தால் சுவனவாசிகளில் நான் ஆகியிருப்பேன் என உறுதியாக ஆதரவுவைக்கிறேன். (அதன்பிறகு) என்னைப் பல விஷயங்கள் தொடர்ந்தன. அவற்றில் என் நிலை என்னவென்று எனக்கே தெரியவில்லை. அந்நிலையில் (இஸ்லாத்தில்) நான் இறப்பெய்திருந்தால் எனக்காக ஒப்பாரியிட்டு அழுபவளோ நெருப்போ என்னுடன் இருந்திருக்காது.

ஆகவே, நான் இறப்பெய்திவிட்டால் என்னை நீங்கள் அடக்கம் செய்துவிட்டு மண்ணைப்போட்டு (மேடுகட்டாது) உதரிவிடுங்கள். அதன்பிறகு எனது கப்ரடியில் ஒரு ஒட்டகையை அறுத்து பங்கீடு செய்யுமளவு (நேரத்து)க்கு நில்லுங்கள் எனது ரட்சகனின் (மலக்கு)கள் (முன்கர், நகீர்) எதைக் கொண்டு திரும்புகிறார்கள் என்று நான் பார்க்கும் வரை (நான்) உங்களைக் கொண்டு அமைதி பெறுவேன்.

அறிவிப்பவர்: இப்னு ஷுமாசா அல்மஹ்ரீ ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : இந்த ஹதீஸின் மூலம் பல விஷயங்கள் நமக்கு தெளிவாகிறது.

1) இறக்கும் (மரண) தருவாயிலிருப்பவர்க்கு மன சாந்தியை (அமைதி) கிடைக்க, அவரது வாழ்நாளில் அவர் அல்லாஹ்விற்கு பொருத்தமாக செய்தவற்றையும், அந்த நல்ல காரியங்களுக்கு

அல்லாஹ்விடம் கிடைக்க இருக்கும் மகத்தான கூலிகளையும் அவருக்கு நினைவுபடுத்துவது விரும்பத்தக்கது.

2) ஜனஸாவுடன் அடக்கஸ்தலம்வரை நெருப்புப்பந்தம் நெருப்புச்சட்டி ஆகியவற்றை எடுத்துச் செல்வது அறியாமை காலவழக்கமாகும் எனவே அதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

3) ஓலமிட்டு அழுவதும் அறியாமை கால வழக்கமாகும் அதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

4. கப்ருக்கு அருகில் உட்காருவதும் தவிர்க்கப்படவேண்டும்.

5. கப்றில் முன்கர், நகீர் என்ற இரு மலக்குகள் மையத்திடம் கேள்வி கேட்பதால் நீண்ட நேரம்வரை நின்றவாறு அவர் நாக்குளராது அக்கேள்விகளுக்கு பதில் கூற அவருக்கு பிரார்த்தனை செய்யுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ள கூற்றுக்கொப்ப நீண்ட நேரம் நிற்குமாறு கூறுகிறார். ஆனால் வழக்கத்தில் உள்ளவாறு அடக்கஸ்தலத்தில் (மய்யவாடியில்) கூட்டு பிரார்த்தனைகள் எதுவும் இல்லையென்பதையும் இதன்மூலம் காண்கிறோம்.

**இஸ்லாத்தில் (வந்தபிறகு) யார் அழகாக நடந்து கொண்டாரோ அவர் அறியாமை காலத்தில் செய்தவற்றைக் கொண்டு குற்றம் பிடிக்கமாட்டார் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் என் : 65**

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அறியாமைக்காலத்தில் இஸ்லாத்திற்கு வருமுன் செய்த(தீய)வற்றைக் கொண்டு நாங்கள் தண்டிக்கப்படுவோமா? என சிலமனிதர்கள் கேட்டனர். அதற்கு இஸ்லாத்தில் யார் அழகுற இருந்தனரோ அவர் அறியாமைக்காலத்தில் செய்தவற்றைக் கொண்டு தண்டிக்கப்படமாட்டார் யார் தவறாக நடக்கிறாரோ அவர் அறியாமைக்காலத்திலும் இஸ்லாத்திலும், செய்தவைகளைக் கொண்டு தண்டிக்கப்படுவார் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 66**

முஸ்லிமை ஏசுவது (திட்டுதல்) பாவமாகும். அவரைக் கொல்வது, இறை நிராகரிப்பாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம் அவர்கள் கூறினார்கள் அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு

**உங்களில் எவர் இஸ்லாத்தில் அழகான(நன்மையான)வற்றைக் செய்தாரோ அவர் தான் செய்யக்கூடிய ஒவ்வொரு நன்மைக்கும் அதைப்போன்று பத்து நன்மைகள் எழுதப்படும் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 67**

எனது அடியான் ஒரு நன்மையை செய்வதாக் கூறினால் (மனதில் நினைத்தால்) செய்யாதவரை அவனுக்காக ஒரு நன்மையை எழுதிவிடுகிறேன் அவன் அக்காரியத்தைச்செய்து விடுவானேயானால் அதை அதைப்போன்றே பத்து நன்மைகளாக எழுதிகிறேன். அவன் ஒரு தீயதை செய்வதாக கூறினால் (மனதில் நினைத்தால்) அவன் அதை செய்யாதவரை அவனை நான் மன்னித்துவிடுகிறேன். அவன் அ(த்தீய)தை செய்துவிட்டால் அவனுக்கு அதைப்போன்றதாகவே (ஒரு தீமைக்கு ஒரு தீமை) எழுதுகிறேன் என மகத்துவமும் கண்ணியமும் நிறைந்த அல்லாஹ் கூறுகிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 68**

எனது சமூகத்தவர்கள் தங்களது மனங்களில் நினைத்தவை(தீமை)களைப் பற்றிப் பேசாமலும், அல்லது செயல்படுத்தாமலும் இருக்கும்வரை அல்லாஹ் (குற்றம் பிடிக்காமல்)விட்டுவிடுகிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**முஸ்லிம்கள் யாரி(ன் தீமையி)லிருந்து அமைதியும் ஈடேற்றமும் பெற்றுவிட்டார்களோ அவர்தான் முஸ்லிம் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 69**

ஒரு மனிதர் அல்லஹ்வின் தூதரிடம் முஸ்லிம்களில் மிகச்சிறந்தவர் யார்? எனக்கேட்டார் அதற்கு பிற முஸ்லிம்கள் எவரின் நாவு, கரம், ஆகியவற்றின் தீமையிலிருந்து பாதுகாப்பு பெற்றார்களோ, அவர்தான் (சிறந்த) முஸ்லிம் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ரு பின் அல்ஆஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

குறிப்பு: தனது கையினாலும், நாவினாலும் பிறருக்கு தீங்கிழைக்காதவரே சிறந்த முஸ்லிமாவார் என்பதே இதன் கருத்தாகும்.-

**ஒருவர் அறியாமைக் காலத்தில் நன்மையானவற்றைச் செய்து அதன் பிறகு இஸ்லாமாகி விடுகிறார் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 70**

தர்மம் செய்தல், உரிமைவிடுதல், சுற்றத்தாரை சேர்த்து நடத்தல் ஆகிய பல வணக்கங்களை, அறியாமைக் காலத்தில் நான் செய்துவந்துள்ளேன். அவைகளுக்கு நற்கூலி உண்டா என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஹக்கீம் பின் ஹிஜாம் கேட்டதற்கு, நன்மையான காரியங்களில் இஸ்லாத்திற்கு முன்பு எவைகளை செய்துள்ளீரோ, அத்துடன் இஸ்லாத்தை ஏற்றுள்ளீர் என அவருக்கு கூறினார்கள் இச்சம்பவத்தை நிச்சயமாக ஹக்கீம் பின் ஹிஜாம் என்பவர் உர்வாவிற்கு அறிவித்ததாக, உர்வா அறிவிக்கிறார்.

கருத்து : இரண்டு நிலையிலும் செய்த நன்மைகளுக்கு நற்கூலி உண்டு என்பதை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெளிவு செய்தார்கள்.

**சோதனையிலிருந்து எச்சரிக்கை என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 71**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருந்தோம். அப்போது அவர்கள் இஸ்லாத்தைச் சொன்ன(ஏற்றுக் கொண்ட)வர்கள் எத்தனைபேர்? என்பதைக் கணக்கிடுங்கள் என்றனர்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! எங்களைப் பற்றிப் பயப்படுகிறீர்களா? நாங்கள் ஆறுநூறிலிருந்து எழுநூறுவரை இருப்போம் எனக் கூறினோம். நிச்சயமாக நீங்கள் சோதனைக்குள்ளாக்கப்படலாம் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள் என (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) கூறினார்கள்.
எங்களில் ஒவ்வொருவரும் தனித்தனியே நின்று மறைவாகத் தொழுகின்ற நிலைவரை நாங்கள் (அல்லாஹ்வின்) சோதனைக்குள்ளாக்கப்பட்டு விட்டோம்.
அறிவிப்பவர்: ஹுதைபா ரளியல்லாஹு அன்ஹு

**இறையறிவிப்பின் நிமித்தம் எதைக்கொண்டு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு துவக்கப் பட்டதோ அது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 73**

வஹீயின் நிமித்தம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதோ அது தூக்கத்தில் வரும் உண்மையான கனவாக இருந்தது. அது நிஜவாழ்க்கையில் காலைபொழுது (வருவது எவ்வளவு உறுதியோ அது) போன்று நடந்தேறிய தவிர எந்தக்கனவையும் அவர்கள் காண்பதில்லை. அதன்பிறகு தனிமையிலிருப்பது அவர்களுக்கு விருப்பமாக்கப்பட்டது. ஆகவே ஹிராகுகையில் தனித்திருந்து வழிபாடு செய்து வந்தனர். தன் குடும்பத்தினர்பால் திரும்புமுன் எண்ணிக்கையுள்ள பல இரவுகளை வணக்க வழிபாட்டில் கழித்து வந்தனர். அதற்காக தங்களை தயார் செய்து கொள்ளக்கூடியவர்களாக இருந்தனர். அதன்பிறகு கதீஜா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள்பால் திரும்பி வந்து அதுபோன்ற (பலநாட்களுக்குரிய) உணவை தயார் செய்து கொள்வர். ஹிராகுகையில் (இவ்வாறாக) இருந்து வந்த போது திடீரென(ஒரு நாள்) இறையறிவிப்பு வந்துவிட்டது (அதன்காரணமாக) அவரிடம் அமரர்(மலக்கு) வந்து ஓதுவீராக! எனக்கூறினார். அதற்கு நபி தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நான் ஓதக்கூடியவன் அல்லன்! என்றனர்.

(ஆகவே) அவர் (மலக்கு) என்னைப்பிடித்து எனக்குசிரமம் ஏற்பட்டு மூச்சுத்திணறல் உண்டாகிற அளவிற்கு என்னை இறுகக்கட்டித்தழுவி தம்மோடு அணைத்துப்பிறகு விடுவித்து விட்டு ஓதுவீராக! என்றனர். நான் ஓதக்கூடியவன் அல்லன்! என்று நான் கூறினேன். (அதன்பிறகு) அவ(அமர)ர் இரண்டாம் முறையாக என்னைப்பிடித்து எனக்குசிரமம் ஏற்பட்டு மூச்சுத்திணறல் உண்டாகிற அளவிற்கு என்னை இறுகக்கட்டித்தழுவி தம்மோடு அணைத்துப்பிறகு விடுவித்து விட்டு ஓதுவீராக! என்றனர். அதற்கு நான் ஓதக்கூடியவன் அல்லன்! எனக்கூறினேன் என்பதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அதன்பிறகு மூன்றாம் முறையாக என்னைப்பிடித்து எனக்குசிரமம் ஏற்பட்டு மூச்சுத்திணறல் உண்டாகிற அளவிற்கு என்னை இறுகக்கட்டித்தழுவி தம்மோடு அணைத்துப்பிறகு விடுவித்து விட்டு

’படைத்தவனாகிய உமது இரட்சகனின் பெயர் கொண்டு ஓதுவீராக! (அவன்) மனிதனை இரத்தக்கட்டியிலிருந்து படைத்தான். மிகுந்த கண்ணியம் வாய்ந்தவன் உமது இரட்சகன் (என) ஓதுவீராக! அவனே எழுதுகோலின் மூலம் கற்றுத் தந்தான் அவனே (மனிதனுக்கு) அவனுக்கு தெரியாதவற்றையெல்லாம் கற்றுத் தந்தான்’ என்று அவர் கூறினார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (இறை அறிவிப்பாகிய) அதைப்பெற்றுக்கொண்டு அவர்களது தோல்புஜங்களுக்கும் கழுத்துக்கும் இடையில் உள்ள சதைப்பகுதி நடுங்க, அங்கிருந்த திரும்பி கதீஜா ரளியல்லாஹ் அன்ஹா அவர்களது (வீட்டில்) வந்து நுழைந்தனர். (நுழைந்த அவர்கள்) என்னைப் போர்த்துங்கள்! என்னைப் போர்த்துங்கள்! எனக்கூறினர். நடுக்கம் நீங்குகின்ற வரையில் (கதீஜா ரளியல்லாஹ் அன்ஹா) அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு போர்த்தினர். அதன்பிறகு கதீஜா ரளியல்லாஹ் அன்ஹா அவர்களைப்பார்த்து கதீஜாவே! எனக்கு என்ன நேர்ந்தது ? எனக்கூறிவிட்டு அவர்களுக்கு (நடந்த) செய்தியை

தெரிவித்துவிட்டு 'நான் நிச்சயமாக என்னைப்பற்றியே பயந்து விட்டேன்' என்றனர் அதைக்கேட்ட கதீஜா ரளியல்லாஹ் அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப்பார்த்து (விஷயம்) அவ்வாறல்ல. அல்லாஹ்வின் மீது சத்தியமாக! உங்களை ஒருபோதும் அல்லாஹ் இழிவுபடுத்தமாட்டான். நிச்சயமாக நீங்கள் ரத்த சொந்தத்தை சேர்த்து (அரவணைத்துக்) கொள்கீறீர்கள்! செய்தியில் உண்மையே பேசுகிறீர்கள்! (அனாதைகள், விருந்தினர், குடும்பத்தார் ஆகியோர்க்கு பொறுப்பேற்று அவர்களுக்காக செலவு செய்து, அவர்களது) சுமையைதாங்கிக் கொள்கிறீர்கள். மற்றவர்களால் இயலாத அளவுக்கு பெரும் பொருளை ஈட்டி (அவற்றை நன்மையானவற்றில் மனிதர்களுக்காக) செலவு செய்கிறீர்கள். விருந்தினரை உபசரிக்கிறீர்கள். உண்மையான கஷ்டத்திலிருப்பவருக்கு உதவியும் செய்கிறீர்கள். எனக்கூறிவிட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்துக் கொண்டு வராகபின் நவ்பல்பின் அஸத் பின் அப்துல் உஜ்ஜாவிடம் வருகின்றனர்.
(வரகா எனக்கூறப்படும்) இவர் கதீஜா ரளியல்லாஹு அன்ஹா அவர்களது தந்தையின் உடன் பிறந்த சகோதரரின் மகனாவார். அவர் அறியாமை காலத்தில் கிறிஸ்தவராக இருந்தார். அரபியில் நூல் எழுதும் திறமை மிக்கவராக இருந்தார். உயர்வான அல்லாஹ் அவர் எந்த அளவு எழுத வேண்டுமென நாடியிருந்தானோ, அந்த அளவு அரபி மொழியில் இன்ஜீலை எழுதினார். அவர் அப்போது வயது முதிர்ந்தவராகவும், கண்பார்வையிழந்தவராகவும் இருந்தார்.
இவரிடம் வந்தடைந்த கதீஜா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள், எனது மரியாதைக்குரியவரே! உமது சகோதரரின் மகனிடமிருந்து (அவர் கூறுவதைக்) கேட்பீராக! என்றனர். அதற்கவர் என் சகோதரரின் மகனாரே! என்ன கண்டீர்? எனக் கேட்டார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதைக்கண்டார்களோ? அதை அவருக்கு தெரிவித்தனர். அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப்

பார்த்து, உங்களுக்கு (இறையறிவிப்பைக் கொண்டு) வந்த, இந்த ஜிப்ரில் தான் மூஸாபின் இம்ரான் அவர்களுக்காக (வானத்திலிருந்து அறிவிப்பைக் கொண்டு) இறக்கப்பட்டவர். (அந்த நபித்துவத்தை மக்களுக்கு நீங்கள் பிரச்சாரம் செய்யும் காலத்தில்) அப்போது நான் முறுக்கான வாலிபனாக இருக்க வேண்டுமே! உமது சமூகத்தவர் உம்மை (பிறந்த மண்ணிலிருந்து) வெளியேற்றுகின்ற போது நான் உயிரோடு இருக்க வேண்டுமே எனக் கூறினார். (இதைக்கேட்ட) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:
'அவர்கள் என்னை (ஊரைவிட்டு) வெளியேற்றி விடுவார்களா?' எனக்கேட்க, வரகா அவர்கள் ஆம்! நீங்கள் கொண்டு வந்ததை எந்த மனிதரும் கொண்டுவரவில்லை: அவர் பகைக்கப்பட்டே தவிர!. உம்முடைய (அந்த) நாள் என்னை அடைந்துவிட்டால் (நான் அதுவரை உயிரோடு இருப்பின்) மிகக் கடுமையான உதவியாக உங்களுக்கு நான் உதவுவேன்!, எனக் கூறினார்.
இந்தச் செய்தியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துணைவியார் அன்னை ஆயிஷா ரளியல்லாஹ அன்ஹா அவர்கள் அறிவித்ததாக உர்வாபின் ஜுபைர் அவர்கள் அறிவித்தார்கள்.
ஒரு முக்கிய குறிப்பு:
நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபித்துவம் கிடைக்கும் முன்பு ஹிராமலையின் குகையினுள் சென்று தனித்திருந்து சிந்தித்தனர், என்பது மிகச்சரியான உண்மை.
ஆனால் நபித்துவம் கிடைத்தபின் மக்களை விட்டுப் பிரிந்து எந்த மலையின் குகைக்கோ, அல்லது தனிப்பட்ட இடத்திற்கோ சென்று பல நாட்கள் அல்லது பல இரவுகள் இருந்துவிட்டதாக எவ்வித ஆதாரமும் இல்லை. உண்மை நிலைமை இவ்வாறு இருக்க: அல்லாஹ் இருபத்து மூன்று வருட காலம் இப்புனிதமான மார்க்கத்தின் அனைத்து விஷயங்களையும் அவர்கள் மூலம், சொல்லாக, செயலாக, சம்மதமாகத்தான் அல்லாஹ் கற்றுத்தந்தான். ஆனால் நபித்துவத்திற்குப்பிறகு எந்த மலையையும் எந்த குகையையும் தேடி நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் செல்லவில்லை என்பதை மிகத் தெளிவாக நாம் விளங்கிகொள்ள வேண்டும்.

**ஹதீஸ் எண் : 74**

அபூஸலமாவிடம், 'முதலாவது இறக்கி வைக்கப்பட்ட குர்ஆன் (வசனம்) எது?' என நான் (அறிவிப்பாளர்) கேட்டேன். அதற்கவர் யா அய்யுஹல் முத்தஸ்ஸிர் எனக் கூறினார். நான் 'இக்ரஉ' இல்லையா? எனக் கேட்டேன்.

அதற்கவர், ஷநான் (அபூஸலமா) ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹுவிடம் முதலாவது இறக்கி வைக்கப்பட்ட குர்ஆன் (வசனம்) எது?�னு எனக் கேட்டேன். 'யா அய்யுஹல் முத்தஸ்ஸிர்' எனக் கூறினார். நான் 'இக்ரஉ' அல்லவா? எனக் கேட்டேன். அதற்கு ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் 'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எமக்கு எதை அறிவித்தார்களோ, அதை உங்களுக்கு நான் சொல்கிறேன்' என்று கூறிவிட்டு; அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நான் ஹிரா(க் குகையில்)வில் ஒரு மாதமிருந்தேன். எனது இருக்கையை முடித்துக்கொண்டு இறங்கி பள்ளத்தாக்கின் நடுப்பகுதியில் நடந்தேன். அப்போது நான் அழைக்கப்பட்டேன். (அதனால்) எனக்கு முன்னும், எனக்கு பின்னும், என் வலப்புறமும், என் இடப்புறமும் நோட்டமிட்டேன். ஒருவரையும் காணவில்லை. அதன்பிறகும் நான் அழைக்கப்பட்டேன். ஒருவரையும் காணவில்லை. அதன்பிறகும் நான் அழைக்கப்பட்டேன். (அதனால்) என் தலையை நான் உயத்தினேன். அப்போது அவர் அதாவது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காற்றில் ஒரு சிம்மாசனத்தின் மீது இருந்தார். (அதிலிருந்து) எனக்கு கடுமையான நடுக்கம் பிடித்துக் கொண்டது. (அதன் காரணமாக) கதீஜா ரளியல்லாஹ் அன்ஹா அவர்களிடம் வந்து எனக்கு போர்த்துங்கள்! என்றேன். என்மீது தண்ணீரையும் ஊற்றினார்கள். அப்போதுதான் 'போர்வை போர்த்திக்கொண்டிருப்பவரே! எழுந்து எச்சரிக்கை செய்வீராக! உமது இரட்சகனை (அவனது திருநாமத்தை) உயர்த்துவீராக! உமது உடையைச் சுத்தப்படுத்திக்

கொள்வீராக! அசுத்த (விக்கிர)ங்களை வெறுப்பீராக! ' என்ற வசனத்தை அல்லாஹ் இறக்கி வைத்தான், எனக் கூறினார்கள்.
அறிவிப்பவர்: எஹ்யா ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு: முதன்முதலாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு 'ஹிரா' குகையில் 'இக்ரஉ' என்பதுதான் இறை அறிவிப்பாக வந்தது. அதன்பிறகு சில நாட்கள் வரை வஹீ வரவில்லை. அது எவ்வளவு காலம் என்பது பற்றி அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு உண்டு.
அதன்பின்னர் தான் ஒருநாள் மேற்கூறப்பட்ட சம்பவத்தொடரில் 'யா அய்யுஹல் முத்தஸ்ஸிர் ' என்ற வசனத்தொடர் இறங்கியது.
வஹீ வருவது சில நாட்கள் நின்று அதன்பிறகு தொடங்கிய வாசகம், ' யா அய்யுஹல் முத்தஸ்ஸிர்' என விளங்கிக் கொள்ளவேண்டும். இதற்கு மாறாக இறை அறிவிப்பின் தொடக்கமே 'யா அய்யுஹல் முத்தஸ்ஸிர்' தான் எனக் கூறுவதும், 'அல்ஃபாத்திஹா' அத்தியாயம் எனக் கூறுவதும் ஆதரமற்றதாகும் என இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.
வஹி அதிகமாக, அது தொடர்ந்து வந்தது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 75**

நிச்சயமாக எல்லாவற்றையும் மிகைத்தவனும், மகத்துவத்திற்கு உரியவனுமாகிய அல்லாஹ் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறப்பெய்துவதற்கு முன்பும் இறப்பெய்தும் வரையும் வஹீயைத் தொடரச் செய்தான். என்றைய தினம் இறப்பெய்தினார்களோ? அன்று தான் வஹீ மிக அதிகமாக இருந்தது.
அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இரவின் ஒரு பகுதியில் வானங்களின் பால் அழைத்துச்செல்லப்பட்டது பற்றியும் தொழுகைகள் கடமையாக்கப்பட்டது ' பற்றியுமுள்ள பாடம்.

**ஹதீஸ் எண் : 76**

’புராக்’1 எனக்காக கொண்டுவரப்பட்டது. (’புராக்’ என்பது) வெண்மையானதாகவும், கழுதையைவிட பெரியதாக - நீண்டதாகவும், கோவேறு கழுதையைவிட சிறியதாகவும் உள்ள ஒரு பிராணியாகும். அதன் (மறு) ஓரம் முடிவடைகின்ற இடத்தில் அதன் பாதத்தை வைக்கும். அதன்மீது நான் ஏறி (அமர்ந்து) பைத்துல் முகத்தஸை வந்தடைந்தேன். நபிமார்கள் தங்கள் வாகனங்களை எந்த வளையத்தில் கட்டுவார்களோ அந்த வளையத்தில் கட்டினேன். அதன்பின்னர் அப்பள்ளியினுள் நுழைந்து இரண்டு ரக்அத்துகள் தொழுது விட்டு வெளியேறினேன். அப்போது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மதுவை ஒரு பாத்திரத்திலும் பாலை ஒரு பாத்திரத்திலும் என்னிடம் கொண்டு வந்தனர். நான் பாலை தேர்ந்தெடுத்துக் கொண்டேன். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் இயற்கையை 2தேர்ந்தெடுத்தீர் எனக் கூறினார்கள். பிறகு நம்மை ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானத்தின் பால் உயர்த்தினார். வானத்தை அடைந்த அவர் (கதவை) திறக்குமாறு கூறினார். அப்போது ’நீ யார்?’ எனக் கேட்கப்பட்டது, ’ஜிப்ரீல்’ என்றார். ’உம்முடன் இருப்பவர் யார்?’ எனக் கேட்கப்பட்டது. ’முஹம்மது’ எனக் கூறினார். ’அவர்களையும் இங்கு அழைத்துவர அழைப்பு(அனுமதி) அனுப்பப்பட்டதா?’ எனக் கேட்கப்பட்டது. ’அவர்களையும் இங்கு அழைத்துவர அழைப்பு(அனுமதி) அனுப்பப்பட்டது’ என (ஜிப்ரீல்) கூறினார். எங்களுக்காக வாசல் திறக்கப்பட்டது. அப்போது நான் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் இருக்கிறேன். என்னை (ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ) வரவேற்று எனக்காக நல்லவைகளுக்காக பிராத்தித்தனர்.

அதன்பிறகு எங்களை இரண்டாவது வானத்தின் பால் அவர் உயர்த்தினார். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திறக்குமாறு வேண்டினார். ’நீ யார்? ’ எனக் கேட்கப்பட்டது, ’ஜிப்ரீல்’ என்றார். ’உம்முடன் இருப்பவர் யார்?’ எனக் கேட்கப்பட்டது. ’முஹம்மது’ எனக் கூறினார். ’அவர்களையும் இங்கு அழைத்துவர அழைப்பு(அனுமதி) அனுப்பப்பட்டதா?’ எனக் கேட்கப்பட்டது. ’அவர்களையும் இங்கு அழைத்துவர அழைப்பு(அனுமதி)

அனுப்பப்பட்டது' என (ஜிப்ரீல்) கூறினார். எங்களுக்காக வாசல் திறக்கப்பட்டது. அப்போது நான் சிறிய தாய்வழி மக்களாகிய ஈசாபின் மரியம், யஹ்யாபின் ஜக்கரியா அவர்களுடன் இருக்கிறேன். அவ்விருவரும் என்னை வரவேற்று எனது நன்மைக்காக பிராத்தித்தனர்.

அதன் பிறகு எங்களை மூன்றாவது வானத்தின் பால் உயர்த்தினார். ஜிப்ரீல் திறக்குமாறு கேட்டார்கள். 'நீர் யார்?' எனக் கேட்கப்பட்டது, 'ஜிப்ரீல்' என்றார். 'உம்முடன் இருப்பவர் யார்?' எனவும் கேட்கப்பட்டது. 'முஹம்மது' எனக் கூறினார். 'அவர்களின் பால் அழைப்பு (அனுமதி) அனுப்பப்பட்டதா?' எனக் கேட்கப்பட்டது. 'அவருக்கு அனுமதி அனுப்பப்பட்டது' என (ஜிப்ரீல்) கூறினார். எங்களுக்காக கதவு திறக்கப்பட்டது. அப்போது நான் யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் இருக்கிறேன். உலகத்தவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்ட அழகில் சரிபாதியை கொடுக்கப்பட்டவராக இருந்தார். எனக்கு வரவேற்பு கூறி எனக்காக-சிறந்தவைகளுக்காக-பிராத்தித்தனர்.

அதன்பிறகு நம்மை நான்காவது வானத்தின் பால் அவர் (ஜிப்ரீல்) உயர்த்தினார். ஜிப்ரீல் திறக்குமாறு கூறினார். 'நீ யார்?' எனக் கேட்கப்பட்டது, 'ஜிப்ரீல்' என்றார். 'உம்முடன் இருப்பவர் யார்?' எனவும் கேட்கப்பட்டது. 'முஹம்மது' எனக் கூறினார். அவர்களின் பால் அழைப்பு (அனுமதி) அனுப்பப்பட்டதா? எனக் கேட்கப்பட்டது. 'அவருக்கு அனுமதி அனுப்பபட்டது என (ஜிப்ரீல்) கூறினார். எங்களுக்காக கதவு திறக்கப்பட்டது. அப்போது நான் இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் இருக்கிறேன். அவர்கள் என்னை வரவேற்று எனக்காக-சிறந்தவைகளுக்காக-பிராத்தித்தனர். வல்ல அல்லாஹ் 'உயர்வான ஸ்தானத்திற்கு அவரை (இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை) உயர்த்தி இருக்கின்றோம்' எனக் கூறினான்.

நம்மை ஐந்தாவது வானத்தின் பால் உயர்த்தினார். ஜிப்ரீல் திறக்குமாறு கூறினார். அப்போது 'நீ யார்?' எனக் கேட்கப்பட்டது, 'ஜிப்ரீல்' என்றார். 'உம்முடன் இருப்பவர் யார்?' எனக் கேட்கப்பட்டது. 'முஹம்மது' எனக் கூறினார். 'அவர்களையும்

இங்கு அழைத்துவர அழைப்பு(அனுமதி) அனுப்பப்பட்டதா?' எனக் கேட்கப்பட்டது. 'அவர்களையும் இங்கு அழைத்துவர அழைப்பு(அனுமதி) அனுப்பப்பட்டது' என (ஜிப்ரீல்) கூறினார். எங்களுக்காக வாசல் திறக்கப்பட்டது. அப்போது நான் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் இருக்கிறேன். அவர்கள் என்னை வரவேற்று எனக்காக சிறந்தவைகளுக்காக பிராத்தித்தனர்.

அதன்பிறகு ஆறாவது வானத்தின் பால் நம்மை உயர்த்தினார். ஜிப்ரீல் திறக்குமாறு கூறினார். அப்போது 'இவர் யார்?' எனக் கேட்கப்பட்டது,'ஜிப்ரீல்' என்றார். 'உம்முடன் யார்?' எனக் கேட்கப்பட்டது. 'முஹம்மது' என்றார். 'அவருக்கு அனுமதி வழங்கப்பட்டதா?' எனக் கேட்கப்பட்டது. 'அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது' என (ஜிப்ரீல்) கூறினார். எங்களுக்காக வாசல் திறக்கப்பட்டது. அப்போது நான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் இருக்கிறேன். எனக்கு வரவேற்பு கூறி நன்மைக்காக பிராத்தனை செய்தார்கள்.

அதன்பிறகு ஏழாவது வானத்தின் பால் அவர் எங்களை உயர்த்தினார். ஜிப்ரீல் திறக்குமாறு கூறினார். அப்போது 'நீ யார்?' எனக் கேட்கப்பட்டது,'ஜிப்ரீல்' என்றார். 'இவர் யார்?' எனக் கேட்கப்பட்டது. 'முஹம்மது' எனக் கூறினார். 'அவருக்காக அழைப்பு(அனுமதி) அனுப்பப்பட்டதா?' எனக் கேட்கப்பட்டது. 'அவருக்கு அழைப்பு(அனுமதி) வழங்கப்பட்டது' என (ஜிப்ரீல்) கூறினார். எங்களுக்காக வாசல் திறக்கப்பட்டது. அப்போது நான் இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடன் இருக்கிறேன். பைத்துல் 3ம ஃமூரின் பால் அவர்கள் முதுகை சாய்த்தவர்களாக இருக்கிறார்கள். அப்போது அந்த வீட்டினுள் ஒரு நாளைக்கு எழுபது ஆயிரம் மலக்கு (அமரர்கள்) நுழைகிறார்கள். அதன்பால் ஒரு தடவை நுழைந்தவர் மீண்டும் நுழைவதில்லை. ( அவர்கள் திரும்புவதில்லை). பிறகு சித்தரத்துல் 4முன்(த்)தஹா வின்பால் என்னை கொண்டு சென்றார். அப்போது அதன் இலைகள் யானையின் காதுகளை போல் இருந்தது. அதன் பழங்கள் பெரிய பானைகள் போன்று இருந்தன. அல்லாஹ்வின் கட்டளையின்

நிமித்தம் அதைச் சூழ வேண்டியது சூழ்ந்து கொண்டபொழுது அது மாறிவிட்டது. அதன் அழகைப்பற்றி அல்லாஹ்வின் படைப்புகளில் யாரும் வர்ணித்து சொல்ல சக்தி பெற மாட்டார். என்பால் எதை அறிவிக்க வேண்டுமோ அதை அல்லாஹ் அறிவித்தான். ஒவ்வொரு இரவிலும், பகலிலும் ஐம்பது தொழுகைகளை என்மீது அவன் கடமையாக்கினான். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பால் நான் இறங்கினேன் 'உமது உம்மத்தினர் மீது உமது இரட்சகன் எதைக் கடமையாக்கினான்?' எனக் கேட்டார்கள். (ஒவ்வொரு இரவுபகலுக்கும்) ஐம்பது தொழுகைகள் என்றேன் (அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்) 'உமது இரட்சகனின் பால் திரும்பிச் சென்று குறைக்குமாறு கேட்பீராக!. நிச்சயமாக உமது உம்மத்தவர் அதற்கு சக்தி பெறமாட்டார்கள். காரணம் நிச்சயமாக நான் இஸ்ரவேலர்களின் மக்களை சோதித்தேன். அதில் நான் தோல்வியடைந்தேன்' எனக் கூறினார்கள். எனது இரட்சகன்பால் திரும்பி எனது இரட்சகா! எனது உம்மத்தவர்களுக்காக குறைப்பாயாக! எனக் கூறினேன். எனக்கு ஐந்தைக் குறைத்தான். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பால் திரும்பி 'எனக்கு ஐந்து குறைக்கப்பட்டது' என்றேன். 'நிச்சயமாக உமது உம்மத்தவர் அதற்கு சக்தி பெறமாட்டார்கள்' எனக் கூறி 'உமது இரட்சகனின் பால் திரும்பிச் சென்று குறைக்குமாறு கேளுங்கள்' என்றார். உயர்வான அபிவிருத்திகளை நல்கும் எனது இறைவனுக்கும், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் மத்தியில் திரும்ப திரும்பச் சென்றேன். இறுதியாக அவன் (மகத்துவமும் கண்ணியமும் நிறைந்த அல்லாஹ்) முஹம்மதே! நிச்சயமாக ஒவ்வொறு பகலிலும், இரவிலும் ஐந்து தொழுகைகள் ஆகும். ஒவ்வொறு தொழுகைக்கும் பத்து உண்டு அதுதான் ஐம்பது. யாராவது ஒரு நன்மையை(நன்மையான காரியத்தை) எண்ணி, அதை செய்யாவிட்டாலும் கூட அதற்காக அவருக்கு ஒரு நன்மை எழுதப்படும். அதை அவர் செய்துவிட்டால் அதற்காக அவருக்கு பத்து (நன்மைகள்) எழுதப்படும். ஒருவர் ஒரு தீமையை நாடி (பின்னர்) அதை செய்யாமல் விட்டுவிட்டால் அவர்மீது எதையும்

எழுதப்பட மாட்டாது. அவர் அதை (அத்தீமையை) செய்து விட்டால் ஒரு தீமை மட்டுமே எழுதப்படும் எனக் கூறினான். அதைப்பெற்று மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் இறங்கினேன். அவர்களிடம் விஷயத்தை கூறினேன். அதற்கவர், 'மீண்டும் உங்கள் இரட்சகனிடத்தில் சென்று குறைக்க கேளுங்கள்' என்றார்கள். 'எனது இரட்சகனிடத்தில் வெட்கப்படும் அளவுக்கு நான் திரும்பிவிட்டேன்' என்பதாக அவரிடம் கூறினேன் என்பதாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அறிவித்தார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு :

1. 'புராக்' என்னும் சொல் 'பர்க்' என்பதிலிருந்து ஈண்டு எடுக்கப்பட்டதாகும். பர்க் என்றால் மின்னல் என்பது பொருளாகும். இவ்வாகனம் மின்னல் போன்று மிகத் துரிதமாக பாய்ந்து செல்லக்கூடிய நிலையை அல்லாஹ் அதற்கு நல்கி இருந்தான். மக்கள் மத்தியில் படம் பிடித்து வைக்கப்பட்டுள்ளதைப் போன்றதல்ல.

2. இஸ்லாமிய மார்க்கத்தையும், அதன்மீது நிலைத்து இருப்பதையும் என்ற கருத்தே 'ஃபித்ரத்' இயற்கை என்பதற்குரியதாகும். ஷரஹ்நவவீ பாகம் 2, பக்கம் 212

3. பைத்துல் மஃமூர்: ஏழாவது வானத்தில் பூமியில் உள்ள திருக்கஃபாவை போன்ற ஒரு வீடு உள்ளது. அதன் பெயர் 'பைத்துல் மஃமூர்' ஆகும்.

4. சித்ரத்துல் முன்(த்)தஹா சித்ரத் என்பதற்கு இலந்தை மரம் என்பது பொருளாகும். முன்(த்)தஹா என்பதற்கு கடைசி எல்லை - முடிவு - என்பது பொருளாகும்.

## நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் அவர்கள் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியது பற்றி பாடம்

### ஹதீஸ் எண் : 77

'மக்காவுக்கும் மதீனாவுக்குமிடையில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நாங்கள்

சென்று கொண்டிருந்தோம். அப்போது ஒரு பள்ளத்தாக்கிற்கு அருகாமையில் நடந்து கொண்டிருந்தோம். 'இது என்ன பள்ளத்தாக்கு?' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். நீல நிறப்(அஜ்ரக்) பள்ளத்தாக்கு என நாங்கள்(ஸஹாபாக்கள்) கூறினோம். அப்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் நிறம், அவர்களின் முடியைப்பற்றிக் கூறினார்கள். (தாவூத் என்ற ஹதீஸ் அறிவிப்பவர் அதை மனனம் செய்யவில்லை) அல்லாஹ்வின் பால் 'தல்பிய்யா' கூறுவதனால் உயர்ந்த சத்தம் உடையவர்களாகவும், அவரது இரு விரல்களை தனது காதில் வைத்தவராகவும் இந்த பள்ளத்தாக்கில் நடப்பவராக மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நிச்சயமாக நான் உற்று நோக்குபவனை போன்று இருக்கிறேன். எனக் கூறினார்கள். அதன் பிறகு ஒரு கீழப்பகுதிக்கு வந்தோம். இது எந்த கீழ்ப்பகுதி என (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்க ஹர்ஷா என்ற ( மதீனாவுக்கும், ஷாம் நாட்டுக்கும் இடையிலுள்ள) ஒரு மலைப்பகுதி என்றோம். அல்லது 'ல∴ப்து' என்றோம்.

யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை, சிவப்பு நிற ஒட்டகத்தின் மீது அமர்ந்தவர்களாக கம்பளி ஜிப்பா அவர்கள் மீ(தனிந்)திருக்க, அவர்களின் ஒட்டகக்கயிறு ஈச்சம்பாளை நார் கொண்டு தயாரிக்கப்பட்டதாக இருக்க, அது தொய்வாக விடப்பட்ட நிலையில், இந்தப் பள்ளத்தாக்கில் 'தல்பிய்யா' கூறியவர்களாக நடந்து கொண்டிருக்க, நான் உற்றுநோக்குபவனை போன்று இருக்கிறேன் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு, அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

**ஹதீஸ் எண் : 78**

எந்த இரவில் என்னை (மி∴ராஜுக்கு) அழைத்துச்செல்லப்பட்டதோ அந்த இரவில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நான் சந்தித்தேன். உடலில் சதைப்பற்று அதிகமில்லாத நீண்ட மனிதராக, தலைவாரியவர்களாக, ஷனூஆ (அழுக்குகளை விட்டும் தூய்மையானவர்) கூட்டத்தைச் சார்ந்த ஆடவர்களில்

உள்ளவர்களைப் போன்று இருந்தனர். என்பதாக வர்ணித்து காட்டினார்.
ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்தேன் ஷஉயரமோ, குள்ளமோ இல்லாத சராசரி உயரத்தைக் கொண்ட உருவத்தை உடையவராக, குளித்துவிட்டு குளியல் அறையிலிருந்து வெளியேறுபவரைப் போன்றிருந்தார்ஹு என அவர்களை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வர்ணித்துக் கூறினார்கள்.
'இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை நான் கண்டேன். நான்தான் அவர்களது மக்களில் அவர்களுக்கு மிக ஒப்பானவனாக இருக்கிறேன்' எனக் கூறினார்கள்.
இரு பாத்திரங்களை எனக்காக கொடுக்கப் பெற்றேன். அதில் ஒன்றில் பால் இருந்தது. மற்றொன்றில் மது இருந்தது. இரண்டில் எதை விரும்புகிறீரோ? அதை எடுத்துக் கொள்வீராக! என எனக்குக் கூறப்பட்டது. பாலை எடுத்து நான் குடித்து விட்டேன்.
'இயற்கைக்கு (மார்க்கத்திற்கு) வழி காட்டப்பட்டீர்! அல்லது இயற்கையை (மார்கத்தை) எடுத்து கொண்டுவிட்டீர்' என அவர் (ஜிப்ரீல்) கூறினார். 'நிச்சயமாக நீங்கள் மதுவை எடுத்திருந்தால் உமது உம்மத்தவர்கள் வழி கெட்டிருப்பர். எனத் தெரிந்து கொள்வீராக' எனவும் (ஜிப்ரீல்) கூறினார்.
அறிவிப்பவர் : அபூ ஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் தஜ்ஜாலையும் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய பாடம்.

**ஹதீஸ் எண் : 79**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், ஒரு நாள் மக்களுக்கு மத்தியில் மஸீஹுத்தஜ்ஜாலை பற்றி நினைவுபடுத்திக் கொண்டிருந்தனர். நிச்சயமாக அபிவிருத்திகளை நல்கும் அல்லாஹ் ஒற்றைக் கண்ணையுடையவனல்லன் எனக் கூறினார்கள்.
மஸீஹுத்தஜ்ஜால் வலக்கண் குருடன். 1நிச்சயமாக அவனுக்கு கண் துருத்திக் கொண்டு இருக்கும். திராட்சையைப்

போன்றிருக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். கடந்த இரவு (அல்லாஹ்) க‘்பாவில், கனவில் எனக்கு காட்டினான். அப்போது மிகவும் சிகப்பில்லாத மாநிறத்தையுடைய நீங்கள் பார்க்க கூடிய மனிதர்களின் நிறத்தில் மிக அழகான நிறத்தையுடைய ஒரு மனிதர், அவரின் முடி அவரது இரு தோள் புஜங்களுக்கிடையில் இருக்க, தலைவாரியவாறு, அவர் தலையிலிருந்து தண்ணிர் சொட்டிய நிலையில், அவரது இரு கைகளையும் இரு மனிதர்களின் தோள் புஜங்களின் மீது வைத்தவராக, அவ்விருவருக்கு மத்தியில் அவர் இருக்க, அல்லாஹ்வின் வீட்டை தவா‘்ப் செய்யக்கூடியவராக இருந்தார். 'இவர் யார்?' எனக் கேட்டேன். இவர்தான் 'மர்யமுடைய மகன் மஸீஹ்னு என எனக்கு கூறினர்.

'வலதுகண் இல்லாத ஒற்றைக்கண்ணை உடையவனாக2 இருக்க வலிமைமிகுந்த உடல் கட்டுடைய, ஒரு மனிதனை அவர்களுக்கு அப்பால் பார்த்தேன். நான் பார்த்த மனிதர்களில் இப்னு க(த்)தன் என்ற மனிதரை போன்று இருந்தார். அவன் தனது இரு கைகளையும் இரு மனிதர்களின் தோள் புஜங்களின் மீது வைத்தவாறு, (அல்லாஹ்வின்) வீட்டை தவா‘்ப் செய்து செய்து கொண்டிருக்க நான் கண்டு விட்டு 'இவர் யார்?' எனக் கேட்டேன். இவன்தான் 'அல்மஸீஹுத்தஜ்ஜால்' என கூறினர்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹு

குறிப்பு: 1, 2 கோணல் கண் உடையவனான, அவனது ஒரு கண் மறைக்கப்பட்டிருக்கும்.

**நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நபிமார்களுக்கெல்லாம் இமாமாக இருந்து தொழுகை நடத்தியது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 80**

நான் ஹிஜ்ரில் (க‘்பாவில் உள்ள ஹஜர் இஸ்மாயில் என்ற இடத்தில்) என்னை நான் கண்டவனாக இருந்தேன் குறைஷியர் என் இரவுப்பயணம் (மி‘்ராஜ்) பற்றி என்னிடம் கேட்டுக்கொண்டிருந்தனர். பைத்துல் முகத்தஸில் உள்ள அநேக விஷயங்கள் பற்றி என்னிடம் (சந்தேகத்தோடு கேள்வி) கேட்டுக்

கொண்டிருந்தனர். அவைகளை நான் மனதில் இருத்திக் கொள்ளவில்லை. (அக்கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல்) மிகுந்த கடுமையான சிரமத்திற்கு ஆளாக்கப்பட்டேன். (அதற்கு முன்பு) அதுபோன்ற சிரமத்திற்கு நான் ஆளாகவேயில்லை. (அப்போது) அல்லாஹ் அதையே (கேள்விகளுக்கு சரியான பதிலளிக்க உதவியாக பைத்துல் முகத்தஸையே) எனக்கு உயர்த்திக் காட்டினான். நான் அதன் பால் உற்று நோக்குகிறேன். அதன்பிறகு அவர்கள் எதைப்பற்றிக் கேட்டாலும் நான் அதுபற்றி (சரியாக) அறிவித்துக் கொடுக்காமலில்லை. நபிமார்களின் ஒரு கூட்டத்தில் நான் என்னைக் கண்டேன். அப்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நின்று தொழக்கூடியவர்களாக இருந்தனர். நிச்சயமாக அவர்கள் 'ஷனூஆ' கூட்டத்தைச் சார்ந்த ஆடவர்களில் உள்ளவரைப்போன்று கட்டான உடலுடன் சதைகுறைந்த மனிதராக இருந்தனர். (அதற்கடுத்து) அதே நேரத்தில் மர்யமின் மகன் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நின்று தொழுது கொண்டிருந்தனர். ஜனங்களில் அவரைப் போன்ற தோற்றத்தில் இருப்பவர் உர்வா பின் மஸ்ஊது அத்தகபீயாவார். (அதற்கடுத்து) அதே நேரத்தில் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நின்று தொழுது கொண்டிருந்தனர். மனிதர்களில் அவர்களுக்கு மிக ஒப்பானவர் உங்கள் தோழர்(ஆகிய நான்தான் என்று தன்னைக் காட்டினர்) என்றனர். தொழுகை நேரம் வந்துவிட்டது. அவர்களுக்கெல்லாம் இமாமாக நின்று தொழ வைத்தேன். தொழுகையை நான் முடித்துக் கொண்டபோது, 'முஹம்மதே! நரகத்திற்கு பொறுப்பாளர் 'மாலிக்' இவர்தான். இவருக்கு சலாம் கூறுங்கள்' என்று ஒருவர் கூறினார். ஆகவே அவரின் பால் திரும்பினேன். அவரே எனக்கு சலாம் கூற ஆரம்பித்து விட்டார் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்

குறிப்பு: ஹதீஸ் எண் : 76 முதல் 80 வரையில் நபிமார்களின் நிலைகளைக் கண்டதாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு

அலைஹிவஸல்லம் அவர்கள் கூறிய கூற்றின் விளக்கம் வருமாறு:

நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) இறப்பெய்தி விட்டவர்களாக இருக்க, மறுமையில் செயல்பாடுகளுக்கு நற்கூலி பெறும் இடமாக இருக்க் அவர்கள், தல்பிய்யாக் கூறியவர்களாக, தவா∴பு சுற்றக் கூடியவர்களாக, தொழுபவர்களாக இருக்கும் நிலையை, நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எவ்வாறு கண்டார்கள்; அதன் உண்மை நிலை என்ன? என்பதன் விளக்கம் பற்றி ஷரஹ் நவவீயில் காழி இயாழ் அவர்களின் கூற்றை நவவீ ரஹ்மதுல்லாஹி அலைஹிமுஸ்ஸலாம் அவர்கள் நகல் செய்கிறார்கள். அதிலிருந்து சிலவற்றை இங்கே தருகிறோம்:

1. இவ்வாறு நடந்த நிகழ்ச்சிகள் யாவையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கனவின் மூலம் கண்டார்கள். இதற்கு ஆதாரம் உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்; 'நான் உறங்கிக் கொண்டிருந்த பொழுது, தவா∴பு செய்வதாக கனவு கண்டேன்.' அந்தத் தொடரில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விஷயத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள். ஆகவே இது கனவில் காட்டப்பட்ட நிலையாகும்.

2. நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) அவர்களின் ஜீவிய காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை, நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு காட்டப்பட்டது; அதனால்தான்,

'மூஸாவின் பால் பார்ப்பவனைப் போன்று இருக்கிறேன்'
'ஈஸாவின் பால் பார்ப்பவனைப் போன்று இருக்கிறேன்'
'யூனூசின் பால் பார்ப்பவனைப் போன்று இருக்கிறேன்'
எனக் கூறினார்கள். ஆகவே இது ஏற்கனவே நடந்தவற்றை காட்சியாக வைத்துக் காட்டப்பட்டது என்பது தெளிவாகிறது.

3. அல்லாஹ் ஏனைய நபிமார்களையெல்லாம்பற்றி தன் அறிவிப்பின் மூலமாக அறிவிக்க, அறிவிக்க இவர்கள் சொல்லிக்கொண்டே இருந்திருக்கலாம்; எனவே இது இறை அறிவிப்பு என்பது தெளிவு

இரவுப்பயணத்தின்1 போது ’சித்ரத்துல் முன்தஹா’வின்பால் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சென்றடைதல் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 81**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை எந்த இரவில் அழைத்துச்செல்லப்பட்டதோ அவ்விரவில் ஷசித்ரத்துல் 2முன்தஹானு‌வின்பால் ; (சென்றடைந்தபின்) அவர்கள் பயணம் முற்றுப்பெற்றுவிட்டது. அப்பயணத்தில் அதுவே அவர்கள் சென்றடைந்த கடைசியாகும். (அதற்கப்பால் செல்லவில்லை). அது ஆறாம் வானத்தில் உள்ளது. 3பூமியிலிருந்து எதையெல்லாம் (வானத்தின்பால்) உயர்த்தப்படுகிறதோ அவையாவும் அதன்பால் சென்று முடிவடைந்துவிடுகிறது. அங்கிருந்துதான் எடுக்கப்படும். (அது போலவே) மேலே இருந்து இறங்கும் யாவும் அங்கு வந்து (தேங்கி) முடிவடைந்துவிடும். அதிலிருந்துதான் எடுக்கப்படும். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அங்கே சென்றடைந்த சமயம் இலந்தை மரத்தை சூழக்கூடியது சூழ்ந்து கொண்ட நேரத்தில் என்ன சூழ்ந்தது என்பதற்கு விளக்கமாக தங்கத்தின் விரிப்பு எனக்கூறினார்கள். 4மூன்று விஷயங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு (அவ்விரவில்) கொடுக்கப்பட்டது.

ஐவேளைத் தொழுகைகளை கொடுக்கப்பட்டார்கள். அல்பகரா அத்தியாயத்தின் இறுதியைக் கொடுக்கப்பட்டார்கள் தன் உம்மத்தில் யார் அல்லாஹ்விற்கு எதையும் இணைவைக்கவில்லையோ அவரது பெரும்பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகிறது (என்பதையும் கொடுக்கப்பட்டார்கள்) என அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

குறிப்பு:

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மஸ்ஜிதுல் ஹராம் பள்ளியிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவரை (தரைப்பயணத்தை)யும் பின்னர் மஸ்ஜிதுல் அக்ஸா(எனும்) பைத்துல் முகத்தஸ்ஸிலிருந்து சித்ரத்துல் முன்தஹா வரை விண்ணுலகப் பயணத்தையும் மேற் கொண்டனர். ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தோழமையுடன் இப்பயணம் நடந்தேறியது. இப்பயணத்திற்கு பெயர்தான் இஸ்ராஉ, மிஃராஜ் என்பதாகும். இப்பயணம் பற்றித்தான் இரவுப்பயணம் என இந்த ஹதீஸ் வந்துள்ளது.

2. இலந்தை மரத்தின் கடைசி எல்லை. இதைத்தாண்டி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செல்லவில்லை. இதுவே அவர்கள் பயணத்தின் கடைசி எல்லையாகும்.

3. இலந்தை மரத்தின் அடிப்பகுதி ஆறாம் வானத்திலும் அதன் பெரும்பகுதி ஏழாம் வானத்திலும் உள்ளது.

4. என மற்றொறு அறிவிப்பில் வந்துள்ளது.

'வில்லின் இருமுனைகள் அல்லது அதை விட மிக நெருக்கமாக அவர்கள் இருந்தனர்' என்ற அல்லாஹ்வின் கூற்று பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 82**

'வில்லின் இருமுனைகள் அல்லது அதை விட மிக நெருக்கமாக அவர்கள் இருந்தனர்' என்ற அல்லாஹ்வின் கூற்று பற்றி (அறிவிப்பாளராகிய) நான் ஜிர்ரு பின் ஹுபைஷ் ரளியல்லாஹ் அன்ஹு என்பவரிடம் கேட்டேன். அதற்கவர் ஷநிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டனர். அவருக்கு அறுநூறு இறக்கைகள் இருக்கஷ என இப்னு மஸ்ஊது ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் தமக்கு அறிவித்ததாக கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : அஷ்ஷைபானீ ரளியல்லாஹ் அன்ஹு

குறிப்பு: மேற்கூறப்பட்ட வசனத்தின் பொருளில் இரண்டு கருத்துக்கள் கொள்ளப்படுகிறது. (1) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அத்தனை நெருக்கமாக

கண்டனர். (2) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்வளவு நெருக்கமாக அல்லாஹுவைக் கண்டார்கள். இவ்விரண்டு கருத்துகளில் மிகத் தெளிவானதும் ஆதாரப்பூர்வமானதும் முதல் கருத்தேயாகும் என்பதை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

**ஹதீஸ் எண் : 83**

'இதயம் எதைக் கண்டதோ ? அது பொய்க்கவில்லை. நிச்சயமாக அவரை (ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களை) இரணடாம் முறையாக இரக்கத்தில்(இறங்கும்போது) கண்டனர்' என்ற இறைவசனங்களை ஓதி இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், '(நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், அவரை (ஜிப்ரீலை) இரண்டாவது முறை தங்களது (மனக்கண்ணால்) இதயத்தால் கண்டதாக ' கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : ஹதீஸ் எண் 82-ல் கூறப்பட்ட கருத்து இங்கே தெளிவாக வலியுறுத்தப்படுகிறது என்பதைக் காணலாம். மகத்துவமும் கண்ணியமும் பொருந்திய அல்லாஹ்வை (மனிதனுக்குரிய) முகக்கண்களால் மறுமையில் காண்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 84**

நான் 1(அறிவிப்பாளர்) ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்களிடத்தில் தலையணையின் மீது சாய்ந்தவாறு இருந்தேன். அப்போது ' மூன்று விஷயங்கள் (உண்டு) அவற்றில் எதையேனும் ஒன்றைப்பற்றி யாரேனும் பேசினால் அவர் அல்லாஹ்வின் மீது பெரும் பொய்யைக் கூறியவராக இருக்கிறார்.' என ஆயிஷாவின் தந்தையே! என என்னை அழைத்துக் கூறினார்.

அவைகள் யாவை ? என நான் கேட்டேன் (அதற்கு ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா) அவர்கள்

1. ' நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது இரட்சகனைப் பார்த்தார்கள் ' என யார் கூறுகிறாரோ அவர் அல்லாஹ்வின் மீது பெரும் பொய்யைக் கூறிவிட்டார் என கூறினார்கள்;.

நான் (தலையணையின் மீது சாய்ந்திருந்தவன்) எழுந்து அமர்ந்து,' விசுவாசிகளின் தாயார் அவர்களே! எனக்கு கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்' 'அவசரப்படாதீர்கள்' எனக் கூறிவிட்டு ஷதெளிவான மேல் மட்டத்தில் நிச்சயமாக அவர் அவரைப் பார்த்துவிட்டார் ஞு என்றும், ஷநிச்சயமாக அவரை இரண்டாம் முறையில் இறங்குகையில் கண்டனர் எனவும் உயர்வான அல்லாஹ் கூறவில்லையா? ஞு என நான் (அறிவிப்பாளராகிய மஸ்ரூக்) கேட்டேன்.

(அதற்கு ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா) அவர்கள்,'இந்தச் சமூகத்தில் இவ்வசனங்களைப்பற்றி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து முதலாவதாக கேட்டது நான்தான். அது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பார்த்ததைத்தான் (குறிப்பிடுகிறது). எந்த தோற்றத்தில் படைக்கப்பட்டாரோ அந்த தோற்றத்தில் இந்த இரண்டு தடவைகளில் அல்லாது அவரை நான் பார்க்கவில்லை ' எனக் கூறிவிட்டு ஷவானத்திலிருந்து இறங்கக்கூடியவராக, அவரது பிரம்மாண்டமான படைப்பு, வானத்திற்கும் பூமிக்கும் மத்தியில் உள்ளவற்றை அடைத்துக் கொண்டிருக்க நான் கண்டேன் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் (மேலும்).

'அவனைப் பார்வைகள் அடையாது. அவன்தான் பார்வைகளை அடைகிறான். அவன் நுட்பமானவன். செய்திகளை அறிந்திருப்பவன்' என்ற அல்லாஹ்வின் கூற்றை நீர் செவியுறவில்லையா? (எனக் கேட்டுவிட்டு மேலும்) எந்த மனிதரோடும் அல்லாஹ் வஹீயின் மூலமோ அல்லது திரைக்கு அப்பால் இருந்தோ தவிர பேசுவதில்லை. அல்லது அவன் ஒரு தூதரை அனுப்பி வைப்பான். அவர் (அத்தூதர்) அவனது உத்தரவு பெற்று அவன் (அல்லாஹ்) விருப்பப்பட்டதை (மனிதர்களுக்கு) அறிவிப்பார். நிச்சயமாக அவன் (அல்லாஹ்) உயர்வுடையவனாகவும், நுண்ணறிவுடையோனுமாவன் என்ற

அல்லாஹ்வின் கூற்றை நீர் செவியுறவில்லையா? எனக் கேட்டார்கள்.

2. அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அல்லாஹ்வின் வேதத்திலிருந்து எதையாவது மறைத்துவிட்டார்கள் என (யாராவது) கூறினால், அவர் அல்லாஹ்வின் மீது பெரும் பொய்யைக் கூறிவிட்டார் என (ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா) அவர்கள் கூறிவிட்டு தூதர் அவர்களே! உங்களது இரட்சகனிடமிருந்து உங்கள்பால் இறக்கி வைக்கப்பட்டதை எத்தி வைப்பீர்களாக! அவ்வாறு நீங்கள் செய்யவில்லையாயின் அவனது தூதுத்துவத்தை நீங்கள் எத்தி வைத்தவராக ஆகமாட்டீர் என அல்லாஹ் கூறுகிறான்.

3. நாளை நடப்பதை நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவிக்கிறார்கள். (அதுபற்றிய அறிவு அவர்களுக்கு உண்டு) என யாரேனும் கூறினால் அவர் பெரும் பொய்யைக் கூறிவிட்டார். (ஏனெனில்)

'வானங்களிலும் பூமியிலும் மறைவானவற்றை அல்லாஹ்வையன்றி யார் அறிவார்? (யாரும் அறியமாட்டார்)' என அல்லாஹ் கூறுகிறான் என ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது இறக்கி வைக்கப்பட்டதிலிருந்து எதையேனும் மறைக்க கூடியவர்களாக இருந்திருந்தால்,

'எவரின் மீது ' அல்லாஹ் தன் அருளையும் புரிந்து. நீங்களும் அவரின் மீது (அடிமைத்தனத்திலிருந்து உரிமை விட்டு) கருணை செய்தீரோ அவரிடம் உமது மனைவியை நீரே (விவாகரத்து செய்யாமல்) தடுத்து கொள்வீராக! அல்லாஹ்வை நீர் பயந்து கொள்வீராக! என (ஜைது அவர்களிடம், அவரது மனைவி ஜைனபை அவரது விவாகரத்திற்கு பிறகு அல்லாஹ் உங்களுக்கு திருமணம் முடித்து வைக்கப் போகிறான் எனும் விஷயத்ததை) அல்லாஹ் வெளிப்படுத்தக் கூடியவனாக இருந்ததை உங்கள் மனதில் மறைத்தீர்கள் இது விஷயத்தில் மனிதர்களைப்

பயந்தீர்கள். (ஆனால்) அல்லாஹ்தான் நீங்கள் பயப்படுவதற்கு மிக உரியவன்' என்ற இந்த வசனத்தை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறைத்திருக்க வேண்டும். (ஆனால் இதை மறைக்கவில்லை; என ஆயிஷா ரளியல்லாஹ அன்ஹா அவர்கள் கூறினார்கள்

அறிவிப்பவர் : மஸ்ரூக் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு: அறிவிப்பாளருக்கு ஆயிஷா என ஒரு மகள் இருந்தார். ஆகவே தான் ஆயிஷாவின் தந்தையே! என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அழைத்துக் கூறுகிறார்கள்.

**ஹதீஸ் எண் : 85**

எங்களுக்கு மத்தியில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நின்று ஐந்து விஷயங்களைக் கூறினர். (அவை) 'நிச்சயமாக அல்லாஹ் உறங்க மாட்டான். அவனுக்கு உறக்கம் அவசியமற்றது. தராசை உயர்த்தவும் தாழ்த்தவும் செய்கிறான். பகலின் செயல்(கள்) உயர்த்தப்படும் முன்பே இரவின் செயல்கள் அவன்பால் உயர்த்தப்படுகிறது. இரவின் செயல்கள் உயர்த்தப்படும் முன்பே பகலின் செயல்(கள்) உயர்த்தப்படுகிறது. அவனின் திரை ஒளியாகும் (மற்றொரு அறிவிப்பில் அவனின் திரை நெருப்பாகும்). அவன் அதை நீக்குவானேயானால் அவனுடைய முகத்தின் 1ஒளிக்கதிர்கள், அவனது பார்வை எதுவரை சென்றடைகிறதோ அதுவரை கரித்து (பொசுக்கி) விடும்' எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ மூஸா ரளியல்லாஹ அன்ஹு

குறிப்பு : 1. இந்த ஹதீஸில் வந்துள்ள முகம் என்ற வார்த்தைக்கு அல்லாஹ்வின் தாத்து - அவனே என்று பொருள் கொள்ள வேண்டும்.

**ஹதீஸ் எண் : 86**

எங்களின் இரட்சகனை மறுமை நாளில் நாங்கள் காண்போமா? என சில மனிதர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டனர். (அதற்கு) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்; 'பூரணச் சந்திரனின் இரவில் சந்திரனைக் காண

உங்களுக்கு ஏதேனும் சங்கடம் உண்டா?' எனக் கேட்டனர். அதற்கு அவர்கள் ஷஅல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! இல்லை! ளு எனக் கூறினார். 'மேகம் இல்லாத நிலையில் சூரியனைக் காண உங்களுக்கு ஏதேனும் சங்கடம் உண்டா?' என (அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) கேட்க. அதற்கு அவர்கள் இல்லை எனக் கூறினர். (பின் அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) அவ்வாறே நிச்சயமாக நீங்கள் உங்கள் இரட்சகனை காண்பீர்கள் எனக் கூறினார்கள்.

(காணும் விதம்) மறுமை நாளில் மக்களை அல்லாஹ் ஒன்று சேர்ப்பான். (சேர்த்தபின்) யார் எதை வணங்கினாரோ? அதை அவர் பின் தொடரவும் எனக் கூறுவான். சூரியனை வணங்கியவர் சூரியனைப் (பின்) தொடருவார். சந்திரனை வணங்கியவர் சந்திரனை (பின்) தொடருவார். அல்லாஹ் அல்லாத மற்றவைகளை (ஷைத்தான்களை) வணங்கியவர் அவைகளை பின் தொடருவார். (அப்போது) இந்த சமூகத்தில் நயவஞ்சகர்கள் எஞ்சிவிடுவர். (அப்போது) அவர்களுக்கு தெரிந்த தோற்றமில்லாத ஒரு தோற்றத்தில் அவர்களிடம் அல்லாஹ் வந்து நான் (தான்) உங்கள் ரட்சகன் எனக் கூறுவான். (அதற்கவர்கள்) உன்னிலிருந்து அல்லாஹ்றவைக் கொண்டு நாங்கள் கார்மானம் தேடுகிறோம். எங்களின் ரட்சகன் எங்களிடம் வரும்வரை இதுதான் எங்களின் இடம். எங்களின் இரட்சகன் எங்களிடம் வந்தால் அவனை நாங்கள் தெரிந்து கொள்வோம் எனக் கூறினர். (அதன்பிறகு) அவர்களுக்கு அறிமுகமான உருவத்தில் அவர்களிடம் அல்லாஹ் வருகிறான். (வந்து) நான்தான் உங்களின் ரட்சகன் எனக் கூறுகிறான். (அதற்கவர்கள்) நீதான் எங்கள் ரட்சகன் எனக் கூறி அவனை அவர்கள் (பின்) தொடருவார்கள். நரகத்தின் இரு (புற) மேல்பகுதிக்கிடையில் 'ஸிராத்' என்ற பாலம் நிறுவப்படும். (அப்போது) அதை கடந்து செல்பவர்களில் முதலாமவர் நானும் எனது உம்மத்துக்களும் ஆகும். அந்நாளில் தூதர்களைத் தவிர மற்றெவரும் பேச மாட்டார்கள். அந்நாளில் தூதர்களின்

பிரார்த்தனை –'யா அல்லாஹ் நரகிலிருந்து சாந்தியை நல்குவாயாக! சாந்தியை நல்குவாயாக!! ' – என்பதாகவே இருக்கும். முள் நிறைந்த ஸாஅதான் செடியைப்போன்று நரகத்தில் கொக்கிகள் இருக்கும். (எனக் கூறி அச்செடியைப்பற்றி விவரத்தையும் சொல்லிக் காட்டுகிறார்கள்) ஸாஅதான் என்னும் செடியைப்பார்த்து இருக்கிறீர்களா? (எனக் கேட்க) அதற்கவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! ஆம்! என்கின்றனர். நிச்சயமாக அக்கொக்கிகள் – ஸாஅதானைப் போன்றதுதான். ஆயினும் அதன் பிரமாண்டம் என்ன? என்பது பற்றி அல்லாஹ்வையன்றி யாரும் அறிய மாட்டார்கள். (ஸிராத் என்னும் பாலத்தின் மீது செல்லும்போது) அவர்(மனிதர்)களின் செயல்களுக்கு ஏற்றவாறு அக்கொக்கிகள் மனிதர்களை கோர்த்து இழுக்கும். அவர்களில் விசுவாசி(கள்) தன் நற்செயலின் காரணமாக அதிலிருந்து தப்பி விடுவர். அவர்களில் சிலர் கரை சேர்க்கபடும்வரை தண்டிக்கப்படுபவர்களும் உண்டு. எதுவரையெனில் தன் அடியார்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்குவதை முடித்துக் கொண்டபின் நரகவாசிகளிலிருந்து தன்னருளால் யாரை வெளியாக்க அல்லாஹ் விரும்பினானோ அவர்களையும் அவர்களில் யார் அல்லாஹ்விற்கு எதையும் இணைவைக்கவில்லையோ அவர்களையும்(மேலும்) அவர்களில் யாருக்கு அல்லாஹ் அருள் செய்ய நாடினானோ அவர்களையும் நரகிலிருந்து வெளியேற்றுமாறு அமரர்களுக்கு அல்லாஹ் கட்டளையிடுகிறான். நரகிலிருக்கும் அவர்களை, அவர்களின் (நெற்றி) ஸஜ்தா சுவடுகளைக் கொண்டு அமரர்கள் தெரிந்து கொள்வார்கள். ஆதமின் மகனை உடலிருந்து ஸஜ்தாவின் சுவட்டை நரகம் தின்னுவதிலிருந்து அல்லாஹ் விலக்கி இருக்கிறான். (ஆகவே, அந்த அடையாளத்தை மலக்குகள் அறிந்து) கரிந்து போன நிலையில் அவர்கள் நரகிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். (அதன்பிறகு) அவர்கள் மேல் (சுவன நீர்) ஜீவியத்தண்ணீர் ஊற்றப்படும். வெள்ளம் வந்த பின் அதில் மிதந்துவரும் வித்துகள் (துரிதமாக) முளைப்பது போன்று அதிலிருந்து முளைத்(உயிர்த்)தெழுவர். அதன்பிறகு அல்லாஹ்

தனது அடியார்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்கி முடித்துவிடுவான்.
நரகின் மேல் முகம்கவிழ்ந்து கிடக்கும் ஒருவர் எஞ்சியிருப்பார். அவர்தான் சுவனவாசிகளில் சுவனத்தில் நுழையும் கடைசி மனிதராவார். 'என் இரட்சகா! நரகத்தை விட்டும் என் முகத்தை திருப்புவாயாக!' நிச்சயமாக அதன் துர்நாற்றம் என்னை அழித்துவிட்டது. அதனுடைய நெருப்பின் கடின ஜுவாலை என்னை கரித்துவிட்டது என அவர் கூறியவாறு அல்லாஹ் எந்த அளவு நாடினானோ? அந்த அளவு அவர் பிரார்த்தனை செய்தவராக இருப்பார். அப்போது நான் அதை உனக்காக செய்தால் அதல்லாததை நீ கேட்பாயா? என அபிவிருத்திகளை நல்குபவனும், உயர்வானவனுமாகிய அல்லாஹ் கேட்கிறான். (அதற்கு அம்மனிதர்) அதல்லாததை நான் கேட்க மாட்டேன் எனக் கூறி அல்லாஹ் நாடிய அளவிற்கு உறுதிமொழிகளையும் உடன்படிக்கைகளையும் தனது இரட்சகனுக்கு கொடுக்கிறார் (ஒப்பந்தத்திற்கு பிறகு) நரகத்தை விட்டும் அவர் முகத்தை அல்லாஹ் திருப்பி வைக்கிறான். (அவன்) சுவனத்தின்பால் முன்னோக்கி அதை (சுவனத்தை) பார்த்துவிட்டால் எந்த அளவு அவர் பேசாமல் இருக்க வேண்டும் என அல்லாஹ் விரும்பினானோ அந்த அளவு அவர் (அம்மனிதர்) பேசாமல் இருக்கிறார். (பிறகு) எனது இட்சகா! சுவன வாயிலின் பால் என்னை முற்படுத்துவாயாக எனக் கேட்கிறார். (அதைக் கேட்ட அல்லாஹ்) உனக்கு நான் தந்ததையல்லாமல் வேறு எதையும் என்னிடம் நீ கேட்கமாட்டேன் என்று உனது உறுதிமொழிகளையும் உடன்படிக்கைகளையும் எனக்கு நீ கொடுக்கவில்லையா? ஆதமின் மகனே! உனக்கு கேடு உண்டாகட்டும், உனது ஒப்பந்தத்தை உடைக்கச் செய்தது எது? என அல்லாஹ் அவரிடம் கேட்கிறான். (அதற்கவர்) எனது ரட்சகா! என அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து கொண்டே இருக்கிறார் (நீ கேட்ட) அதை நான் உனக்கு கொடுத்துவிட்டால் அதுவல்லாததை நீ என்னிடம் கேட்பாயா? என அல்லாஹ் கூறும்வரை (துஆச் செய்கிறான்(அவ்வாறு அல்லாஹ் கூறக்கேட்டதும்) உனது கண்ணியத்தின் மீது

சத்தியமாக இல்லை எனக் கூறி அல்லாஹ் நாடிய அளவிற்கு உறுதிமொழிகளையும் உடன்படிக்கைகளையும் கொடுக்கிறார். (அதற்கொப்ப) அவரை சுவனவாயிலின்பால் அ(ல்லாஹ்)வன் முற்படுத்துகிறான். அவ்வாறாக சுவன வாயிலின்பால் அவன் நின்றுவிட்டால் அவருக்காக சுவனம் திறந்து விரிந்துவிடும். அதிலுள்ள சந்தோஷங்களையும், நல்லவைகளையும் பார்த்துவிடுகிறார். (பார்த்தபின்) அவர் எந்த அளவு பேசாதிருக்க வேண்டும் என அல்லாஹ் நாடியுள்ளானோ? அந்த அளவு பேசாதிருந்துவிட்டு, அதன்பிறகு எனது இரட்சகா! என்னை சுவனத்தில் நுழையச் செய்வாயாக! எனக் கூறுகிறார். (அப்போது) நான் உனக்கு தந்தையல்லாத வேறு எதையும் நீ கேட்கவில்லை என உன் உறுதிமொழிகளையும் உடன்படிக்கைகளையும் தரவில்லையா? ஆதமின் மகனே! உனக்கு கேடு உண்டாகட்டும்! உன்னுடைய உடன்படிக்கையை உடைத்தெறியச் செய்தது எது? என அல்லாஹ் அவரிடம் கேட்கிறான். (அதைக் கேட்ட அவர்) எனது இரட்சகா! உனது சிருஷ்டிகளில் பாக்கியமற்றவனாக நான் ஆகாதிருக்க வேண்டும் என்று தொடர்ந்து பிரார்த்தனை செய்து கொண்டே இருக்க அவர் செயலைக்கண்டு அல்லாஹ் சிரித்து விடுகிறான். (அல்லாஹ் சிரித்துவிட்டு) சுவனத்தில் நுழைந்து கொள் எனக்கூறுகிறான். அதில் அவர் நுழைந்ததும். ஆசைப்படு என அவருக்கு அல்லாஹ் கூறுகிறான். (அதற்கொப்ப) தனது இரட்சகனிடம் தன் ஆசைகளையெல்லாம் கூறிக் கேட்கிறார். அவருக்கு இன்னஇன்னவற்றையெல்லாம் (நீ கேள் என்பதாக) அல்லாஹ் நினைவூட்டிக் கொண்டிருக்கும் வரை (கேட்கிறார்) அவரது ஆசைகள் அனைத்திலும் அவர் எதையெல்லாம் நினைத்திருந்தாரோ? அதையெல்லாம் அவர் கேட்டும்வரை (கேட்டு முடித்து) விடுகிறார். அவையனைத்தும் அவை போன்றதும் உனக்கு உண்டு என அல்லாஹ் கூறிவிடுகிறான். அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹ் அன்ஹு, அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு அவர்களிடம் இந்த ஹதீஸைக் கேட்டுக் கொண்டிருந்த போது அவரின் ஹதீஸிலிருந்து எதையும் மறுக்காதிருந்துவிட்டு, 'அவைகளுடன் அவை போன்றதும் உனக்கு

உண்டு' எனக் கூறியதும், 'அவைபோன்ற பத்து மடங்குகள் அவைகளுடன் உண்டு' எனும் வார்த்தை உண்டு அபூஹுரைராவே! என்கிறார். அதற்கு 'அவையும் உண்டு, அவற்றுடன் அவை போன்றதும் உண்டு. ' என்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்றைத்தவிர வேறெதையும் நான் மனனம் செய்யவில்லை என (அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு) கூறுகிறார்.

'அவையும் அவைபோன்ற பத்து மடங்குகளும் உண்டு ' என்ற கூற்றை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிலிருந்து நான் நிச்சயமாக மனனம் செய்துள்ளேன் என அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹ் அன்ஹு கூறுகிறார்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

ஏகத்துவவாதிகள் நரகிலிருந்து வெளியேறுதல் பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 87

நரகவாசிகளில் (நிரந்தரமாக) அதற்கே உரியவர்கள், நிச்சயமாக அவர்கள் அதில் இறப்பெய்தவோ, ஜீவிக்கவோ மாட்டார்கள். ஆயினும் உங்களிலுள்ள சிலமனிதர்கள் அவர்களின் பாவங்கள் காரணமாக அல்லது அவர்களின் தவறுகள் காரணமாக நரகம் அவர்களைத்தீண்டி (எரித்து) கரியாக அவர்கள் ஆகிவிடும்வரை(யிலாக்கி அதன்பிறகு) அவர்களை அல்லாஹ் முழுமையாக மரணிக்கச் செய்துவிடுகிறான். அதன்பிறகு பரிந்துரைக்காக அனுமதியளிக்கப்படுகின்றனர். (அதன்நிமித்தம்) அவர்களை பிரிந்துபோன நிலையில் (கொத்து கொத்தாக) கூட்டமாக கொண்டுவரப்பட்டு, சுவனத்தின் ஆறுகளின் மீது உதறப்படுகிறார்கள். அதன்பிறகு; சுவனவாசிகளே! அவர்களின் மீது கொட்டுங்கள்! எனக்கூறப்படும். (அதற்கிணங்க சுவனத்து நீரைக் கொட்டியதுமே) வெள்ளம் சுமந்துவந்த விதை துரிதமாக முளைப்பது போன்று முளைத்துவிடுவர் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள். அப்போது அக்கூட்டத்திலிருந்த ஒரு மனிதர், 'நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் (இந்த உதாரணத்தைக் கூறுவதன்மூலம்) கிராமத்தில் இருந்தவர்களைப் போன்று உள்ளனர்' எனக்கூறுகிறார்.
அறிவிப்பவர்: அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 88**

சுவனத்தில் கடைசியாக நுழையும் மனிதர் ஒரு முறை நடப்பார். ஒரு முறை முகம் குப்புற விழுவார். ஒரு முறை அவரை நெருப்பு கரித்துக் கருப்பாக்கி விடும். அந்நரகை (அதை)க் கடந்துவிட்டால் அதன்பால் திரும்பிப்பார்த்து, உன்னை விட்டும் என்னைக் காப்பாற்றிய அவன் பாக்கியமானவன் எனக்கூறுவார். முந்தியவர்கள் பிந்தியவர்கள் எவருக்கும் கொடுக்காத ஒரு பொருளை நிச்சயமாக அல்லாஹ் எனக்கு கொடுத்துவிட்டான் எனக் கூறுவார். அப்போது அவருக்காக ஒரு மரம் உயர்த்தப்படும். (திடீரென ஒரு மரம் முளைத்து நிற்கும்). 'என் இரட்சகா! இந்த மரத்திற்கு அருகில் என்னைச் செல்லச் செய்வாயாக! அதன் நிழலை நான் அனுபவித்து நிழல் பெறுவேன். அதன் நீரிலிருந்து தண்ணீரும் அருந்துவேன்' எனக்கூறுகிறார். (அதற்கு) 'நான் அதை உனக்கு கொடுத்தால் அதல்லாத மற்ற எதையாவது நீ கேட்பாய் (அல்லவா ?)' என அல்லாஹ் கூறியதும் ஷஎனது இரட்சகா! இல்லைஷ எனக்கூறிவிட்டு அதல்லாத மற்ற எதையும் அல்லாஹ்விடம் அவர் கேட்கமாட்டேன் என உறுதிமொழியையும் தருகிறார். உயர்வான அவரது இரட்சகன் அவருக்கு மன்னிப்பை அளிக்கிறான். காரணம் அவரால் இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதை அவன் காணுகிறான். ஆகவே அந்த மரத்திற்கு சமீபமாக அவரை அல்லாஹ் நெருங்க வைக்கிறான். அம்மரத்தின் நிழலைக்கொண்டு அவர் நிழல் பெறுகிறார். அதன் நீரிலிருந்து நீரை அருந்துகிறார். அதன்பிறகு முந்திய மரத்தை விட மிக அழகான ஒரு மரம் அவருக்காக உயர்த்தப்படுகிறது ஷஎனது இரட்சகா! இந்த மரத்திற்கு அருகாமையில் செல்ல விடு. அதன் நீரிலிருந்து நான் நீரருந்துவேன். அதன் நிழலுக்கு கீழ் நான் நிழல் பெறுவேன். இதுவல்லாத மற்ற எதையும் கேட்கமாட்டேன்ஷ என்கிறார். 'ஆதமின் மகனே! இதுவல்லாத மற்ற எதையும் என்னிடம் கேட்கமாட்டாய் என நீ என்னோடு

உடன்படிக்கை செய்யவில்லையா?' என அல்லாஹ் கேட்க, (இப்போது அவர் இது கிடைத்துவிட்டால்) இதைத்தவிர வேறு எதையும் கேட்கமாட்டேன் என அவனிடம் உடன்படிக்கை செய்வதாகக் கூறுகிறார். அதற்கு 'நான் உன்னை அம்மரத்தின் பால் நெருங்கச் செய்தால் இதுவல்லாத வேறெதையாவது கேட்பாயா? என அல்லாஹ் கூறுகிறான். அப்போது அதுவல்லாத வேறு எதையும் அவனிடம் கேட்கமாட்டேன் என உறுதிமொழி கூறுகிறார். அவரின் இரட்சகன் அதன்மீது அவருக்கு பொறுமையில்லை எனக்காண்பதால் மன்னிப்பளித்து அம்மரத்திற்கு அருகாமையில் நெருக்கி வைக்கிறான். அதன் நிழலில் நிழல் பெறுகிறார். அதன் தண்ணீரை அருந்துகிறார். அதன்பிறகு சுவனத்தின் வாயிலில் அவருக்காக ஒரு மரம் உயர்த்தப்படுகிறது. அம்மரம் முந்திய இரு மரங்களை விட மிகுந்த அழகுடையதாக இருக்கும். (அதைக் கண்டதும் அம்மனிதர்) எனது இரட்சகா! அதன் நிழலைக் கொண்டு நான் நிழல் பெறுவதற்காகவும்,அதன் நீரிலிருந்து நீர் அருந்துவதற்காகவும், அம்மரத்தின் பால் என்னை நெருங்கச் செய்வாயாக! இதைத் தவிர வேறு எதையும் நான் கேட்கமாட்டேன் எனக்கூறுகிறார் (அதற்கு) 'ஆதமுடைய மகனே! அதைத்தவிர மற்றெதையும் நீ என்னிடம் கேட்கமாட்டாய் என நீ உடன்படிக்கை செய்யவில்லையா?' (என அல்லாஹ் கேட்கிறான்) ஆம்! எனது இரட்சகா! இது மட்டும் தான் இதைத்தவிர வேறு எதையும் நான் கேட்கமாட்டேன் எனக்கூறுகிறார். அதன்மீது அவருக்கு பொறுமையில்லை என அவரது இரட்சகன் கண்டதன் காரணமாக அவரை மன்னித்து அவரது கூற்றை ஏற்று அம்மரத்தின் பால் அவரை நெருங்க வைக்கிறான். அவ்வாறு அவர் சுவனத்திற்கு அருகில் நெருங்கிவிடுவாரேயானால் அச்சந்தர்ப்பத்தில் சுவன வாசிகளின் சப்தங்களை கேட்கிறார். (அவ்வாறு கேட்டதுமே) 'எனது இரட்சகா! என்னை அதில் பிரவேசிக்கச் செய்வாயாக!' என்கிறார். (அவனை பார்த்து) 'ஆதமின் மகனே! உனது கேள்வியை இத்துடன் முடித்துக் கொள்ள எதைக் கொடுத்தால் நீ பொருந்திக் கொள்வாய்.

இவ்வுலகையும், அத்துடன் அது போன்றதையும் உனக்கு நான் கொடுத்தபின் அது உன்னை திருப்திபடுத்துமா? (உனக்கு திருப்திதானா?') எனக் கேட்கிறான். (அதற்கு அந்த மனிதர்) 'எனது இரட்சகா! அகிலங்களுக்கு எல்லாம் இரட்சகனாகிய நீ என்னை பரிகாசம் செய்கிறாயா?' எனக்கூறுகிறார். இதைக்கூறிவிட்டு இப்னுமஸ்ஊது சிரிக்கிறார்கள். (சிரித்துவிட்டு) நான் ஏன் சிரித்தேன் என என்னை நீங்கள் கேட்க வேண்டாமா? என்றனர். அதற்கு நீர் ஏன் சிரித்தீர் என அவர்கள் கேட்கிறார்கள் அதற்கவர் (மேலும் இதைக் கூறிய போது) அல்லாஹ்வின் தூதர் அவர்களும் இவ்வாறு தான் சிரித்தனர். (அல்லாஹ்வின் தூதர் அவர்களே!) நீங்கள் எதற்காக சிரித்தீர்கள்! எனக்கேட்கப்பட்ட போது அகிலங்களின் இரட்சகனாக நீ இருக்க என்னைப் பரிகாசம் செய்கிறாயா? என அவர் கூறக்கேட்டு அகிலங்களின் இரட்சகன் சிரித்தானே அதன் நிமித்தம் நானும் சிரித்தேன் எனக் கூறினார்கள்.

நிச்சயமாக உன்னை நான் பரிகாசம் செய்யவில்லை. ஆயினும், நான் விரும்பியதைச் செய்யும் ஆற்றல் உடையவனாக இருக்கிறேன் என அகிலங்களின் இரட்சகன் கூறினான்.

அறிவிப்பவர்: அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 89**

(மறுமை நாளில்) நரகத்தின் மேல் வருவது பற்றி கேட்கப்பட்டதை ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் செவியுற்றதாக அபூஜ்ஜுபைர் அறிவிக்கிறார். 'நாம் மறுமை நாளின் போது இவ்வாறு இவ்வாறெல்லாம் வருவோம். (அதாவது ஜனங்கள் கூட்டங்கூட்டமாக நிற்கும்போது) எல்லா ஜனங்களும் மேலாக (முதன்மையாக நம்மை) நான் கண்ணுறுகிறேன் எனக்கூறினார். சமூகத்தவரெல்லாம் அவர்களது விக்ரங்களுடனும், இன்னும் எவற்றையெல்லாம் (உலகில்) வணங்கினார்களோ?, அவைகளுடன் முதலாமவர் (அதையடுத்த) முதலாமவர் (என) அழைக்கப்படுவர்.'; அதன்பிறகு எங்களுடைய இரட்சகன் எங்களிடம் வந்து யாரை எதிர்பார்கிறீர்கள்? எனக் கேட்பான். அதற்கவர்கள் எங்களது

ரட்சகனை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பார்கள். அதற்கவன் நான்தான் உங்களுடைய ரட்சகன் என்பான். (அப்படியென்றால்) உன்னை நாங்கள் பார்க்க வேண்டும் என்பார்கள். (அதற்கிணங்க) சிரித்தவனாக அவர்களுக்கு காட்சியளிக்கிறான். அவர்களை அழைத்துச் செல்கிறான். அவர்கள் அவனைத் தொடர்ந்து செல்கின்றனர். அவர்களிலுள்ள நயவஞ்சகன், மூஃமீன் (விசுவாசி) (ஆகிய) ஒவ்வொரு மனிதருக்கும் ஒளியை அவன் நல்குவான். (அதைப் பெற்றுக் கொண்ட பின்) அவனை தொடருகின்றனர். நரகத்தின் பாலத்தின் மீது கொக்கிகளும், இரும்பினாலான உறுதியான முட்களும் உள்ளன. அல்லாஹ் யாரை (அவை) பிடிக்கவேண்டுமென நாடியிருந்தானே அவர்களை அவைகள் பிடித்துக் கொள்ளும். அதன்பிறகு நயவஞ்சகர்களுக்கு கொடுக்கப்பட்ட ஒளி அணைக்கப்பட்டு விடும். பிறகு விசுவாசிகள் (நரகத்திலிருந்து பாதுகாப்பு பெற்று) கரை சேர்ந்துவிடுவர். கரை சேரும் முதல்கூட்டத்தவரின் முகங்கள் பௌர்ணமி இரவின் பூரணச்சந்திரனைப் போன்றிருக்கும். (அவர்கள்) எழுபதாயிரம் பேர்களாவர்!. அவர்கள் கேள்விக்கணக்கு கேட்கப்படமாட்டார்கள். அதன்பிறகு அவர்களை அடுத்துள்ளவர்கள் வானத்திலிருக்கும் மிகப்பிரகாசமான நட்சத்திரம் போன்றவராவார்கள். அதன்பிறகு அவ்வாறே பரிந்துரை துவங்கும். (அல்லாஹ்வின் அனுமதி கொண்டும் அவன் பொருத்தத்துடன்) (பரிந்துரைப்பவர்) பரிந்துரை செய்வர். முடிவாக, 'லாஇலாஹ இல்லல்லாஹு ' எனக்கூறி எவர் மனதில் ஒரு கோதுமை மணி அளவு நன்மை (ஈமான்) இருந்ததோ ? அவர் நரகிலிருந்து வெளியேற்றப்பட்டு சுவனத்தின் முற்றத்தில் ஆக்கப்படுவர். சுவனவாசிகள் தண்ணிரைத் தெளிக்க ஆரம்பிப்பர். முடிவாக அவர்கள் ஒரு பொருள் வெள்ளம் வந்து சென்றபின் முளைத்துக்கொள்வது போன்று முளைத்துவிடுவர் (நரகத்தில் சுடப்பட்டு கரிக்கப்பட்டிருந்த அக்)கருப்பு நீங்கி விடும். அதன்பிறகு அவர்கள் உலகத்தையும் அத்துடன் அதுபோன்ற பத்துமடங்குகளையும் அவருக்கு ஆக்கப்படுமாறு கேட்பார்.

அறிவிப்பவர் : அபூஜுபைர் ரளியல்லாஹ் அன்ஹு

## ஹதீஸ் எண் : 90

கவாரிஜ்களின் கருத்துகளில் (பெரும்பாவம் செய்தவர் நரகிற்கு சென்றபின் வெளியேற மாட்டார். அதிலேயே இருப்பார் என்ற) ஒரு கருத்து என்னை மிகவும் ஆட்கொண்டு விட்டது. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய ஒரு ஜமாஅத்தாக நாங்கள் ஹஜ்ஜு செய்ய புறப்பட்டோம். ஹஜ்ஜை முடித்துக்கொண்டு (கவாரிஜ்களின் கொள்கையை மக்களுக்கு எடுத்துக்கூற) புறப்படலாம் என இருந்தோம். வந்து கொண்டிருந்த (திரும்பும்) வழியில் மதினாவை நாங்கள் வந்து அடைந்தோம். அப்போது ஜாபிர் பின் அப்துல்லா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு தூணின் பால் (சாய்ந்து) அமர்ந்தவர்களாக அல்லாஹ்வின் தூதர் அவர்களுடைய ஹதீஸை கூட்டத்தவர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் நரகவாசிகளைப் பற்றிக் கூறிக்கொன்டிருந்தனர். (அக்கருத்து கவாரிஜ்களின் கருத்துக்கு மாற்றாக இருந்தது).

நிச்சயமாக நீ யாரை நரகத்தில் நுழையச் செய்தாயோ அவரை நிச்சயமாக நீ இழிவுபடுத்திவிட்டாய் என்று அல்லாஹ் (குர்ஆனில் தம்மைப்பார்த்து கூறும்படி) கூறியிருக்கிறான்.(மேலும்)

'அதி(நரகி)லிருந்து அவர்கள் வெளியேற நாடும் போதெல்லாம் அதி(நரகி)லேயே திருப்பப்படுவார்கள் எனவும் அல்லாஹ் கூறுகிறான். இவ்வாறிருக்க அல்லாஹ்வின் தூதர் அவர்களின் தோழரே! நீங்கள் கூறுகிறீர்களே (இந்த ஹதீஸ்) அது என்ன? அது எப்படி(ச் சரியானதாக இருக்க முடியும்) என நான் (ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹ் அன்ஹு அவர்களைப் பார்த்து) கேட்டேன் எனக் (அறிவிப்பாளர்) கூறுகிறார்.

அதற்கவர் (ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு) 'குர்ஆனை ஓதுகிறீரா?' எனக்கேட்டார். 'ஆம்' என நான் கூறினேன்.

'முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அந்தஸ்து அதாவது (மறுமை நாளின்போது) அல்லாஹ் எந்த ஸ்னாத்திற்கு அவரை அனுப்பிவைப்பானோ? அது பற்றி நீர் கேள்விப்பட்டிருக்கிறீரா?' எனக்கேட்டார். நான் 'ஆம்' என்றேன்.

அப்போது (ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு) அவர்கள், 'நிச்சயமாக அதுதான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புகழப்பட்ட ஸ்தானம். அதன்மூலம் அல்லாஹ் யாரை (நரகிலிருந்து) வெளியேற்ற விரும்புகிறானோ அவர்களை (நரகிலிருந்து) வெளியேற்றுவான்' எனக்கூறினார். அதன்பின்னர் 'ஸிராத்' (என்னும் பாலம்) அழைக்கப்படுவது பற்றியும், மனிதர்கள் அதன்மேல் செல்வது பற்றியும் வர்ணனை செய்து காட்டினார். அதை நான் பாதுகாக்காது இருந்து விடுவேனோ? என்பதை நான் பயப்படுகிறேன் என (அறிவிப்பாளர் தன்னைப்பற்றிக்) கூறுகிறார். ஆயினும் நிச்சயமாக (ஒரு) சாரார் நரகிலிருந்தபின் நரகிலிருந்து வெளியேறுவர். அதாவது (காய்ந்து கருகிய) எள்ளுச்செடியின் குச்சிகளைப் போன்று வெளியேறுவர் எனக்கூறுகிறார். (அதன்பிறகு) அவர்கள் சுவன ஆறுகளில் ஒரு ஆற்றில் குளிப்பர் (குளித்தப்பின்) வெள்ளை வெளேரென்ற காகிதத்தைப் போன்று வெளியேறுவர் எனவும், ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு கூறியதைக் கேட்டுவிட்டு (அங்கிருந்து) திரும்பிவிட்டோம் என (யஜீ துல்ஃப(க்)கீர் ரளியல்லாஹு அன்ஹு) கூறுகிறார். உங்களுக்கு அல்லாஹ் அருள் செய்வானாக! இந்த ஷைக் (அறிவிப்பாளர்) அல்லாஹ்வின் மீது பொய் கூறுவாரென நீங்கள் கருதுகிறீர்களா? என நாங்கள் கூறிவிட்டு திரும்பிவிட்டோம். அல்லாஹ்வின் மீது சத்தியமாக! (இதைக் கேட்ட பின் இக்கூற்றை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில்) எங்களிலுள்ள ஒரு மனிதர் தவிர மற்றெவரும் வெளியேறவில்லை (அவர் கவாரிஜ்களின் கருத்தைக் கொண்டவராகவே இருந்து விட்டார்) (எனும் நிலையில்) நாங்கள் திரும்பிவிட்டோம். அல்லது அபூநுஜம் அவர்கள் கூறியதைப் போன்று1

அறிவிப்பவர் : யஜீதல் ஃப(க்)கீர் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு: 1பபூல் தக்கீன், முஸ்லிமின் ஆசிரியருக்கு அவர் ஆசிரியராவார். அதாவது முஸ்லிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுக்கு ஹதீஸை அறிவித்தவருக்கு (ஹதீஸை) அறிவித்தவராவார். (ஹதீஸ் அறிவிப்பாளர்களில் ஒருவர்).

**ஹதீஸ் எண் : 91**

’நரகிலிருந்து நால்வர் வெளியேறுவர். உயர்வான அல்லாஹ்வின் முன் அவர்கள் எடுத்துக்காட்டப்படுவர். அவர்களில் ஒருவர் (தாம் இருந்து வெளியேறி வந்த நரகின்பால்) திரும்பி;’எனது இரட்சகா! இப்போது என்னை வெளியேற்றிவிட்ட நரகத்தில் மீண்டும் என்னை திருப்பி விடாதிருப்பாயாக!’ எனக்கூறுவார். அதைக்கேட்ட அல்லாஹ் அவரை நரகிலிருந்து காப்பாற்றுகிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

பரிந்துரை என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 92**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஒரு நாள் இறைச்சி கொண்டுவரப்பட்டு, முன் தொடைப்பகுதி (கொடங்கைப்பகுதி) அவர்களுக்கு (உண்ண) கொடுக்கப்பட்டது. அது அவர்களுக்கு பிரியமான (உணவான)தாகவும் இருந்தது. அதிலிருந்து (ஒரு பகுதியை) பற்களால் கடித்தனர். (பிறகு)

மறுமை நாளின் போது மனிதர்களுக்குகெல்லம் நான் தலைவனாக இருப்பேன். எதனால் அது என்று உங்களுக்கு தெரியுமா ? முந்தியவர்களையும் பிந்தியவர்களையும், சமமானதாகவும் விரிவானதாகவும் உள்ள பூமியில் மறுமை நாளின் போது அல்லாஹ் ஒன்று சேர்ப்பான்.

(;ஜனங்களில் ஒரு சாரார் உலகில் மறுத்துக் கொண்டிருந்தனரே! அந்த நாள் நிலைநின்று விட்டது என) அழைக்ககூடியவர் அவர்களுக்குக் கேட்க வைப்பார். பார்வை அவர்களை கடந்து செல்லும்1 சூரியன் நெருங்கி வந்துவிடும். தாங்கமுடியாத, அதை சுமக்க சக்தியில்லாத அளவிற்கு மனிதர்களை மனக்கவலையும் சிரமமும் வந்தடையும். நீங்கள் இருக்கின்ற நிலையை நீங்கள் பார்க்க வேண்டாமா ? உங்களை அடைந்துவிட்ட(சங்கடங்க)வைகளையும் நீங்கள் பார்க்க வேண்டாமா ? உங்களது இரட்சகனின்பால் உங்களுக்காக

பரிந்துரைக்கும் ஒருவரை நீங்கள் (தேடிப்பிடிக்க) கண்ணுற வேண்டாமா? என சில மனிதர்கள் சிலரிடம் கூறுவர்.
அதற்கு சில மனிதர்கள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வாருங்கள் என சிலரிடம் கூறுவர். அவ்வாறே ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் அவர்கள் வருவர் (வந்து) 'ஆதம் அவர்களே! நீங்கள் மனிதர்களுக்குகெல்லாம் (மூலத்)தந்தை அல்லாஹ் தனது கரத்தால் உங்களைப்படைத்து உங்களிலேயே அவனது உயிரிலிருந்து உயிரையும் ஊதி, அமரர்களை கட்டளையிட்டான். அவர்கள் உங்களுக்கு சிரம்பணிந்தனர். உமது இரட்சகன்பால் எங்களுக்காக பரிந்துரை செய்யுங்கள், நாங்கள் இருக்கும் நிலையை நீங்கள் பார்க்கவில்லையா? (எங்களை) அடைந்துவிட்ட(சங்கடங்களை)வற்றை நீங்கள் பார்க்கவில்லையா? எனக்கூறுகின்றனர். அதற்கு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்; நிச்சயமாக எனது இரட்சகன் இன்றைய தினம் கடுங்கோபமுற்றிருக்கிறான். இதைப்போன்று அவன் கோபப்பட போவதுமில்லை. நிச்சயமாக அவன் என்னை ஒரு மரத்தை விட்டும் தடுத்திருந்தான் அவனுக்கு (அது விஷயத்தில்) நான் மாறு செய்துவிட்டேன். என்னையே! என்னையே! எனக்கூறிவிட்டு என்னைத்தவிர மற்றவர்களிடம் செல்லுங்கள். நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் செல்லுங்கள் எனக்கூறி விடுகிறார்கள்.
நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் மக்களெல்லாம் செல்கிறார்கள் (சென்று) ஷநூஹே! பூமியின் பால் அனுப்பட்ட (இறைத்) தூதர்களில் முதலாமவர் நீங்கள். நன்றியுள்ள அடியார் என அல்லாஹ் உங்களுக்கு பெயர் வைத்தான். (ஆகவே) உமது இரட்சகன் பால் எங்களுக்காக பரிந்துரை செய்வீர்களாக! நாங்கள் எதில் இருக்கிறோமோ அதை நீங்கள் பார்க்கவில்லையா? எங்களை (வந்தடைந்துவிட்ட) நிலையையும் நீங்கள் பார்க்கவில்லையா எனக்கூறுவர். (அதற்கு நூஹ் அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், ஷநிச்சயமாக என் இறைவன் இனறைய தினம் கோபடைந்து இருக்கிறான். இது போல் இதற்கு

முன்பு அவன் கோபப்பட்டதில்லை. (இனி) அவன் இதுபோல் கோபப்படப்போவதில்லை. நிச்சயமாக எனக்கென ஒரு பிரார்த்தனை இருந்தது, எனது சமூகத்தவருக்கு பாதகமாக அதைச் செய்துவிட்டேன். என்னையே! என்னையே!.......எனக்கூறிவிட்டு இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்பால் செல்லுங்கள்ஷ என்கின்றனர்.

அந்த ஜனங்கள் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வருவர். (வந்து) ஷநீங்கள் உயர்வான அல்லாஹ்வின் நபியும், உற்ற நண்பருமாக பூமியிலிருப்பவர்களில் இருந்தீர்கள். (ஆகவே) உங்களது இரட்சகன் பால் எங்களுக்காக பரிந்துரை செய்வீர்களாக! எந்த நிலையில் நாங்கள் இருக்கிறோமோ அதை நீங்கள் காணவில்லையா? எங்களை அடைந்துவிட்ட இந்நிலையை நீங்கள் காணவேண்டாமா?ஷ எனக்கூறுகின்றனர். அதற்கு இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நிச்சயமாக எனது இரட்சகன் இன்று கடுங்கோபமுற்றுவிட்டான். இதுபோன்று இதற்கு முன் அவன் கோபப்படவில்லை. இதற்குப் பின்பும் இதுபோன்று அவன் கோபமடையப்போவதில்லைஷ என்று தாம் உலகில் கூறிய (மூன்று) பொய்களை கூறுகிறார்கள் ;. என்னையே! என்னையே! என்னையே! என்னையே!....... என்கின்றனர். என்னையல்லாத மற்றவர்களிடம் செல்லுங்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் செல்லுங்கள் என்கின்றனர்.

ஜனங்களெல்லாம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வருகின்றனர். மூஸா அவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் தூதர்! தனது தூதுத்துவத்தைக் கொண்டு தனது பேச்சைக் கொண்டும் எல்லா மக்களைவிட அல்லாஹ் உங்களுக்கு சிறப்பை நல்கினான். உமது இரட்சகன் பால் எங்களுக்காக பரிந்துரைப்பீர்களாக! நாங்கள் எந்த (நிலையில்) உள்ளோம் என்று நீங்கள் பார்க்கவில்லையா? எங்களுக்கு ஏற்ப்பட்டுள்ள இந்நிலையை நீங்கள் காணவேண்டாமா என்கின்றனர். அப்போது மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், நிச்சயமாக எனது இரட்சகன் இன்றையதினம் கோபப்பட்டுவிட்டான். இது போன்று

இதற்கு முன் அவன் கோபப்பட்டதில்லை இனியெப்போதும் கோபப்படப்போவது இல்லை. நிச்சயமாக நான் ஒரு உயிரைக் கொன்றுவிட்டேன். அதைக் கொலை செய்யுமாறு எனக்கு கட்டளையிடப்படாமல் இருக்கும் போதே... (அவ்வாறு கொலை செய்து தவறிழைத்து விட்டேன்) என்னையே! என்னையே!...... நீங்கள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் செல்லுங்கள் என்கின்றனர்.

மக்களெல்லாம் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து, ஈஸா அவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் தூதர், தொட்டிலில் இருந்தபோதே மக்களோடு பேசினீர்கள், அவனுடைய வார்த்தையை அவன் (அல்லாஹ்) மர்யமின்பால் போட்டான். (தாங்கள்) அவனுடைய கட்டளைக்கிணங்க அவனுடைய புறத்திலிருந்து ஊதப்பட்ட ருஹ் ஆவீர். ஆகவே, எங்களுக்கு உமது இரட்சகனிடமிருந்து பரிந்துரை செய்வீர்களாக! நாங்கள் எந்த நிலையில் உள்ளோம் என்று நீங்கள் பார்க்கவில்லையா? எங்களுக்கு ஏற்பட்டுள்ள இந்நிலையை நீங்கள் காணவேண்டாமா என்கின்றனர். அதற்க்கு 'நிச்சயமாக எனது இரட்சகன் இன்றையதினம் கோபப்பட்டுவிட்டான். இது போன்று இதற்கு முன் அவன் கோப்பட்டதில்லை இனி எப்போதும் கோபப்பட போவது இல்லை' தனக்குப் எந்தப் பாவத்தையும் அவர்கள் கூறவில்லை. என்னையே! என்னையே!.......ஷ என்னையல்லாத மற்றவர்களிடம் செல்லுங்கள் என(வும்) முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலாம் அவர்கள்பால் செல்லுங்கள் என ஈஸா அலைஹிஸ்ஸலாம் கூறுவார்கள். அப்போது அவர்(ஜனங்)கள் என்னிடம் வந்து முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலாம் அவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் தூதர் நபிமார்களில் இறுதியானவர்கள் உங்களது பாவத்தில் முந்திய பிந்தியவற்றை அல்லாஹ் மன்னித்தருளி இருக்கிறான். உமது இரட்சகன் பால் எங்களுக்காக பரிந்துரை செய்வீர்களாக! நாங்கள் எந்நிலையில் உள்ளோமோ அதை நீங்கள் பார்க்கவில்லையா? எங்கள் நிலையை நீங்கள் காணவில்லையா?ஷ என்கின்றனர்.

அங்கிருந்து நான் நடக்கிறேன். அர்ஷுக்கு கீழே வருகிறேன். எனது இரட்சகனுக்காக சாஷ்டாங்கத்தில் விழுகிறேன். அதன்பிறகு எனக்கு அல்லாஹ், எனக்குமுன் எவருக்கும் திறந்து காட்டாத விஷயத்தை திறந்து விடுகிறான் அவனது புகழ்களையும் அவனைப் புகழ்வதில் அழகானவற்றையும் எனக்கு (என் மனதில்) உதிக்கச் செய்கிறான். அதன்பிறகு 'முஹம்மதே! உமது தலையை உயர்த்துவீராக! கேட்பீராக அதை கொடுக்கப்படுவீர். பரிந்துரை செய்வீராக! நீர் பரிந்துரை செய்விக்கப்படுவீர்' என (எனக்குக்) கூறப்படும். அதன்பின் என் தலையை நான் உயர்த்துவேன். எனது இரட்சகா! என் உம்மத்தவர்! என் உம்மத்தவர்! எனக்கூறுவேன். முஹம்மதே! உமது உம்மத்தவர்களில் யாருக்கு கேள்விக்கணக்கு(கள்) இல்லையோ? அவர்களை சுவனத்து வாயில்களில் வலது வாயிலில் நுழையச் செய்வீராக! என எனக்கு கூறப்படும். இதல்லாத (சுவனங்களின்) அனைத்து வாயில்களிலும் பிரவேசிக்க அவர்கள் மனிதர்களோடு கூட்டுக்காரர்களாக இருப்பர். முஹம்மதின் உயிர் எவன் கைவசமிருக்கிறதோ அவனின் மீது சத்தியமாக! சுவனத்து வாயில்களின் இரு ஓரங்களுக்கும் மத்தியிலுள்ள (இடைவெளி) தூரம் மக்காவிற்கும் 'ஹஜர்' என்ற ஊருக்கும் அல்லது மக்காவிற்கும் புஸ்ராவிற்கும் இடையிலுள்ள தூரம் போன்றதாகும். என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு:
1 ய. அல்லாஹ்வின் பார்வை எல்லாவற்றின் மீதும் பட்டு விடும் என்பது ஒரு கருத்து. டி. சிருஷ்டிகள் எல்ரோரையும் எல்லோரும் பார்த்துவிடுவர் காரணம் மறைப்புகளோ தடுப்புகளோ அங்கில்லை.
2 அல்லாஹ்விற்கு எதுவும் மறைந்ததே கிடையாது ஆகவே இப்போதும் பார்கிறான் எப்போதும் பார்த்துக்கொண்டே இருப்பான்.
எனவே மேலே சொல்லப்பட்ட யஇடி கருத்துகளை இவ்வாசகம் வலியுறுத்துகிறது.

சுவனத்தில் சிபாரிசு செய்யும் மனிதர்களில் முதாலமவன் நான். (நபிமார்களை) தொடரக்கூடிய உம்மத்துகளில் நபிமார்களிலேயே மிகக்கூடுதலான எண்ணிக்கையுடைய உம்மத்துகளை கொன்டவனும் நான் தான் என்பது பற்றிய பாடம் .

நூல் : ஷரஹ் நவவீ பாகம் 3 பக்கம் 67 அபுஸ்ஸ ஆதாத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி குறிப்பிடுகிறார்கள்.

சுவனத்தில் சிபாரிசு செய்யும் மனிதர்களில் முதலாமவன் நான். (நபிமார்களை) தொரக்கூடிய உம்மத்துகளில் நபிமார்களிலேயே மிகக்கூடுதலான எண்ணிக்கையுடைய உம்மத்துக்களை கொண்டவனும் நான்தான் என்பது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 93

’சுவனத்தில் பரிந்துரை செய்பவர்களில் முதலாமவன் நான். நபிமார்களில் எந்த நபியும் நான் உண்மைப்படுத்தப்பட்ட அளவிற்கு உண்மைப்படுத்தப்படவில்லை. நிச்சயமாக நபிமார்களிலேயே ஒரு நபி இருந்தார்(கள்) அவரை அவரது உம்மத்தில் ஒரே (ஒரு) மனிதரைத்தவிர (வேறு யாரும்) உண்மைபடுத்தவில்லை’ என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுவனத்தின் வாயிலைத் திறக்கத் தேடுதல் பற்றிய பாடம்

## ஹதீஸ் எண் : 94

’மறுமை நாளில் சுவனத்தின் வாயிலுக்கு நான் வந்து வாயிலைத் திறக்குமாறு கூறுவேன். சுவனத்தின் பொறுப்பாளர் நீ யார்? எனக்கேட்பார். நான் தான் முஹம்மது எனக்கூறுவேன் உங்களுக்குத் திறந்து விடுமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன் உங்களுக்கு முன்பாக வேறு யாருக்கும் (அக்கதவை) நான் திறக்கமாட்டேன் எனக்கூறுவார்’ என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

’ஒவ்வொரு நபிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரார்த்தனை (துஆ) உண்டு’ என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 95**

’ஒவ்வொரு நபிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரார்த்தனை (துஆ) உண்டு. ஒவ்வொரு நபியும் தனது பிரார்த்தனையை (உலகத்திலேயே) துரிதப்படுத்தி(க் கேட்டு) விட்டனர். நிச்சயமாக நான் என் பிரார்த்தனை மறுமை நாளின் போது எனது உம்மத்தவர்களுக்கு பரிந்துரை செய்வதற்காக பிற்படுத்தி வைத்துள்ளேன். என் உம்மத்தில் யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைவைக்காது இறப்பெய்திவிடுகிறாரோ அவருக்கு இன்ஷா அல்லாஹ் அப்பரிந்துரை கிடைக்கும்’ என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

தன் உம்மத்தவர்களுக்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிரார்த்தனைப் பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 96**

’என் இரட்சகா! நிச்சயமாக அவை(விக்ரகங்)கள் மனிதர்களில் அதிகமானோரை வழி கெடுத்துவிட்டன. ஆகவே யார் என்னைப் பின்பற்றுகிறாரோ? நிச்சயமாக அவர்தான் என்னைச் சேர்ந்தவராவார். யார் எனக்கு மாறு செய்கிறாரோ அவரை (உன்னிடம் விட்டு விட்டேன்) நிச்சயமாக நீ மன்னிக்ககூடியவனாகவும், அன்புடையவனாகவும் இருக்கிறாய்’ என்ற இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பற்றிய உயர்வான அல்லாஹ்வின் கூற்றை நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதினார்கள். (அதையடுத்து ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கூற்றையும் ஓதினார்கள்)

’அவர்களை நீ தண்டித்தால் நிச்சயமாக அவர்கள் உன் அடியார்களே! அவர்களை நீ மன்னித்துவிட்டால் நிச்சயமாக நீதான் மிகைத்தவனும் ஞானமுடையவனுமாக இருக்கிறாய்’ என ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறினார்கள்.

(மேற்கூறப்பட்ட இரு வசனங்களையும் ஓதிய பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) தங்களது

இருகைகளையும் உயர்த்தி என் இரட்சகா! என் உம்மத்தவர்! என் உம்மத்தவர்! எனக்கூறிவிட்டு அழுதனர்.

'ஜிப்ரிலே! முஹம்மதின் பால் செல்வீராக! உங்களது இரட்சகன் (நிலைகளையும் நடப்புகளையும்) மிக அறிந்தவனாக இருக்கிறான். ஆகவே, உம்மை அழ வைத்தது எது? என அவர்களிடம் கேட்பீராக!' என அல்லாஹ் கூறினான் (அதற்கினங்க) ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் (நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம்) அவர்களிடம் வந்து அதைப்பற்றிக் கேட்டனர். (அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் அவர்கள்) ஏற்கனவே எதைக்கூறினார்களோ? அதைப்பற்றி ஜீப்ரில் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தெரிவித்தார்கள். அவன் (அல்லாஹ்) அதுபற்றி (இவர்கள் கூறாமலேயே இவர்களுடைய கவலையைப்பற்றி) மிகத் தெரிந்தவனாக இருக்கிறான்.

ஜிப்ரீலே! முஹம்மதின்பால் சென்று 'நிச்சயமாக நாம் உமது உம்மத்தினர் விஷயத்தில் உம்மை நாம் திருப்தி படுத்துவோம் உமக்கு (அவ்விஷயத்தில்) நாம் தீமை இழைக்கமாட்டோம் எனக்கூறுவீராக!' என உயர்வான அல்லாஹ் கூறினான்.

அறிவிப்பவர்: அப்துல்லாபின் அம்ருபின் அல்ஆஸ் ரளியல்லாஹு அன்ஹு

ஹதீஸ் எண் : 97

துபைல் பின் அம்ரு அத்தவ்ஸீ ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கோட்டை கொத்தளங்களிலும் (மாற்றாரின்) தீமையிலிருந்து உங்களைத் தடுக்கும் சக்திகளிலும் உங்களுக்கு விருப்பம் உண்டா? எனக்கேட்டனர்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள், ஒரு கோட்டை 'தவ்ஸ்' வர்க்கத்தினருக்கு அறியாமைகாலத்தில் இருந்தது. அல்லாஹ் அதை அன்ஸார்களுக்காக சேமித்து வைத்திருப்பதால் (அதை ஏற்க மறுத்து) அதிலிருந்து தங்களை விலக்கிக் கொண்டதாகக் கூறினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம்

அவர்கள் மதீனாவுக்கு 'ஹிஜ்ரத்' சென்ற போது துபைல் பின் அம்ரும் நபியின்பால் ஹிஜ்ரத் செய்தார். அவருடன் அவர் சமூகத்திலிருந்த ஒரு மனிதரும் ஹிஜ்ரத் செய்தார். (வந்தடைந்த) அவர்கள் மதீனாவில் தங்குவதை வெறுத்தனர். அதன் காரணமாக (கூட வந்திருந்த அம்மனிதர்) நோயுற்று நடுங்க ஆரம்பித்தார். (நோயுற்றிருந்த அவர்) தனக்குரிய அகலமான அம்புகளை எடுத்து அதன்மூலம் விரல்களில் இணைப்புகளையெல்லாம் துண்டித்துவிட்டார். (அதன் தொடரில் இறப்பெய்திவிட்ட) அவரை துபைல்பின் அம்ரு (என்பவர்) தன் கனவில் அழகான தோற்றத்தில் கண்டார். அவரது இரு கைகளையும் மூடிய நிலையில் அவரைப்பார்க்கிறார். (பார்த்துவிட்டு) உமது இரட்சகன் உம்மை என்ன செய்தான்? எனக்கேட்கிறார். அவனுடைய நபி-ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸலாம்- அவர்களின்பால் ஹிஜ்ரத் செய்ததன் நிமித்தம் என்பாவத்தைப் பொறுத்து விட்டான். உமது கைகளை மறைத்துக் கொண்ட நிலையில் உம்மை நான் பார்க்கச் செய்தது எது? எனக்கேட்கிறார். அதற்கவர், நீ வீணடித்ததை உன்னில் நாம் சீர் செய்யவே மாட்டோம் என எனக்கு சொல்லப்பட்டு விட்டது எனக்கூறுகிறார்.
இதை துபைல் ரளியல்லாஹு அன்ஹு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் எடுத்துச் சொன்னபோது, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், எனது இரட்சகா! அவரது இரு கைகளுக்காக (அவர் செய்தபாவத்தை) மன்னித்தருள்வாயாக! எனக்கூறினார்.
அறிவிப்பவர்: ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு
உமது நெருங்கிய சுற்றத்தார்களை எச்சரிக்கை செய்வீராக! என்ற மகத்துவமும் கண்ணியமும் உடைய அல்லாஹ்வின் கூற்று பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 98**

உமது நெருங்கிய சுற்றத்தார்களை எச்சரிக்கை செய்வீராக! என்ற வசனம் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு) இறக்கி வைக்கப்பட்ட பொழுது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

குறைஷியர்களை அழைத்தனர். அவர்களெல்லாம் ஒன்று கூடிவிட்டனர். (அங்கே) பொதுவாகவும் குறிப்பாகவும் அழைத்து கூறினார்கள்.
கஅபு பின் லுஅய்யின் மக்களே! நரகிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். முர்ராபின் கஅபுவின் மக்களே! நரகிலிருந்து உங்களைக் நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்து ஷம்சுவின் மக்களே! நரகிலிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்து மனாபின் மக்களே! நரகிலிருந்து உங்களைக் நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஹாஷிமின் மக்களே! நரகிலிருந்து உங்களைக் நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்துல் முத்தலீபின் மக்களே! நரகிலிருந்து உங்களைக் நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள். பாத்திமாவே நரகிலிருந்து உன்னை காப்பாற்றிக் கொள். நிச்சயமாக அல்லாஹ் (உங்களுக்கு கொடுக்கவிருக்கும் தண்டனையிலிருந்து) விடமிருந்து (உங்களைக் காப்பாற்றிக் கரை சேர்க்க) காக்க சக்தியற்றவனாக நான் இருக்கிறேன். எனினும் நிச்சயமாக உங்களுக்கு (என்னுடன்) இரத்த சொந்தம் உண்டு. அதைச்சேர்த்து நடக்க வேண்டிய வகையில் நான் சேர்த்து நட்பேன். (அதை துண்டிக்க மாட்டேன்) எனக்கூறினார்கள்.
அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு
அபுதாலிபுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எத்திவைத்த பலன் பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 99**

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபுதாலிபுக்கு எந்த வஸ்துவைக் கொண்டாவது பலனாக இருந்தீர்களா? அவர் (உங்களை பாதுகாத்து உங்கள் எதிரிகளை மடக்கி) உங்களது நலன் காத்து நின்று, உங்களுக்காக (அவர்கள் மீது) கோபப்பட்டவராயிற்றே என அப்பாஸ் பின் அப்துல் முத்தலீப் கேட்டதற்கு, 'ஆம்! அவர் நரகத்தில் (குறைந்த அளவான) கரண்டை மொளிவரை (உள்ள நெருப்பில்) இருக்கிறார். நான் இல்லையெனில் நரகத்தின் அடித்தட்டில் இருந்திருப்பார்' எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்பாஸ் பின் அப்துல் முத்தலீப் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 100**

'நரகவாசிகளில் மிகக் குறைவான தண்டனையை உடையவர் அபுதாலீப் ஆவார். அவர் நெருப்பினால் ஆன இரு காலனிகளை காலில் அணிந்தவராக உள்ளார். அவ்விரண்டில் இருந்து (ஏற்படும் உஷ்ணத்தால்) அவரது மூளைக் கூட கொதிக்கிறது.' என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கிறார்கள்.

## ஒளு (சுத்தம்) பற்றிய நூல் ஹதீஸ் எண:101 - 180

### என்னுடைய உம்மத்தவர்களில் எழுபது ஆயிரம் பேர் கேள்வி கணக்கின்றி சுவனம் புகுவர் என்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்று பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 101**

ஹுஸைன் பின் அப்துர்ரஹ்மான் கூறுகிறார். நான் ஸயீது பின் ஜுபைர் அவர்களுடன் இருந்தேன் அப்போது அவர் 'உங்களில் நேற்று இரவு உடைந்த நட்சத்திரத்தை கண்டது யார்?' எனக்கேட்டார். (அதற்கு) நான் எனக்கூறிவிட்டு 'நிச்சயமாக நான் தொழுகையில் இருக்கவில்லை எனினும் தேள் என்னை கொட்டிவிட்டது என்றேன் (அப்படியென்றால்) நீ என்ன செய்தாய்?' எனக் கேட்டார். நான் ஓதி ஊதிக்கொண்டேன் எனக்கூறினேன். அவ்வாறு உன்னைச் செய்ய தூண்டியது எது? எனக்கேட்டார்.

ஷஅபீ நமக்கு அறிவித்த அந்த ஹதீஸ்தான் என்றேன். ஷஅபீ உங்களுக்கு எந்த ஹதீஸை அறிவித்தார் எனக்கேட்டார். (அதற்கு நான்) புரைதா பின் ஹுஸைப் அல் அஸ்லமீ எங்களுக்கு 'கண் பார்வை, தேள்கடி, விஷம் போன்றவைகளுக்குகல்லாது

ஓதிப்பார்த்தல் இல்லை' எனக்கூறினார் (என்றேன்). கேட்டவாறு யார் செயல்பட்டாரோ அவர் நல்லதே செய்துவிட்டார் எனினும் இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்ல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களைப்பற்றி நமக்கு (கீழ்கண்டவாறு) அறிவித்தார்கள். (அதாவது)

எனக்கு சமூகத்தவர்களைக் காட்டப்பட்டது ஒரு நபியை நான் கண்டேன். அவருடன் பத்து பேருக்கு குறைந்த ஒரு கூட்டமே இருந்தது? (மற்றொரு) நபியை நான் கன்டேன். அவருடன் ஓரிரு மனிதர்களே இருந்தனர். இனி ஒரு நபி(யை கண்டேன்) அவருடன் எவருமே இல்லை. அச்சமயம் பெருங்கூட்டம் ஒன்றை எனக்கு உயர்த்திக்காட்டப்பட்டது. நிச்சயமாக அவர்கள் எனது உம்மத்தவர்கள் என நான் எண்ணினேன். அப்போது இவர்தான் மூஸாவும் அவரது சமூகத்தவர்களும் என எனக்குக் கூறப்பட்டது. அதற்கு மேலே என் பார்வையை செலுத்தினேன். அங்கே ஒரு பெருங்கூட்டமிருந்தது. மற்றொரு மேல்மட்டத்தைப் பார்வையிடுமாறு எனக்கு கூறப்பட்டது. அங்கே பெருங்கூட்டமிருந்தது. இது தான் உமது உம்மத்து என எனக்கு கூறப்பட்டது. அவர்களில் எழுபது ஆயிரம் பேர் (கேள்வி) கணக்கின்றி (எவ்வித) தண்டனையுமின்றி சுவனம் செல்வர். அதன்பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து தங்களது அறையில் நுழைந்து விட்டனர். (வெளியிலிருந்த) ஜனங்கள் கேள்வி கணக்கின்றி எவ்வித தண்டனையும் இன்றி சுவனம் புகும் அவர்களைப்பற்றி (யோசிக்க ஆரம்பித்து) அதிலேயே மூழ்கியும் விட்டனர். அல்லாஹ்வின் தூதரோடு உடனிருந்த ஸஹாபாக்களாக (அவர்கள்) இருக்கும் என சிலர் கூறினர்.

இஸ்லாத்திலேயே பிறந்து அல்லாஹ்வுக்கு யார் எதையும் இணையாக்கவில்லையோ அவர்களாக இருக்கலாம் எனவும் சிலர் கூறினர். இதுபோன்றே பலவற்றைக் கூறினர். (இதற்கிடையில் உள்ளே சென்ற அல்லாஹ்வின் தூதர்) அவர்கள் வெளியேறி, மக்களுக்கு மத்தியில் (வந்தனர்). நீங்கள் எவ்விஷயத்தில் மூழ்கியுள்ளீர்கள் எனக்கேட்டனர். (அதற்கவர்கள்

தாங்கள்) பேசிக் கொண்டிருந்ததை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தெரிவித்தனர்.
(நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் - அவர்கள் யாரெனில்). அவர்கள் ஓதிப்பார்க்கவோ, மற்றவர்களை ஓதிப்பார்க்கத் தேடவோமாட்டார்கள். சகுனம் பார்க்கவும் மாட்டார்கள். தங்களது இரட்சகனின் மீதே பாரஞ்சாட்டுவார்கள் எனக்கூறினார்கள்.
(கூட்டத்திலிருந்த) உக்காஷா பின் மிஹ்ஸன் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அவர்களில் அல்லாஹ் என்னையும் ஆக்க பிரார்த்தனை செய்யுங்கள் என்றார். நீர் அவர்களில் உள்ளீர் என்றனர். அதன் பிறகு ஒரு மனிதர் எழுந்து நின்று என்னையும் அல்லாஹ் அவர்களில் ஆக்கியருள பிரார்த்தனை செய்யுங்கள் என்றார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களை உக்காஷா முந்திவிட்டார் என்பதாக கூறிவிட்டனர்.
அறிவிப்பவர்: உசேன் பின் அப்துர் ரஹ்மான் ரளியல்லாஹு அன்ஹு

## சுவனவாசிகளில் நேர்பாதியாக நீங்கள் இருக்க உறுதியாக நான் ஆதரவு வைக்கிறேன் என்பது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 102

ஒரு கூடாரத்தில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் சுமார் நாற்பது ஆண்கள் (வரை) இருந்தோம். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'சுவனவாசிகளில் நான்கில் ஒரு பங்காக நீங்கள் இருப்பதை பொருந்திக் கொண்டீர்களா?' என கூறினார்கள். நாங்கள் ஆம் எனக்கூறினேம் எனக்கூறினார்கள். (அதன் பிறகு) சுவனவாசிகளில் மூன்றில் ஒரு பங்காக நீங்கள் இருப்பதை பொருந்திக்கொண்டீர்களா? என ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். நாங்கள் ஆம் எனக்கூறினேம். (அதற்கவர்கள்) 'முஹம்மதின் உயிர் எவன் கையிலிருக்கிறதோ அவனின்மீது சத்தியமாக, நிச்சயமாக நீங்கள் சுவனவாசிகளில் நேர்பாதியாக இருப்பீர்களென

நான் ஆதரவு வைக்கிறேன் என ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினர்கள். (அதாவது) நிச்சயமாக சுவனத்தில் வழிபட்ட (தன்னை முற்றிலும் இறைவனுக்காக ஒப்படைத்த) உயிரைத்தவிர வேறு எதுவும் நுழையாது. நீங்கள் இனைவைப்பவர்களின் (பால் சேர்த்துப் பார்த்தால்) கருப்பு காளைமாட்டின் தோலில் ஒரு வெள்ளை நிற முடியைப் போன்றே தவிர வேறு இ;ல்லை. அல்லது சிவப்பு காளைமாட்டின் தோலில் ஒரு கருப்பு நிற முடியைப் போன்றே தவிர இ;ல்லை எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லா பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு

**ஒவ்வொரு ஆயிரத்திலும் தொள்ளாயிரத்து தொன்னூற்று ஒன்பது பேரை நரகத்திற்கு செல்ல அனுப்புவீராக என ஆதம் அவர்களுக்கு கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ்வின் கூற்று பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 103**

கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஆதமே! என அழைத்தான். இறைவா உன் அழைப்பிற்கு இதோ ஆஜராகி இருக்கிறேன் உனக்கு கீழ்ப்படிகின்ற மகிழ்ச்சிக்காக ஆவலாக காத்திருக்கிறேன் நல்லவைகள் உன் கைவசம் இருக்கின்றன என்று ஆதம் அலைஹிஸ்ஸலாம் பதிலளித்தார்கள். நரகத்திற்கு செல்ல இருப்பவர்களை தனியாக்குவீராக எனக் கூறுகிறான். நரகத்திற்கு செல்ல இருப்பவர்களென்றால் என்ன? எனக் கேட்கிறார்கள். ஒவ்வொரு ஆயிரத்திலும் தொள்ளாயிரத்து தொண்னூற்றொன்பது பேர் என அவன் (அல்லாஹ்) கூறுகிறான். (அந்த நாளைப்பற்றிக் கூறும்போது) அந்நாளில் சிறியவர்கள் வயோதிகத்தை அடைந்து விடுவர். கர்ப்பத்தை உடையவர்கள் தங்கள் சுமையை இறக்கிவைத்து விடுவர். (கர்ப்பஸ்தீரீகள் குழந்தை பெற்று விடுவர்) மனிதர்களை போதையுடைய மயக்கமான நிலையில் காண்பீர்கள். ஆயினும் அவர்கள் போதையுடையவர்களல்லர். எனினும் (அவர்களின் மேல்) அல்லாஹ்வின் தண்டனை கடினமானதாக இருக்கும் (எனக்கூறுகிறான்)

அவர் (இதை கேட்ட ஸஹாபாக்)களுக்கு பெருங்கஷ்டமாகி விட்டது. (ஆகவே) எங்களில் அந்த மனிதர் யார்? எனக்கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள். நன்மாராயம் பெறுங்கள். யஃஜுஜ் மஃஜுஜ் கூட்டத்தினர்களில் நிச்சயமாக ஆயிரமும், உங்களில் ஒருவருமாவார் எனக்கூறினார்கள். முஹம்மதின் உயிர் யார் கையிலிருக்கிறதோ அவனின் மீது சத்தியமாக! நிச்சயமாக நீங்கள் சுவனவாசிகளில் நான்கில் ஒரு பங்காக இருப்பதை நான் ஆதரவு வைக்கிறேன் எனக்கூறினார்கள். (அதைக் கேட்டு) உயர்வான அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீரும் கூறினோம். அதன்பிறகு என் உயிர் எவன் கையிலிருக்கிறதோ அவனின் மீது சத்தியமாக! சுவனவாசிகளில் மூன்றில் ஒரு பங்காக இருப்பதை ஆவல் கொள்கிறேன் என்றனர். அப்போது நாங்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீரும் கூறினோம். அதன்பிறகு எவன் கையில் என் உயிர் இருக்கிறதோ அவனின் மீது சத்தியமாக சுவனவாசிகளில் நீங்கள் நேர்பாதியாக இருப்பதை நிச்சயமாக நான் ஆவல் கொள்கிறேன் என்றபின் மறுமையில் வரும் உம்மத்தவர்களில் உங்களுக்கு உதாரணம். கருங்காளை மாட்டின் தோலில் ஒரே ஒரு வெள்ளை முடியைப் போன்றதாகும். அல்லது கழுதையின் முன்னங்காளில் (கொடங்கையில்) உள்ள அடையாளத்தைப் போன்றதாகும் எனக்கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஸயிது ரளியல்லாஹு அன்ஹு

**ஒளு (சுத்தம்) பற்றிய நூல்**

**'சுத்தமின்றி எந்தத் தொழுகையும் அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான்' என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 104**

இப்னு ஆமிர் அவர்கள் வியாதியஸ்தராக இருந்த போது அவரை நலம் விசாரிக்க அப்துல்லா பின் உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நுழைகிறார்கள். அப்போது இப்னு ஆமிர் அவர்கள் இப்னு உமர் அவர்களே! எனக்காக நீங்கள் பிரார்த்தனை செய்யக்கூடாதா? என்றார் (அதற்கு)

’சுத்தமி(ஒளுவி)ல்லாத தொழுகையும் போர்களத்தில் திருடிய பொருளிலிருந்து கொடுக்கப்பட்ட தர்மத்தையும் அல்லாஹ் அங்கீகரிக்கமாட்டான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்ல நான் செவியற்றேன். அப்போது நீர் பஸராவில் இருந்தீர் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர்: முஸ்அப் பின் ஸஅது ரளியல்லாஹு அன்ஹு

## தூக்கத்திலிருந்து எழும்பொழுது பாத்திரத்தில் கையை நுழைக்கு முன் அதை கழுவுவது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 105

’உங்களில் ஒருவர் தூக்கத்திலிருந்து எழுந்து அவர் தமது கையை மூன்று முறை கழுவும்வரை (தண்ணீர்) பாத்திரத்தில் கையை நுழைக்கவேண்டாம். (ஏனெனில்) நிச்சயமாக அவரது கரம் இரவில் எங்கே இருந்தது என்பதை (அவர்) அறியமாட்டார்’ என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## நடைபாதை, நிழல் ஆகியவற்றில் மலஜலம் கழிக்க ஒதுங்குவது விலக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 106

(அதை) செய்பவர் சபிக்கப்படுகிறார். சாபத்திற்குரிய இரு விஷயங்களை அஞ்சிக் கொள்ளுங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்போது ஸஹாபாக்கள்) அல்லாஹ்வின் தூதர் அவர்களே இரு சாபத்திற்கு உரியது எது? எனக்கேட்டனர். மனிதர்களின் நடைபாதையிலும் அவர்களுக்கு நிழல் தருபவற்றிலும் மலஜலம் கழிக்க ஒதுங்குவதாகும் என்றனர்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## மலஜலம் கழிக்கின்ற போது மறைத்துக் கொள்வது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 107

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பின்னால் (வாகனத்தில்) ஒரு நாள் என்னை அமரவைத்தார்கள். என்னிடம் ஒரு ரகசியத்தைக் கூறினார்கள்

மனிதர்களில் அதை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்றார்கள். பின்னர் தங்களது தேவையை (மலஜலம் கழிப்பதை) நிறைவேற்றுவதற்காக சென்றனர். உயர்வான இடத்தைக்கொண்டு (பள்ளத்தில் அமர்ந்து தேவையை நிறைவேற்றி) அல்லது ஈச்சமரத்தின் மரைப்பைக் கொன்டு மறைத்துக் கொன்டனர். அது (இச் செய்கையானது) எனக்கு மிக விருப்பமானதாக இருந்தது. (இப்னு அஸ்மா என்பவர் தனது ஹதீஸில்) ஈச்சமரத் தோட்டத்தின் சுவற்றை மறைப்பாக ஆக்கிக் கொண்டார்கள் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லா பின் ஜஹுபர் ரளியல்லாஹு அன்ஹு

**மலஜலம் கழிக்க நுழைந்தால் (தயாரானால்) என்ன கூறுவார்கள் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 108**

இரட்சகா! ஆண் னஷத்தான் பெண் னஷத்தான்களின் தீமையிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன் என கூறுவார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

**மலஜலம் கழிக்கின்றபோது கிப்லாவை முன்னோக்காதீர் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 109**

மல ஜலம் கழிக்க வந்தால் கிப்லாவை முன்னோக்கவோ பின்னோக்கவோ செய்யாதீர்கள். ஆயினும் கிழக்குப்பக்கமாவோ மேற்குப்பக்கமாவோ இருங்கள்.1 என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் நாங்கள் ஷாமிற்கு வந்தோம். கழிவறைகளை கிபுலாவின் பால் ஆக்கப்பட்டு, கட்டப்பட்டிருக்கக் கண்டோம். அதை விட்டு திரும்பிக் கொண்டு அதற்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்டுக்கொண்டிருந்தோம்.

அறிவிப்பவர்: அபூ அய்யூப் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு: 1 மதினாவைப் பொறுத்தமட்டில் கிழக்குப்பக்கமாகவோ மேற்குப்பக்கமாகவோ கிபுலா இல்லை. எனவே கிழக்கு அல்லது மேற்குப்பக்கம் நோக்கும்படி ஹதீஸில் வந்துள்ளது என்பதை

அறிக. இந்தியாவைப் பொறுத்தமட்டில் கிப்லா மேற்கில் உள்ளது. எனவே கிழக்கிலோ மேற்கிலோ நோக்கி அமரக்கூடாது என்பதை அறிக.

கட்டிடங்களில் அதற்கு (கிப்லாப் பகுதியில் திரும்பியிருக்க) அனுமதி பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 110

நான் பள்ளியில் தொழுது கொண்டிருந்தேன். அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், தங்களது முதுகை கிப்லாவின்பால் திருப்பியிருந்தனர். என் தொழுகையை முடித்துக் கொண்டு என் பகுதியிலிருந்து அவரின்பால் திரும்பினேன். அப்போது அப்துல்லா அவர்கள் 'மனிதர்கள் மலஜலம் கழிக்க கிப்லாவை முன்னோக்கியோ பைதுல் முகத்தஸை முன்னோக்கியோ அமரவேண்டாம்' என சில மனிதர்கள் கூறினார்கள் எனக்கூறிக்கொண்டிருந்தனர்.

ஒரு வீட்டின் மேல்பகுதியில் நான் ஏறினேன். (அப்போது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இரு செங்கற்களின்மீது தங்களது தேவையை நிறைவேற்ற பைத்துல் முகத்தஸை நோக்கியவாறு இருக்கக் கண்டேன் என அப்துல்லாஹ் கூறுகிறார்.

அறிவிப்பவர்: வாசிஉ பின் ஹப்பான் ரளியல்லாஹு அன்ஹு

தண்ணீரில் சிறுநீர் கழித்துவிட்டு அதில் குளிப்பது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 111

'தேங்கிக்கிடக்கின்ற தண்ணீரில் உங்களில் எவரும் சிறுநீர் கழித்துவிட்டு பிறகு அதில் குளிக்கவேண்டாம்' என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

ஹதீஸ் எண் : 112

'ஓடாது சதா தேங்கிக்கிடக்கும் தண்ணீரில் சிறுநீர் கழித்துவிட்டு பின்னர் அதிலிருந்து குளிக்காதே!' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## சிறுநீர் கழிக்கும்போது மறைத்துக்கொள்வதும் சுத்தமாக்கிக்கொள்வதும் பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 113**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இரு கப்ருகளுக்கு அருகில் சென்றனர். அப்போது 'நிச்சயமாக அவ்விருவரும் தண்டிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிந்து கொள்ளுங்கள். (ஆனால்) பெரும்பாவத்தின் காரணமாக இவர்கள் தண்டிக்கப்படவில்லை. ஆயினும் அவ்விருவரில் ஒருவர் கோள் சொல்லிக்கொண்டிருந்தனர். மற்றவர் சிறுநீர் கழிக்கின்ற போது மறைத்துக் கொள்ளாதிருந்தார்' (என்றனர். பின்னர்) ஈச்சமரத்தின் ஈரமான மட்டையைக் கொண்டுவருமாறு கூறினர். அதை இரண்டாகக்கிழித்து, இந்தக் கப்ரின் மீது ஒன்றையும் அந்தக்கப்ரின் மீது ஒன்றையும் நட்டுவைத்துவிட்டு 'இவ்விரண்டும் காய்ந்து போகாமல் இருக்கும்வரை அவ்விருவரின் தண்டணையில் குறைக்கப்படலாம்' என்றனர்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

## வலக்கரத்தால் சுத்தம் செய்வது தடுக்கப்பட்டது என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 114**

'சிறுநீர் கழிக்கின்ற போது உங்களில் யாரும் தனது ஆண்குறியை வலக்கரத்தால் பிடிக்கவேண்டாம், மலம் கழித்தப்பின் அதைத் தனது வலக்கரத்தால் சுத்தம் செய்யவேண்டாம், பாத்திரத்தில் மூச்சுவிட வேண்டாம்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அப்துல்லா பின் அபூகதாதா ரளியல்லாஹு அன்ஹு

## மலஜலம் கழித்துவிட்டு தண்ணீரால் சுத்தம் செய்வது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 115**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், சுவற்றின் பக்கம் ஒதுங்கினர். அவர்களை எங்களில் சிறுவராக இருந்த ஒரு பையன் சுத்தம் செய்யும் பாத்திரத்துடன் தொடர்ந்தார். ஒரு இலந்தமரத்தின்கீழ் அதை வைத்துவிட்டார். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தங்களது தேவையை முடித்துக்கொண்டு எங்களின்பால் வந்தனர். தண்ணீரினால் சுத்தம் செய்து இருந்தனர்.

அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

**சுத்தம் செய்யின் ஒற்றைப்டையாகச் செய்வதுப் பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 115ய**

'உங்களில் யாரெனும் கற்களைக்கொண்டு சுத்தம் செய்யின் ஒற்றைப்படையாகச் செய்யவும் உங்களில் யாரேனும் ஒளுச்செய்தால் தனது மூக்கில் தண்ணீர் செலுத்தி அதன்பிறகு சிந்தவும்' அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**கற்களினால் ஒற்றைப்படையில் சுத்தம் செய்வது, காய்ந்த (மல) விட்டை எலும்பு ஆகியவற்றைக் கொண்டு சுத்தம் செய்வது விலக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 116**

ஸல்மான் (அல்ஃபார்ஸி) ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம், உங்கள் நபி உங்களுக்கு மலஜலம் கழிப்பது உள்பட எல்லாவற்றையும் கற்றுத் தந்திருக்கிறார்கள் (அல்லவா ?) எனக்கேட்கப்பட்டது. அதற்கவர்கள்.

'ஆம், மலஜலம் கழிக்கின்றபோது கிப்லாவை முன்னோக்கி இருப்பதைவிட்டும் (அதுபோலவே) வலக்கரத்தால் நாங்கள் சுத்தம் செய்வது, மூன்று கற்களைவிட குறைவானவற்றைக் கொண்டு சுத்தம் செய்வது, காய்ந்த விட்டைகள், எலும்புகள் ஆகியவற்றைக் கொண்டு சுத்தம் செய்வதை விட்டும் எங்களது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களைத் தடுத்துள்ளார்கள்' என்றனர்.

அறிவிப்பவர்: ஸல்மான் ரளியல்லாஹு அன்ஹு

## இறந்து போனவற்றின் தேல்களை பதனிட்டு பயன்பெறுவது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 117**

மைமூனா அவர்களின் உரிமை எழுதப்பட்ட அடிமை பெண்ணுக்கு ஒரு ஆடு தர்மமாக வழங்கப்பட்டது (வழங்கப்பட்டபிறகு) அந்த ஆடு இறந்துவிட்டது. (அப்போது) அப்பெண்ணுக்கு அருகில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கடந்து சென்றனர். அப்போது 'அதன் தோலை நீங்கள் எடுத்து பதப்படுத்தி இருக்கலாம் அல்லவா'? அதன்மூலம் நீங்கள் பயனடைந்திருப்பீர்கள் என்றனர்.

அதைக்கேட்ட அவர்கள் 'அது செத்துவிட்டது' என்றனர். அதற்கு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், 'அதை உண்ணுவதுதான் தடுக்கப்பட்டுள்ளது' என்றுரைத்தனர்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

## பதனிடப்பட்ட தோல் சுத்தமாகும் என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 118**

இப்னுவஃலா அஸ்ஸபஇய்யி என்பவர்மீது (முயல்போன்ற) கால்நடைகளின் தோலினால் உட்பகுதியில் ஆக்கப்பட்ட ஜுப்பா போன்ற ஒன்றை நான் (அபுல்கைர்) கண்டேன். அதைத் தொட்டும்விட்டேன். அதற்கவர் அதைத் தொட உனக்கு என்ன நேர்ந்தது என்றார்? அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அவர்களிடம் நான் உறுதியாகக்கேட்டேன். 'நிச்சயமாக நாங்கள் மொராக்கோவில் இருப்போம், எங்களுடன் பர்பர் (என்ற இனத்தவரும்) நெருப்பு வணங்கிகளும் இருப்பர். ஆட்டுக்கிடாயை அறுத்துக் கொண்டுவரப்படும் நாங்கள் அவர்களின் அறுப்புக்களை திண்ணாதிருந்தோம். எங்களிடம் தோல்பைகளைக் கொண்டுவந்து இறைச்சி, குடல், கொழுப்பு ஆகியவைகளையும் அதில் போடு(ஆக்கு)வர்' (இது பற்றி) நான்கேட்டேன். அதற்கு இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் 'நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் அது பற்றிக் கேட்டோம். அதற்கவர்கள், 'அதை பதனிடுவதே அதற்குரிய சுத்தமாகும்' எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர்: யஜீது பின் அபீஹபீப், அபுல்கைர் என்பவர் தனக்கு அறிவித்தாகக் கூறுகிறார்.

## உங்களில் ஒருவரின் பாத்திரத்தை நாய் நக்கிவிட்டால் அதை அவர் ஏழுமுறை கழுவவும் என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 119**

நாய்களைக் கொல்லுமாறு அல்லாஹ்வின் தூதர் ஸல்லலல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள். பிறகு அவர்கள் ஷஷஅவர்களுடையவும் நாய்களுடையவும் விஷயம் என்ன?ஷஷ எனக்கேட்டுவிட்டு அதன்பிறகு ஷவேட்டை நாய்ஷ 'ஆடுகளை மேய்க்க உதவும் நாய்களுக்கு அனுமதி வழங்கிவிட்டு'. 'ஒரு பாத்திரத்தில் நாய் நக்கிவிட்டால் அதை ஏழுமுறைக் கழுவுங்கள் எட்டாவதுமுறை மண்ணைக்கொண்டு தேயுங்கள்' என்றனர்.

ஆடு மேய்க்க, வேட்டையாட, விவசாயம் செய்ய ஆகிய நாய்களில் அனுமதி தந்தனர் என யஹ்யா பின் ஸயீதுவின் அறிவிப்பில் உள்ளது.

அறிவிப்பவர்: அப்துல்லா பின் அல் முகஃப்பல் ரளியல்லாஹு அன்ஹு

## ஒளுவின் சிறப்பு பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 120**

'சுத்தம் ஈமானில் பாதியாகும் அல்ஹம்துலில்லாஹ் என்பது தராசை நிரப்பி விடும். ஸுப்ஹானல்லாஹ்வும், அல்லஹம்துலில்லாஹ்வும் தராசை நிரப்பி விடும். அல்லது வானங்கள் பூமி அவ்விரண்டுக்கிடையில் உள்ளவற்றை நிரப்பும், தொழுகை ஒளியாகும், தர்மம் அத்தாட்சியாகும், பொறுமை சுடராகும் இன்னும் திருக்குர்ஆன் (திருமறை) உனக்கு சாதகமாக அல்லது பாதகமாகி இருக்கும். எல்லா மனிதர்களும் அதிகாலையில் (வெளியேறிச்) செல்கின்றனர். (உலகமெனும் சந்தையில்) தம்மை விற்கின்றனர். அவ்வாறு விற்பதன் மூலம் சிலர் (தன்னை நரகிலிருந்து) விடுவித்துக் கொள்கிறார்கள். (வேறு சிலர்) தம்மை அழித்துக்கொண்டு விடுகின்றனர் (நரகம் செல்கின்றனர்)'.

அறிவிப்பவர்: அபு மாலிக் அல் அஷ்அரி ரளியல்லாஹு அன்ஹு

**’ஒளு செய்வதனால் தவறுகள் வெளியேறிவிடும்’ என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 121**

’முஸ்லிமான அல்லது முஃமினான அடியார் ஒளுச்செய்யத் தொடங்கி தனது முகத்தை அவர் கழுவினால் அவரின் முகத்திலிருந்து அவரது கண் மூலமாகச் செய்த ஒவ்வொரு தவறும், அந்தத் தண்ணீருடன் அல்லது அந்தத் தண்ணீரின் கடைசிச் சொட்டுடன் வெளியாகிவிடுகிறது. அவரது இரு கரங்களை கழுவினால் அவரது கரங்கள் (பிடித்து) செய்த பாவங்கள் தண்ணீருடன் அல்லது தண்ணீரின் கடைசிச் சொட்டுடன் இரு கைகளிலிருந்து வெளிப்பட்டு விடுகிறது. அவர் தனது இரு கால்களைக் கழுவுவாரேயானால் அவ்விரு கால்களும் (எப்பாவத்தைச் செய்ய) நடந்ததோ அப்பாவம் தண்ணீருடன் அல்லது தண்ணீரின் கடைசி செட்டுடன் வெளிப்பட்டு விடுகிறது. அவர் பாவங்களிலிருந்து பரிசுத்தமாக வெளிப்படும்வரை’ என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**ஒளுவின் போது பல்துலக்குதல் பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 122**

(இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா) ஓரிரவில் அல்லாஹ்வின் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களோடு இரவு தங்கினார்கள். இரவின் கடைசியில் அல்லாஹ்வின் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து வீட்டிலிருந்து வெளியேறி வானத்தின்பால் நோட்டமிட்டுவிட்டு இம்ரானின் சந்ததியினர் (என்ற) அத்தியாத்தில் ’வானங்கள் பூமியைப் படைத்ததிலும், இரவு பகல் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு அதில் நிச்சயமாக அத்தாட்சிகள் உண்டு’ எனும் வசனத்தை நரக நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக என்பது வரை ஓதிவிட்டு மீண்டும்

வீட்டுக்குத் திரும்பி, பல் துலக்கி ஒளுச்செய்து பிறகு எழுந்து (அதன்) பிறகு தொழுதுவிட்டு (அதன்) பிறகு படுத்தனர். அதன்பிறகு எழுந்து வெளியேறி வந்து, வானத்தின்பால் நோட்டமிட்டுவிட்டு இந்த வசனத்தை ஓதினர். அதன்பிறகு ஒருமுறை திரும்பிவந்து பல்துலக்கி ஒளுசெய்து அதன்பின் நின்று தொழுதனர்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

**ஹதீஸ் எண் : 123**

'நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வீட்டினுள் நுழைவார்களேயானால் பல்துலக்க ஆரம்பிப்பார்கள்' என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

சுத்தம் மற்றுமுள்ள காரியங்களில் வலது பக்கத்திலிருந்து துவங்குதல் என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 124**

சுத்தம் செய்யின் அவர்களது சுத்தத்திலும் தலைசீவினால் அவர்களது தலைசீவுவதிலும் செருப்பணிந்தால் செருப்பணிவதிலும் வலப்பக்கத்தையே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உறுதியாக விரும்புவர்களாக இருந்தனர் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

## அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒளுவின் தன்மை பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 125**

அப்துல்லாஹ் பின் ஜைது பின் ஆஸிம் அல் அன்ஸாரீ அவருக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தோழமை இருந்தது. அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒளுவை எங்களுக்கு செய்து காட்டுங்கள் என அவருக்கு கூறப்பட்டது (அதற்கவர்) ஒளு செய்யும் பாத்திரத்தை கொண்டு வருமாறு கேட்டார். (கொண்டு வந்த பிறகு) தனது இரு கைகளில் அதிலிருந்து (ஊற்றி) சாய்ந்து அவ்விரு கைகளையும்

மும்முறைக் கழுவினார். பிறகு தனது கையை பாத்திரத்தில் நுழைத்து அதை வெளியில் எடுத்து ஒரே கையில் வாயும் கொப்பளித்து மூக்குக்கு நீரும் செலுத்தினார் அதை மும்முறை செய்தார். பிறகு தனது கையைப் பாத்திரத்தில் நுழைத்து அதை வெளியில் எடுத்து தனது இரு கைகளையும் முழங்கை மொளி வரை இரண்டு இரண்டு முறைக் கழுவினார்.

பிறகு தனது கையை அதில் நுழைத்து அதை வெளியில் எடுத்து தனது தலைக்கு மஸஹு செய்ய ஆரம்பித்து தனத இரு கைகளையும் முன்னோக்கிக் கொண்டு (முன்பகுதியிலிருந்து கொண்டு) சென்று மீண்டும் அதைப் பின்னால் முற்பகுதிவரை கொண்டு வந்தார். அதன்பிறகு கரண்டை மொளிவரை தனது கால்களைக் கழுவினார் பிறகு அல்லாஹ்றவின் தூதர் (ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம); அவர்கள் ஒளு இவ்வாறு தான் இருந்தது எனக்கூறினார்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் ஜைது பின் ஆஸிம் அல் அன்ஸாரி ரளியல்லாஹு அன்ஹு

**மூக்கு சிந்துவது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 126**

'உங்களில் யாரேனும் ஒளுச்செய்தால் தனது இரு மூக்கு துவாரங்களில் தண்ணீர் செலுத்தி பிறகு அதைச் சிந்தவும்' என அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபுஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

ஹதீஸ் எண் : 127

தன் தூக்கத்திலிருந்து உங்களில் ஒருவர் எழுந்தால் மும்முறை மூக்கை சிந்தவும். ஏனெனில் நிச்சயமாக ஷைத்தான் அவனது மூக்கின்மேல் கடைசி பாகத்தில் இரவில் தங்குகிறான்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**ஒளுவை நிறைவாகச் செய்ததன் நிமித்தம் நெற்றி, கைகால்களிலிருந்து ஒளி பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 128**

அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களை ஒளுச் செய்ய நான் கண்டேன். அவர் தன் முகத்தைக் கழுவி ஒளுவை நிறைவாகச் செய்தனர். அதன்பிறகு அவரது வலக்கரத்தையும் புஜத்தையும் சேர்த்துக்கழுவினார். அதன்பிறகு தனது இடக்கரத்தையும், புஜத்தையும் சேர்த்துக்கழுவினார். பிறகு தலையை(மஸஹு) தடவினார்கள். இதன்பிறகு வலதுகாலை கெண்டைக்கால்வரை சேர்த்துக்கழுவினர், அதன்பிறகு இடதுகாலை கெண்டைக்கால்வரை சேர்த்துக்கழுவினார். அதன்பிறகு என்னைப்பார்த்து இவ்வாறு தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஒளுச் செய்ய நான் கண்டேன் எனக் கூறினர். அதன்பிறகு 'ஒளுவை நிறைவாக செய்ததன் காரணமாக நீங்கள் (தான்) முகங்களில், கைகளில், கால்களில் பிரகாசத்தை உடையவர்கள்' உங்களில் யாருக்கேனும் இயலுமானால் அவரது பிரகாசத்தை தனது முகத்தில், கைகளில், கால்களில் நீண்டதாக ஆக்கி கொள்ளவும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என அபுஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.
அறிவிப்பவர்: நுஜம் பின் அப்துல்லாஹ் அல்முஜ்மிர் ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு: குதிரையின் நெற்றி, அதன் கைகள் கால்களில் காணப்படும் வெண்மையை குறிக்கவே குர்ரத் தஹ்ஜில் எனும் வார்த்தை உபயோகமாகிறது. ஒளுவை நிறைவாய் செய்வதானால் ஒளுவின் உறுப்புகள் மறுமை நாளில் ஒளி பெற்று திகழும். குறிப்பாக முகம், கைகள், கால்கள் ஆகியவைகளாகும்.

**ஹதீஸ் எண் : 129**

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,அடக்கஸ்தலத்திற்கு வந்து; அஸ்ஸலாமு அலைக்கும் தாரகவ்மின் முஃமினீன் வஇன்னா இன்ஷா அல்லாஹ் பி(க்)கும் லாஹிகூன்.

பொருள்: முஃமீனான கூட்டத்தாரின் வீடே! உங்களின் மீது சாந்தி உண்டாவதாக! நிச்சயமாக நாங்கள் அல்லாஹ் நாடிவிட்டபோது உங்களுடன் வந்து சேரக்கூடியவர்களாக இருக்கிறோம் என்று கூறினார்கள். நான் நமது சகோதரர்களை பார்க்க வேண்டுமென விரும்புகிறேன் (அதைக்கேட்ட ஸஹாபாக்கள்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! நாங்கள் உங்களின் சகோதரர்கள் அல்லவா? எனக் கேட்டனர். மாறாக நீங்கள் எனது தோழர்கள் மேலும் நமது சகோதரர்கள் என்பவர்கள் இதுவரை அவர்கள் வரவில்லை எனக் கூறினார்கள். அதற்கு (ஸஹாபாக்கள்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! இதுவரை வராத உங்கள் சமூகத்தவர்களை எவ்வாறு நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்? என்றனர். அதற்கு அவர்கள் 'நெற்றியிலும், கால்களிலும் வெள்ளை நிறமுள்ள ஒரு குதிரை ஒரு மனிதருக்கு இருந்தது. கருப்பு நிறமுள்ள (வேறு நிறமே கலக்காத) குதிரைக்கு மத்தியில் வேறு நிறமிருப்பின் அவரது குதிரையை அவர் தெரிந்து கொள்வாரல்லவா? எனக் கேட்டார்கள். அதற்கவர்கள் ஆம்! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! என்றனர். (ஆகவே) நிச்சயமாக அவர்கள் மறுமைநாளில் ஒளு செய்யப்பட்ட உறுப்புகள் அனைத்தும் ஒளி உடையதாக இருக்க வருவார்கள். ஹவ்ளுல் கவ்தரில் (ஹவ்ளுல் கவ்தர் என்பது மஹ்ஷரில் உள்ள ஒரு தடாகமாகும்) அவர்களுக்கு முன்னபாக நான் இருப்பேன். (எனது) நீர் தடாகத்தில் தண்ணீர் அருந்துவதிலிருந்து சில ஆடவர்கள், வழிதவறிய கால்நடைகள் துரத்தப்படுவது போன்று துரத்தப்படுவார்கள் என்பதை தெரிந்து கொள(;ளுங்கள்) என் பக்கம் தண்ணீர் அருந்த வாருங்கள் என நான் அவர்களை அழைப்பேன் (அப்போது) என்னைப்பார்த்து, 'நிச்சயமாக உமக்கு பிறகு (மார்க்கத்தை) அவர்கள் மாற்றிவிட்டார்கள் என எனக்கு கூறப்படும். (அப்போது) நான் தூரம், தூரம் (தூரமாக செல்லுங்கள்) என நான் கூறுவேன்' எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபுஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## ஒளுவை அழகாக செய்தவர் பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 130**

உஸ்மான் பின் அப்பான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒளுச் செய்வதற்காக தண்ணீர் கொண்டு வரச்சொல்லி ஒளு செய்தார்கள். தங்களது முன் கையை மூன்று முறை கழுவினார்கள். பிறகு வாய் கொப்பளித்து மூக்குக்கு நீரும் செலுத்தி அதைச் சிந்தினார்கள். அதன்பிறகு தன் முகத்தை மும்முறை கழுவினார்கள். அதன்பிறகு தன் வலக்கரத்தை முழங்கைவரை மும்முறை கழுவினார்கள். அதன்பிறகு தன் இடக்கரத்தையும் அதைப்போன்றே கழுவினார்கள். அதன்பின்னர் தனது தலைக்கு மஸ்ஹு செய்தார்கள். அதன்பிறகு கரண்டைக்கால் வரை மும்முறை தனது வலது காலை கழுவினார்கள். அதன்பிறகு இடதுவை(காலை)யும் அதே போலவே கழுவினார்கள். அதன்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னுடைய இந்த ஒளுவைப்போன்றுதான் ஒளுச்செய்ய நான் கண்டேன் எனக்கூறினார்கள். அதன்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், யார் எனது இந்த ஒளுவைப்போன்று ஒளுச் செய்துவிட்டு அதன்பிறகு தொழுகத்தயாராகி, இரு ரக் அத்துக்கள் தொழுக ஆரம்பித்து அவ்விரு ரக் அத்திலும் தன்னேடு1 பேசாமல் யார் தொழுகிறாரோ அவரது முந்திய பாவம் மன்னிக்கப்படுகிறது எனக்கூறினார்கள். இந்த ஒளுதான் ஒருவர் தொழுகை;காக நிறைவாகச் செய்யும் ஒளுவாகும் என நமது அறிஞர்கள் கூறுகிறார்கள் என இப்னு ஷிஹாப் கூறுகிறார்.

அறிவிப்பவர்: உதுமான் இப்னு அஃப்பான் ரளியல்லாஹு அன்ஹு அவர்களால் உரிமை எழுதப்பட்ட அடிமை ஹும்ரான் ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்.

குறிப்பு: பிற ஊசலாட்டங்கள் பிற எண்ணங்களின்றி தொழுகையை முழு கவனத்துடன் நிறைவேற்றுவதே இதன் பொருளாகும்.

**ஹதீஸ் எண் : 131**

அல்லாஹ் கட்டளையிட்டதைப்போன்று யார் ஒளுவை நிறைவாகச் செய்கிறாரோ (அது) அவர் கடமையாக்கப்பட்ட தொழுகை(கள் அத்தொழுகை)களுக்கு மத்தியில் (செய்த சிறுபாவங்களுக்கு) பரிகாரமாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் என உதுமான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்
அறிவிப்பவர்: ஹும்ரான் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 132**

தொழுகைக்காக ஒருவர் ஒளுச்செய்து அந்த ஒளுவை நிறைவாகச் செய்துவிட்டு, கடமையான தொழுகையை நிறைவேற்ற, அவர் நடந்து சென்று, அத்தொழுகையை ஜனங்களுடன் அல்லது ஜமாத்தோடு அல்லது பள்ளியில் நிறைவேற்றிவிடின் அவரது பாவங்களை அவருக்காக அல்லாஹ் மன்னிக்கிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன் என உதுமான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

## (கடுங்குளிர், நோய் போன்ற) கஷ்டமான நேரங்களில் ஒளுவை பரிபூரணமாகச் செய்தல் பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 133**

எதைச் செய்வதனால் அல்லாஹ் அதன்மூலம் தவறுகளை அழித்துவிடுகிறானோ எதன்மூலம் பதவிகளை உயர்த்திவைக்கிறானோ அதைப்பற்றி உங்களுக்கு அறிவிக்கட்டுமா? எனக்கேட்டார்கள். அதைக்கேட்ட அவர்கள் 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆம்' (சொல்லுங்கள்) எனக்கூறினார்.
(கடுங்குளிர், உடல்வலி இதுபோன்ற) கஷ்டமான நிலைகளில் ஒளுவை நிறைவாகச் செய்வதாகும். மஸ்ஜிதுகளின்பால் செல்ல அதிகமான (எட்டுக்களைக் கொண்டு) தூரம் நடத்தல் ஒரு தொழுகைக்குப் பிறகு (மறு) தொழுகையை எதிர்பார்த்தல் (வணக்கத்திற்கெனவே தம்மை ஒதுக்கி வைத்திருக்கும் இச்செயலே) உங்களுக்கு ரபாத் ஆகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**ஒளு எத்திய அளவிற்கு நகை அணிவிப்பு (உண்டு) எத்தும் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 134**

அபூஹுரைரா அவர்கள் தொழுகைக்காக ஒளுச் செய்யும்போது அவருக்குப்பின்னால் நான் (அறிவிப்பவர்) இருந்தேன். அவர் தமது கரத்தை (கழுவும்போது) அக்குள் வரை நீட்டி(கழுவி)னார். அப்போது அவரிடம் அபூஹுரைராவே! இது என்ன ஒளு என்றேன். 'இபுறாஹீம் அலைஹுஸ்ஸலாம் அவர்களின் மகனாரே! நீங்கள் இங்கு இருக்கிறீர்களா? நீங்கள் இருக்கிறீர்கள் என்பது தெரிந்திருந்தால் இந்த ஒளுவை நான் செய்திருக்க மாட்டேன் ஒளு(வின் அடையாளங்கள்) எதுவரை எத்தி(உள்ள)யதோ அதுவரை விசுவாசிக்கு நகை அணிவிப்பு (மறுமையில்) எத்தும் (கிடைக்கும்) என எனது உற்ற நண்பர் சொல்ல நான் செவியுற்றிருக்கிறேன் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஹாஜிம் ரளியல்லாஹு அன்ஹு

**ஒளுவின் இடங்களில் எதையேனும் (கழுவாது) விட்டுவிட்டால் அதைக் கழுவுதல் - ஒளுவைத் திரும்பச் செய்தல் என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 135**

'ஒரு மனிதர் ஒளுச்செய்து தனது பாதத்தில் நகத்தளவு (கழுவாது) விட்டுவிட்டார். நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அதைப்பார்த்து விட்டு 'திரும்பச் சென்று உமது ஒளுவை அழகாகச் செய்வீராக!' எனக்கூறினார்கள். அவர் திரும்பிச் சென்று (ஒளுச்செய்து விட்டு) பிறகு தொழுதார் என உமர் பின் கத்தாபு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் தமக்கறிவிக்கிறார்கள் என ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

**ஒளுவிற்கும் குளிப்பதற்கும் எவ்வளவு தண்ணீர் தேவை என்பது பற்றிய பாடம்**

**ஹதீஸ் எண் : 136**

ஒரு முத்தில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒளுச்செய்யக்கூடியவர்களாகவும் ஒரு ஸா:உ விலிருந்து ஐந்து முத்துகள் வரை குளிக்ககூடியவர்களாகவும் இருந்தனர் என அனஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

குறிப்பு: ஒரு முத்து என்பது இருகைகளின் கொள்ளவு. ஒரு ஸா:உ என்பது நான்கு முத்துகளாகும்

காலுறைகள் மீது தடவுவது (மஸ்ஹு செய்வது) பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 136(டி)**

ஜரீர் அவர்கள் சிறுநீர் கழித்துவிட்டு பிறகு ஒளுச்செய்தார் தனது காலுறைகளின் மீது மஸ்ஹும் செய்தார். இவ்வாறு செய்கிறீரே என அவரிடம் கேட்கப்பட்டது. அதற்கவர் ஆம், 'நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், சிறுநீர் கழித்துவிட்டு அதன்பிறகு ஒளுவும் செய்து தங்களது இரு காலுறைகள் மீதும் மஸ்ஹு செய்த(தடவிக் கொண்ட)னர் என்பதை நான் கண்டேன் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஹம்மாம் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு: 'ஸஹாபாக்களில் இந்த ஹதீஸைக் கேட்பவர்களுக்கு இது அதிசயமாக இருந்தது ஏனெனில் இஸ்லாத்தை ஏற்றது ஷஅல்மாயிதாஷ அத்தியாயம் இறங்கிய பிறகாகும்' என இபுறாஹும் கூறியதாக அஉமஷ் அவர்கள் கூறுகிறார்கள்.

**ஹதீஸ் எண் : 137**

அபுமூஸா அவர்கள் சிறுநீர் விஷயத்தில் கடினமானவராக இருந்தார். பாட்டிலில் சிறுநீர் கழிக்க கூடியவராகவும் இருந்தார். பனூ இஸ்ரவேலர்கள் அவர்களின் தோலில் (உடம்பில்) சிறுநீர்பட்டுவிட்டால் கத்திரிக்கோல்களினால் அதை (அந்த இடத்தை) கத்திரிக்க கூடியவர்களாக இருந்தனர் எனவும் கூறிக்கொண்டிருந்தார்.

உங்களது இந்தக் தோழர் இவ்வாறு கடினம் காட்டாமல் இருப்பதை நான் நிச்சயமாக விரும்புகிறேன் என ஹுதைபா கூறினார். 'நானும் அல்லாஹ்வின் தூதரும் நடந்து

கொண்டிருந்தோம். ஒரு சாராரின் குப்பைமேட்டுக்கு, சுவற்றுக்கு அப்பால் வந்தார்கள். உங்களில் ஒருவர் நிற்பதைப்போன்று நின்று சிறுநீர் கழித்தார்கள். அவர்களை விட்டும் நான் விலகி நின்றேன். என்பால் எனக்கு சைக்கினை செய்தனர். அவர்கள் சிறுநீர் கழித்துமுடியும் வரை அவர்களுக்கு பின்னால் நின்றுகொண்டிருந்தேன் என்றார்.

மற்றொரு அறிவிப்பில் (அதன்பிறகு) 'ஒளுவும் செய்து தங்களது காலுறைகளுக்கும் மஸ்ஹு செய்தார்கள்' என உள்ளது.

அறிவிப்பவர்: அபூவாயில் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 138**

நான் இரவு நேரத்தில் ஒரு தொலைதூர(ப்பயணத்)தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் இருந்தேன். உன்னுடன் தண்ணீர் இருக்கிறதா? என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டனர். நான் ஆம்! என்றேன். தங்களது வாகனத்திலிருந்து கீழே இறங்கி இருட்டில் மறையும்வரை நடந்தார்கள். அதன்பிறகு வந்து பாத்திரத்திலிருந்த தண்ணீரை அவர்களுக்கு ஊற்றினேன் அவர்களது முகத்தைக் கழுவினார்கள். அப்போது அவர்களின்மேல் உல்லன் ஜுப்பா இருந்தது. அவர்களது முன்கையை அதிலிருந்து வெளியாக்க முடியாமல் (இறுக்கமாக) இருந்தது. (பின்னர்) ஜுப்பாவின் கீழ்பகுதியிலிருந்து வெளியாக்கி (இரு கொடங்கைகளையும் முழங்கைவரை) கழுவினார்கள் அவர்களின் தலைக்கு மஸ்ஹு செய்தார்கள் அதன்பிறகு அவர்களது இரு காலுறைகளை நான் கழற்ற (முயன்றேன்) நாடினேன். அவ்விரண்டையும் விட்டுவிடு. நிச்சயமாக அவ்விரண்டையும் நான் சுத்தமானவைகளாகவே நுழைத்தேன் எனக்கூறி அவ்விரண்டின் மீதும் மஸ்ஹு செய்தார்கள்.

அறிவிப்பவர்: முகீராபின் ஷு:பாரளியல்லாஹு அன்ஹு

## காலுறைகளுக்கு மஸ்ஹு செய்வதில் காலவரம்பு பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 139**

காலுறைகள் மீது மஸ்ஹு செய்வது பற்றி கேட்பதற்காக ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் நான் வந்தேன்.

அதற்கவர்கள் 'அபூதாலிபின் மகனாரைப்பிடித்து கேளுங்கள் ஏனெனில் அவர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் பிராயாணத்தில் (இருப்பவராக) இருந்தனர்' என்றனர். ஆகவே அவரிடம் நாங்கள் கேட்டோம். அதற்கவர் 'மூன்று பகல் மூன்று இரவுகள் பிரயாணத்தில் (இருப்பவருக்கும்) ஒரு பகல் ஒரு இரவு பிரயாணி அல்லாதவருக்கும் (காலக்கெடு) ஆக்கியுள்ளனர்' எனக்கூறினார்.
அறிவிப்பவர்: ஷுரைஹ் பின் ஹானீ ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 140**

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் (தொழுகைக்கு) பிந்திவிட்டார்கள். அவர்களுடன் நானும் பிந்திவிட்டேன். அவர்களது தேவையை முடித்துக் கொண்டபின் உன்னிடம் தண்ணீர் இருக்கிறதா? எனக்கேட்டனர். (ஒளு செய்வதற்குரிய) சுத்தமான தண்ணீரை அவர்களுக்கு கொண்டு வந்தேன். அவர்களது கைகளையும், முகத்தையும் கழுவினர். தங்களது முன்கையை (ஜுப்பாவை விட்டும்) வெளியே எடுக்கப் போனார்கள் ஜுப்பாவில் கைகள் இருக்கமாக இருந்தது. ஆகவே ஜுப்பாவிற்கு கீழிருந்து தங்களது கையை வெளிப்படுத்தி, ஜுப்பாவின் ஓரத்தை தமது தோள் புஜங்களின் மீது போட்டுக்கொண்டு தங்களது இரு முன்கைகளையும் (முழங்கை வரை) கழுவினார்கள். தங்களது தலையின் முன்பகுதியின் மீதும், தலைப்பாகை மீதும், இரு காலுறைகளின் மீதும் மஸஹு செய்தனர். அதன்பிறகு அவர்களும் (தொழுமிடத்திற்கு) வருவதற்காக ஏறினார். நானும் ஏறினேன். சமூகத்தவர்களின் பால் முடிவாக வந்தோம். அவர்கள் தொழுது கொண்டிருந்தனர். அவர்களுக்கு அப்துற்றஹ்மான் பின் அவ்ஃப் தொழுகை நடத்திக்கொண்டிருந்தார். நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் (வருகையை) உணர்ந்ததும் அங்கிருந்து நகர்ந்து கொள்ளப்போனார். நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அவருக்கு சைக்கினை செய்தார்கள். (மீதத் தொழுகையையும்) அவர்களுக்கு அவரே தொழவைத்தார். அவர் ஸலாம் கொடுத்ததும் ஸல்லல்லாஹ்

அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்தார்கள் நானும் எழுந்தேன் எங்களுக்கு முந்திவிட்ட ஒரு ரக்அத்தைத் தொழுதோம்.
அறிவிப்பவர்: முகீரா பின் ஷு:பா ரளியல்லாஹு அன்ஹு
குளிப்பது பற்றி நூல்

## தலைப்பாகையின் மீது மஸ்ஹு (தடவுவது) பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 141

இரு காலுறைகளின் மீதும் தலைப்பாகையின் மீதும் நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மஸ்ஹு செய்தார்கள்.
அறிவிப்பவர்: பிலால் ரளியல்லாஹு அன்ஹு

## பல தொழுகைகளை ஓரே ஷஒளுவில்ஷ தொழுவது பற்றியுள்ள பாடம்.

### ஹதீஸ் எண் : 142

(மக்கா) வெற்றி நாளன்று நிச்சயமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரே ஒளுவில் பல தொழுகைகளை தொழுதார்கள். தங்களது இரு காலுறைகளின் மீதும் மஸ்ஹும் செய்தார்கள் என புறைதா ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.
நபியவர்களைப் பார்த்து உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் 'இன்று நீங்கள் செய்ததைப்போன்று இதற்கு முன்பு செய்ததில்லையே?' எனக்கேட்டனர். (அதற்கு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) உமரே! அதைவேண்டுமென்றெ (மனமொப்பித்தான்) செய்தேன்' என்றனர்.
அறிவிப்பவர்: புரைதா ரளியல்லாஹு அன்ஹு

## ஒளுவிற்குப்பிறகு சொல்லவேண்டிய (துஆ) கூற்று பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 143

ஒட்டகம் மேய்க்க வேண்டிய பொறுப்பு எங்களின் மீது இருந்தது. அதன்படி என் முறை வந்தது. அந்த ஒட்டகையை மாலையில் எங்கே கட்டவேண்டுமோ? அங்கே அதைத்திருப்பி கொண்டுவந்து விட்டேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ்

அலைஹி வஸல்லம் அவர்கள், நின்று கொண்டு ஜனங்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருப்பவர்களாக இருக்கக் கண்டேன். எந்த ஒரு முஸ்லிமாயினும் ஒளு செய்து அதை அழகாக நிறைவாகச் செய்துவிட்டு அதன்பிறகு இரண்டு ரக்அத்து தொழுது. அவ்விரண்டு ரக்அத்திலும் அவரது மனதாலும் அவரது முகத்தாலும், அத்தொழுகையில் முன்னோக்கியவாறு பிற கவனமின்றி (நிறைவாகச்) செய்தால் அவருக்கு சுவனம் கடமையாகியேயல்லாது தவிர இல்லை என்ற கூற்றை அவர்களுடைய உபதேசத்திலிருந்து அறிந்து கொண்டேன். இது எவ்வளவு சிறந்ததாக உள்ளது? என்று நான் கூறினேன். எனக்கு எதிரிலிருந்த ஒருவர் இதற்கு முன்னால் கூறப்பட்ட ஒரு வார்த்தை இதை விட மிகச் சிறந்தது என்கிறார். நான் நோட்டமிட்டேன் அப்போது உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், சிறிது நேரத்துக்கு முன்புதான் நீ வந்தாய் என்பதை நான் பார்த்துக் கொண்டுதானிருந்தேன் எனக்கூறி விட்டு 'உங்களில் யாராயினும் ஒளுவை அதை முழுமையாகவும் நிறைவாகவும் செய்துவிட்டு (அதன்)பிறகு அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு எனக்கூறினால் எட்டு சுவனங்களின் வாயில்கள் அவருக்காக திறக்கப்படாமல் இருப்பதில்லை. அவற்றில் எதில் அவர் பிரவேசிக்க விரும்புகிறாரோ அதில் பிரவேசிப்பார்' எனக் கூறினார்கள்.
அறிவிப்பவர்: உகுபா பின் ஆமிர் ரளியல்லாஹு அன்ஹு

## இச்சைக்கசிவைக் கழுவிக்கொண்டு அதன் நிமித்தம் ஒளு செய்வது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 144**

மிக அதிகமான இச்சைக்கசிவுடையவனாக நான் இருந்தேன் (ஆகவே அது பற்றி) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் கேட்க அவர்களது மகளாரின் ஸ்தானத்திற்காக வெட்கமடைந்து, அல்மிக்தாத் பின் அல் அஸ்வது என்பவரை (இது பற்றிக் கேட்க) நான் கட்டளையிட்டேன் (ஆகவே) அவர் அவர்களிடம் கேட்டார்

(அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் 'அவரது ஆண்குறியைக் கழுவிக்கொண்டு ஒளுவும் செய்து கொள்வார்' எனக்கூறினார்கள்.
அறிவிப்பவர்: அலி ரளியல்லாஹு அன்ஹு
இச்சைக்கசிவு என்பதற்கு அரபியில் மதி எனக்கூறுகின்றனர். ஒரு மனிதருக்கு அது வெளிப்பட்டால் மார்க்க ரீதியாக ஆண் குறியைக் கழுவிக்கொண்டு அதன்பிறகு ஒளுவும் செய்து கொள்ள வேண்டும் என்பது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டலாகும்.
குறிப்பு: மதி மிருதுவான வெண்மையான நீர். கடுமையான ஆசையின்போது வெளிப்படும். அது வருவதை அநேகமாக உணர்ந்து கொள்ள முடியாது. ஆண் பெண் இருசாராருக்குமே இந்நிலை ஏற்படும். ஆண்களை விட பெண்களுக்கு இந்நிலை மிக கூடுதலாக ஏற்படும்.

**(அமர்ந்து) இருந்த நிலையில் ஏற்படும் உறக்கம் ஒளுவை முறிக்காது என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 145**

தொழுகைக்காக இகாமத்து சொல்லப்பட்டுவிட்டது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு மனிதருடன் மெதுவாகப் பேசிக்கொண்டிருந்தனர். (அப்துல் வாரிஸின் ஹதீஸில் அல்லாஹ்வின் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு மனிதரோடு (பொறுமையாகப்) பேசிக் கொண்டிருந்தனர் என உள்ளது) மக்களெல்லாம் தூங்கும் வரை நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகைக்கு நிற்கவில்லை. ஷுஃபாவின் ஹதீஸில், ஸஹாபாக்களெல்லாம் (இருந்தவாறு) தூங்கிவிடும்வரை அவரோடு பேசிக்கொண்டிருந்தனர். அதன்பிறகு வந்து அவர்களுக்கு தொழுகை நடத்தினர்.
அறிவிப்பவர்: அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

**ஒட்டக இறைச்சி சாப்பிட்டபின் ஒளு செய்வது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 146**

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் 'ஆட்டு இறைச்சி (சாப்பிட்டதன்) நிமித்தம் ஒளுச் செய்ய வேண்டுமா?' எனக்கேட்டார்.
'விரும்பினால் ஒளுச் செய்து கொள் விரும்பாவிட்டால் ஒளுச்செய்யாமலும் இருந்து கொள்' என்றனர்.
'ஒட்டக இறைச்சியை (சாப்பிட்டதன்) நிமித்தம் நான் ஒளுச்செய்ய வேண்டுமோ?' என நான் கேட்டேன் அதற்கு ஷஆம்ஷ என்றனர்.
ஒட்டக இறைச்சி சாப்பிட்டபின் (நபியவர்களும்) ஒளுவும் செய்தனர்.
'ஆடு கட்டுமிடத்தில் நான் தொழலாமா?' என (அந்த மனிதர்) கேட்டார். அதற்கு ஷஆம்ஷ என்றனர்.
'ஒட்டகம் படுக்கும் இடத்தில் நான் தொழலாமா?' என்றேன்.
அதற்கு கூடாது (இல்லை) என்றனர்.
அறிவிப்பவர்: ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு

நெருப்பு தொட்ட(சமைக்க காய்ச்சப்பட்ட)வைகளை (உண்ட பிறகு) ஒளு செய்வது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 147**

அப்துல்லாஹ் பின் இப்ராஹிம் பின் காரிள் ரளியல்லாஹு அன்ஹு என்பவர். அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களை பள்ளியில் ஒளு செய்யக் கண்டார்கள். (அப்போது) அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள்,
'காய்ச்சி எடுக்கப்பட்ட பால்கட்டித்துண்டு ஒன்றை சாப்பிட்டதன் காரணமாகவே ஒளுச் செய்தேன்' என்றனர். காரணம் 'நெருப்பு தொட்டவை (சமைக்கப்பட்டவை)களிலிருந்து (அவைகளை உண்டபின்) ஒளு செய்து கொள்ளுங்கள்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றிருக்கிறேன் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு கூறினார்கள் என்ற செய்தியை உமர் பின் அப்துல் அஜீஜ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அறிவித்தவர் அப்துல்லாஹ் பின் இப்ராஹீம் பின் காரிள் ரளியல்லாஹு அன்ஹு
அறிவிப்பவர்: உமர் பின் அப்துல் அஜீஜ் ரளியல்லாஹு அன்ஹு

## நெருப்பினால் சமைக்கப்பட்டவைகளை உண்டபிறகு ஒளு செய்வது மாற்றப்பட்டுவிட்டது என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 148**

'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், ஆட்டு சப்பையை கத்தியால் வெட்டி, அதிலிருந்து உண்டபின் தொழுகைக்கு அழைப்பு கொடுக்கப்பட்டதும் அங்கிருந்து எழுந்து கத்தியை எறிந்து விட்டுச் சென்று தொழுதார்கள் ஒளு செய்யவில்லை' என்பதை பார்த்ததாக, தமது தந்தை அறிவிப்பதாக ஜஃபர் பின் அம்ர் பின் உமய்யா அழ்ழம்ரீ ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

**ஹதீஸ் எண் : 149**

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் பால்குடித்துவிட்டு தண்ணீர் கொண்டுவரச் சொல்லி வாய் கொப்பளித்துவிட்டு, நிச்சயமாக பாலுக்கு அதற்கென்று ஒரு வழுவழுப்பு உண்டு எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

## தொழுகையில் ஏதோ ஏற்பட்டுவிட்டது என (சந்தேகத்துடன்) எண்ணுகின்ற வரைப் பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 150**

உங்களில் ஒருவர் தனது வயிற்றில் ஏதோ ஏற்பட்டு அதனால் ஏதும் வெளிப்பட்டிருக்குமோ என்று எண்ணி முடிவெடுப்பது சங்கடமாகிவிட்டால் சப்தத்தைக் கேட்கும் வரை அல்லது காற்றின் நாற்றத்தை நுகரும் வரை பள்ளியிலிருந்து வெளியேறிச் செல்ல வேண்டாம் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

## 'தண்ணீரிலிருந்து தான் தண்ணீர்' என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 151**

அபூஸயீது அல்குத்ரியின் தந்தையாகிய நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் திங்கள் கிழமையன்று குபாவிற்கு புறப்பட்டேன். (வழியில்) பனீஸாலிம் கூட்டத்தவரை நாங்கள் வந்தடைந்தோம். (அங்கே

வந்ததும்) இத்பான் என்பவரின் வீட்டுவாசலில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நின்று (உரத்த சப்தத்தில்) அவருக்காக குரல் கொடுத்தனர். அவர் தனது கீழ் ஆடையை இழுத்தவாறு வெளியில் வந்தார். (அவரை அந்நிலையில் கண்ட அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அம்மனிதரை நாம் அவசரப்படுத்தி விட்டோம் எனக் கூறினர். (அப்போது) இத்பான், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! ஒரு மனிதர் தன் மனைவியுடனிருக்கும்போது அவசரப்படுத்தப்பட்டு வெளியேறுகிறார். (ஆயினும்) அவருக்கு விந்து வெளிப்படவில்லை. இந்நிலையில் அவர் மீது கடமை என்ன ?1 என்பதை எனக்கு கூறுங்கள் என்றார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'தண்ணீரிலிருந்து தான் தண்ணீர்' எனக் கூறினர்.

அறிவிப்பவர் : அப்துர்ரஹ்மான் பின் அபூஸயிது அல் குத்ரி தன் தந்தை அறிவித்ததாக கூறுகிறார்

குறிப்பு 1.ய 'தண்ணீரிலிருந்து தான் தண்ணீர்' என்ற ஹதீஸிற்கு இப்னு அப்பாஸ் ரளியல்லாஹ் அன்ஹுமா அவர்கள்; கனவில் ஒருவர் இது போன்ற ஒரு சம்பவம் நடப்பதாக கண்டு விந்து வெளியாகி இருப்பின் குளிப்பது கடமை. இல்லாது வெறும் கனவாக இருந்தால் இல்லையென்பதே எனக் கூறுகிறார்கள்.

டி. ஒருவர் தன் மனைவிடம் தாம்பத்திய உறவு நீங்கலாக மற்றதைச் செய்திருப்பின் அவருக்குரிய சட்டம் அவரது ஆண்குறியை கழுவிவிட்டு ஒளுச் செய்து கொண்டால் மட்டும் போதும், என்பதை உபைபின் கஅபு ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸ் தெளிவு செய்கிறது.

உ. இந்த நபிமொழி பின்வரும் நபிமொழியால் மாற்றப்பட்டுவிட்டது என்பது ஒரு சிலரின் கருத்தாகும்.

## ஹதீஸ் எண் : 152

**151 வது ஹதீஸில் வந்துள்ள சட்டம் மாற்றப்பட்டு இரு குறிகளும் ஒன்றை ஒன்று சந்தித்துவிடின் குளிப்பது கடமை என்பது பற்றிய பாடம்.**

அதுபற்றி முஹாஜிர்கள், அன்சார்களில் ஒரு கூட்டத்தினர் கருத்து வேறுபட்டு விட்டனர். துள்ளிக்குதித்து தண்ணீர் வெளிப்பட்டாலோ அல்லது சாதாரணமாக நீரைக்கண்டாலோ தவிர குளிப்பது கடமை இல்லை என அன்சார்கள் கூறினர். 'மாறாக கலவை ஏற்பட்டு விட்டால் கண்டிப்பாக குளிப்பு கடமையாகிவிட்டது' என முஹாஜிர்கள் கூறினர். (இந்த ஹதீஸின் அறிவிப்பாளராகிய) அபூமூஸா (குறுக்கிட்டு) இதிலிருந்து உங்களை நான் தெளிவு படுத்துகிறேன் எனக் கூறி நான் (அங்கிருந்து) எழுந்து ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்களிடம் (இதுபற்றி பேச) அனுமதி கோரினேன். எனக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனது தாயே! ( அல்லது விசுவாசிகளின் தாயே!) எனக் கூறி ஒரு விஷயத்தைப்பற்றி உங்களிடம் நான் கேட்க விரும்புகிறேன். அதே சமயம் உங்களிடம் அதை கேட்பதிலிருந்து வெட்கம் அடைகிறேன் என நான் கூறினேன், அதற்கவர்கள் 'எதைப்பற்றி நீர் கேட்கக்கூடியவராக உள்ளீரோ! அதைப்பற்றி உன்னை ஈன்டெடுத்த தாயிடம் கேட்பதற்கு நீர் வெட்கப்படவேண்டாம் நான் உன் தாய் தான்', எனக் கூறினார்கள். (அப்போது) குளிப்பு கடமையாக்கி வைக்கக்கூடியது எது என கேட்டேன். (அதற்கவர்கள்) 'இதுபற்றி நன்கு தெரிந்தவரிடம்தான் நீர் வந்து இருக்கிறீர்' அ(ப்பெண்ணின்)வளின்1 நான்கு கிளைகளுக்கு மத்தியில் அ(ஒரு)வர் அமந்து ஆண்குறி பெண்குறியை தொட்டுவிட்டால் (கத்னா) செய்யப்பட்ட பகுதி அளவிற்கு ஒன்றில் ஒன்று மறைந்து விட்டால்) குளிப்பது கடமையாகி விட்டது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூமூஸா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1. கத்னா செய்யப்பட்ட பகுதி பெண்குறியில் மறைந்துவிட்டால் குளிப்பது கடமை என்பதே ஹதீஸின் கருத்தாகும்.

**ஹதீஸ் எண் : 153**

ஒரு மனிதர் தனது மனைவியோடு தாம்பத்திய உறவு கொள்கிறார். அதன்பிறகு அவருக்கு விந்து வெளியாகவில்லை (அவ்வாறாயின்) அவ்விருவரின் மீதும் குளிப்பது கடமையா? என ஒரு மனிதர் நிச்சயமாக அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டார். அப்போது ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்களும் அங்கிருந்தனர். அதற்கு அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ,'நிச்சயமாக நானும் இப்பெண்ணும் அவ்வாறு செய்து விட்டு அதன்பிறகு குளித்துக்கொள்கிறோம்' எனக்கூறினார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவியார் ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்களும் உம்முகுல்ஸூம் ரளியல்லாஹு அன்ஹா அறிவித்ததாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹ் அன்ஹு அவர்களும் அறிவிக்கிறார்கள்.

**ஆண்மகன் பார்ப்பது போன்று கனவில் ஒரு பெண்ணும் பார்கிறாள் (பார்த்தபின்) அவள் குளிப்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 154**

(இந்த ஹதீஸை அறிவிக்கும்) இஸ்ஹாக்கின் பாட்டியராகிய உம்மு சுலைம் அல்லாஹ்றவின் தூதர்பால் வந்து அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து அல்லாஹ்றவின் தூதர் அவர்களே! கனவில் ஆண் காண்பதை பெண் காணுகிறாள். ஒரு ஆண் மகன் தனக்கு கனவில் என்ன நடந்தாகக் காணுகிறரோ, அது தனக்கு ஏற்பட்டு விட்டதாக (ஒரு பெண்) காண்கிறாள். (இதைக்கேட்ட போது) அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் இருந்தனர். (ஆகவே இதைச் செவியுற்ற ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா) அவர்கள்,'உம்மு சுலைமே! உனது வலக்கரம் மண்ணைத் தொடட்டும்? நீர் பெண்ணினத்தை அசிங்கப்படுத்திவிட்டீர்' என்றார்கள். (அதற்கு நபி ஸல்லல்ாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களை(ப் பார்த்து) மாறாக உனது

வலக்கரம் மண்ணைத் தொடட்டும், ஆம்! உம்மு சுலைமே! பெண் அதைக்கண்டால் அவள் குளித்துக் கொள்ளவும்' என்றார்கள்.
அறிவிப்பவர் : இஸ்ஹாக் பின் அபீ தல்ஹா ரளியல்லாஹு அன்ஹுமா

**ஜனாபத்து கடமையான குளிப்புமுறை பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 155**

'நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஜனாபத்திலிருந்து குளிப்பதற்குரிய பாத்திரத்தை நெருக்கி (சமீபமாக்கி) வைத்தேன். தங்களது முன்கையை இரண்டு அல்லது மூன்று முறை கழுவினார்கள். பிறகு தங்களது மர்மஸ்தானத்தின் மீது ஊற்றி அதை தங்களது இடது கையால் கழுவினர். அதன்பின் தங்களது இடதுகையை தரையில் அடித்து அக்கையை நன்கு தரையில் தேய்த்தார்கள். பிறகு தொழுகைக்கு ஒளு செய்வது போன்று ஒளு செய்தார்கள். பிறகு தங்களது தலையின் மீது முன்கை நிறைய (தண்ணீரை அள்ளி) மும்முறை ஊற்றினார்கள். அதன் பிறகு தங்களின் உடல் முழுவதையும் கழுவினார்கள். அதன்பின் நின்ற அந்த இடத்திலிருந்து நகர்ந்து தங்களது இரு கால்களையும் கழுவினார்கள். பிறகு (அவர்கள் துடைத்துக் கொள்ள) துண்டை அவர்களுக்காக நான் கொண்டு வந்தேன் அதை (வாங்க) மறுத்துவிட்டார்கள், என அறிவிப்பவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துணைவியார் மைமூனா ரளியல்லாஹு அன்ஹா ஆவார்கள்.

**ஜனாபத்துக் குளியலுக்குரிய தண்ணீரின் (குறைந்த) அளவு பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 156**

ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் நானும் அவர்களது பால்குடி சகோதரரும் சென்றோம். (அப்போதவர்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனாபத்து (குளியல்முறை) பற்றிக் (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம்) கேட்டார்? ஷஸாஉஷ அளவிற்குரிய ஒரு பாத்திரத்தை கொண்டு வரச்சொல்லி, எங்களுக்கும் அவர்களுக்கும் மத்தியில் திரை இருக்க குளித்தனர்.

தங்களது தலையின் மீது மும்முறை நீரை ஊற்றினர் எனக்கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துணைவியர்கள் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணத்திற்கு பிறகு) தங்களின் தலைகளிலிருந்து முடியை இரு காதுகளைத் தாண்டிவிடாத அளவிற்கு இருப்பது போன்று குறைத்துக் கொண்டனர் எனக்கூறுகிறார்.

அறிவிப்பவர் : அபூஸலாமா பின் அப்துர்ரஹ்மான் ரளியல்லாஹு அன்ஹு

**குளிக்கக் கூடியவருக்கு துணியினால் மறைக்கச் செய்வது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண்: 157**

(மக்கா) வெற்றி (பெற்ற) ஆண்டில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவின் மேல்பகுதியிலிருந்தபோது அவர்களிடம் உம்முஹானி பின்த் அபூதாலிப் ரளியல்லாஹு அன்ஹா வந்தனர். (அப்போது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குளிக்க நின்று விட்டனர். பாத்திமா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை (திரைகொண்டு) மறைத்துக் கொண்டனர் (குளிப்பை முடித்துக் கொண்டு) பிறகு தங்களது உடையை எடுத்து அதை (உடம்பில்) சுற்றிக் கொண்டு அதன்பின் ளுஹா (நஃபில்) தொழுகையை எட்டு ரக்அத்துக்கள் தொழுதார்கள்.

அறிவிப்பவர் : உம்முஹானி பின்த் அபூதாலிப் ரளியல்லாஹு அன்ஹு

**ஆண், பெண் (இரு சாராரின்) மறைக்கப்பட வேண்டியவற்றை பார்பது விலக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 159**

ஒரு ஆடவர் மற்ற ஆடவரின் மறைக்கப்பட வேண்டிய பகுதியை (மர்மஸ்தானத்தை)யும் ஒரு பெண் மற்ற பெண் மறைக்கப்பட வேண்டிய பகுதியை (மர்மஸ்தானத்தை)யும் நோட்டமிட (பார்க்க)

வேண்டாம். ஒரு துணியில் (இடையில் மறைப்பின்றி) ஒரு ஆடவர் மற்ற ஆடவருடன் (தன் உடலைச்) சேர்க்க வேண்டாம். ஒரு பெண் மற்ற பெண்ணுடன் (இடையில் மறைப்பின்றி தன் உடலைச்) சேர்க்க வேண்டாம் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஸயீது அல்குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு

**மனிதன் ஆடையின்றி பார்க்கப்படாமலிருக்க உடலை மறைத்துக் கொள்வது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 160**

(க:ஃபாவை கட்டுவதற்காக) கற்களை சுமந்து கொண்டு வந்து சேர்ந்தவர்களுடன் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், க:ஃபாவின்பால் கற்களை சுமந்து கொண்டு வந்தனர். அப்போது அவர்கள் ஆடைஅணிந்திருந்தனர். அப்போது அவர்களது தந்தையின் சகோதரர் அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், என் சகோதரரின் மகனாரே! உனது ஆடையை அவிழ்த்து கற்களுக்கு கீழ் அதை நீ ஆக்கிக் கொள்வாய் என அவர்களுக்கு கூறினார். (அதற்கினங்க) அவர்களது ஆடையை அவிழ்த்து தங்களது தோல் புஜங்களின் மீது ஆக்கிக் கொண்டனர். (அவ்வாறு செய்ததுமே) மயக்கமுற்ற நிலையில் விழுந்துவிட்டனர். அந்நாளைக்குப்பிறகு நிர்வாணமாக அவர்கள் காணப்படவில்லை எனக்கூறுகிறார்.
அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு

## ஹைளு (மாதவிடாய்) பற்றி நூல்

**ஹதீஸ் 161 – 180**

**ஓரே பாத்திரத்தில் ஆணும், பெண்ணும் ஜனாபத்துக் குளியல்1 குளிப்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 161**

நானும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும்-எனக்கும் அவர்களுக்கும் இடையில் உள்ள ஒரு பாத்திரத்திலிருந்து குளிக்கக் கூடியவர்களாக

இருந்தோம். எனக்காக கொஞ்சம் தண்ணீரை விட்டு வையுங்கள் எனக்காக கொஞ்சம் விட்டு (தண்ணீரை) வையுங்கள் என நான் கூறுகின்ற வரை அவர்கள் என்னை முந்திக் கொள்வார்கள் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியதாக மூஆதா ரளியல்லாஹு அன்ஹா அறிவிக்கிறார்கள். அவ்விருவரும் ஜுனுபாளியாக இருந்தனர் எனவும் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : மூஆதா ரளியல்லாஹு அன்ஹா

குறிப்பு: 1. ஆண்பெண் தாம்பத்ய உறவு (அல்லது) கனவில்- அம்மாதிரி ஏற்பட்டதாக காணும் நிலையில்-விந்து வெளிப்பட்டால், அந்நிலையை ஜனாபத்து என்று மார்க்கத்தில் கூறப்படுகிறது. அந்நிலையிலிருப்பவருக்கு ஜுனுபாளி எனவும் குறிப்பிடப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்க.

## ஜுனுபாளி உறங்கவோ, உண்ணவோ விரும்பினால் ஒளு செய்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 162

'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜுனுபாளியாக இருக்க, அவர்கள் உண்ணவோ, உறங்கவோ விரும்பினால் தொழுகைக்கு ஒளு செய்வது போன்று ஒளு செய்து கொள்வார்கள்' என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

## குளிப்பதற்கு முன்பு ஜுனுபாளி தூங்குவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 163

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷவித்ருஷ (தொழுகை) பற்றி, ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் நான் (அறிவிப்பாளர்) கேட்டேன். (என்ற ஹதீஸை அவர் கூறுகிறார். அந்த தொடரில்) ஜனாபத்தின் போது எவ்வாறு அவர்கள் செய்து வந்தார்கள். அவர்கள் உறங்குமுன் குளிக்கக்கூடியவர்களாக இருந்தார்களா? அல்லது குளிக்குமுன் உறங்குவார்களா? என்று நான் கேட்டேன். அதற்கவர்கள் அவைகளை (இரண்டு விதமாக) செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். அதாவது சில சமயம் குளித்துவிட்டு தூங்குவார்கள். சில சமயம் ஒளு செய்து விட்டு

தூங்குவார்கள் எனக்கூறினார்கள். (இக்)காரியத்தில் விஸ்தீரணத்தை ஆக்கிய அல்லாஹ்விற்கே எல்லாப்புகழும் உரித்தாகுக! எனக்கூறினேன்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அபீகைஸ் ரளியல்லாஹு அன்ஹு

தன் மனைவியுடன் உடலுறவு கொண்ட கணவன் மீண்டும் உடலுறவு கொள்ள விரும்பினால் அவர் ஒளுசெய்து கொள்ளவும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 164**

'உங்களில் யாரேனும் தன் மனைவியிடம் தாம்பத்ய உறவை (உடலுறவை) முடித்துக் கொண்டு மீண்டும் உடலுறவு கொள்ள விரும்பினால் ஒளு செய்து கொள்ளவும்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: அபூஸஈத் அல்குத்ரி ரளியல்லாஹு அன்ஹு

தயம்மும் செய்வது, அதுபற்றி அல்லாஹ்வின் உத்தரவு வந்தது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 165**

சில பயணங்களில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நாங்கள் புறப்பட்டோம். ஷைதாஉஷ அல்லது தாத்துல்ஜைஷ் (கைபருக்கும் மதீனாவிற்கும் இடையில் உள்ள இடம்) என்னும் இடத்தை நாங்கள் அடைகின்ற வரை அதாவது இதற்கிடையில் என்னுடைய கழுத்தில் கிடந்த மாலை ஒன்று அருந்து விழுந்து விட்டது. அதை தேடுவதற்காக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கே தங்கிவிட்டனர். கூட வந்த மக்களும் அவர்களுடன் தங்கிவிட்டனர். அவர்கள் தங்கிய இடத்தில் தண்ணீர் கிடையாது, அவர்கள் கைவசமும் தண்ணீர் இல்லை. அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் மக்கள் வந்து ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் என்ன செய்து விட்டார்கள் பார்த்தீர்களா? அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்களையும் அவர்களோடு இருக்கும் மக்களையும் அவர்களுக்கு தண்ணீர் இல்லாத இடத்தில், அவர்களிடமும் தண்ணீர் இல்லாத நிலையில் தங்க வைத்துவிட்டனர் என்றனர். இதைக்கேட்ட அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என் தொடையின் மீது தன் தலையை வைத்து நன்றாக உறங்கி கொண்டிருந்த சமயம் வந்தார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், மக்களையும் தடுத்து நிறுத்தி விட்டாய், அவர்களுக்கு அங்கு தண்ணீர் கிடையாது, அவர்கள் வசமும் தண்ணீர் இல்லை என்று கூறினார்கள். என்னை அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நிந்த்தித்துவிட்டு அவர்கள் எதைக்கூற வேண்டுமென அல்லாஹ் நாடினானே, அதையெல்லாம் கூறினார்கள். எனது இடுப்பில் தங்களது கையைக் கொண்டு குத்தவும் ஆரம்பித்தனர். அச்சமயம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸ்தானம் (அவர்கள் தலை) என் மடி மீது இருந்ததே தவிர என்னை அசைவதிலிருந்து தடுக்கவில்லை. தண்ணீர் இல்லாத நிலையிலேயே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், காலைப் பொழுதை அடையும் வரை உறங்கி விட்டனர். அந்நேரத்தில் தான், அல்லாஹ் ஷதயம்மும்ஷ வசனத்தை இறக்கி வைத்தான். அதன்பிறகு அவர்கள் எல்லோரும் தயமும் செய்து கொண்டனர்.

அபூபக்கரின் குடும்பத்தவர்களே! உங்களுடைய பாத்திரத்தில் இச்சம்பவம் முதலாவதல்ல என உஸைது பின் அல்ஹுலைர் கூறுகிறார். (இவர், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களுக்கு மார்கத்தைக் கற்று தரவும், அவர்கள் மக்களுக்கு மார்க்கத்தைக் கற்றுத்தரவும், அவர்களை நல்வழி நடத்திச் செல்லவும், ஒரு சிலரை ஷமினாவின்ஷ இரவில் தேர்ந்தெடுத்து நியமித்தார்களே! அவர்களில் இருவரும் ஒருவராவார்)

நான் எந்த ஒட்டகத்தின் மிது அமர்ந்து (சவாரி) செய்து இருந்தேனோ அதை கிளப்பினோம். அதற்கு கீழேயே தொலைந்து போன என் மாலையை பெற்றுக்கொண்டோம்.
அறிவிப்பவர்: ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

ஜுனுபாளி ஷதயம்மும்ஷ செய்வது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 166**

(அறிவிப்பாளராகிய) நான் அப்துல்லா, அபூமூஸா ரளியல்லாஹு அன்ஹு ஆகியவர்களுடன் அமர்ந்தவனாக இருந்தேன். (அப்போது அபூமூஸா அப்துல்லாஹ்றவிடம்) 'அபூஅப்துர்ரஹ்றமானே! ஒரு மனிதர் ஜுனுபாளியாகி விடுகிறார்; ஒரு மாதம் வரை தண்ணீர் அவருக்கு கிடைக்கவில்லை, தொழுகையை அவர் எவ்வாறு செய்(நிறைவேற்று)வார்? என அபூமூஸா கேட்டார்.
ஒரு மாதம் வரை தண்ணீரை அவர் பெற(அவருக்கு கிடைக்கா)விட்டாலும் தயம்மும் செய்யவே மாட்டார் என அப்துல்லாஹ்ற கூறினார். 'நீங்கள் தண்ணீரைப் பெறாத (தண்ணீர் உங்களுக்கு கிடைக்காத) போது சுத்தமான மண்ணில் தயம்மும் செய்து கொள்ளுங்கள்' என்ற அல்மாயிதா அத்தியாயத்திலுள்ள இந்த வசனத்தை என்ன செய்வீர் என அபூமூஸா கேட்டார். (அதற்கு) அப்துல்லாஹ்ற, 'இந்த வசனத்தில் உள்ளவாறு அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டால் தண்ணீர் குளிர்ந்து விட்டால் (கூட) மண்ணை(க் கொண்டு தயம்மும் செய்ய) அவர்கள் ஆரம்பித்து விடுவர்' எனக்கூறினார்.
அபூமூஸா 'என்னை அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு தேவையின் நிமித்தம் அனுப்பியிருந்தார்கள். நான் ஜுனுபாளியாகிவிட்டேன். (தண்ணீர் என்னிடம் இல்லை தேடியும்) தண்ணீரை நான் பெறவில்லை. (எனக்கு கிடைக்கவில்லை அந்நிலையில்) கால்நடை மண்ணில் புரளுவது போன்று புரண்டேன். அதன்பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் வந்து அச்சம்பவத்தை அவர்களுக்குக் கூறினேன். உன் கைகளால் இவ்வாறு செய்தாலே போதும் எனக்கூறினார்கள். (அதை செயல் ரூபத்தில் காட்டுவதற்காக) அவர்களின் இருகைகளையும் ஒருமுறை

பூமியில் அடித்துவிட்டு, அதன்பின் இடதுகையை வலது கையிலும் தங்களது முன்கையையின் மேல் பகுதியின் மீதும், தங்களது முகத்தின் மீதும் தடவிக்கொண்டனர் என்ற அம்மாரின் கூற்றை நீர் செவியுறவில்லையா? என அப்துல்லாவிடம் கூறினார். அதற்கு அப்துல்லாஹ்; 'உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அம்மார் ரளியல்லாஹு அன்ஹு கூற்றை போதுமாக்கிக் கொள்ளவில்லை என்பதை நீர் பார்க்கவில்லையா?' எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஷகீக் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : ஜுனுபாளியின் தயம்மும் செல்லாது என அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு, உமர் ரளியல்லாஹு அன்ஹு ஆகிய இருவரும் கருதிக் கொண்டிருந்தனர். அதற்கு மேல் அம்மாரின் கூற்றை மாத்திரம் ஆதாரமாக ஏற்க உமர் ரளியல்லாஹு அன்ஹு தயாராக இல்லாதிருந்தார்கள். அதன் பிறகு மற்ற ஏனைய ஸஹாபாக்களும் அவர்களை பின்பற்றியவர்களுக்கும் மத்தியில் பல ஹதீஸ்களின் தெளிவில் ஜுனுபாளியின் ஷதயம்மும்ஷ செல்லுபடியாகும் என்பது தெளிவானவுடன் உமர் ரளியல்லாஹு அன்ஹு, அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு ஆகிய இருவரும் ஜுனுபாளிக்கு ஷதயம்மும்ஷ ஆகும் என்ற கூற்றிற்கு திரும்பி அதை அங்கீகரித்துக் கொள்கின்றனர்.

## ஸலாமிற்கு பதில் கூறுவதற்காக ஷதயம்மும்ஷ செய்து கொள்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண்: 167

நானும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துணைவியார் மைமூனா ரளியல்லாஹு அன்ஹா அவர்களின் (மூலம்) உரிமை எழுதப்பட்ட அப்துர்ரஹ்மான் பின் யாசரும் அபூஜஹ்ம்பின் அல்ஹாரிஸ் அவர்களை முன்னோக்கி வந்து முடிவாக அவரிடத்தில் நுழைந்தோம். அப்போது அபூஜஹ்ம் ரளியல்லாஹு அன்ஹு 'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒட்டகக் கிணற்றுப்பகுதியிலிருந்து முன்னோக்கி வந்தார்கள் (அப்போது) ஒரு ஆடவர் அவர்களை சந்தித்து, அவர்களுக்கு ஸலாம்

கூறினார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுவற்றின் பால் வந்தடைந்து, தங்களது முகத்தையும். தங்களது இருகைகளையும், தடவிக்கொண்டு அதன் பிறகு (ஸலாம் கூறியவருக்கு) பதில் ஸலாம் கூறினார்கள் எனக் கூறினார்.

அறிவிப்பவர்: உமைர் மௌலா இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா.

## விசுவாசி அசுத்தமாக மாட்டார் என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 168**

அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நிச்சயமாக - மதினாவின் தெருக்களில் ஒரு தெருவில் ஜுனுபாளியாக இருந்தநிலையில் - நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சந்தித்துவிட்டு ஒளிந்து அங்கிருந்து சென்று குளித்துவிட்டனர். (இதற்கிடையில்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவரைத் தேடினார்கள். அவர் (திரும்ப) வந்த பொழுது 'அபூஹுரைராவே எங்கிருந்தீர்?' எனக்கேட்டார்கள். 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் ஜுனுபாளியாக இருக்க என்னை நீங்கள் சந்தித்தீர்கள். ஆகவே நான் குளித்து முடிக்கும் வரை உங்களோடு உட்காருவதை வெறுத்தேன்' என்றார்கள் அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். 'ஸுப்ஹானல்லாஹ் நிச்சயமாக விசுவாசி1 அசுத்தமாக மாட்டான்.'

அறிவிப்பவர்: அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு.

குறிப்பு : 1. ஜுனுபாளி, பிறரைத் தொடுவதும், பிறரோடு பேசுவதும் மார்க்கரீதியாக கூடும். அந்நிலையில் யாரோடும் கைகொடுக்கக்கூடாது, தீண்டக்கூடாது என்றோ, அல்லது பேசக்கூடாது என்றோ, அல்லது அந்நிலையுடையோர் அசுத்தப்பட்டவர் என்று கருதுவதோ இஸ்லாத்தில் இல்லை என்பதை இந்த ஹதீஸ் விளக்குகிறது. முஃமினானவர் உயிரோடிருக்கும் போதும், உயிர்பிரிந்த பின்பும், அசுத்தமாகி விடமாட்டார் என்ற ஹதீஸ் இப்னு அப்பாஸ் ரளியல்லாஹ்

அன்ஹு அவர்கள் அறிவிக்க புகாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தங்களது ஸஹீஹில் பதிவு செய்திருக்கிறார்கள்.

**கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ்வை எல்லா நேரத்திலும் நினைவு கூறுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 169**

'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வை, அவர்களது எல்லா நேரங்களிலும் நினைவு கூறக்கூடியவர்களாக இருந்தனர்' என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

**மலஜலம் கழித்தபின்பு ஒருவர் ஒளு செய்யாமல் (உணவு) உண்ணுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 170**

மலஜலம் கழித்துவிட்டு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புறப்பட்டு வந்தனர். அவர்களுக்கு உணவு கொண்டு வரப்பட்டது. (அப்பொழுது) ஒளுவைப்பற்றி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு, அருகில் இருந்தவர்கள்) நினைவூட்டினார்கள். 'நான் தொழுது கொள்ளவா விரும்புகிறேன்? ஒளுச் செய்து கொள்ள... எனக்கூறினார்கள்.
அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

**ஹைளு (மாதவிடாய்) பற்றிய நூல்**

**மஹுழ் பற்றி உங்களிடம் கேட்கிறார்கள் என்ற அல்லாஹ்வின் கூற்று பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 171**

'யூதர்கள் தங்களின் பெண்களுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவர்களுக்கு தங்களுடன் உணவு உண்ணவோ தங்களது வீடுகளில் கலந்து (தங்களோடு) சேர்ந்து குடியிருக்கவோ விடமாட்டார்கள். (வீட்டுக்கு வெளியில் தனிமையில் ஆக்கிவிடுவார்கள்). ஆகவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இது பற்றி கேட்க,

மாதவிடாய் பற்றி அவர்கள் உங்களிடம் கேட்கிறார்கள், அது அருவருக்கத்தக்கதாகும் என (நபியே) நீங்கள் கூறுங்கள். ஆகவே, மாதவிடாயின் போது அப்பெண்களை (தாம்பத்திய உறவிலிருந்து) விலக்கிக் கொள்ளுங்கள் என்ற வசனத்தை அதன் கடைசிவரை-கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய-அல்லாஹ் இறக்கி வைத்தான். (இவ்வசனத்தில் கூறப்பட்ட நிலையை தெளிவு செய்யும் நிமித்தம்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், மாதவிடாய் பெண்களோடு தாம்பத்திய உறவு நீங்கலாக எல்லாவற்றையும் செய்யுங்கள் எனக்கூறினார்கள். இக்கூற்று யூதர்களுக்கு எட்டியது (அதற்கவர்கள்) நம் காரியத்தில் நமக்கு மாற்றம் செய்வதை தவிர, அவர் எதையும் விட்டுவைக்க விரும்புவதில்லை எனக்கூறினர். உஸைத்பின் அல்ஹுளைரும், அப்பாது பின் பிஷ்ரும் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிச்சயமாக யூதர்கள் மாதவிடாய் வரும் பெண்கள் பற்றி இப்படியெல்லாம் கூறுகின்றனர். ஆகவே அப்பெண்களை நாம் தாம்பத்திய உறவு கொள்ளலாமா? என்றனர். இதைக்கேட்ட அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்விருவர் மீதும் சினங்கொண்டு விட்டார்களோ? என நாங்கள் எண்ணும் வரை அவர்களின் முகம் மாறியது (அதை உணர்ந்த) அவ்விருவரும் வெளியேறிவிட்டனர். (ஆயினும்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அன்பளிப்பாக கொடுக்கப்பட்ட பால் அவ்விருவரையும் வரவேற்றது. அவ்விருவரையும் அழைத்து வரச்சொல்லி ஆள் அனுப்பி (அவர்கள் வந்தவுடன்) அவ்விருவருக்கும் பாலை குடிக்க கொடுத்தனர். இதன்மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் இருவர் மீதும் கோபப்படவில்லை என்பதை அவ்விருவரும் தெரிந்து கொண்டனர்.

அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : பருவமடைந்த பெண்ணிற்கு மாதத்தில் ஒரு முறை குறிப்பிட்ட நாள்களில் கருப்பையிலிருந்து மர்ம உறுப்பு வழியாக வெளிப்படும் இரத்தத்திற்கு ஹைளு என்று கூறப்படுகிறது.

இது வரும் நாட்களை அறிந்து அந்த நாட்களில் பெண்கள் தொழுகை, நோன்பை விட்டு விடுவது கட்டாயக் கடமை என்பதாலும், அதிலிருந்து விடுபட்டு சுத்தமானபின் அந்நாட்களில் விடுபட்ட தொழுகைகளை நிறைவேற்றுவது கடமையில்லை என்பதையும், அந்நாட்களில் விடுபட்ட நோன்பை மீண்டும் வைக்கவேண்டும் என்பதையும் இஸ்லாம் வலியுறுத்துகிறது. அது பற்றிய சட்டங்களை தெரிந்து செயல்பட வேண்டும் என்பதே ஷஅல்லாஹ்வின் கட்டளையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையுமாகும். எனவே இது பற்றி எழுதுபவர் கூச்சப்படுவதோ, சம்மந்தப்பட்டவர்கள் படித்து தெளிவு பெற கூச்சப்படுவதோ மார்க்கத்திற்கு முரண்பட்டதாகும். ஆகவே, இத் தொடரில் பெண்கள் சம்பந்தப்பட்ட சட்ட திட்டங்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல சந்தர்பங்களில் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

மாதவிலக்கு வரும் நேரம் பெண்குலத்திற்கு மிக சங்கடமானநேரம் பலஹீனத்தின் உச்சத்தையும் மனதில் ஒரு விதமான வெறுப்பையும் பெண்கள் அனுபவிக்கும் நேரம். ஆகவே ஆடவர்கள் தங்களை அடக்கிக் கொண்டு தாம்பத்திய உறவிலிருந்து நீங்கிக் கொள்வதும் அவசியம் அந்த குறிப்பிட்ட நாட்களைத் தவிர்த்து விட்டு மற்ற ஏனைய நாட்களில் தாம்பத்திய உறவை மேற் கொள்ளலாம். எனவே குறிப்பிட்ட அந்நாட்களில் அச்செயலை கண்டிப்பாகக் தவிர்க்கவும். இதுவே குர்ஆனின் கட்டளையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிகாட்டலுமாகும்.

**பெண்கள் மாதவிலக்கு நின்றபின்பும் தாம்பத்ய உறவிற்கு பின்பும் குளிக்கும் முறை பற்றி விளக்கும் பாடம்.**

**ஹதீஸ் எண் : 173**

மாதவிலக்கு முடிந்த பின் குளிக்கும் முறை பற்றி அஸ்மாஉ ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் கேட்டனர் (அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) 'உங்களில் ஒருத்தி குளிப்பதற்காக தண்ணீரையும், இலந்தை இலையையும்

(அசுத்தத்தை நீக்க உபயோகப்படுத்தப்படும் சாதனங்களையும்) எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் மிக நன்றாக(க்கழுவி) சுத்தமாக்கிக் கொண்டு அதன் பிறகு தலையின் மீது தண்ணீரை அவள் ஊற்றி மயிர்க்காம்புகள் வரை தண்ணீர் சேரும் அளவிற்கு நன்றாக கடுமையாகத் தேய்க்க வேண்டும். பிறகு அதன்மீது (தலைமீது) தண்ணீரை ஊற்றவேண்டும். அதன்பிறகு பஞ்சு அல்லது துணி அல்லது அதற்கு உரிய சாதனம் ஏதாவது ஒன்றில் நறுமனம் கலந்து அதன்மூலம் அவள் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்' என்றார்கள். அதை வைத்து நான் எவ்வாறு சுத்தம் செய்யவேண்டும் என அவர்கள் (அஸ்மாஉ ரளியல்லாஹுஷு அன்ஹா) கேட்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஸுப்ஹானல்லாஹ்! அதன்மூலம் நீ சுத்தம் செய்து கொள்ள வேண்டும் என்றனர். ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அப்பெண்ணுக்கு கேட்கும் அளவிற்கு இலேசான சப்தத்தில் 'அதாவது இரத்தம் வந்த இடத்தை அதன்மூலம் சுத்தம் செய்து கொள்' எனக்கூறினர். (அடுத்து) தாம்பத்ய உறவிற்குப் பிறகுள்ள குளிப்பு முறை பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அப்பெண்மணி (அஸமாஉ) கேட்டனர். (அதற்கு) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தண்ணீரை எடுத்து (கழுவி) அவள் சுத்தம் செய்து கொள்ள வேண்டும் அழகாக சுத்தம் செய்து கொள்ள வேண்டும் அல்லது சுத்தத்தை எத்தி வைக்க வேண்டும். அதன்பிறகு அவளது தலையின் மீது தண்ணீர் ஊற்றி மயிர்காம்புகள் (நனையும்) வரை தண்ணீரைச் சேர்த்து வைத்து நன்றாகத் தேய்க்க வேண்டும். பிறகு அதன் (தலையின்) மீது தண்ணீரை அவள் ஊற்ற வேண்டும் எனக்கூறினர்.

'பெண்களில் அன்ஸார்களின் பெண்களே நல்லவர்கள். அவர்கள் மார்க்கத்தைக் கேட்டு தெளிவு பெறுவதிலிருந்து அவர்களது வெட்கம் அவர்களை தடுக்கவில்லை' என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர்: ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

தொழும் முஸல்லாவையோ, புடவையையோ, மாதவிடாய் வந்த நிலையிலிருக்கும் பெண் எடுக்க அனுமதியுண்டு என்பது பற்றி பாடம்.

**ஹதீஸ் எண் : 172**

ஒரு சமயம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பள்ளியில் இருந்து கொண்டு ஆயிஷாவே! (தொழுகைத்) துணியை எனக்கு எடுத்து கொடு என்று கூறியதற்கு (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா) அவர்கள் நிச்சயமாக நான் மாதவிடாய்க்காரியாக இருக்கிறேன் எனக்கூற (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உன் மாதவிலக்கு உன் கையில் இல்லை எனக்கூறினர். அப்போது அத்துணியை ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எடுத்துக்கொடுத்தனர் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

மாதவிடாய்ப் பெண்கள் ஆடவரின் தலையை வாரி அதை கழுவிவிடுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 174**

(ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா இஃதிகாபிலிருக்கும் சமயம்) நோயாளி அங்கிருக்க அவரைப் பற்றி கேட்(விசாரிக்)காமல் நான் நடந்தவளாக அன்றி தேவைக்காக வீட்டினுள் நான் நுழைகிறேன். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களது தலையை (அவர்கள் பள்ளியிலிருந்தவாறு) என்பால் நுழைப்பர். நான் (மாதவிடாயுடையவளாக இருக்க) அவர்களது தலையை நான் வாரிவிடுவேன். (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இஃதிகாப் இருப்பார்களானால் தேவையின்றி வீட்டிற்குள் நுழையமாட்டார்கள் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்.

மாதவிடாய் வந்த பெண்ணின் மடியில் சாய்ந்து கொள்வதும் (திருமறையை) ஓதுவதும் பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 175**

நான் மாதவிடாய் வந்தவளாக இருக்கும் நிலையில் என் மடிமீது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சாய்ந்தவாறு திருகுர்ஆனை ஓதக்கூடியவர்களாக இருந்தார்கள்.
அறிவிப்பவர்: ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

## ஓரே போர்வையில் மாதவிடாய் வந்த பெண்ணுடன் உறங்குவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 176**

ஒரு சமயம் நான் (உம்முசல்மா ரளியல்லாஹு அன்ஹா) அல்லாஹ்வின் தூதர் அவர்களுடன் ஓரே போர்வையினுள் படுத்திருந்தேன். அது சமயம் எனக்கு மாதவிலக்கு ஏற்ப்பட்டு விட்டது. மெதுவாக அங்கிருந்து சென்று (எழுந்து) மாதவிடாய் வரும் காலத்தில் உடுத்தும் உடையை எடுத்து (அணிந்து) கொண்டேன். (அப்போது) என்னைப்பார்த்து அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'மாதவிடாய் வந்து விட்டதா' என்றனர். நான் 'ஆம்' என்றேன். 'என்னை அழைத்தார்கள் அந்த போர்வையில் அவர்களுடன் நானும் படுத்துக் கொண்டேன்' எனக்கூறினார்கள்.
மேலும் அவர்களும் அல்லாஹ்வின் தூதர் அவர்களும் ஒரே பாத்திரத்தில் தாம்பத்ய உறவிற்குப் பிறகு குளித்தாகவும் கூறுகிறார்கள்.
அறிவிப்பவர்: உம்முஸல்மா ரளியல்லாஹு அன்ஹா
குறிப்பு: இரண்டு சம்பவம் வெவ்;வேறு நாட்களில் நடந்தது என்பதை கருத்தில் கொள்க.

## உள்ளாடைக்கு மேல் மாதவிலக்கு வந்த பெண்ணை கட்டித்தழுவது பற்றிய படாம்.

**ஹதீஸ் எண் : 177**

எங்களில் ஒருவருக்கு மாதவிடாய் ஏற்பட்டுவிட்டால் அது ஏற்பட்டதுமே உள்ளாடை அணிந்து கொள்ளுமாறு அப்பெண்ணிற்கு கட்டளையிடுவார்கள். பிறகு அப்பெண்ணை கட்டியணைத்துக் கொள்வார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது

இச்சையை அடக்கிக் கொண்டது போல் உங்களில் எவர் தனது இச்சையை அடக்கும் ஆற்றல் உடையவராக இருக்கிறார்?
அறிவிப்பவர்: ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா
குறிப்பு: கட்டியனைக்கும் போது தன்னை அடக்கிக் கொள்ள முடியாமல் அப்பெண்ணிருக்கும் நிலையில் உடல் சேர்க்கை செய்து விடக்கூடாது என்பதே இதன் கருத்து. அல்லாஹ்வின் தூதர் அவர்கள் விலக்கப்பட்ட அந்நிலையிலிருந்து தங்களை காத்துக் கொள்கின்ற சக்தியுடையவர்களாக இருந்தனர். ஆகவே (தாம்பத்திய உறவை) அச்செயலை கண்டிப்பாகக் தவிர்க்க வேண்டும் என்பது தெளிவு

**ஓரே பாத்திரத்தில் மாதவிடாய் வந்த பெண்ணோடு பருகுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 178**

நான் மாதவிடாய் வந்த நிலையில் (ஒரு பாத்திரத்தில்) பருகிவிட்டு பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அப்பாத்திரத்தைக் கொடுப்பேன். நான் எங்கு வாய் வைத்தேனா அதே இடத்தில் தங்களது வாயை வைத்து குடிப்பார்கள். எலும்புடன் ஒட்டியிருக்கும் இறைச்சியை நான் கடித்துவிட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொடுப்பேன். நான் எங்கு வாய் வைத்திருந்தேனோ அங்கேயே வாயை வைப்பார்கள் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.
அறிவிப்பவர்: ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

**முஸ்தஹாளா (பெரும்போக்கு) உள்ள பெண் பற்றியும் அவளது தொழுகை பற்றியும் உள்ள பாடம்.**

**ஹதீஸ் எண் : 179**

'அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம் உம்முஹபீபா பின்த் ஜஹஷ் ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் மார்க்கத்தீர்ப்பு கேட்டனர். நான் (வழக்கமான நாட்களைவிட) அதிக நாட்கள் மாதப்போக்கு வருபவளாக உள்ளேன் எனக்கூற, அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்; அது ஒரு நரம்பிலிருந்து புறப்பட்டுவரும் இரத்தமாகும். ஆகவே நீ குளித்து விட்டு தொழுது

கொள்' எனக்கூறினர். (எனவே) ஒவ்வொரு தொழுகைக்கும் அவர் (உம்முஹபீபா ரளியல்லாஹு அன்ஹா) குளித்துக் கொண்டு வந்தார்கள்.
அறிவிப்பவர்: ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா
'நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உம்முஹபீபாவை ஒவ்வொரு தொழுகைக்கும் குளித்துக் கொள்ள வேண்டுமென கட்டளையிட்டார்கள்' என்பதை இப்னு ஷிஹாப் கூறவில்லை. ஆயினும் (அது) உம்முஹபீபாவே செய்து கொண்ட ஒரு காரியமாகும் என லைத் பின் ஸஅது கூறுகிறார்கள்.
குறிப்பு: பெரும்போக்கு இருந்து வரும் ஒரு பெண்ணோடு தாம்பத்திய உறவு கொள்வதற்கு மார்க்கத்தில் அனுமதி உண்டு என்பதை கவனத்தில் கொள்க.

மாதவிடாய் பெண் விடுபட்ட தொழுகையை திருப்பித் தொழு மாட்டாள். நோன்பை திரும்ப நோற்க வேண்டும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 180**

ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் நான் (அறிவிப்பாளர்) மாதவிடாய் வந்தபெண் நோன்பை திரும்பி நோற்கிறாள், தொழுகையை திருப்பித் தொழுவதில்லையே! அது என்ன? எனக்கேட்டேன், (அதற்கு ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா) அவர்கள் நீ ஹரூரிய்யா1வைச் சார்ந்தவளா? எனக்கேட்டனர். நான் ஹரூரிய்யாவைச் சார்ந்தவளல்ல. ஆயினும் நான் (தெளிவுபெற) கேட்கிறேன், என்றேன். (அதற்கு) ஷமாதவிடாய் எங்களுக்கு ஏற்படும்போது (விட்ட) நோன்பை திருப்பி நோற்கவேண்டுமென நாங்கள் கட்டளையிடப்பட்டோம். தொழுகையை திருப்பித் தொழவேண்டுமென நாங்கள் கட்டளையிடப்படவில்லைஷ எனக்கூறினார்கள்.
அறிவிப்பவர்: முஆதா ரளியல்லாஹு அன்ஹா
குறிப்பு: 1 மாதவிடாயிலிருந்து சுத்தமான பிறகு, அக்காலகட்டத்தில் விடுபட்ட தொழுகைகளை மீண்டும் தொழ

வேண்டுமென கட்டயமாக்கி வந்த சுவாரிஜ்களில் ஒரு கூட்டத்தவருக்குப் பெயர்தான் ஹரூரிய்யா எனப்படும்.

## தொழுகை பற்றிய நூல் ஹதீஸ் எண் : 181 - 400

ஐந்து விஷயங்கள்1 நபி வழியாகும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 181**

நபிவழியில் உள்ளது ஐந்தாகும் அல்லது ஐந்து காரியங்கள் நபிவழியில் உள்ளவையாகும். கத்னா செய்வது, (ஆண் பெண் இருசாராரும்) ஆண்குறி, பெண்குறி இன்னும் அதைச்சுற்றி உள்ள முடியை நீக்குவது, நகங்களை வெட்டுவது அக்குளில் (உள்ள) முடியை (நீக்குவது) பிடுங்குவது, மீசையை குறைப்பது ஆகியவைகளாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

குறிப்பு: 1 ஹதீஸில் 'அல்பிதரத்' என்ற வார்த்தைக்கு இருபொருள்களை ஹதீஸ் கலை வல்லுனர்கள் கூறுகிறார்கள்.
ய. நபி வழி அதன்பொருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளாகும்.
டி. மார்க்கம் இவைகளை செயல்படுத்துவது மார்க்கமாகும் என்ற பொருளும் கூறப்படுகிறது.

பத்து (விஷயங்கள்) நபிவழியாகும் (மார்க்கமாகும்) என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண்: 182**

பத்து (விஷயங்கள்) நபிவழியாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். 1. மீசையை குறைத்தல். 2. தாடியை நிறைவாக வைத்தல். 3. பல் துலக்குதல். 4. மூக்கிற்கு தண்ணீர் செலுத்துதல். 5. நகங்களை வெட்டுதல். 6. விரல்களின் முடுச்சுகளையும் அதன் விரிவுகளையும் கழுவுதல். 7. அக்குளின் முடிகளை களைதல். 8.

ஆண், பெண் இரு சாராரும் மர்மஸ்தானத்தின் மேல் முடியை சிறைத்தல். 9. துப்புரவு செய்தல். பத்தாவதை நான் மறந்து விட்டேன். ஆயினும் அது வாய் கொப்பளித்தலாக இருக்கலாம் என முஸ்அபு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள் என ஜகரிய்யா கூறுகிறார். தண்ணீரால் சுத்தம் செய்தல் என்பது மலஜலம் கழித்தபின் சுத்தம் செய்தலாகும் என்று ஷவகீஉஷ (என்பவர்) கூறுவதாக குபைதா ரளியல்லாஹு அன்ஹு (இந்த வார்த்தையை) அதிகப்படுத்தியுள்ளார்.

**குறிப்பு:** ஷஇன்திகாஸ்ஷ என்ற வார்த்தைக்குஇ ய. தண்ணீரால் ஆண்குறிஇ பெண்குறி சிறு நீர் கழித்த பின் சுத்தம் செய்வது டி. ஒரு சில அறிவிப்புகளில் இன்திகாஸ்" என்ற வார்த்தைக்கு பகரமாக இன்திளாஹ்இ என்பது வந்துள்ளது. அதன் பொருள் 'தெளித்தல்" 'என்பதாகும்.

## பல்துலக்கும் குச்சியை இருவரில் (வயதில்) பெரியவரிடம் கொடுப்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 183**

'ஒரு பல் (துலக்கும்) குச்சியைக் கொண்டு பல் துலக்குவதாக கனவில் என்னை நான் கண்டேன். இரு ஆடவர்கள் என்னை இழுத்தனர். அதில் ஒருவர் மற்றவரைவிட பெரியவராக இருந்தார். அவ்விருவரில் சிறியவரிடம் பல் துலக்கும் குச்சியைக் கொடுத்தேன். பெரியவரிடம் கொடுக்குமாறு எனக்கு கூறப்பட்டது. பெரியவரிடம் அதை நான் கொடுத்துவிட்டேன்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்.
அறிவிப்பவர்: அப்துல்லாஹு பின் உமர் ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு:- முதலிடம் பெரியவருக்கே என்பது தெளிவாகிறது.

## மீசைகளை குறைத்துக் கொள்ளுங்கள், தாடிகளை நிறைவாக வைத்து கொள்ளுங்கள் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 184**

'முஷ்ரிகீன் (இணைவைப்பவர்)களுக்கு மாற்றம் செய்யுங்கள். (உதடுகளுக்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கும்) மீசைகளை

குறைத்துக் கொள்ளுங்கள். தாடிகளை நிறைவாக வையுங்கள்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 185**

'மீசைகயை குறைத்துக் கொள்வதற்கும், நகங்களை வெட்டிக் கொள்வதற்கும், அக்குளின் முடியை களைவதற்கும், மர்மஸ்தானத்தின் முடியை சிறைத்துக் கொள்வதற்கும், நாற்பது இரவுகளுக்கு அதிகமாக விட்டுவிடாது இருக்க எங்களுக்கு காலம் வரையறுக்கப்பட்டது என அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.
குறிப்பு: 1 நாற்பது நாட்களை தாண்டிவிடக்கூடாது என்பதால் நாற்பது நாட்கள்வரை விட்டு வைக்க வேண்டுமென்பது அதன் பொருளல்ல கடைசி எல்லை தான் அது. அதையும் தாண்டி சென்று விடக்கூடாது என்பதே பொருளாகும். அதற்கு முன்பு செய்து கொள்வதில் மார்க்கத்தில் அனுமதியுண்டு என்பதை கருத்தில் கொள்க!

## பள்ளியில் (கழிக்கப்பட்ட) சிறுநீரை கழுவுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 186**

நாங்கள் ஒரு சமயம் அல்லாஹ்வின் தூதர் அவர்களுடன் இருந்த போது கிராமத்து அரபி ஒருவர் வந்து பள்ளிவாசலில் சிறுநீர் கழிக்க துவங்கி விட்டார். அல்லாஹ்வின் தூதர் அவர்களின் தோழர்கள் 'தடுத்துக்கொள்' 'தடு;த்துக்கொள்' எனக்கூறினர். அவரைத் நிறுத்தி (தடுத்து) விடாது விட்டு விடுங்கள் என, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற அந்நபரை அவர்கள் (சிறுநீர் கழித்து முடியும் வரை) விட்டு விட்டனர். அதன்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரை அழைத்து 'இந்தப்பள்ளிகள் இது போன்ற சிறுநீர் கழிக்கவோ, அல்லது அசுத்தங்களை போடவோ உரியதல்ல. ஆயினும் அவை கண்ணியமும் மேன்மையும் பொருந்திய அல்லாஹ்வை நினைவு கூறுவதற்கும், இன்னும் திருமறையை ஓதுவதற்கும் மட்டுமே

சரியான (உரிய)தாகும். கூட்டத்திலிருந்த ஒரு மனிதரை ஒரு வாளி தண்ணீர் கொண்டு வருமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டனர். (அவர் கொண்டுவந்து) அதன்மீது பரவலாக ஊற்றினார்.

அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

## உடையில் சிறுகுழந்தையின் சிறுநீர் பட்டுவிட்டால் அதன் மீது தண்ணீர் தெளிப்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 187

உம்முகைஸ் பின்த் மிஹ்ஸன் ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் உணவருந்தாத(தாய்ப் பால் மறவாத) தனது மகனை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொண்டு வந்தனர். நிச்சயமாக அப்பெண்ணின் மகன் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மடியில் சிறுநீர் கழித்துவிட்டான். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தண்ணீர் கொண்டு வரச்செய்து தங்களது உடையின் மீது தெளித்தனர். அவர்கள் அவ்வுடையை கழுவவே இல்லை என உபைதுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்.

அறிவிப்பாளர்: உம்முகைஸ் பின்த் மிஹ்ஸன் ரளியல்லாஹு அன்ஹா

குறிப்பு: 1 உணவருந்தாத(தாய்ப் பால் மறவாத) ஆண் குழந்தையின் மூத்திரம் உடலில் பட்டுவிட்டால் தண்ணீர் தெளித்தால் மட்டுமே போதும் என்பதை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

## உடையில் விந்து பட்டுவிட்டால் (அதை) கழுவுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 188

அப்துல்லாஹ்பின் ஷிஹாப் அல்கவ்லானி ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடத்தி(வீட்டி)ல் நான் தங்கியிருந்தேன். எனது இரு உடைகளில் (தூக்கத்தில்) ஸ்கலிதமாகிவிட்டேன். (ஆகவே) அவ்விரண்டையும் தண்ணீரில் முக்கிக் கொண்டிருந்தேன். அதை

ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களின் அடிமைப்பெண் பார்த்து விட்டு, அச்சம்பவத்தை ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் தெரிவித்து விட்டாள். அதன் காரணமாக ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் என்னிடம் ஆள் அனுப்பி இருந்தார்கள் (நான் சென்றேன்) உனது இரு உடைகளையும் அவ்வாறு உம்மை செய்ய வைத்தது எது? எனக்கேட்டனர். அதற்கு, தூங்குபவர், தூக்கத்தில் எதை காண்பாரே அதை நான் கண்டேன் என்றேன். அவ்விரண்டிலும் (இரு உடையில்) எதையேனும் கண்டீரா? எனக்கேட்டனர். இல்லை என்றேன். எதையாவது நீர் பார்த்திருந்தால் அதை நீ கழுவியிருக்கலாம். நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் அவர்களின் உடையில் காய்ந்து போன அவற்றை எனது நகம் கொண்டு சுரண்டி (எடுத்துக்) கொண்டிருக்க என்னை நான் கண்டிருக்கிறேன்1 எனக்கூறினார்கள்.

குறிப்பு: 1 உறுதியாகச் செய்திருக்கிறேன் என்பது இதன் பொருளாகும்.

## மாதவிடாய் இரத்தத்தை உடையிலிருந்து கழுவுதல் பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 189**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு பெண் வந்து, எங்களில் ஒருத்திக்கு மாதவிடாய் இரத்தம் புடவையில் பட்டுவிடுகிறது. அதை அவள் எவ்வாறு (சுத்தம); செய்து கொள்ள வேண்டும்? எனக்கேட்டார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவள் அதை தேய்த்து, உதறியபின், அதன்மேல் தண்ணீர் ஊற்றி விரல்களின் நகத்தால் சுரண்டி தேய்த்து அதன்பிறகு நன்கு கழுவ வேண்டும் 'அதன்பிறகு அதில் அவள் தொழுது கொள்வாள்'1 எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர்: அஸ்மாஉ பினத் அபீபக்ரு ரளியல்லாஹு அன்ஹுமா

குறிப்பு: 1 இவ்வாறு செய்தால் உடை சுத்தமாகி விட்டது, உடல் சுத்தமாக இருப்பின் அத்துணியில் தொழுவது ஆகுமானதாகும் என்பதை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

பாங்கு ஆரம்பம் பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 190**

முஸ்லிம்கள் மதினாவை வந்தடைந்ததும் கூடிஇருந்து தொழுகைகளுக்குரிய நேரங்களை நிர்ணயம் செய்வர். (இப்போது பாங்கு கூறப்பட்டு தொழுகைக்கு அழைப்பதைப் போன்று) தொழுகைக்கு அழைப்பவர் யாரும் இல்லை. அது (தொழுகைக்கு எவ்வாறு அழைப்பது என்பது) பற்றி ஒரு நாள் அவர்கள் பேசினர். (அப்போது) அவர்களில் ஒரு சிலர் 'கிறிஸ்துவர்களின் மணியைப் போன்று ஒரு மணியை எடுத்து(ஆக்கி)க் கொள்ளுங்கள்' என்றனர். 'யூதர்களின் ஒரு கொம்பை' என அவர்களில் ஒரு சிலர் கூறினர். 'ஒரு மனிதரை நீங்கள் அனுப்பி வைக்க வேண்டாமா? அவர் தொழுகைக்காக அழைப்பார் என உமர் பின் கத்தாபு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். (இக்கருத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்று)' 'பிலாலே எழுந்து தொழுகைக்காக அழைப்பீராக,' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹு அன்ஹு

பாங்கு கூறும் முறை பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 191**

'அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு, அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு, அஷ்கது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ், அதன்பின் அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு என இருமறையும், அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரசூலுல்லாஹ் என இருமுறையும் மீண்டும் கூறிவிட்டு, ஹய்ய அலஸ்ஸலாத் இருமுறையும், ஹய்ய அலல்பலாஹ் இருமுறையும் கூறுவார். அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹ் (என்பதை இஸ்ஹாக், இப்புராஹீமின் மகனார் அதிகப்படுத்தியுள்ளார்) இந்த

பாங்கை அபூ மஹ்தூரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள்.
அறிவிப்பாளர்: அபூமஹ்தூரா ரளியல்லாஹு அன்ஹு

**பாங்கை இரட்டையாகவும் இகாமத்தை ஒருமுறையும் கூறுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 192**

பாங்கை இரட்டையாகவும் இகாமத்தை ஒற்றையாகவும் (கூறுமாறு) பிலால் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கட்டளையிடப்பட்டுள்ளார்கள் என அனஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.
இப்னு உலய்யா அறிவிப்பதாக யஹ்யா தனது ஹதீஸில், 'அதை அய்யுபுக்கு நான் அறிவித்தேன். அதற்கவர் 'இகாமத்து நீங்கலாக' எனக்கூறினார்.
இகாமத்தில் கத்காமதிஸ்ஸலாத் என்ற வார்த்தையை இருமுறை கூற வேண்டுமென்பதே இதன்பொருளாகும்.

**பாங்கு கூறுவதற்காக இருவரை நியமித்தல் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 193**

பிலால் ரளியல்லாஹு அன்ஹு, கண் தெரியாத இப்னு உம்முமக்தூம் ரளியல்லாஹு அன்ஹு ஆகிய இருவரும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பாங்கு கூறக்கூடியவர்களாக இருந்தனர் என இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

**கண்பார்வையற்றவரை பாங்கு கூற நியமனம் செய்வது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 194**

கண்பார்வையற்றவராக இருந்த இப்னு உம்முமக்தூம் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பாங்கு கூறக்கூடியவராக இருந்தனர்.
அறிவிப்பாளர்: ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

**பாங்கின் சிறப்பு பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 195**

'ஃபஜ்ரு (அதிகாலைப் பொழுது) உதயமாகிவிட்டால் (எதிரிகளைத்) தாக்க தயாராகி பாங்கோசையையும் செவியுறத் தயாராக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருப்பார்கள், பாங்கோசையைச் செவியுற்றுவிட்டால் தாக்குதலை நிறுத்திக் கொள்வார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் தாக்கத் தொடங்குவார்கள். அப்போது, அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், என ஒரு மனிதர் கூற அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செவியுற்றுவிட்டு அவர் இஸ்லாத்தில் (மார்க்கத்தில்) இருக்கிறார்' எனக்கூறினார்கள். அதன்பிறகு (அம்மனிதர்) 'அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு' எனக்கூறினார். (அதற்கு) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நரகிலிருந்து வெளியேறி விட்டாய்' எனக்கூறினார்கள். (இதைக்கேட்ட ஸஹாபாக்கள் சப்தம் வந்த திசையை) நோக்கினார்கள். அப்போது ஆடுமேய்க்கும் ஒருவர் (அங்கு) இருந்தார், என அனஸ்பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**ஹதீஸ் எண் : 196**

'தொழுகைக்காக (பாங்கு கூறி) அழைக்கப்பட்டுவிட்டால், பாங்கோசையை செவியுறாதிருக்குமளவிற்கு பின்துவாரத்தின் வழியாக பெரும் சப்தத்துடன் காற்றைவிட்டவனாக ஷைத்தான் பின்னால் செல்லுகிறான். பாங்கு கூறி முடிக்கப்பட்டுவிட்டால் (மீண்டும்) முன்னால் வருகிறான். தொழுகைக்கு இகாமத்து கூறப்பட்டு விட்டால் பின்னால் செல்லுகிறான். இகாமத்து கூறப்பட்டு முடிந்ததும் (மீண்டும் முன்னால்) வந்து, மனிதரின் மனத்திற்கும் அவருக்குமிடையில் (அவர் மனதில் பல எண்ணங்களை உண்டாக்கி) நடந்து முடிந்துவிட்ட இன்னவைகளை நினைத்துபார்: இன்னவைகளை நினைத்துபார் எனவும் அதற்கு முன்பு அவர் நினைத்து பார்க்காதவற்றையெல்லாம் நினைவு கூறுமாறு கூறுகிறான்

இறுதியாக அம்மனிதர் எத்தனை (ரக்அத்துகள்) தொழுதார் என தெரியாதவாறு ஆகிவிடுகிறார்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

### பாங்கு கூறுவோரின் சிறப்பு பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 197**

அறிவிப்பாளராகிய நான் ஷமுஆவியா பின் அபீ ஸுஃப்யான் ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இருந்தேன். (அப்போது) தொழுகைக்கு அவரை அழைப்பதற்காக பாங்கு கூறுபவர் அவரிடம் வந்தார். அப்போது முஆவியா, 'பாங்கு கூறுக்கூடியவர்கள் மறுமையில் மனிதர்களில் நீண்ட கழுத்துடையவர்களாக இருப்பர், என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றிருக்கிறேன்' எனக்கூறினார்.

### பாங்கு கூறுபவர் கூறுவதைப்போன்றே கூறுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 198**

பாங்கு கூறக்கூடியவரை (பாங்கு கூற) நீங்கள் செவியுற்றால், அவர் கூறுவது போன்றே கூறுங்கள். அதன்பிறகு என்மீது ஸலவாத்து கூறுங்கள். காரணம்: நிச்சயமாக என்மீது யார் ஒரு முறை ஸலவாத்துக் கூறுகிறாரோ அவர் மீது அல்லாஹ் அதன்நிமித்தம் பத்துமுறை ஸலவாத்துக் கூறுகிறான். அதன்பின் எனக்காக அல்லாஹ்விடம் வஸீலாவைக் கேளுங்கள். நிச்சயமாக அது சுவனத்தில் ஒரு ஸ்தானமாகும். அல்லாஹ்வின் அடியார்களில் ஒரு அடியாரைத் தவிர அது மற்றவர்களுக்குரியதல்ல. (அந்த) ஒரு அடியார் நானாக இருக்க (உறுதியாக அல்லாஹ்விடம்) நான் ஆதரவுவைக்கிறேன். ஆகவே எனக்காக அல்லாஹ்விடம் வஸீலவை யார் கேட்டாரோ? அவருக்கு பரிந்துரை கிடைக்கும். என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற செவியுற்றதாக அப்துல்லாஹ், பின் அம்ரு பின் ஆஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கிறார்கள்.

மொழிபெயர்பாளரின் குறிப்பு: மேலே உள்ள 198 வது ஹதீஸில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கட்டளைப்படி பாங்கு கூறுபவர் கூறுவதைப்போன்றே கூறவேண்டும் என்பதாகும். இது போன்றே இதையடுத்த 199 வது ஹதீஸில் 'ஹய்ய அலஸ்ஸலாத்', 'ஹய்ய அலல்பலாஹ்' என்பதை கேட்கும் பொழுது 'லாஹ்வ்ல வலாகுவத்த இல்லாபில்லாஹ்' எனக்கூறலாம். என்பதையும் விளக்கிக் கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'அஷ்ஹது அன்ன முஹம்மதர்ரசூலுல்லாஹ்' என்பதை பாங்கு கூறுபவர் கூறும் போது 'கை நகங்களை கண்களில் வைத்து முத்திக் கொள்ளவோ, அவ்வாறு செய்வதால் கண்களில் நோய் ஏற்படுவதில்லை என்றே திண்ணமாகக் கூறுவே இல்லை என்பதைக் தெரிந்து இச்செயலைக் செய்து வரும் சகோதரர்கள் கைவிட்டு விட்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டவாறு மட்டும் செய்து அந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷ∴பா அத்துக்குரியவர்களாக நாம் ஆகுவதற்கு வல்ல அல்லாஹ் நம் அனைவருக்கும் நல்லுதவி செய்வானாக! ஆமீன்.

## பாங்கு கூறக்கூடியவர் கூற்றைப்போன்றே கூறியவரின் சிறப்பு பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 199

பாங்கு கூறக்கூடியவர் 'அல்லாஹு அக்பரு1 அல்லாஹு அக்பரு எனக்கூறினால், உங்களில் ஒருவர் அல்லாஹு அக்பரு அல்லாஹு அக்பரு எனக்கூறுவார். அதன்பிறகு (பாங்கு கூறும்) அவர் அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு எனக்கூறுவார். (அதை கேட்பவர்) அஷ்கது அன்லாஇலாஹ இல்லல்லாஹு எனக்கூறுவர். அதன்பிறகு (பாங்கு கூறும்) அவர், அஷ்கது அன்ன முஹம்மதர்ரசூலுல்லாஹ் எனக்கூறுவார். (அதைக்கேட்பவர்) அஷ்கது அன்ன முஹம்மதர்ரசூலுல்லாஹ் எனக்கூறுவார். (அதன்பிறகு பாங்கு கூறுபவர்) ஹய்ய அலஸ்ஸலா(த்)தி எனக்கூறுவார். (அதைக்கேட்பவர்) லாஹவ்ல வலாகுவ்வ(த்)த

இல்லாபில்லாஹி, எனக்கூறுவார். (அதன்பிறகு பாங்கு கூறுபவர்) ஹய்ய அலல் ஃபலாஹி எனக்கூறுவார். (அதைக்கேட்பவர்) லாஹவ்ல வலாகுவ்வ(த்)த இல்லாபில்லாஹி, எனக்கூறுவார். (அதன் பிறகு பாங்கு கூறுபவர்) அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் எனக்கூறுவார். (அதைக்கேட்பவர்) அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் எனக்கூறுவார் (பாங்கு கூறுபவர்) லாயிஇலாஹ இல்லல்லாஹு எனக்கூறுவார். (அதைக்கேட்பவர்) மனதார (இதயத்திலிருந்து) லாயிலாஹ இல்லல்லாஹு எனக்கூறினால் சுவனம் புகுந்து விட்டார், என என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: உமர் பின் கத்தாபு ரளியல்லாஹு அன்ஹு
ஹதீஸ் எண் : 200

பாங்கு கூறுபவர் பாங்கு கூறி முடிக்கும் சமயத்தில், 'அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வஅன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு ரளீத்து பில்லாஹி ரப்பன், வபி முஹம்மதின் ரசூலன், வபில் இஸ்லாமி தீனன் என யார் கூறுகிறாரோ அவரது பாவம் மன்னிக்கப்பட்டு விடுகிறது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர்: ஸஅது பின் அபீவக்காஸ் ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு: அதன் பொருள்:-
வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறெவருமில்லை, அவன் தனித்தவன் (எவ்வகையிலும் எவரும்) அவனுக்கு கூட்டில்லை என்றும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவனின் அடியாரென்றும், அவனின் தூதர் என்றும் நான் சாட்சி கூறுகிறேன். அல்லாஹ்வை இரட்சகனாவும், முஹம்மதை தூதராகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும் நான் பொருந்திக் கொண்டேன்.

## தொழுகை கடமை என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 201**

(எல்லா விஷயங்களைப் பற்றியுமே கேட்டுக்கொண்டே இருக்காதீர்கள். அது பற்றி விளக்கி கூறப்பட்டால், அது உங்களுக்கு தீமையாகி விடும் என்ற அல்லாஹ்வின் கூற்றிற்கிணங்கி) எது பற்றியும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் (நாங்கள்) கேள்விகள் கேட்பதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தோம்.
கிராமப் பகுதியிலிருந்து புத்திசாலி மனிதர் ஒருவர் வந்து (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம்) கேட்பார். (அதை) நாங்கள் செவியுறுவோம் (இவ்வாறு நடந்து வருவது) எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. (நிலைமை இவ்வாறிருக்க ஒருநாள்) கிராமப்பகுதியிலிருந்து ஒரு மனிதர் வந்து முஹம்மதே! உம்மால் அனுப்பபட்ட தூதர் (நபர்) நம்மிடம் வந்து நிச்சயமாக அல்லாஹ் உம்மைத் தூதராக அனுப்பியிருக்கிறான் என்று நீர் கருதுவதாக அவர் கருதுகிறார் (கூறுகிறார்) என்றார். (அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) (ஆம்!) அவர் உண்மையே உரைத்தார் எனக்கூறினார்கள். (அடுத்து) வானத்தைப் படைத்தது யார்? என அவர் (வந்தவர்) கேட்டார். (அதற்கு) ஷஅல்லாஹ்ஷ என (பதில்) கூறினார்கள். (அடுத்து) பூமியைப் படைத்து யார்? என (வந்திருந்த) அவர் கேட்டார் (அதற்கு) ஷஅல்லாஹ்ஷ என (பதில்) கூறினார்கள். (அடுத்த) இந்த மலைகளையெல்லாம் நட்டு வைத்து அவற்றில் ஆக்க வேண்டியவைகளை எல்லாம் ஆக்கியவன் யார்? எனக்கேட்டார். (அதற்கு) ஷஅலலாஹ்ஷ என (பதில்) கூறினார்கள்.

வானத்தைப்படைத்து, பூமியைப்படைத்து, இந்த மலைகளையும் நட்டு வைத்தானே அவனின் மீது சத்தியமாக! அந்த அல்லாஹ்தான் (உம்மைத்தூதராக) அனுப்பி வைத்தானா? என (வந்திருந்த) அவர் கேட்டார். (அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆம் என்றனர்.

நம்முடைய பகல் வேலையிலும் இரவு வேலையிலும் ஐந்து தொழுகைகள் நம்மீது கடமையென உம்மால் தூது அனுபப்பட்டவர் கருதுகிறார் எனக்கூறினார். (அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம); அவர்கள் அவர் உண்மையே உரைத்தார் என்றார்கள். (அதற்கவர்) உம்மைத்தூதராக அனுப்பி வைத்தானே அவனின் மீது சத்தியமாக அல்லாஹ்தான் இதை(ச் செய்யுமாறு) கட்டளையிட்டானா? எனக்கேட்டார் (அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆம் என்றனர்.
உம்மால் அனுப்பட்ட அந்நபர் நமது பொருள்களில் ஜகாத் (கடமை) உண்டு எனக்கருதுகிறார் எனக்கூறினார். அவர் உண்மையே உரைத்தார் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அதற்கவர்) உம்மைத் தூதுவராக அனுப்பி வைத்தானே அவன் மீது சத்தியமாக அல்லாஹ்தான் இதைக் கொண்டு கட்டளையிட்டானா? (எனக்)கேட்டார். (அதற்கு) ஷஆம்ஷ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
உம்மால் அனுப்பப்பட்டவர் பைத்துல்லாஹ்வை (அல்லாஹ்வின் இல்லத்தை) அதன்பால் பாதையால் (பயணம் செய்ய) சக்தி பெற்றவர்கள் மீது ஹஜ் செய்யவேண்டுமென்பது கடமையெனக் கருதுகிறார் என்றார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உண்மையே உரைத்தார் என்றார்கள். பிறகு (வந்தவர்) திரும்பிச் செல்லத் தொடங்கி, உண்மையைக் கொண்டு உம்மை யார் அனுப்பி வைத்தானோ அவனின் மீது சத்தியமாக! அவைகளை விடவும் (எதையும்) நான் அதிகப்படுத்த மாட்டேன். அவற்றிலிருந்து எதையும் குறைக்கவும் மாட்டேன் எனக்கூறிச் சென்றார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர் (கூற்றில்) உண்மையாளராக இருப்பாரேயானால் நிச்சயமாக சுவனம் புகுந்து விட்டார் எனக்கூறினார்கள்.
அறிவிப்பவர் : அனஸ்பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகை இரண்டு இரண்டு ரக்அத்தாக கடமையாக்கப்பட்டது என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 202**

நிச்சயமாக தொழுகை முதலில் இரண்டு ரக்அத்தாகவே கடமையாக்கப்பட்டது. (அதை) பிரயாணத் தொழுகையாக (பிறகு நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. (பிரயாணத்தில் இல்லாத சமயம்) ஊரில் இருக்கும்போதுள்ள தொழுகை (நான்காக) நிறைவு செய்யப்பட்டது என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களின் காரியமென்ன அவர்கள் பயணத்தில் தொழுகையை நிறைவு செய்கின்றனரே (அது ஏன்?) என நான் உர்வாவிடம் கேட்டேன். (அதற்கவர்) உதுமான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கருத்துக் கொண்டது போன்றே (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களும்) கருத்துக்1 கொண்டுள்ளனர் எனக்கூறினார்.

குறிப்பு : 1 ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா பயணத்தில் நிறைவாகவும் தொழுகலாம், குறைத்தும் தொழுகலாம் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். ஆகவே நிறைவாகத் தொழுதுள்ளனர்.

## ஐந்து தொழுகைகள் அவைகளுக்கு மத்தியில் ஏற்படும் (சிறிய குற்றங்களுக்குப்) பரிகாரமாகும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 203**

(ஒரு நாளின்) ஐந்து தொழுகைகள், ஒரு ஜும்ஆ (தொழுகை)யிலிருந்து (அடுத்த) ஜும்ஆவரை இவைகளுக்கு மத்தியில் ஏற்படும் (சிறிய) குற்றங்களுக்குப் பரிகாரமாகும். பெரும்பாவங்களில்1 ஒருவன் மூழ்கி விடாதவரை ஒரு ரமளானிலிருந்து அடுத்த ரமளான்வரை பெரும்பாவங்கள் தவிர்க்கப்பட்டால் அவைகளுக்கு மத்தியில் (ஏற்படும் சிறிய) பாவங்களுக்கு (அது) பரிகாரமாகும் என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு: 1 பெரும்பாவங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள ஹதீஸ் 46, 47, ஆகிய இரு ஹதீஸ்களில் காண்க

தொழுகையை விடுவது இறை நிராகரிப்பாகும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 204**

(ஒரு) மனிதருக்கும் ஷிர்க்கிற்கும், (ஒரு மனிதருக்கும்) குப்ருக்குமிடையில் வித்தியாசத்தைக் காட்டுவது தொழுகையைவிடுவதாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன் என ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு

**1எல்லா நேரங்கள் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 205**

ளுஹரின் நேரம் சூரியன் உச்சியிலிருந்து சரிந்ததுமுதல் ஒரு மனிதரின் நிழல் (சரியாக) அவர் உயரத்தைப்; (போன்று) ஆகின்ற (நேரம்) வரையிலாகும். மேலும் அஸர் நேரம் வராதவரையிலாகும்.

அஸரின் நேரம் சூரியன் மஞ்சள் மாறாதவரையிலாகும்.

மஹ்ரிப் தொழுகையின் நேரம் செம்மேகம் மறையாத வரையிலாகும்.

ஃபஜ்ரு தொழுகையின் நேரம், ஃபஜ்ரு உதயமானதிலிருந்து சூரியன் உதிக்காத வரையிலாகும். சூரியன் உதயமாகிவிட்டால் தொழுவதை நிறுத்திக்கொள் ஏனெனில் அது நிச்சயமாக ஷைத்தானின் இரண்டு கொம்புகளுக்கு மத்தியில் உதயமாகின்றது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ், பின் அம்ரு ரளியல்லாஹு அன்ஹுமா

**ஹதீஸ் எண் : 206**

நிச்சயமாக தொழுகைகளின் நேரங்கள் பற்றிக் கேட்கக்கூடியவர் ஒருவர் அவர் (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்)களிடம் வந்து கேட்டார். அவருக்கு எந்த பதிலையும் அவர்கள் கூறவில்லை. புரைதா ரளியல்லாஹு

அன்ஹு அவர்களின் அறிவிப்பில் இரண்டு நாள் எங்களோடு தொழுவீராக! எனக்கூறினார்கள் என பதிவாகியுள்ளது. எந்த பதிலையும் கூறவில்லை என்பதற்கு நேரங்கள் பற்றி செயல் ரூபத்தில் கற்றுத்தரவேண்டுமென்பதால் விளக்கமாக கூறவில்லை என்று விளங்கிக் கொள்ளவேண்டும்) பிலால்1 அவர்களுக்கு (பாங்கு இகாமத்துக் கூற) கட்டளையிட்டார்கள் (அவ்வாறு அவர் செய்தபிறகு) ஃபஜ்ரு உதயமானதும் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம); அவர்கள் ஃபஜ்ரு தொழுகையை நிறைவேற்றிவிட்டார்கள். (அப்போது) சூரியன் உச்சியிலிருந்து சரிந்ததும் லுஹரை (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நிறைவேற்றினார்கள். பகல் பொழுது பாதியை அடைந்து விட்டது எனக்கூறக்கூடியவர் கூறினார். அவ்வாறு கூறியவர் அவர்களில் மிகத் தெரிந்தவராக இருந்தார். அதன்பிறகு அவரு(பிலாலு)க்கு (பாங்கு இகாமத்துக் கூற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கட்டளையிட்டு விட்டு சூரியன் உயரத்தில் இருந்த போது அஸரை நிறைவேற்றினார்கள். அதன்பிறகு அவரு(பிலாலு)க்கு (பாங்கு இகாமத்துக் கூற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கட்டளையிட்டார்கள். சூரியன் மறைந்த போது மக்ரிபை (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)அவர்கள் நிறைவேற்றினார்கள். அதன்பிறகு (பாங்கு இகாமத்துக் கூறுமாறு) பிலாலுக்கு கட்டளையிட்டார்கள். செம்மேகம் மறைந்த சமயத்தில் இஷாவை நிறைவேற்றினார்கள். அடுத்தநாள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ;ரு தொழுகையை முடித்துக்கொண்டபோது கூறக்கூடியவர், சூரியன் உதயமாகிவிட்டது  என்று அல்லது சூரியன் உதயமாகப்போகிறது எனக்கூறினார். அதன்பிறகு ளுஹரை நேற்று அஸர் தொழுத   நேரம் அளவிற்கு சமீபமாக பிற்படுத்தினார் அதை அவர்கள் முடித்துக்கொண்ட போது, கூறக்கூடியவர் சூரியன் சிவந்துவிட்டது எனக்கூறினார். அதன்பிறகு மக்ரிபை செம்மேகம் மறையும்வரை பிற்படுத்தினார்கள். அதன்பிறகு இஷாவை இரவின் மூன்று

பகுதிகளில் முதல்பகுதி அளவிற்கு பிற்படுத்தினார்கள். அதன்பிறகு காலைப்பொழுதை அடைந்துவிட்டனர். அப்போது (நேரங்கள் பற்றி) கேட்டு வந்தவரை அழைத்து நேரம் இந்த இரண்டு நேரங்களுக்கு மத்தியில்தான் என்றார்கள்.
அறிவிப்பவர் : அபூமூஸா அல் அஷ்அரீ ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு : 1 “பிலால் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்” என்ற வார்த்தை முஸ்லீமில் பதிவாகவில்லை. புரைதா ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பில் ஒவ்வொரு நேரத்திற்கு பாங்கு இகாமத்தைக் கூறுமாறு கட்டளையிட்டார்கள் என்பது பதிவாகியுள்ளது.

### ஃபஜ்ரு தொழுகையை இருட்டில் தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 207**

ஹஜ்ஜாஜ் மதினாவிற்கு முன்னோக்கி வந்தபோது, ஜாபிர் பின் அப்துல்லாஹு ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் நாங்கள் கேட்டோம். அதற்கவர் ளுஹரை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடும் வெயிலில் தொழுதனர். அஸரை சூரியன் சுத்தமாக இருக்கும் போது தொழுதனர். மக்ரிபை சூரியன் மறைந்ததும் தொழுதனர். இஷாவை (இஷாத் தொழுகையை) சில சமயங்களில் பிற்படுத்தித் தொழுவார்கள், சில சமயம் துரிதமாகத் தொழுதுவிடுவார்கள். (அதாவது) அவர்(ஜனங்)களெல்லாம் ஒன்று கூடிவிட்டால் துரிதமாகத் தொழுதுவிடுவார்கள். அவர்களை பிந்திவிடக்கண்டால் பிற்படுத்துவார்கள். ஸுப்ஹுத் தொழுகையை அவர்கள் (அல்லது) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அத்தொழுகையை இருட்டில் தொழக்கூடியவர்களாக இருந்தனர் என ஜாபிர், பின் அப்துல்லா ரளியல்லாஹு அன்ஹுமா கூறினார்கள்.
அறிவிப்பவர் : முஹம்மது பின் அம்ரு ரளியல்லாஹு அன்ஹு

### ஸுப்ஹு, அஸர் தொழுகையை பேணிக்கொள்வது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 208**

சூரியன் உதயத்திற்கு முன் (ஃபஜ்ரையும்) அது (மாலையில்) அடைவதற்குமுன் அஸரையும் தொழுதவர் நரகம் புகமாட்டார் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன் என ருஜபாவின் தந்தை கூறுகிறார். பஸரா வாசிகளில் ஒரு மனிதர் அவரிடம் இதை நீர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து தான் கேட்டீரா? என அவரிடம் கேட்டார் அதற்கு ஆம்! என்றார் (அவ்வாறென்றால்) நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து அதைச் செவியுற்றேன். என் காதுகள் கேட்டன. எனது மனம் அதை பேணிப்பாதுகாத்து கொண்டது என நான் சாட்சி கூறுகிறேன் என (அம்) மனிதர் கூறினார்.

அறிவிப்பவர் : அபூபக்கர் பின் உமாராபின் ருஜபா ரளியல்லாஹு அன்ஹு என்பவர் தமது தந்தை கூறியதாக அறிவிக்கிறார்.

**ஹதீஸ் எண் : 209**

அஸரையும் ஃபஜ்ரையும் யார் தொழுதாரோ? அவர் சுவனம் புகுந்து விட்டார் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸை அபூபக்கர் பின் அபூமூஸா அல் அஷ் அரி ரளியல்லாஹு அன்ஹு தனது தந்தை அறிவித்ததாக அறிவிக்கிறார்.

## சூரிய உதயத்தின்போது அது மறையும் போதும் தொழுவது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 210**

அஸருக்குப் பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு ரக்அத் தொழுவதை விடவே இல்லை. சூரிய உதயத்தின் போதும் அது மறையும்போதும் உங்களது தொழுகைகளை தொழாதீர்கள். அது மறைந்தவுடனேயே தொழுங்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்.

## முதல் நேரத்திலேயே ளுஹர் தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 211**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நாங்கள் வந்து கடுமையாக கரித்துவிடும் சூட்டைப்பற்றி முறையிட்டோம். 1எங்களின் முறையீட்டை தொடர்ந்து செய்துவந்தோம்.
அபூஇஸ்ஹாக்கிடம் ளுஹர் தொழுகை பற்றியா? என ஜுஹைர் அவர்கள் கேட்டதாக கூறுகிறார். அதற்கு அவர் ஆம் என்றதும் ஷஅதை துரிதப்படுத்தி தொழுவதிலேயா?ஷ என ஜுஹைர் கேட்டதற்கு ஷஆம்ஷ என்றனர்.
அறிவிப்பவர் : கப்பாப் ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு : 1. ளுஹரை கூடுதலாக பிற்படுத்தக் கூறி முறையீடு செய்யப்பட்டது அதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம); அவர்கள் மறுத்துவிட்டனர் ஆயினும் நியாயமான அளவு பிற்படுத்துவதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுமதித்து உள்ளார்கள்.

## கடுமையான சூட்டின்போது தொழுகையை குளிரவைத்தல் (பிற்படுத்துதல்) என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 212**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முஅத்தின் ளுஹருக்கு பாங்கு கூறிவிடுவார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குளிர வைப்பீராக! குளிரவைப்பீராக!! அல்லது எதிர்பார்ப்பீராக!! எனக்கூறுவார்கள். மேலும் நிச்சயமாக சூட்டின் கடுமை நரகத்தின் கொதிப்பு பரவி அதன்மூலம் ஏற்படும் ஜுவாலையாகும் எனக்கூறினார்கள். சூடு கடுமையாகிவிட்டால் தொழுகையை குளிரவையுங்கள் (பிற்படுத்துங்கள்) எனக்கூறுவார்கள். நாங்கள் தரையிலிருந்து கொஞ்சம் உயரமாகக் கிடக்கும் குப்பைமேடுகளுக்கும் (சுவருகளுக்கும்) நிழலை கானும்வரை என அபூதர்ரு ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்.
அறிவிப்பவர் : அபூதர்ரு ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்ததற்கு பிறகு சற்றுநேரம் கழித்தால்தான் நிழல் விழும். தரையிலிருந்து உயர்ந்து குவிக்கப்பட்டிருக்கும் குப்பைமேடுகளுக்கும் சிறு குன்றுகளுக்கும் நிழல் விழும் ஆகவே கடும் சூட்டை தவிர்க்க நியாயமான அளவு பிற்படுத்தி தொழுதுள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

## அஸர் தொழுகையின் முதல் நேரம் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 213

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அஸர் தொழுகையை சூரியன் உயர்ந்த நிலையில் உயிரோடு[1] இருக்க தொழுதார்கள். சூரியன் உயரத்திலிருக் க (அந்நேரத்திலிருந்து பொழுது அடைவதற்குள்) அவாலிக்கு[2] ஒரு மனிதர் (புறப்பட்டுச்) சென்று அவாலியை அடைந்தும் விடுவார் என அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.[3]

குறிப்பு :

1 சூரியன் உயிரோடு இருக்க என்பதற்கு மஞ்சள் கலக்காத சுத்தமான வெண்மை நிறத்தில் இருந்தது பொருளாகும்.

2 அவாலீ-மதீனா முனவ்வராவில் மஸ்ஜிதுந் நபவீயிலிருந்து அதன் இடப்புறம் இருக்கும் ஜன்னத்துல் பக்கீஉவின் இப்போதுள்ள நுழைவுவாயிலிருந்து தெற்கு பகுதியில் இருந்து தொடங்கி இரண்டு மைல் தொலை தூரம் சிலரின் கருத்துப்படி மூன்று மைல் தொலைதூரம் வேறுசிலர் கருத்துப்படி எட்டு மைல் தூரம் என்கின்றனர்.

3 அஸரை முதல் நேரத்திலேயே, அதாவது ஒரு பொருளின் நிழல் அது அளவிற்கு இருந்தபோது தொழுதுள்ளனர் என்பது தெளிவாகிறது.

### ஹதீஸ் எண் : 214

அல் அலாஉ பின் அப்துர் ரஹ்மான் ரளியல்லாஹு அன்ஹு ளுஹர் தொழுகையை முடித்துக் கொண்டு (பஸரா நாட்டிலுள்ள) அனஸ்பின் மாலிக் என்பவரின் வீட்டில் நுழைந்தார். அவரது வீடு பள்ளியை அடுத்து இருந்தது. நாங்கள் அவரது வீட்டினுள் நுழைந்தபோது அஸர் தொழுகையைத் தொழுதுவிட்டிர்களா ? என

(அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு) கேட்டார். இப்போது தான் நாங்கள் ளுஹரைத் தொழுதுவிட்டு திரும்பி வருகிறோம் என அவரிடம் கூறினோம். (எனினும்) அவர் அஸரைத் தொழுங்கள் என்றார். நாங்கள் எழுந்து அஸரை தொழுதுவிட்டோம் அஸர் தொழுகையை நாங்கள் முடித்துக் கொண்ட போது அது (அஸர் தொழுகையை பிற்படுத்துவது) நயவஞ்சகனின் தொழுகையாகும். (அவன்) அமர்ந்து சூரியனைக் கண்காணித்துக் கொண்டிருப்பான் ஷைத்தானின் இரு கொம்புகளுக்கு மத்தியில் அது இருக்கும்போது எழுந்து அதை நான்கு முறை (கோழி கொத்துவது போன்று) கொத்துவான். அதில் அல்லாஹ்வை குறைவாக அல்லாது நினைவுகூறமாட்டான்1 என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறக்கூடியவர்களாக (இருந்தனர் அதை) நான் செவியுற்றேன் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அல் அலாஉ பின் அப்துர்ரஹ்மான் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 நேரக்குறைவின் நிமித்தம் அவசர அவசரமாக குறைவாகவே நினைவு கூறுகிறான்.

அஸர் தொழுகையை பேணித் தொழுவதும் அதன்பிறகு தொழுவதைத் தடுத்துக் கொள்வதும் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 215

ஷஅல் முகம்மஸ்ஷ என்ற இடத்தில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவார்கள் எங்களுக்கு அஸர் தொழுகையை நடத்தினார்கள் (நடத்தி விட்டு) நிச்சயமாக இத் தொழுகையை உங்களுக்கு முன் சென்றவர்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டது. (ஆனால்) அவர்கள் அதை பாழாக்கிவிட்டனர் (எனவே) யார் அதை பேணித் தொழுகிறாரோ அவருக்கு அவரது கூலி இரு முறை உண்டு. அதற்குப்பிறகு நட்சத்திரம் உதயமாகும் வரை எந்தத் தொழுகையும் இல்லை என அல்லாஹ்வின் தூதர்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவார்கள் கூறியதாக அபூபஸாரா அல் கிஃபாரி ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

## அஸர் தொழுகை யாருக்கு தப்பிவிட்டதோ? அவரை கடினம் காட்டுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 216

அஸர் (தொழுகை) யாருக்கு தப்பிவிட்டதோ அவர் தனது குடும்பம் தனது பொருள்கள் ஆகியவற்றை அவரிலிருந்து பிடுங்கப்பட்டவரை (இழந்தவரை)ப் போன்றவராவார் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவார்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹு அன்ஹுமா

## நடுத்தொழுகை பற்றி வந்துள்ளது என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 217

சூரியன் சிவப்பு நிறத்தை அடையும்வரை அல்லது மஞ்சள் நிறத்தை அடையும் வரை தொழுகையை தொழுவதைவிட்டும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இணைவைக்க கூடியவர்கள் தடுத்துவிட்டனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

நடுத் தொழுகையை அஸருத் தொழுகையை தொழுவதை விட்டும் அவர்கள் (அகழ் வெட்டுவதில்) நம்மை ஈடுபடச் செய்து விட்டனர். அவர்களது வயிறுகளையும் அவர்களது கப்ருகளையும் அல்லாஹ் நெருப்பால் நிரப்புவானாக! என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவார்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு

## அஸருக்குப் பிறகும், ஸுப்ஹுக்குப் பிறகும் தொழுவது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 218

அஸருக்குப் பிறகு சூரியன் மறையும் வரை தொழுவதையும், ஸுப்ஹுக்குப் பிறகு சூரியன் உதயமாகும் வரை தொழுவதையும்

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடை செய்துள்ளனர் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மூன்று நேரங்கள் அவற்றில் தொழப்படவோ, கப்ருகளில் அடக்கப்படவோ கூடாது என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 219**

மூன்று நேரங்களில் நாங்கள் தொழுவதையும் அல்லது அந்நேரங்களில் எங்களில் மரணித்தவர்களை அடக்குவதையும் தடுக்ககூடியவர்களாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவார்கள் இருந்தார்கள்.
அந்நேரங்களாவன சூரியன் நன்கு உதயமாகி உயரும்வரையும், மதிய நேரம் வந்து சூரியன் உச்சியிலிருந்து சாயும்வரையும், சூரியன் மறைவதற்காக சாய்ந்து அது (நன்கு) மறையும்வரையும் என நான் செவியுற்றேன் என (அறிவிப்பாளர்) கூறுகிறார்.
அறிவிப்பவர் : உலைய்யு பின் ரபாஹ் ரளியல்லாஹு அன்ஹு

அஸருக்குப் பின் இரண்டு ரக்அத் தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 220**

அஸருக்குப்பின் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுது வந்த இரண்டு ரக்அத்துகள் பற்றி அபூஸலமா, ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் கேட்டார்கள் (அதற்கவர்கள்)
ஷஷஅவ்விரண்டு ரக் அத்துகளையும் அஸருக்கு முன்பு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழக்கூடியவர்களாக இருந்தார்கள். அதன்பிறகு நிச்சயமாக ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்விரு தொழுகைகளை தொழுவதைவிட்டும் வேறு காரியத்தில் ஈடுபடுத்தப்பட்டார்கள். அல்லது அவ்விரு ரக் அத்துகளை தொழுவதை மறந்து விட்டார்கள். ஆகவே தான் அதை அஸருக்குப்பிறகு தொழுதார்கள். அதன்பிறகு அதை நிலைப்படுத்தி விட்டார்கள். அவர்கள் எந்தத் தொழுகையை தொழுதாலும் அதை நிலைப்படுத்திவிடுவார்கள். அதை

நிரந்தரமாகச் செய்வார்கள் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கருத்து கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஸலமா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : அஸருக்குப் பிறகு இரண்டு ரக்அத்து தொழுவது பற்றிய விளக்கம்:

அஸருக்கு முன் தொழுக வேண்டிய இரண்டு ரக்அத்தை வேலையின் காரணமாக அஸருக்குப்பிறகு தொழுதனர். அதன் பிறகு அதை நிரந்தரமாகச் செய்தனர் என 220வது ஹதீஸில் ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களின் அறிவிப்பிற்கொப்ப ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்துவந்தார்கள் என்பது சரியானதே. ஆனால் அது அவர்களுக்கு உரிய செயலாகும் அது பற்றி செய்யுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹு வஸல்லம் அவர்கள் கூறாததால் மற்றவர்கள் செய்வதைத் தவிர்க்கலாம் என்பது ஒரு கருத்து. புகாரி, முஸ்லிமில் பதிவாகியுள்ள ஷஷசூரியன் மறையும் வரை எந்தத் தொழுகையும் இல்லைஷஷ என்ற ஹதீஸ் சரியானது. இதன் கருத்து பொதுவானதாகும். ஆதாவது அஸருக்குப்பிறகு தொழுகையே இல்லை என்பதாகும். இப்பொதுவான சட்டத்திலிருந்து ஒரு தனிப்பட்ட சட்டம் தான் அஸருக்குப்பிறகு இரண்டு ரக்அத்து நஃபிலை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுது வந்தனர். அதற்குரிய ஆதாரத்தைப் பார்ப்போம்

220வது ஹதீஸில் அவ்வாறு அஸருக்குப் பிறகு தொழுத இரண்டு ரக்அத்தை நேமமாக ஆக்கிக்கொண்டார்கள் என்பது புகாரி, முஸ்லீமின் அறிவிப்பாளர்களால் முஸ்னது இமாம் அஹ்மதுவின் 130,1 இலக்கமிட்டு பதிவாகியுள்ள ஹதீஸ் ஷஷஅஸருக்குப்பிறகு தொழாதீர்கள். சூரியன் உயரமாக இருக்கும் நிலையில் தொழுதாலே தவிரஷஷ அதாவது சூரியன் உயரத்திலிருக்கும் பொழுது தொழுகலாம் என்பது தெளிவாகிறது. இதன் அடிப்படையில் அலி ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அஸருக்குப் பிறகு தொழுதுவந்தார்கள் என்பதும் பதிவாகியுள்ளது. ஆகவே அஸருக்குப்பிறகு இரண்டு ரக்அத்து நஃபில் தொழுவது

சூரியன் உயர்ந்த நிலையிலிருக்க கூடும் அது விலக்கப்பட்டதல்ல என்பதை கவனத்தில் கொள்க.

### மக்ரிபுக்கு பிறகு, விடுபட்ட அஸர் தொழுகையை நிறைவேற்றுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 221**

நிச்சயமாக உமர் பின் கத்தாபு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அகழ் (தோண்டிய) நாளில் குறைஷிக் காபிர்களை ஏசக் கூடியவர்களாக இருந்தார்கள். ஷஅல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! சூரியன் மறையும் நிலையை (மக்ரிபு நெருங்கிவிட்டால்) அடைந்து விடும்வரை அஸர் தொழுகையை நான் தொழமுடியவில்லைஷ என்றார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷஅல்லாஹ்வின் மீது சத்தியமாக! நானும் அத்தொழுகையை தொழவில்லைஷ என்றார்கள். அதன்பின்னர் புத்ஹான் என்ற ஓடையின் பால் நாங்கள் இறங்கினோம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒளுச்செய்தார்கள் நாங்களும் ஒளுச்செய்தோம். சூரியன் மறைந்த பிறகு அஸர்தொழுகையை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுதார்கள். அதன்பிறகு மக்ரிபு தொழுகையை தொழுதனர்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு

### சூரியன் மறைந்த பிறகு மக்ரிபு (தொழுகை)க்கு முன்பு இரண்டு ரக்அத் தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 222**

நான் அனஸ் பின் மாலிக் அவர்களிடம் அஸருக்குப் பிறகு ந∴பில் தொழுவது பற்றிக் கேட்டேன். அதற்கவர் ஷஅஸருக்குப்பிறகுஷ தொழுகையைத் தொழுபவரின் கைகளில், உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அடிக்கக்கூடியவர்களாக இருந்தனர்.

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் சூரியன் மறைந்த பிறகு ஷம்ஃக்ரிபுஷ தொழுகைக்கு முன்பு இரண்டு ரக்அத்துகளைத் தொழக் கூடியவர்களாக இருந்தோம் எனக்கூறினார் (அப்போது) அவ்விரண்டு ரக்அத்துகளையும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழக்கூடியவர்களாக இருந்தார்களா? என நான் கேட்டேன் (அதற்கவர்) அவ்விரு ரக்அத்துகளையும் நாங்கள் தொழக்கூடியவர்களாக இருந்ததை அவர்கள் பார்த்துகொண்டிருந்தனர். எங்களுக்கு கட்டளையிடவுமில்லை எங்களைத் தடுக்கவும் இல்லை எனக்கூறினார்.

அறிவிப்பவர் : முக்தார் பின் ஃபுல்ஃபுல் ரளியல்லாஹு அன்ஹு

**மக்ரிபின் நேரம், சூரியன் மறைந்தது முதலாகும் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 223**

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சூரியன் அஸ்தமித்து திரைக்குள் மறைந்து விடுமானால் மக்ரிபைத் தொழக்கூடியவர்களாக இருந்தார்கள் என ஸலமாபின் அல் அக்வஉ ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்.

**இஷாவின் நேரமும் அதை பிற்படுத்துவதும் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 224**

இரவின் பெரும்பகுதி கடந்துவிடும் வரையும் பள்ளியிலிருந்தவர்கள் உறங்கிடும் வரையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (இஷாத் தொழுகைக்குப்) பிந்திவிட்டார்கள் அதன்பிறகு வெளியில் வந்து தொழுதார்கள் (தொழுது விட்டு) நான் என் உம்மத்தவர்களுக்கு கஷ்டம் கொடுக்கவில்லையாயின் நிச்சயமாக இதுதான் அதற்குரிய நேரமாகும் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

**இஷாத் தொழுகையின் பெயர் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 225**

கிராமத்து அரபிகள் உங்களது இஸாத் தொழுகையின் பெயர் விஷயத்தில் உங்களை மிகைத்துவிட வேண்டாம். நிச்சயமாக அது அல்லாஹ்றவின் வேதத்திலும் (அதன் பெயர்) இஷாதான். நிச்சயமாக அத்தொழுகை ஒட்டகங்களின் பால் கறக்கின்ற கடும் இருளான நேரம்வரை பிந்திவிடுகிறது எனக்கூறினார்.
அறிவிப்பவர் : அப்துல்லாஹ்ற பின் உமர் ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு : கிராமத்து அரபிகள் இஷாவை ஷஅதமாஷ (அதாவது கடும் இருட்டு) என்ற பெயரில் கூறிவருகின்றனர். நீங்கள் அவ்வாறு கூறாமல் குர்ஆனில் அதன்பெயர் ஷஇஷாஷ என கூறப்பட்டிருப்பது போன்று ஷஇஷாஷ என்றே கூறுங்கள் என்பதே இதன் கருத்து.

**தொழுகையை, அதன் நேரத்தை விட்டும் பிற்படுத்தவது விலக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 226**

உமது தலைவர்(அமீர்)கள் தொழுகையை அதன் நேரத்தை விட்டும் பிற்படுத்துவார்களேயானால் அல்லது முழுமையாக தொழுகையை மரணிக்கச் செய்து விடுவார்களேயானால் நீர் என்ன செய்வீர் என அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். (அந்நிலை ஏற்பட்டால்) நான் (அபூதர்ரு) என்ன செய்யவேண்டுமென எனக்கு கட்டளையிடுகிறீர்கள்? எனக்கேட்டேன். (அதற்கு) தொழுகையை அதற்குரிய நேரத்தில் நீர் நிறைவேற்றிவிடுவீராக! (அதன்பிறகு) அத்தொழுகையை அவர்கள் தொழ நீர் அவர்களை எத்திக்(பெற்று) கொண்டால் நீரும் தொழுவீராக! நிச்சயமாக அவர்களோடு தொழுத தொழுகை உனக்கு நஃபிலாகிவிடும் என்றனர் என அபூதர்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

**தொழுகையை அதன் நேரத்தில் தொழுவதே மிகச் சிறந்த செயலாகும் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 227**

அப்துல்லாஹ்ற பின் மஸ்ஊது ரளியல்லாஹ்ற அன்ஹு அவர்கள்: நான் அல்லாஹ்றவின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்களிடம் செயல்களில் மிகச் சிறந்தது எது? எனக் கேட்டேன். அதற்கு, தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுவது என்றனர். பிறகு (சிறந்தது) எது? எனக் கேட்டேன். அதற்கு பெற்றோர்களுக்கு நன்றியுடன் நடந்து கொள்வதாகும் என்றனர். பிறகு (சிறந்தது) எது? எனக் கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் செய்வதாகும் என்றனர். மேலும் அதைவிட அவர்களுக்கு சிரமமாக இருக்கும் என்பதால் நான் அதைவிட அதிகமாக கேட்கவில்லை எனக் கூறுகிறார்கள்.
அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு

**தொழுகையில் யார் ஒரு ரக்அத்தை எத்திக் கொண்டாரோ? அவர் தொழுகையை எத்திக் கொண்டார் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 228**

தொழுகையில் ஒரு ரக்அத்தை பெற்றுக்கொண்டவர் நிச்சயமாக அத்தொழுகையை (முழுவதுமாக) பெற்றுக்கொண்டார் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறாாகள்.

**ஒரு தொழுகையை ஒருவர் தொழுகாமல் தூங்கிவிட்டால் அல்லது அதை மறந்துவிட்டால் (பின்) அதை அவர் நினைத்துவிட்டால் அவர் (தாமதமின்றி) தொழுதுவிடவும் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 229**

எங்களுக்கு முன்னால் நின்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஒரு பிரயாணத்தில்) பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது நிச்சயமாக நீங்கள் உங்களது மாலைப்பொழுதிலும், இரவிலும் பிரயாணம் செய்து உயர்வான அல்லாஹ்வின் நாட்டம் இருப்பின் நாளைய தினம் தண்ணீர் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்வீர்கள் எனக் கூறினார்கள். இதைக் கேட்ட ஜனங்கள் ஒருவரையொருவர் பார்க்காது தொடர்ந்து நடக்க தொடங்கினர்.
ஒரு சமயத்தில் பாதி இரவு வரை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (வாகனத்தின்

மீதிருந்தவாறே) சென்றுகொண்டிருந்தனர். நான் அவர்களின் விலாப்பக்கத்தில் இருந்தேன் எனக் கதாதா ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாகனத்தின் மீதிருந்தவாறு உறங்கி தங்களின் வாகனத்திலிருந்து சாயத்தொடங்கினர். அப்போது நான் அவர்கள் பால் வந்து, அவர்களின் தூக்கத்தை கலைத்துவிடாமல் தாங்கி பிடித்தேன், முடிவில் அவர்கள் வாகனத்தின் மீது சரியாக அமர்ந்துவிட்டனர். இரவின் பெரும்பகுதி கடந்துவிடும்வரை வாகனத்தின் மீது அமர்ந்தவாறே தொடர்ந்தனர். (தூக்க மேலீட்டால் மீண்டும் வாகனத்தின் மீதிருந்து சாயத்தொடங்கினர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விழித்துக்கொள்ளாதவாறு (மறுபடியும்) அவர்களை தாங்கி பிடித்தேன். இறுதியில் தங்களின் வாகனத்தின் மீது சரியாக அமர்ந்துவிட்டனர். அதன்பிறகும் பிரயாணத்தை (அவ்வாறே) தொடர்ந்தனர். முடிவில் கடைசி இரவின்போது முன்பு இருமுறை சாய்ந்ததை கடுமையாக விழுந்துவிடும் அளவிற்கு சாய்ந்துவிட்டனர். அப்போது நான் அவர்கள் பால் வந்து, (வேகமாக) வந்து அவர்களை தாங்கி பிடித்தபோது அவர்கள் தங்களது தலையை உயர்த்தி (என்னை நோக்கி) நீ யார்? எனக் கேட்க நான் அபூகதாதா என்று கூறினேன். எப்போதிருந்து இப்பயணத்தில் நீர் என்னோடு இருக்கிறீர் என்று அவர்கள் கேட்க இரவு முழுவதும் என் பயணம் உங்களோடுதான் இருந்தது என்றேன். (இதைக் கேட்ட) அவர்கள், அல்லாஹ் உன்னை பாதுகாப்பானாக! எவ்வாறு அவனது நபியை நீர் பாதுகாத்தீறோ அதுபோன்றே என்று கூறிவிட்டு,
நம்மை நீர் பார்க்கிறீர் அல்லவா? ஜனங்களின் பார்வையிலிருந்து நாம் மறைந்திருக்கிறோமா? என்றார்கள். அதன்பின் யாரையேனும் நீர் பார்க்கிறீரா? எனக் கேட்க இதோ ஒரு வாகனக்காரர் என்றேன். இதோ ஒரு இரண்டாவது வாகனக்காரர் என்று முடிவில் நாங்கள் ஏழுபேர் ஒன்று சேர்ந்துவிட்டோம். அதன்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், பாதையிலிருந்து நகர்ந்து வாகனத்தைவிட்டு

இறங்கி (உறங்குவதற்காக) தங்களது தலையை தரையில் வைத்தனர். அதன்பிறகு தொழுகைக்காக நம்மை எழுப்பி தொழுகை தப்பிவிடாது பார்த்து கொள்ளுங்கள் என்றனர். (ஆனால் சகலரும் அசதி மேலீட்டால் உறங்கிவிட்டனர்). சூரியனின் வெப்பம் முதுகில் பட்டு முதலில் எழுந்தவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆவார்கள். நாங்கள் எல்லோரும் திடுக்கிட்டவாறு எழுந்தோம். அதன்பிறகு (வாகனங்களில்) ஏறுங்கள் என்றார்கள். நாங்கள் ஏறி நடந்தோம். கடைசியில் சூரியன் உயர்ந்ததும் வாகனத்திலிருந்து இறங்கி பின் கொஞ்சம் தண்ணீருடன் என்னிடம் இருந்த ஒளுச் செய்யும்பாத்திரத்தை கொண்டுவருமாறு வேண்டினர். அதிலிருந்த தண்ணீரை மிகக் குறைவாக உபயோகித்து ஒளுச் செய்தனர். ( அதன்பின்னும்) அதில் கொஞ்சம் தண்ணீர் மீதம் இருந்தது. (பிறகு) இந்த ஒளுச் செய்யும் பாத்திரத்தை பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள், இதற்கு ஒரு பெரும் (அதிசய) சம்பவம் நிகழவிருக்கிறது என அபூகதாதாவிடம் கூறினார்கள்.
அதன்பின் பிலால் அவர்கள் தொழுகைக்கு பாங்கு கூற அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு ரக்அத்து தொழுதுவிட்டு (தவறிவிட்ட) அந்த காலைத் தொழுகையை தொழுதனர். (எவ்வாறெனில்) ஒவ்வொரு நாளும் செய்(தொழு)வது போன்றே செய்தனர். அதன்பின் பிராயணிக்கத் தயாராகி வாகனத்தில் ஏறினர். (தொடர்ந்து) நாங்களும் அவர்களுடன் ஏறினோம். (பின்) எங்களில் சிலரிடம் மெதுவாக நம் தொழுகை விஷயத்தில் ஏற்பட்டுவிட்ட தவறுக்கான பரிகாரம் என்ன? என (பேசிக்கொண்டோம்) என அபூகதாதா கூறுகிறார். (இதை செவியுற்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) என்னிடத்தில் உங்களுக்கு முன்மாதிரி இல்லையா? எனக்கூறி நிச்சயமாக தூங்குவதில் எவ்வித தவறுமில்லை, தவறென்பது அடுத்த தொழுகையின் நேரம் வரும்வரை இத்தொழுகையை தொழுகாமலிருப்பதே எனக்கூறினர் என அபூகதாதா கூறினார். அவ்வாறு ஒருவர்

செய்யின் அத்தொழுகையைப் பற்றி நினைவுவரும் போது தொழுதுவிடவும் அடுத்த நாளாக இருப்பின் அத்தொழுகையின் நேரத்தில் தொழுதுகொள்ளவும் என்றனர்.
அதன்பிறகு ஜனங்கள் எல்லாம் விடிகாலைப் பொழுதை அடைந்து தங்களது நபியைத் தேடினர். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களுக்குப் பின்னால் இருக்கிறார்கள். உங்களை விட்டுச் செல்லக்கூடியவர்கள் அல்லர் என அபூபக்கர், உமர் ரளியல்லாஹு அன்ஹுமா கூறினார்கள். (இதைக் கூறி முடித்த உடன்) நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (இதோ) உங்களுக்கு எதிரில்தான் இருக்கிறார்கள். ஆகவே அபூபக்கர், உமர் ரளியல்லாஹு அன்ஹுமா ஆகியோரின் கூற்றைக் கேட்டு அதற்கு கீழ்படிந்து இருப்பார்களேயானால் அவர்கள் நேர்வழி பெற்றிருப்பர் என ஜனங்கள் கூறினர்.
அடுத்து ஜனங்களிடம் நாங்கள் வந்தடைந்த போது பகல் நீண்டு ஒவ்வொரு வஸ்துவும் சூடாகிவிட்டிருந்தது, (அப்போது) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! நாங்கள் அழிந்துவிட்டோம். தாகித்துவிட்டோம் என்று கூறினர். (அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) உங்களுக்கு அழிவில்லை எனக்கூறி எனது சிறிய பாத்திரத்தையும் ஒளூச்செய்யும் பாத்திரத்தையும் கொண்டுவருமாறு கூறினர். பின் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (அதிலிருந்து தண்ணீரை ஊற்றினார்கள். அபூகதாதா ஜனங்களுக்கு அதை பருகச் செய்தார். ஒளூச்செய்யும் பாத்திரத்தில் இருந்து தண்ணீர் கிடைத்துவிட்டதைக் கண்ட ஜனங்கள் (தண்ணீர் குறைவாக இருப்பதாகக் நினைத்துகொண்டு) அதன்மீது வந்து விழ ஆரம்பித்தனர். (உடனே) உங்களில் ஒவ்வொருவரும் அழகான முறையில் அமைதியாக வந்து (பாத்திரங்களை) நிரப்பிக் கொள்ளுங்கள் நீங்கள் எல்லோரும் தாகத்தை தீர்த்துக் கொள்வீர்கள் என்றனர். (ஜனங்களும்) அவ்வாறே செய்தனர்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஊற்றிக் கொண்டிருக்க நான் ஜனங்களுக்கு பருகச் செய்து கொண்டிருந்தேன் முடிவாக நானும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுமல்லாது மற்றெவரும் எஞ்சியிருக்கவில்லை.
அதன்பின் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (அத்தண்ணீரை) ஊற்றி என்னைப்பருகுமாறு கூறினார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! தாங்கள் பருகாதவரை நானும் பருகமாட்டேன் என்றேன். (அதற்கு) நிச்சயமாக ஜனங்களுக்குப் பருகக் கொடுப்பவர் அவர்களில் பருகுபவர்களில் கடைசியானவராவார் என்றார்கள். (அதைக்கேட்ட) நான் உடனே பருகிவிட்டேன். (பிறகு) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் பருகினார்கள் என்று கூறினார். ஜனங்களெல்லோரும் தண்ணீர் குடித்து தங்களது தாகத்தை தீர்த்துக் கொண்டுவிட்டு ஓய்வெடுக்கத் தொடங்கினர் என்பதாக அபூகதாதா கூறுகிறார்.
ஜாமிஉ மஸ்ஜிதில் இந்தச் செய்தியை ஜனங்களுக்கு நான் (அப்துல்லாஹ் பின் ரபாஹ ரளியல்லாஹு அன்ஹு) அறிவித்துக் கொண்டிருந்தேன். அப்போது இம்ரான் பின் ஹுஸைன் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், வாலிபரே! இதோ பார், எவ்வாறு (நீ) இது பற்றிச் சொல்கிறாய், இந்த இரவில் வாகனத்தில் இருந்தவர்களில் நானும் ஒருவானாக இருந்தேன் எனக்கூறினார்.
அதற்கு நான், இது சம்மந்தப்பட்ட செய்தி பற்றி நீரே (என்னை விட) மிகத் தெரிருந்திருப்பீர் என்றேன். அதற்கவர், நீர் யாரைச் சேர்ந்தவர் எனக்கேட்டார். (அதற்கு) அன்ஸார்களைச் சேர்ந்தவன் நான் என்று கூறினேன். (அதற்கவர்) நீங்கள் தான் உங்களது இச்செய்தியை பற்றி மிகத் தெரிந்தவர்கள் ஆகவே நீர் அறிவிக்கலாம் என்றார். (அதன்பின்) கூட்டத்தவருக்கு நான் அது பற்றி கூறிக்கொண்டிருந்தேன். அப்போது இம்ரான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த இரவில் நான் அச்சம்பவத்தில் கலந்து

கொண்டேன் உன்னைப்போல் நிச்சயமாக வேறு எவரும் மனனம் செய்திருப்பார் என்று நான் நினைக்கவில்லை எனக்கூறினார்.
அறிவிப்பவர் : அபூகதாதா ரளியல்லாஹு அன்ஹு

## ஒரே உடையில் தொழுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 230

ஒரே உடையில் தொழுவது பற்றி கேட்பவர் ஒருவர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டார். (அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களில் ஒவ்வொருவருக்கும் இரு உடைகளா?1 எனக்கேட்டனர் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.
குறிப்பு : 1 ஸஹாபா ரளியல்லாஹு அன்ஹும் அஜ்மாஈன்களில் அநேகரிடம் ஒரு உடைக்கு மேல் இருந்ததில்லை என்பதும், ஒரே உடையில் தொழுகலாம் என்பதையும் இதன்மூலம் விளக்கிக் கூறுகிறார்கள்.

### ஹதீஸ் எண் : 231

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஒரே உடையைக் கொண்டு சுற்றிக்கொண்டவர்களாக, அதன் இரு ஓரங்களையும் தங்களின் தோல்புஜங்களின் மீது வைத்தவர்களாக (காட்டியவாறு இருக்க) நான் கண்டேன், என உமர், பின் அபீஸலமா ரளியல்லாஹு அன்ஹுமா கூறுகிறார்.

## அடையாளமிடப்பட்ட விரிப்பில் தொழுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 232

அடையாளங்கள் இடப்பட்ட, நீண்ட கோடுகள் போடப்பட்ட விரிப்பில் தமது தொழுகையை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நின்றுவிட்டனர். (நின்ற பின்) அதன் அடையாளங்களை நோட்டமிட்டனர். (எனவே) தங்களது தொழுகையை முடித்துக் கொண்டதுமே, அபூஜஹ்ம் பின் ஹுதைபாவின்பால் ஷஅடையாளமிடப்பட்டஷ இவ்விரிப்பைக் கொண்டு செல்லுங்கள். எந்த அடையாளமும் இல்லாத விரிப்பை எனக்காக கொண்டுவாருங்கள் என்றனர். நிச்சயமாக அது

(அடையாளமிடப்பட்ட விரிப்பானது) தொழுகையில் கொஞ்சமுன்பு எனது கவனத்தை சிதறடித்து விட்டது எனக்கூறினார்கள்.
அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

### பாயின் மீது தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 233**

அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் பாட்டியார் அவர்கள், சமைத்த உணவையருந்த (விருந்திற்கு) அல்லாஹ்வின் தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (வந்து) அதிலிருந்து உண்ட பின் உங்களுக்காக நான் தொழுகை நடத்துகிறேன், எழுந்திருங்கள் என்றார்கள்.
நீண்ட நாட்கள் உபயோகித்ததால் கருப்படைந்து விட்ட ஒரு ஈச்சம்பாயை எடுத்து வந்து அதில் தண்ணீரைத் தெளித்து (சுத்தம் செய்து அதை விரித்தேன்) அதன்மீது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நின்றனர். அவர்களுக்குப்பின் நானும், எதீமும், எங்களுக்குப்பின் கிழவியும் வரிசையாக நின்றோம் எங்களுக்காக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு ரக்அத் தொழுகை நடத்திவிட்டு திரும்பிச் சென்றனர். இஸ்ஹாக் பின் அப்துல்லாஹ் பின் அபீதல்ஹா என்பவர் அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாக அறிவிக்கிறார்.

### காலணிகளோடு தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 234**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரு காலணிகளோடு தொழக்கூடியவர்களாக இருந்தார்களா? என அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்டதற்கு அவர் ஆம் எனக்கூறினார்.
அறிவிப்பவர் : ஸயீது பின் யஜீது ரளியல்லாஹு அன்ஹு

### பூமியில் முதலாவதாக அமைக்கப்பட்ட பள்ளி என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 235**

ஷஅல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! முதலாவதாக அமைக்கப்பட்ட பள்ளி எது? என (அபிதர்ரு) நான் கேட்டேன். மஸ்ஜிதுல் ஹராம் என்றார்கள். அதன் பிறகு எது? என நான் கேட்டேன். மஸ்ஜிதுல் அக்ஸா என்றனர். இரு பள்ளிகளின் அமைப்புக்கு (மத்தியிலுள்ள கால) இடைவெளி எவ்வளவு? எனக்கேட்டேன். நாற்பது வருடங்கள் என்றனர். 'பூமியில் எந்தப்பகுதியில் தொழுகையை அடைந்து (அதன் நேரம்) வந்து விட்டாலும், தொழுகையை நிறைவேற்றி விடு, அதுவே தொழுமிடமாகும்' என்றனர்.

அறிவிப்பவர் : அபூதர்ரு ரளியல்லாஹு அன்ஹு

**நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பள்ளியை கட்டுதல் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 236**

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதினாவிற்கு வந்து (மதினாவின்) மேட்டுப்பகுதியில் (இருந்த) 'பனூ அம்ரு பின் அவ்ப்' கூட்டத்தினரிடையே வந்திறங்கி பதினான்கு இரவுகள் அவர்களுக்கு மத்தியில் தங்கியிருந்தனர். அதன்பின் ஒரு தூதுவரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பனின்னஜ்ஜார் கூட்டத்தவர்பால் அனுப்பினர்.

அவர்களெல்லோரும் தங்களின் வாள்களை சுமந்தவாறு (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இருப்பிடம்) வந்தடைந்தனர். அச்சமயம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தங்களின் வாகனத்தின் மீது அமர்ந்திருக்க, அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பின்னாலிருக்க, பனின்னஜ்ஜார் கூட்டத்தார்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சூழ்ந்திருக்க இறுதியில் (அனைவரும்) அபூ அய்யூப் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் (வீட்டின்) முற்றத்திற்கு வந்தார்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

தொழுகையின் நேரம் எங்கு வந்துவிட்டாலும் தொழுது கொள்வார்கள். சில சமயம் ஆட்டுத் தொழுவத்திலும் (கூட) தொழுதிருக்கிறார்கள். அதன்பிறகு (தான் ஒரு) பள்ளியை நிறுவ கட்டளையிட்டனர். அதற்காகவே பனின்னஜ்ஜார் கூட்டத்தவர்களை அழைத்துவருமாறு தூதர் ஒருவரை (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அனுப்ப, அவர்களும் வந்து சேர்ந்தனர் என்பதாக அறிவிப்பாளர் அறிவிக்கிறார்.
நஜ்ஜாரின் மக்களே! இந்த உங்களின் தோட்டத்தை எனக்கு கிரயத்திற்கு தாருங்கள் என்றனர். (அதற்கவர்கள்) இல்லை, இதன் கிரயத்தை நாங்கள் அல்லாஹ்வை தவிர யாரிடமும் தேடமாட்டோம் என்றனர். நான் கூறக்கூடியவைகளெல்லாம் அங்கே (அத்தோட்டத்தில்) இருந்தன. என அனஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். (அவையாதெனில்) ஈச்சமரங்களும் முஷ்ரிக்குகளின் கப்றுகளும், சீரற்ற தரைப்பகுதிகளும் இருந்தன. ஆகவே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஈச்சமரங்களைப்பற்றி கட்டளையிட்டனர். அவைகள் வெட்டப்பட்டன. முஷ்ரிக்குகளின் கபுறுகள் தோண்டப்பட்டன. சீரற்ற பகுதிகள் சீர் செய்யப்பட்டன. ஈச்சமரத்தின் கட்டைகள் கட்டப்படும் கட்டிடத்தின் கிப்லாப் பகுதியில் வைக்கப்பட்டன. கதவுகளின் இரு ஓரங்களும் கற்களால் கட்டப்பட்டன. (இவ்வேலையைத் தொடங்கி செய்ய ஆரம்பித்ததும் சோர்வை போக்கிக் கொள்ள வேண்டி) 'இரட்சகா! மறுமையின் நன்மையின்றி வேறு நன்மை இல்லை: அன்ஸார்களுக்கும், முஹாஜிர்களுக்கும் நீ உதவி புரிவாயாக!' என்ற ஷரிஜ்ஜ்ஷ வகைக் கவியை, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களுடன் இருக்க பாடிக்கொண்டிருந்தனர்.
அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

இறையச்சத்தின் மீது நிறுவப்பட்ட பள்ளி பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 237

எனக்கு (அறிவிப்பவருக்கு) அருகாமையில் அப்துர்ரஹ்மான் பின் அபீஸயீது அல்குத்ரீ சென்றார். இறையச்சத்தின் மீது நிர்மானிக்கப்பட்டுள்ள விஷயத்தில் உமது தந்தையிடம் எவ்வாறு கூறக் கேட்டீர்? என அவரிடம் கேட்டேன். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது மனைவிமார்களின் சிலரின் வீட்டில் (இருந்த போது) நான் நுழைந்து இரு பள்ளிகளில் இறையச்சத்தின் மீது நிர்மானிக்கப்பட்டபள்ளி (அல்லாஹ்வின் கூற்றுக்கிணங்க) எது? எனக்கேட்டேன். (அதற்கவர்கள்) முன் கைகளில் பொடிகற்களை எடுத்து அதை பூமியின் மீது போட்டுவிட்டு அதன்பிறகு அதுதான் இந்த உங்களுடைய (மதினா) பள்ளி எனக்கூறினார். 'இவ்வாறே இந்த ஹதீஸை அவர் (உன்தந்தை) கூற நான் செவியுற்றேன் என நிச்சயமாக நான் சாட்சி கூறுகிறேன்' எனக்கூறினேன்.

அறிவிப்பவர் : அபூஸலமா பின் அப்துர் ரஹ்மான் ரளியல்லாஹு அன்ஹு

## மதினா, மக்கா பள்ளியில் தொழுவதின் சிறப்பு பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 238**

நிச்சயமாக ஒரு பெண்ணுக்கு ஒரு சங்கடமிருந்தது, எனக்கு இதிலிருந்து அல்லாஹ் ஆரோக்கியத்தை நல்குவாயானால் நிச்சயமாக நான் பைத்துல்முகத்தஸில் தொழுவேன் எனக்கூறினார். (அல்லாஹ் அவளுக்கு ஆரோக்கியத்தை நல்கி) அதிலிருந்து நீக்கம் பெற்று விட்டார். அதன்பிறகு (அங்கு) புறப்பட தயாராகி மைமூனா அவர்களிடம் வந்தடைந்து ஸலாம் கூறி அதுபற்றிக் கூறினார். (அதற்கு மைமூனா அவர்கள்) அமர்ந்து நீர் விருப்பப்பட்டதை உண்ணுவீராக! (உண்டபின்) ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பள்ளியில் தொழுவீராக காரணம் நிச்சயமாக நான் 'அப்பள்ளியில் ஒரு தொழுகை, அதல்லாத பள்ளிகளில் கஃபாபள்ளி நீங்கலாக தொழும் ஆயிரம் தொழுகைகளை விட மிகச்சிறந்தாகும்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறக்கேட்டேன் என்றனர்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

## மஸ்ஜிது குபாவிற்கு வந்து அருகில் தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 239**

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் (சில சமயம் வாகனத்தின் மீது) ஏறியவர்களாக, அல்லது நடந்தவர்களாக ஷகுபாஷ பள்ளிக்கு வந்து அப்பள்ளியில் இரண்டு ரக் அத் தொழக் கூடியவர்களாக இருந்தார்கள் என இப்னு, உமர் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## அல்லாஹ்விற்காக யார் பள்ளியைக் கட்டினாரோ அவரின் சிறப்பு பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 240**

நிச்சயமாக உதுமான் பின் அஃப்பான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் (ஒரு) மஸ்ஜிதை நிர்மாணிக்க விரும்பினார்கள். ஜனங்கள் அதை வெறுத்து அதன் நிலையிலேயே அதை விட்டு விட விரும்பினர். அப்போது.

இறைவனுக்காக யார் பள்ளியைக் கட்டுகிறாரோ ? அவருக்கு இறைவன் சுவனத்தில் ஒரு வீட்டைக் கட்டுகிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றேன் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : மஹ்மூது பின் லபீத் ரளியல்லாஹு அன்ஹு

## மஸ்ஜிதுகளின் சிறப்பு பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 241**

'உயர்வான அல்லாஹ்வுக்கு ஊர்களில் மிக விருப்பமான(இடமான)து அதன் பள்ளிகளாகும். உயர்வான அல்லாஹ்விற்கு ஊர்களில் மிக வெறுப்பானது அதன் கடைத்தெருக்களாகும்' என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## மஸ்ஜித் (தொழுமிடங்)களை நோக்கி அதிக தூரம்(நடந்து) செல்வதின் சிறப்பு பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 242**

அன்சார்களில் ஒருவரின் வீடு மதினாவில் அதிக தூரத்தில் இருந்தது. அவர் எல்லா நேரத்தொழுகையையும் (தவற விட்டு விடாது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுபவராக இருந்தார் அதனால் அவர் சிரமப்படுவதாக நாங்கள் கருதி வருத்தப்பட்டோம் என (அறிவிப்பாளர்) கூறுகிறார்.
ஆகவே இன்னவரே! ஓர் கழுதையை நீர் வாங்கி (அதன் மீது நீர் சவாரி செய்து வந்தால்) சுடுமணலின் சூட்டிலிருந்து உனது கால்களையும் இன்னும் பூமியில் ஊர்ந்து திரியும் புழு, பூச்சி, விஷஜந்துக்களின் தீமையிலிருந்து உன்னையும் காப்பாற்றிக் கொள்வாய் என (அறிவிப்பாளராகிய) நான் கூறினேன்.
அதற்கு அவர் நபி ; ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டுக்கும் என் வீட்டிற்கும் கயிறுகளால் கட்டப்பட்டிருக்க வேண்டுமென (அதாவது) அருகில் என் வீடு இருக்க வேண்டுமென நான் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! விரும்பவில்லை எனக்கூறினார். இதனால் பெரும் மனக்கஷ்டத்திற்கு உள்ளான நான் முடிவாக இதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து கூறினேன். அவரைப்பற்றி நான் கூறியதைக் கேட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரை அழைத்து இதைப் போன்றே கூறினார்கள். (அப்போது அந்த மனிதர்) தனது அடிச்சுவடுகளின் மூலம் நற்கூலியை ஆதரவு வைப்பதாக உறுதியாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறினார். அதற்கவர்கள் நிச்சயமாக நீ கணக்கிட்டது உனக்கு உண்டு எனக் கூறினார்கள்.
அறிவிப்பவர் : உபை பின் கஅபு ரளியல்லாஹு அன்ஹு

**தொழுகைக்காக நடப்பதன் மூலம் தவறுகள் அழிக்கப்படுகிறது அதன்மூலம் தரங்கள் உயாத்தப்படுகிறது என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 243**

யார் (ஒருவர்) அவரது வீட்டில் ஒளுச்செய்து விட்டு அதன்பிறகு அல்லாஹ்வின் இல்லங்களில் (பள்ளிகளில்) ஒரு (பள்ளியின்) இல்லத்தின்பால் அல்லாஹ்வினால்

கடமையாக்கப்பட்டவைகளில் ஒரு கடமை(யான தொழுகை)யை நிறைவேற்றச் செல்வாராயின், அவரது (இரு)1 எட்டுகளில் ஒன்று பாவத்தை அழிக்கின்றது. மற்றொன்று அவரது தரத்தை உயர்த்துகின்றது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 முஸ்லிமில் பிறிதொரு அறிவிப்பில் 'இரு எட்டுகள்' எனப் பதிவாகியுள்ளது.

## துரிதத்தைக் தவிர்த்து அமைதியாக தொழுகைக்கு வருவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 244**

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுது கொண்டிருக்கையில் (அவர்கள்) சில சப்தத்தை செவியுற்றனர். தொழுகையை முடித்துக்கொண்டு உங்களது விஷயம் என்ன? (ஏன் சப்தமிட்டீர்கள்) எனக்கேட்டார்கள். (அதற்கவர்கள்) தொழுகைக்கு அவசரமாக வந்தோம் என்றனர். அதைக் கேட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்வாறு செய்யாதீர்கள். தொழுகைக்காக நீங்கள் வந்தால் அவசியம் அமைதியாக வாருங்கள். எதைப் பெற்றுக் கொண்டீர்களோ அதை (இமாமுடன் சேர்த்து) தொழுங்கள். எது உங்களுக்கு முந்திவிட்டதோ அதை (தொடர்ந்து) நிறைவு செய்யுங்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூகதாதா ரளியல்லாஹு அன்ஹு

## பெண்கள் பள்ளிகளுக்கு புறப்பட்டு செல்வது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 245**

உங்களில் (பெண்களில்) யாரேனும் பள்ளிக்கு (தொழுக) வந்தால் அவள் நறுமணத்தை உபயோகிக்க வேண்டாம் என எங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என ஜைனப் அத்தகஃபிய்யா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

## பெண்கள் வெளியேறுவதற்கு தடை பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 246**

நிச்சயமாக பெண்களின் இன்றைய நிலையை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காண்பார்களாயின் பள்ளிக்கு வர பனூ இஸ்ரவேலர்களின் பெண்கள் தடுக்கப்பட்டது போன்று அவர்களுக்கு தடை விதித்திருப்பார்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துணைவியார் ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறியதாக அம்ரா பின்த் அப்துர்ரஹ்மான் அறிவிக்கிறார்கள்.

பனூ இஸ்ரவேலர்களின் பெண்கள் பள்ளிக்கு செல்வதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தார்களா? என அம்ராவிடம் நான் கேட்டேன். ஆம் எனக்கூறினார்கள்.

## பள்ளியில் நுழைகின்ற போது கூறவேண்டியது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 247**

உங்களில் யாரேனும் பள்ளியில் நுழைந்தால், அல்லாஹும்மஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதி(க்)க1 என்றும் அவர் வெளியேறினால் அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க மின்ஃபள்லி(க்)க2 என்றும் கூறவும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுமைத் ரளியல்லாஹு அன்ஹு அல்லது அபூஉஸைத் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 யா அல்லாஹ்! உனது அருள்வாயில்களை எனக்கு திறந்தருள்வாயாக. 2 நிச்சயமாக உனது பேரருளை உன்னிடம் நான் கேட்கிறேன்.

## பள்ளியினுள் நுழைந்தால் இரண்டு ரக்அத்துகள் தொழுது கொள்ளவும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 248**

அபூகதாதா ரளியல்லாஹு அன்ஹு ஆகிய நான் பள்ளியில் நுழைந்த பொழுது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீ அமருமுன் இரண்டு ரக்அத்துகள் தொழுவதிலிருந்து உன்னை தடுத்தது எது?

எனக்கேட்டார்கள். (அதற்கு) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! உங்களையும் ஜனங்களையும் அமர்ந்திருக்க கண்டேன் (அதனால் நானும் அமர்ந்து கொண்டேன்) என நான் கூறினேன்.
'உங்களில் யாரேனும் பள்ளியினுள் நுழைந்தால் இரண்டு ரக்அத்துகள் தொழும்வரை அவர் அமர வேண்டாம்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூகதாதா ரளியல்லாஹு அன்ஹு

**பாங்கு சொல்லப்பட்டபின் பள்ளியிலிருந்து வெளியேறிச் செல்வது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 249**

நாங்கள் அபூஹுரைராவுடன் பள்ளியில் அமர்ந்திருந்தோம். அப்போது பாங்கு கூறுபவர் பாங்கு கூறிவிட்டார். (அதன்பிறகு) பள்ளியிலிருந்து ஒரு மனிதர் எழுந்து நடக்கின்றார். அவர் நடந்து செல்லும்போது, பள்ளியிலிருந்து அவர் வெளியேறும் வரை அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் பார்வை அவரை தொடர்ந்தது. 'அப்போது தெரிந்து கொள்! இந்த மனிதர் அபூல் காஸிம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மாறு செய்துவிட்டார்' என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஷ்ஷஃதாஉ ரளியல்லாஹு அன்ஹு

**பள்ளியில் துப்பியதற்கு பரிகாரம் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 250**

'பள்ளியில் துப்புவது தவறாகும். அதற்கு பரிகாரம் அதை மறைப்பதாகும்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

**பூண்டு சாப்பிடுவது வெறுக்கப்பட்டதென்றும் அதை உண்ட பின் பள்ளிக்கு வருவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 251**

இந்த மரத்(செடியி)திலிருந்து யார் (பூண்டு) சாப்பிட்டாரோ? அவர் பள்ளிக்கு வரவேண்டாம் என கைபர் சண்டையில்

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹு மா

**வெங்காயம், பூண்டு, வெங்காய இலை ஆகியவற்றை சாப்பிட்டவர் பள்ளியை தவிர்ப்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 252**

(உங்களில்) எவர் பூண்டு அல்லது வெங்காயத்தை சாப்பிட்டாரோ அவர் நம்மைத் தவிர்க்கவும். அவரது வீட்டிலேயே அவர் இருக்கவும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
கீரை வகைகள் உள்ள காய்கறி நிறைந்த ஒரு பாத்திரம் அவர்களிடம் நிச்சயமாக கொண்டுவரப்பட்டது. அதில் ஒரு விதமான வாடையை உணர்ந்தார்கள். (இது என்ன எனக்) கேட்டார்கள். அதிலிருக்கும் கீரை வகைகளைப்பற்றி அவர்களுக்கு சொல்லப்பட்டது. (அதற்கவர்கள்) தனது தோழர்களில் சிலருக்கு அதை சமீபமாக்குங்கள் எனக்கூறினர். அடுத்து அதைப்பார்த்துவிட்டு அதை சாப்பிடுவதை வெறுத்தனர். நீர் அதை உண்ணுவீராக. நிச்சயமாக நான், நீர் பேசாதவனோடு (அல்லாஹ்வுடன்) பேசுகிறேன் எனக்கூறினார்கள்.
அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹுமா

**வெங்காயம், வெள்ளைப்பூண்டு ஆகியவற்றின் நாற்றம் யாரிடம் உள்ளதோ அவரை பள்ளியிலிருந்து வெளியேற்றுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 253**

நிச்சயமாக உமர் பின் கத்தாபு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், ஜும்ஆ நாளன்று குத்பா பிரசங்கம் நிகழ்த்தினார்கள். (அப்போது) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைவு கூறினார்கள். மேலும் அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களையும் நினைவு கூறினார்கள். (பின்) 'நிச்சயமாக நான், ஒரு சேவல் என்னை மூன்று முறை கொத்திவிட்டது போன்று (கனவு) கண்டேன்', என் தவனை ஆஜராகப் போகிறது (அதாவது

மரணம் சம்பவிக்க இருக்கிறது) என்பதைத் தவிர வேறு எதையும் நிச்சயமாக (இதன் மூலம்) நான் உணரவில்லை என்று கூறினார்கள். சில கூட்டத்தவர்கள் நிச்சயமாக நான் எனக்கொரு பிரதிநிதியை ஆக்கவேண்டுமென எனக்குக் கட்டளையிடுகிறார்கள். நிச்சயமாக மகத்துவமுடையவனும், மிகைத்தவனுமான அல்லாஹ், அவனது மார்க்கத்தையோ, அவனது பிரதிநிதிதுவத்தையோ, எதனைக்கொண்டு தனது நபியை அனுப்பிவைத்தானோ அ(ந்த மார்கத்)தையோ வீணாக்கிவிடக் கூடியவனல்லன். என் விஷயத்தில் ஏதேனும் ஒரு காரியம் (மரணம்) துரிதமாக ஏற்பட்டு விடுமேயானால், கிலாபத் என்பது எவர்களைப் பற்றி அல்லாஹ்வின் தூதர் அவர்கள் பொருத்தப்பட்ட நிலையில் இறப்பெய்தி உள்ளார்களோ அத்தகைய இந்த ஆறு நபர்களுக்கு மத்தியில் கலந்தாலோசித்துச் செய்தலாகும்.

நிச்சயமாக சில கூட்டத்தவர்கள் இந்தக்காரியத்தில் (பிரதிநிதியை தேர்தெடுக்கும் விஷயத்தில்) குறை கூறுகின்றனர் என்பதை நான் அறிவேன். நான் அவர்களை  இஸ்லாத்திற்காக இந்த என் கையினால் அடித்திருக்கிறேன். அவர்கள் அதையே செய்வார்களானால் அவர்கள் அல்லாஹ்வின் எதிரிகளும், நிராகரிக்கக் கூடியவர்களும், கூடுதலாக வழி கெட்டவர்களுமாவார். அதன் பிறகு கலாலாவை விட மிக முக்கியமான ஒரு விஷயத்தை எனக்குப்பிறகு நிச்சயமாக நான் விட்டுவைக்கவில்லை. எந்த ஒரு காரியத்திலும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஷகலாலாஷ விஷயத்தில் கேட்டதைக் காட்டிலும் வேறு எதையும் திரும்பத்திரும்ப நான் கேட்டதில்லை. (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் இவ்விஷயத்தில் எவ்வளவு கடுமை காட்டினார்களோ அதே போன்று வேறு எந்த வஸ்துவிலும் (விஷயத்திலும்) என்னிடம் அவ்வளவு கடுமையாக நடந்து கொள்ளவில்லை. (எதுவரையெனில்) எனது நெஞ்சில் தங்களது விரலினால் குத்தும் அளவுக்கு.

உமரே! ஷஅந்நிஸாஷ அத்தியாத்தின் கடையிசிலிருக்கும் ஷஸைப்ஷ ஆயத்து வசனம் உமக்குப் போதாதா? எனக்கூறினர். நிச்சயமாக நான் ஜீவித்திருப்பேனேயானால் குர்ஆனை ஓதத் தெரிந்தவரும், குர்ஆனை ஓதத் தெரியாதவரும் எதை வைத்து தீர்ப்பு வழங்குவாரோ அதே தீர்பைக்கொண்டு அதில் நான் தீர்ப்பு வழங்குவேன். அதன்பிறகு, இரட்சகா! நிச்சயமாக நான் நகரங்களின் தலைவர்களின் மீது உன்னை நான் சாட்சி ஆக்குகிறேன். நிச்சயமாக நான் அவர்களுக்கு அந்தத்தலைவர்களை அனுப்பியதெல்லாம், அவர்களுக்கு நீதி வழங்குவதற்காகத்தான். மனிதர்களுக்கு அவர்களின் மார்க்கத்தையும், அவர்களது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டியும், போர்களத்தில் கிடைத்த பொருள்களை அவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கவும், அவர்களுக்கு மத்தியில் உள்ள காரியங்களில் ஏற்பட்ட சிக்கலை (எழுத்து மூலம் அல்லது ஆள் மூலம்) உயர்த்தி அதில் (தீர்ப்பு) கிடைக்கச் செய்வதற்குமே தான். அதன்பிறகு ஜனங்களே! நிச்சயமாக நீங்கள் இரண்டு செடிகளை. உண்ணுகின்றீர்கள். அவ்விரண்டையும் கெட்டதாகவே தவிர நான் காணவில்லை. (அது) இந்த வெங்காயமும், பூண்டும் தான் எனக் கூறினார்கள். நிச்சயமாக நான், 'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், பள்ளியில் (எந்த) மனிதரிடத்திலாவது இவ்விரண்டின் வாடையை கண்டுவிட்டால், அவரை பகீஃவின்பால் வெளியேற்றக் கட்டளையிடுவதை' கண்டேன். அவ்விரண்டையும் யாரேனும் உண்டால் (முதலில் சமைத்து) அ(தன் நாற்றத்)தை சாகடிக்க(நீக்க)வும் என்றனர்.

அறிவிப்பவர் : மிஃதான் பின் அபீதல்ஹா ரளியல்லாஹு அன்ஹு மா

காணாமல் போனவற்றைப்பற்றி, பள்ளியில் தேடுவது தடுக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 254**

யாராவது ஒரு மனிதர் காணாமல் போனதைப் பள்ளியில் தேடக்கேட்டால் அதை அல்லாஹ் உனக்குத் திருப்பிக் கொடுக்காமல் இருப்பானாக! என கேள்விப்பட்டவர் கூறவும். நிச்சயமாக இதற்காக பள்ளிகள் கட்டப்படவில்லை என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

**மண்ணறைகளை பள்ளிகளாக ஆக்கப்படுவது தடுக்கப்பட்டது என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 255**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு (மரணம் இறக்கி வைக்கப்பட்ட போது) அவர்கள் தமது முகத்தின் மீதிருந்த அடையாளமுள்ள போர்வையை (அகற்றி) தூக்கி எறிய ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு மனக்கவலை ஏற்பட்டால் அப்போர்வையை முகத்திலிருந்து நீக்கிவிட்டு 'அது அவ்வாறு தான். யூத கிறிஸ்துவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும். அவர்களின் நபிமார்களின் கப்ருகளைத் தொழுமிடங்களாக ஆக்கிக் கொண்டனர்' எனக்கூறி (இதன் மூலம்) அவர்கள் செய்த செயல் போன்றதை (சமூகத்தவர்கட்கு) எச்சரிக்கை செய்கிறார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா, அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு

**கப்ருகளின் மீது பள்ளிகள் கட்டுவது தடுக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 256**

நிச்சயமாக உம்மு ஹபீபாவும், உம்முஸலமா ரளியல்லாஹு அன்ஹுமா இருவரும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் உருவப்படம் நிறைந்த கிறிஸ்துவ கோயில் ஒன்றை அபிஸீனியாவில் பார்த்துவிட்டு வந்ததைப்பற்றி கூறினர். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

'நிச்சயமாக அவர்கள். அவர்களில் நல்ல மனிதர் ஒருவர் இருந்து, அவர் இறப்பெய்திவிட்டால். அவரது மண்ணறையின் மீது பள்ளியைக் கட்டிவிட்டு அந்த உருவங்களை அதிலே வரைந்து விடுவர். அவர்கள் தான் மறுமை நாளின் போது கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ்விடம் சிருஷ்டிகளிலேயே கெட்டவர்களாவர்கள்' எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

பூமியை எனக்கு தொழுமிடமாகவும் சுத்தமானதாகவும் (சுத்தம் செய்ய உபயோக்கிப்படும் சாதனமாகவும்) ஆக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 257**

'(மற்ற) நபிமார்களை விட ஆறு விஷயங்களைக் கொண்டு நான் சிறப்பிக்கப்படடுள்ளேன். வாக்கியங்களின் சுருக்கங்களை நான் கொடுக்கப்பட்டுள்ளேன். பயத்தைக் கொண்டு உதவியளிக்கப் பட்டுள்ளேன். போர்களத்தில் கிடைத்த பொருட்கள் எனக்கு ஆகுமாக்கப்பட்டுள்ளது. பூமியை எனக்கு சுத்தமானதாகவும் தொழுமிடமாகவும் ஆக்கப்பட்டுள்ளது. சிருஷ்டிகள் அனைவரின் பாலும் நான் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன். என் மூலம் நபிமார்கள் இறுதியாக்கப்பட்டார்கள்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

தொழுபவர் எதைமறைப்பாக வைத்துக்கொள்வாரோ அதன் அளவு பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 258**

உங்களில் யாரேனும் தொழுகைக்குத் தயாரானால் வாகனத்தின் கடைசியில் இருப்பதைப் போன்று அவருக்கு முன்பு இருக்குமேயானால் அதை நிச்சயமாக அவர் மறைப்பாக ஆக்கிக்கொள்வர். வாகனத்தின் கடைசியிலிருப்பதைப்1 போன்று அவருக்கு முன்னால் மறைப்பாக ஆக்கப்படாவிட்டால் அவருக்கு முன்னால் கழுதை, பெண், கருப்பு நிறமுள்ள நாய் ஆகியவை அவரது தொழுகையை கெடுத்து விடுவர். அபூதர்ரே! சிவப்பு நாய், மஞ்சள் நாய் ஆகியவற்றை விட கருப்பு நாயின் சமாச்சாரம்

என்ன? (ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள்?) என நான் கேட்டேன். (அதற்கவர்) நீ கேட்டது போன்றே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கவர்கள் 'கறுப்பு நாய் ஷைத்தானாகும் எனக் கூறினார்கள்' என்றனர்.

அறிவிப்பவர் : அபூதர்ரு ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1. ஒட்டகத்தின் மீது அமரும் போது பிடித்துக் கொள்வதற்காக ஒரு குச்சி பின்பகுதியில் கட்டப்பட்டிருக்கும். அதை தான் இங்கு குறிப்பிடப்படுகிறது. அதை அளவை காண்பிக்கும் நிமித்தம் கூறுகிறார்கள் என்பதை கவனத்தில் கொள்க.

தொழுபவருக்கு முன்பு நடந்து செல்வோரின் செயலில் இருந்து அப்பெருங்குற்றத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள தொழுபவர் தனக்கு முன் ஒரு மறைப்பை வைத்துக் கொள்வதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கட்டயாமாக்கி உள்ளனர்.

## மறைப்பிற்கு சமீபமாக இருப்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 259

'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகின்ற இடத்திற்கும், சுவற்றுக்கும் மத்தியில் ஒரு ஆடு நடந்து செல்லும் அளவிற்கு இடைவெளி இருந்தது' என ஸஹ்ல் அஸ்ஸாயிதீ ரளியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கிறார்கள்.

## தொழுபவருக்கு முன்னால் குறுக்கே படுத்துக் கொள்ளுதல் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 260

(தொழுகையை நாய், கழுதை, பெண் ஆகியோர் (முன் செல்வதால்) கெடுத்து விடுகின்றனர் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் கூறப்பட்டது) அதற்கவர்கள் 'எங்களை கழுதைக்கும் நாய்க்கும் ஒப்பாக்கிவிட்டீர்கள்' எனக்கூறிவிட்டு அல்லாஹ்வின் மீது சத்தியமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், கிப்லாவிற்கும் இடையில் நான் கட்டிலின் மீது குறுக்க படுத்திருந்த1 நிலையில்

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தொழுக நிச்சயமாக நான் கண்டிருக்கிறேன்ஷ’ ’எனக்கு ஏதும் தேவை தோன்றும் போது, அதன்பிறகு நான் அங்கு அமர்ந்திருப்பதையும், அதனால் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நான் சங்டப்படுத்தி விடுவதையும், விட்டு வெறுத்து (அந்த) கட்டிலின் இரு கால்களுக்கு மத்தியில் நுழைந்து வெளியேறி விடுவேன்’ என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.
அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா
குறிப்பு : 1 தொழுபவருக்கு முன்பு ஆண் பெண் படுத்திருந்தால் அது தொழுகைக்கு எவ்வித இடறும் செய்வதில்லை என்பதையும் இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

## கிப்லாவை முன்னோக்க வேண்டும்

**ஹதீஸ் எண் : 261**

நிச்சயமாக ஒரு மனிதர் பள்ளியில் நுழைந்து தொழுதார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (பள்ளியில்) ஒரு ஓரத்தில் அங்கே இருந்தனர். ’தொழுகைக்காக நீ தயாராகி விட்டால் ஒளுவை நிறைவாக செய்து கொள். அதன்பிறகு கிப்லாவை முன்னோக்கி நின்று (அல்லாஹு அக்பர் என்று) தக்பீர் கூறுவாயாக’ என்ற விஷயமும் அதில் உள்ளது.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு : கிப்லாவை கண்டிப்பாக முன்னோக்கித்தான் தொழவேண்டும் என்பதை இந்த ஹதீஸில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். ஃபர்ளான தொழுகையை நிறைவேற்றும் சமயம் ஷகிப்லா பக்கம் கண்டிப்பாக இருக்க வேண்டும்.
நபிலானவற்றை வாகனங்களில் நிறைவேற்ற நேர்ந்தால் எத்திசையில் வாகனம் செல்கிறதோ அத்திசையில் நோக்கி தொழுவது ஆகும்.

## ஷாம் தேசத்தின் பால் முன்னோக்குவதை தவிர்த்து க..பாவின் பால் கிப்லாவை மாற்றுதல் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 262**

’நீங்கள் எங்கிருப்பினும் உங்கள் முகங்களை அதன் (மஸ்ஜிதுல் ஹராமின்) பால் திருப்புங்கள்’ என்ற அல்பகரா அத்தியாத்தில் உள்ள வசனம் இறங்கும் வரை பதினாறு மாதங்கள் பைத்துல் முகத்தஸின்பால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நான் தொழுது வந்தேன். (மேற்கூறப்பட்ட வசனம்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுத பிறகு இறங்கிற்று. (ஆகவே) அக்கூட்டத்திலிருந்த ஒரு மனிதர் (அங்கிருந்து) நடந்தார். (வரும் வழியில்) அன்ஸார்களில் சில மனிதர்கள் இருந்த இடத்திற்கு, அருகாமையில் சென்றடைந்தார் (அப்போது) அவர்கள் தொழுது கொண்டிருந்தனர். (கிப்லா மாற்றப்பட்டு விட்ட) அச்செய்தியை அவர்களுக்குத் தெரிவித்தார். (அதை செவியுற்றதுமே) அவர்களது முகங்களை (அல்லாஹ்வின்) வீட்டின்பால் அவர்கள் திருப்பிக் கொண்டனர் என அல்பரா உபின் ஆஜிப் ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்.
அறிவிப்பவர் : அல்பராஉ பின் ஆஜிப் ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகைக்காக இகாமத்து சொல்லப்பட்டால் அந்த கடமையாக்கப்பட்ட தொழுகையைத் தவிர வேறு தொழுகை இல்லை (கிடையாது) என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 263**

தொழுகைகக்காக இகாமத்து சொல்லப்பட்டுவிட்டால் (எந்த) ஃபர்ளான தொழுகைக்காக இகாமத்து சொல்லப்பட்டு விட்டதோ அதைத்தவிர (வேறு) தொழுகை இல்லை என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

## இகாமத்து சொல்லப்பட்டுவிட்டால் எப்போது ஜனங்கள் தொழுகைக்காக எழுந்திருக்க வேண்டும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 264**

’தொழுகைக்காக இகாமத்து சொல்லப்பட்டுவிட்டால் என்னைப் பார்க்கின்றவரை நீங்கள் (எழுந்து) நிற்க வேண்டாம்’ என

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூக(த்)தாதா ரளியல்லாஹு அன்ஹு

**இமாம் வெளி(புற)பட்டுவிட்டால் தொழுகைக்கு இகாமத்து கூறவேண்டுமென்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 265**

சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்துவிட்டால் பிலால் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் பாங்கு கூறுவார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (தங்களது வீட்டிலிருந்து) புறப்பட்டு வரும் வரை இகாமத்து கூற மாட்டார். ஆகவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளிப்பட்டுவிட்டதை அவர்(பிலால் ரளியல்லாஹு அன்ஹு) பார்த்துவிட்ட சமயத்தில்-(பிறகுதான்) -தொழுகைக்காக இகாமத்து சொல்லி விடுவார்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் ஸம்ரா ரளியல்லாஹு அன்ஹு

**இகாமத்து சொல்லப்பட்ட பிறகு இமாம் குளிப்பதற்காக வெளியேறிச் செல்லுதல் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 266**

தொழுகைக்காக இகாமத்து சொல்லப்பட்டுவிட்டது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களின் பால் வெளிப்பட்டு வருவதற்கு முன்பு (தொழுகைக்கு) வரிசைகளை (ஸஃபுகளை) நாங்கள் சரிபடுத்திக் கொண்டு நின்று விட்டோம். (அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்து தக்பீர் கூறுவதற்கு முன்பு தங்களுக்குரிய தொழும் இடத்தில் நின்று விட்டதும் (குளிப்பு அவசியம் என்பதை) நினைவு கூறிவிட்டு திரும்பிச் சென்றனர். (எங்களைப்பார்த்து) ஷஉங்கள் இடங்களிலேயே நீங்கள் இருங்கள்ஷ என எங்களுக்கு கூறினர். (ஆகவே) எங்களின் பால் அவர்கள் (மீண்டும்) வெளிப்பட்டு வரும்வரை நாங்கள் நின்றவர்களாக அவர்களை எதிர்பார்த்து கொண்டிருந்தோம் அவர்கள் உறுதியாகவே குளித்துவிட்டு (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின்

தலையிலிருந்து நீர் சொட்டச்சொட்ட (வந்து) தக்பீர் கூறி எங்களுக்கு தொழுகை நடத்தினர்.

(இந்த ஹதீஸை) அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து கேட்டதாக அறிவிப்பவர் அபூஸலாமா பின் அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் ரளியல்லாஹு அன்ஹுமா

## வரிசைகளை (ஸஃபுகளை) சரியாக (நேராக) ஆக்கிக்கொள்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 267

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகை(க்கு நிற்கை)யில் எங்களது தோள்புஜங்களை தடவிவிட்டு, 'சரியாக்கிக் கொள்ளுங்கள், வித்தியாசப் படாதீர்கள்! (வித்தியாசப்படுவீர்களேயானால்), உங்களது உள்ளங்கள் வித்தியாசப்பட்டுவிடும். உங்களில் அறிவுடையோர் தெளிவுடையோர் என்னை அடுத்து நிற்கட்டும். அதையடுத்த தகுதியிலிருப்பவர்கள்', பிறகு அதையெடுத்த தகுதியிலிருப்பவர்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக கூறிவிட்டு அபூ மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு அவர்கள்: 'இன்று நீங்கள் கடும் வேறுபாட்டில் இருக்கிறீர்கள்' எனக்கூறினார்.

அறிவிப்பவர் : அபூ மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு

## முதல் வரிசையின் சிறப்பு பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 268

தொழுகையின் அழைப்பிலும், முதல் வரிசையிலும் (கிடைக்கும் சிறப்புகளை) மனிதர்கள் அறிந்து கொள்வார்களேயானால் அதன்பிறகு அதற்காக சீட்டுப் போடுவதை தவிர வேறு வழியைக் காணமாட்டார்கள், (ஆகவே) அதற்காக சீட்டுப்போடுவார்கள். முன்னால் முந்திய நேரத்தில் வருவதன் (பலனை) மக்கள் அறிந்தால் அதன்பால் முந்திவிடுவார்கள். இஷாத் தொழுகையிலும் ஸுபுஹுத் தொழுகையிலும் (கிடைக்கும் நன்மைகளை) அவர்கள் அறிவார்களேயானால், அவ்விரு தொழுகை(யை நிறைவேற்றுவதற்)க்காக நடக்க இயலாதவர்கள் அவர்களது கைகள், கால்களில், அல்லது பின்பாகத்தில்

நகர்ந்தவர்களாக வருவர் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

ஹதீஸ் எண் : 269

'ஆண்களின் (ஸஃப்பு) வரிசைகளில் சிறப்புக்குரியது, அவற்றில் முதலாவதாகும். அவற்றில் கெட்டது கடைசியாகும். பெண்களின் (ஸஃப்பு) வரிசைகளில் சிறப்புடையது அவற்றில் கடைசியானதாகும். அந்த வரிசைகளில் கெட்டது முதாலவதாகும்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு
குறிப்பு : 1 ஸஃப்பு நிற்கின்ற போது முதலில் ஆடவர்களும், அதையடுத்து சிறுவர்களும், அதன்பிறகு பெண்களும் நிற்க வேண்டும் இவ்வாறுதான் நின்று வந்தார்கள். இந்த அடிப்படையில் தான் ஆடவர்களின் வரிசைகளில் முதலாவதும், பெண்கள் வரிசையில் ஆகக்கடைசியும் சிறப்புக்குரியது எனக்கூறுகிறார்கள். ஆண்கள் வரிசையின் கடைசிக்கு அப்பால் பெண்கள் வரிசையின் முதல் பகுதி தொடங்கி விடுகிறது. அங்கே தீமைகள் உருவாக வாய்ப்புகள் இருக்கிறது என்ற அடிப்படையில் தான் ஆண்களின் கடைசி ஸஃப்பும் பெண்களின் முந்திய ஸஃப்பும் தீயது எனக்குறிப்பிடுகிறார்கள்.

## ஒவ்வொரு தொழுகையின் போதும் ஷமிஸ்வாக்குஷ செய்வது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 270

'விசுவாசிகளுக்கு சிரமம் ஏற்படும் என்று கருதியிருக்காவிடில் (ஜுஹைரின் ஹதீஸில் எனது என வந்துள்ளது) ஒவ்வொரு தொழுகையின் போதும் மிஸ்வாக்குச் செய்யு (பல்துலக்கு) மாறு அவர்களுக்கு நான் கட்டளையிட்டிருப்பேன்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

குறிப்பு : ஹதீஸில் கூறப்பட்ட ஷஷசிவாக்ஷஷ எனும் வார்த்தை-சா(க்)க- தேய்த்தான் எனும் மூலபப்பதத்திலிருந்து வந்ததாகும். பல்லின் அழுக்கை நீக்குவதற்காக உபயோகப்படுத்தப்படும் குச்சியோ, அல்லது அது போன்ற சாதனங்களே மிஸ்வா ஆகும். மிஸ்வாக்குச் குச்சி என மக்களால் அறியப்பட்டிருக்கும் அக்குச்சியினால் பல்துலக்குவது விரும்பத்தக்கதாகும். அதல்லாத வேறு வகை குச்சியினால், விரலால் பல்துலக்குவது அனுமதிக்கப்பட்டதாகும். ஆக பல்துலக்குவது குறிப்பாக அக்குச்சியினால் பல் துலக்குவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் மிகக்கூடுதலான நேரங்களில் செய்யப்பட்டு வந்த இறைவனுக்கு மிக விருப்பமான சரியான ஒரு செயலாகும். ஆகவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிக விரும்பி செய்த அச்செயலை நாமும் விருப்பத்துடன் செய்ய அந்த அல்லாஹ்வே நமக்கு நல்லுதவியை நல்குவானாக! ஆமீன். மேற்கூறப்பட்ட ஹதீஸில் ஒவ்வொரு தொழுகையின் போதும் என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. புகாரியில் ஷஒவ்வொரு ஒளுவின் போதும் என்ற வார்த்தை பதிவாகியுள்ளது. ஹுதைபா ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பு முஸ்விமில் பதிவாகியுள்ளது. இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் அறிவிப்பில் மிஸ்வாக்கினால் பல்துலக்கிவிட்டு பிறகு உளுச்செய்தனர் என்பதும் முஸ்லிமில் பதிவாகியுள்ளது. இவையாவும் ஒளுவின் போது தான், என்பதை நமக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே ஒளுவின் போது மிஸவாக்ச் செய்தது போலவே ஒவ்வொரு தொழுகையின் போது மிஸ்வாக்ச் செய்வதை குறைகானுவதோ அதை அசுத்தமாக கருதுவதோ அல்லது அவ்வாறில்லை எனக்கூறுவதோ நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விடாது செய்து வந்த செயலுக்கு மாற்றமானதாகும் என்பதை வாசகர்களின் கவனத்திற்கு வைக்கிறோம்.

## தொழுகையில் நுழைகின்ற போது கூறுவதின் சிறப்பு பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 271**

ஒரு மனிதர் வந்து வரிசையில் (ஸஃப்பில்) நுழைந்தார் அவருக்கு மூச்சு திணறியது அப்போதவர், 'அல்ஹம்து லில்லாஹி ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரக்கன் ஃபீஹி', எனக்கூறிவிட்டார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தங்களது தொழுகையை முடித்துக் கொண்டு, சில வார்த்தைகளை உங்களில் கூறியவர் யார்? எனக்கேட்டனர் (அங்கிருந்த) கூட்டத்தினர் (யாரும்) பேசவில்லை. (ஆகவே இரண்டாவது முறையாக) அவ்வார்த்தைகளை கூறியவர் யார்? அவர் தவறாக எதையும் கூறிவிடவில்லை எனக்கூறினர். (அதைக்கேட்ட) ஒரு மனிதர் நான் தொழுகைக்கு வந்தேன், எனக்கு மூச்சு முட்டியது, ஆகவே அதை நான் கூறினேன் என்றார். அதற்கு (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்: பன்னிரெண்டு மலக்குகள்-அவர்களில் யார் அதை (அல்லாஹ்வின் சந்நிதானத்தின் பால்) உயர்த்துவது? என்று போட்டியிட்டுக் கொண்டு சென்றதை நிச்சயமாக நான் கண்டேன் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

**தொழுகையில் இரு கைகளையும் உயர்த்துவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 272**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகைக்காக (தயாராகி) நின்று விட்டால் தங்களது இரு கைகளையும் இரு தோல்புஜங்களுக்கு சமமாக இருக்கும் வரை உயர்த்திவிட்டு, அதன்பிறகு தக்பீர் கூறுவார்கள் (அடுத்து) ருகூஉ செய்ய நாடுவார்களேயானால், அது போன்றே செய்வார்கள். ருஉவிலிருந்து நிமிர்வார்களேயானால் அது போன்றே செய்வார்கள். ஸுஜுதி லிருந்து தலையை உயர்த்த கூடிய சமயத்தில் அதைச் செய்யமாட்டார்கள் என இப்னு, உமர் ரளியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கிறார்கள்.

**எதைக் கொண்டு தொழுகையை ஆரம்பிக்கப்படவும், முடிக்கப்படவும் வேண்டுமோ? அது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 273**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தக்பீரைக் கொண்டும் 'அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமின்' என ஓதுவது கொண்டும், தொழுகையை ஆரம்பிக்கக் கூடியவர்களாக இருந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ருகூஉ செய்வார்களாயின், தங்களது தலையை உயர்த்தவோ தாழ்த்தவோ மாட்டார்கள். அவ்விரு நிலைகளுக்கும் மத்தியில் (தலையை இருக்கச் செய்வார்கள்) ருகூஉ விலிருந்து தங்களது தலையை உயர்த்துவார்களாயின, சரியாக (நிலையில்) நிற்கும் வரை ஸஜ்தா செய்ய(ச் செல்ல) மாட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஜ்தா விலிருந்து தங்களது தலையை உயர்த்துவார்களாயின், சரியாக அமரும் வரை (இரண்டாவது) ஸஜ்தாவைச் செய்யமாட்டார்கள். ஒவ்வொரு இரண்டு ரக் அத்திலும் அத்தஹிய்யாத்தை ஓதக்கூடியவர்களாக இருந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது இடது காலை விரித்து வைக்கக்கூடியவர்களாகவும், வலது காலை நட்டு வைக்கக்கூடியவர்களாகவும் இருந்தனர். ஷைத்தானின்1 இருப்பிலிருந்து தடுக்கக்கூடியவர்களாக இருந்தனர். கீறிக் கிழித்து திண்ணும் வனவிலங்குகள் போன்று ஒரு மனிதர் தனது கொடங்களை விரிப்பதை விட்டும் தடுக்கக் கூடியவர்களாக இருந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது தொழுகை(களை)யை ஷதஸ்லீமைஷ (அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத் துல்லாஹி, எனக்கூறி) கொண்டு முடிக்கக் கூடியவர்களாக இருந்தனர். என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள்.

குறிப்பு : பின்பகுதியை தரையில் வைத்து, இரு கெண்டை கால்களையும் நட்டவைத்து, இரு கைகளையும் முன்னால் ஊன்றிக் கொள்வது.

### தொழுகையில் தக்பீர் கூறுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 274**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகைக்காக தயராகி விட்டால், நிலையில் நிற்கின்ற

சமயத்தில் தக்பீர் கூறுவார்கள். அதன்பிறகு ருகூஉ செய்யும் பொழுது ஸமி அல்லாஹுலிமன் ஹமிதஹ் எனக்கூறுவார்கள். அதன்பிறகு நின்ற நிலையில் ரப்னா வல(க்)கல் ஹம்து எனக்கூறுவார்கள். அதன்பிறகு ஸஜ்தாவிற்கு செல்லும் சமயத்தில் தக்பீர் கூறுவார்கள். அதன்பிறகு (ஸஜ்தாவிலிருந்து) தங்களது தலையை உயர்த்தும் சமயத்தில் தக்பீர் கூறுவார்கள். அதன்பிறகு (இரண்டாவது ஸஜ்தாவிலிருந்து) தலையை உயர்த்தும் சமயத்தில் தக்பீர் கூறுவார்கள். அது போன்றே தொழுகையை முடிக்கும் வரை எல்லாத் தொழுகை (ரக்அத்)களிலும் செய்வார்கள்.
இரண்டாவது ரக்அத்தில் அமர்ந்த பிறகு எழுந்திருக்கும் சமயத்தில் தக்பீர் கூறுவார்கள். என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்து விட்டு (அதன்பின்னர்) 'நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகைக்கு ஒப்பான (தொழுகை அதைப்போன்ற)தை உங்களுக்கு செய்து காட்டியவனாக இருக்கிறேன்.' (உங்களது தொழுகைகளை விட என் தொழுகை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகைக்கு மிக ஒப்பாக-அதைப்போன்றதாகவே-உள்ளது) என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.
தக்பீரைக் கொண்டும், மற்ற செயல்களைக் கொண்டும்,

## இமாமைவிட முந்திச் செல்வது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 275

இமாமை (விட) முந்திச் செல்லாதீர்கள். (ஆகவே), அவர் தக்பீர் கூறினால் நீங்களும் தக்பீர் கூறுங்கள் 'வலள்ளால்லீன்' என அவர் கூறினால் (நீங்கள்) ஆமீன் எனக்கூறுங்கள் அவர் ருகூஉ செய்தால் நீங்களும் ருகூஉ செய்யுங்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு (மார்க்க விஷயங்களை செல்லி) கற்றுத் தரக்கூடியவர்களாக இருந்தனர்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

மஃமூம் (தொழுகை நடத்தும்) இமாமைத்(பின்) தொடர்தல் பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 276**

குதிரையிலிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஒரு முறை) விழுந்து விட்டார்கள். அவர்களது வலது பாதத்தின் தோலில் அடிப்பட்டு கீரல் ஏற்பட்டு விட்டது. அவர்களை நலம் விசாரிக்க நுழைந்தோம். அப்போது தொழுகை நேரம் வந்துவிட்டது. அமர்ந்தவாரே (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) எங்களுக்கு தொழுகை நடத்தினார்கள். அவர்களுக்கு பின்னால் நாங்களும் அமர்ந்தவாரே தொழுதோம். தொழுகையை அவர்கள் முடித்துக்கொண்டு 'இமாம் ஆக்க(நியமிக்க)ப்பட்டது, அவரை பின் தொடரப்படுவதற்காகத்தான். ஆகவே, அவர் தக்பீர் கூறினால் நீங்களும் தக்பீர் கூறுங்கள். அவர் ஸஜ்தா செய்தால் நீங்களும் ஸஜ்தா செய்யுங்கள். அவர் (ருகூவிலிருந்து) நிமிர்ந்தால் நீங்களும் நிமிருங்கள். ஸமி அல்லாஹு லிமன் ஹமிதஹ், என அவர் கூறினால் நீங்கள் ரப்பனாவல(க்)கல் ஹம்து எனக்கூறுங்கள். அவர் அமர்ந்து தொழுதால் நீங்களனைவரும் அமர்ந்தே தொழுங்கள் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

இருகைகளில் ஒரு கையை மறு கையின் மீது தொழுகையில் வைப்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 277**

தொழுகையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நுழைந்த (ஆரம்பித்த) போது தங்களது இருகரங்களையும் உயர்த்திக் தக்பீர் கூறினர். (ஹம்மாம் என்பவர், 'தங்களது இரு காதுகளுக்கு நேராக' எனக்கூறுகிறார்) அதன்பிறகு தங்களது துணியைக்கொண்டு போர்த்திக் கொண்டனர். அதன்பிறகு வலக்கரத்தை இடக்கரத்தின் மீது வைத்தனர். ருகூஉ செய்ய அவர்கள் நாடிய போது தங்களது இரு கரங்களையும் துணிக்குள்ளிலிருந்து வெளிப்படுத்தி, பிறகு அவ்விரண்டையும்

அவர்கள் உயர்த்தி, அதன்பிறகு தக்பீர் கூறி ருகூஉ செய்தனர். ஸமி அல்லாஹு லிமன் ஹமிதஹ், எனக்கூறிய போது தங்களது இருகரங்களையும் உயர்த்தினர். (அதையடுத்து) ஸஜ்தா செய்தபொழுது தங்களது இருமுன்கைகளுக்கு மத்தியில் ஸஜ்தா செய்தனர். (இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் செய்ய- வாயில் பின் ஹுஜ்ர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டதாக அறிவிக்கிறார்கள்.

## தக்பீருக்கும், கிராஅத்துக்கும் இடையில் சொல்லப்படு(துஆ கூறு)வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 278

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகைக்காக நின்றார்கள், 'வஜ்ஜஹ்த்து வஜ்ஹிய வில்லதீ:பதரஸ்ஸமா வா(த்)தி வல் அர்ள ஹனீ:பன் வமா அன மினல் முஷ்ரி(க்)கின்', 'இன்னஸலாத்தீ, வநுஸுக்கீ, வமஹ்யாய, வமமாத்தீ லில்லாஹி ரப்பில் ஆலமீன். லாஷரிக்கலஹு வபிதாலிக்க உமிர்த்து வஅன மினல் முஸ்லிமீன். அல்லாஹும்ம அன்(த்)தல் மலி(க்)கு லாஇலாஹ இல்லா அன்(த்)த, அன்(த்)த ரப்பீ, வஅன அப்து(க்)க ளலம்(த்)து ந:பீஸீ வ:தர:ப்த்து பிதன்பீ ப:பிர்லீ துனூபீ, ஜமீஅன், இன்னஹு லாயஃபித்துனூப இல்லா அன்(த்)த வஹ்தினீ லி அஹ்ஸனில் அக்லா(க்)கி லாயஹ்தீ லி அஹ்ஸனிஹா இல்லா அன்(த்)த வஸ்ரி:ப் அன்னீ ஸய்யி அஹா லாயஸ்ரி:ப் அன்னீ ஸய்யிஅஹா இல்லா அன்(த்)த லப்பை(க்)க வஸஅதை(க்)க வல்கைரு குல்லுஹு :பீ யதை(க்)க, வஷ்ஷர்ரு லைச இலை(க்)க அன பி(க்)க வஇலை(க்)க தபாரக்த வதஆலை(த்)த அஸ்த:பிரு(க்)க வஅ(த்)தூபு இலைக்க' எனக்கூறுவார்கள்.

அடுத்து ருகூஉ செய்வார்களோயானால் 'அல்லஹும்ம ல(க்)க ர(க்)க:த்து வபி(க்)க ஆமன(த்)து வல(க்)க அஸ்லம்(த்)து, கஷஅல(க்)க ஸம்ஈ, வபஸரீ, வமுக்கீ வஅள்மீ வஅஸபீ' எனக்கூறுவார்கள். (ருகூவிலிருந்து) உயருவார்களானால் 'அல்லஹும்ம ரப்பனா ல(க்)கல்ஹம்து, மில்அஸ்ஸமாவா(த்)தி வமில்அல்அர்ளி, வமில்அ மாபைனஹுமா, வமில்அ மா ஷி:(த்)த

மின் ஷைஇின் பஅதுஷஷ எனக்கூறுவார்கள். அடுத்து ஷஸஜ்தாஷ செய்வார்களேயானால் ஷஷஅல்லாஹும்ம ல(க்)க ஸஜத்து, வபி(க்)க ஆமன்(த்)து, வல(க்)க அஸ்லம்(த்)து, ஸஜத வஜ்ஹீலில்லதீ கலக்கஹு வஸவ்வரஹு, வஷக்க ஷம்அஹு, வபஸரஹு, தபாரக்கல்லாஹு, அஹ்ஸனுல் காலிகீன்ஷஷ அதன்பிறகு அத்தஹியாத்திற்கும் ஸலாம் கொடுப்பதற்கும் மத்தியில் அல்லாஹும்ம:ஃபிர்லீ மாகத்தம்(த்)து வமா அக்கர்த்து வமா அஸ்ரர்(த்)து வமா அ:ஃலன்(த்)து வமா அஸ்ரப்(த்)து வமா அன்(த்)த அ:ஃலமு பிஹீ மின்னீ, அன்(த்)தல் முகத்திமு, வஅன்(த்)தல் முஅக்கிரு, லாஇலாஹ இல்லா அன்(த்)தஷஷ எனக்கூறுவார்கள்.

அறிவிப்பவர் : அலிபின் அபூதாலிப் ரளியல்லாஹு அன்ஹு

இனியொரு அறிவிப்பில், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை ஆரம்பித்தால் தக்பீர் கூறிவிட்டு அதன்பிறகு வஜ்ஜஹ்த்து வஜ்ஹிய என தொடங்கி இறுதிவரைக் கூறுவார்கள் என வந்துள்ளது.

குறிப்பு : தக்பீருக்குப் பிறகு தொழுகையை ஆரம்பிக்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருசில துஆக்களை ஓதியுள்ளார்கள். அதில் இதுவும் ஒன்று. இந்த நீண்ட துஆவை இரவுத் தொழுகையில் ஓதினார்கள் என்று முஸ்லிமில் பதிவாகியுள்ளது. இரவுத்தொழுகை எனும் வார்த்தை :ஃபர்ளல்லாத தொழுகையில் இதை ஓதினார்கள் என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதை உரக்கக் கூறுவதை விட்டுவிடுதல் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 279

அல்லாஹ்வின் தூதர் அவர்களுடன் அபூபக்ரு, உமர், உஸ்மான் (ரளியல்லாஹு அன்ஹும் அஜ்மாஈன்) ஆகியோருடனும் நான் (அனஸ்) தொழுதிருக்கிறேன். அவர்களில் எவரையும் பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்று (உரத்த சப்தமிட்டு) ஓத நான் கேட்டதில்லை என என அனஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

**பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 280**

எங்களுக்கு மத்தியில் ஒருநாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருந்த போது உட்கார்ந்து இருந்தநிலையில் தூங்கிவிழித்து அதன்பிறகு மலர்ந்த முகத்துடன் தங்களது தலையை உயர்த்தினர். (அப்போது) உங்களைச் சிரிக்க வைத்தது எது என நாங்கள் கேட்டோம். அப்போது அவர்கள் கொஞ்சம் முன்பு என்மீது ஒரு அத்தியாயம் இறக்கிவைக்கப்பட்டது எனக்கூறி 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் இன்னா அஃதைனா கல்கவ்தர் பஸல்லி லிரப்பிக்க வன்ஹர் இன்னஷானி அ(க்)கஹுவல் அப்தர்' என்பதை ஓதினர்.

அதன்பிறகு கவ்தர் என்றால் என்ன என உங்களுக்குத் தெரியுமா? எனக்கேட்டனர். அல்லாஹ்வும் அவனது ரசூலும் மிகத்தெரிந்தவர்கள் எனக் கூறினோம். 'நிச்சயமாக அது ஒரு ஆறு.' கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய எனது ரட்சகன் அதை எனக்கு வாக்களித்துள்ளான். அதன்மீது (அதில்) நிறைய நன்மைகள் உண்டு. அது ஒரு நீர் தடாகம் என்று உம்மத்தவர்கள் மறுமைநாளின் போது அதன்பால் வருவர். அதன் (நீரை அறுந்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும்) பாத்திரங்கள் வானத்தின் நட்சத்திரங்களின் எண்ணிக்கை கொண்டதாகும். ஒரு அடியான் அதிலிருந்து ஈர்க்கப்படுவான் (விரட்டப்படுவான்). அப்போது நான் என் இரட்சகா! நிச்சயமாக அவர் என் உம்மத்திலுள்ளவர் எனக்கூறுவேன். அதற்கு அவர், உமக்குப்பிறகு மார்க்கத்தில் என்ன புதுமைகளை அவர் உண்டுபண்ணினார் என உமக்குத் தெரியாது என்று (அல்லாஹ்) கூறுவான் என அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

மொழிபெயர்ப்பாளர் குறிப்பு :

உலக காரியங்களில் பித்அத்து (புதியவை)களாவன ஆகாய விமானத்தையும், ரயிலையும், காரையும் பல நவீன மாதிரி

தொழும்பள்ளிகள் கட்டுவதையும், அவற்றில் மிக அழகான விலை உயர்ந்த விரிப்புகள், கம்பளங்கள் விரிக்கப்படுவதையெல்லாம் உதாரணமாகக் காட்டி இதை ஏற்கின்ற நாம், இவைகளையெல்லாம் மார்க்க ரீதியில் அனுமதிக்கின்ற நாம், வணக்க வழிபாடுகளில் நாம் விரும்புகின்ற (நம் முன்னோர்களில்) யாரை நாம் பெரியவராகக் கருதுகிறோமோ அவர்கள் காட்டியதாகக் கூறி அவர்கள் செய்த, அல்லது செய்யாத தொழுகைகளையும், நோன்புகளையும் ஏன் ஏற்கக்கூடாது, முந்தியதை ஏற்கின்றவர்கள் பிந்தியதை மறுப்பதேன்? எனக்கேட்கின்றனர். இஸ்லாத்தில் வணக்க வழிபாடுகள் என எத்தனை உண்டோ அவை அனைத்துக்கும் அடிப்படை முன்மாதிரியாகக் கொண்டு நாம் பின்பற்றி நடக்க உரியவர்கள் நமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மாத்திரமே. 'நிச்சயமாக நேர்வழியில் மிகச் சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நேர்வழியே' என்ற அந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்றுகிணங்க, அவர்களை மாத்திரமே பின்பற்றுவதை விடுத்து மார்க்கத்தில் மனிதர்களால் வணக்கமாகக் கருதி தொழுகை என்றும், நோன்பு என்றும் திணிக்கப்பட்டவைகளை கண்டிப்பாகத் தவிர்த்து தொழுகை வகைகளில், அவர்கள் காட்டிச்சென்ற தொழுகைகளையும் நோன்பு வகைகளில் அவர்கள் காட்டிச்சென்ற நோன்பு வகைகளையும், ஸலவாத்து வகையில் அவர்கள் கற்றுத்தந்த ஸலவாத்துகளையும் ஏற்று நடந்து, நமது வணக்க வகைகளை அங்கீகரிக்கப்பட்டதாகவும் ஆக்கிக்கொண்டு, நாளை மஹ்ஷர் மைதானத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நீர்தடாகத்தில் நீரருந்தும் பெரும் பேற்றினை பெற்றிட நம் அனைவருக்கும் வல்ல அல்லாஹு நல்லுதவி செய்வானாக! ஆமீன். வணக்கங்களில் பிதஅத்களைத் தவிர்த்தால் மட்டுமே அப்பாக்கியம் கிடைக்கும் என்பதை இந்த ஹதீஸ் தெளிவு படுத்துகிறது. நாளை மறுமையில் அதிலிருந்து நீரருந்தவிடாது தடுக்கப்பட்டு துரத்தப்படும் நிலைக்கு

ஆளாகுவதிலிருந்து வல்ல அல்லாஹ் என்னையும் உங்களையும் காப்பாற்றுவானாக! ஆமீன்.

**தொழுகையில் உம்முல் குர்ஆன் (அல்பாத்திஹா அத்தியாயத்தை) ஓதுவது கட்டாயம் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 281**

யார் ஒரு தொழுகையைத் தொழுவது அதில் உம்முல்குர்ஆனை ஓதவில்லையோ அவரது தொழுகை குறைக்கப்பட்ட(நிறைவற்ற)தாகும் என மும்முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள். நாங்கள் இமாமுக்குப்பின்னால் இருக்கிறேம். (அப்போது ஓத வேண்டுமா ?) என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் கேட்கப்பட்டது. உன் மனதிற்குள் அதை நீ ஓதிக்கொள் என கூறினார்கள். அடுத்து தொழுகையை எனக்கும் எனது அடியானுக்கும் மத்தியில் நேர்பாதியாக பங்கு வைத்துவிட்டேன். எனது அடிணான் எதைக்கேட்டானோ அது அவனுக்கு உண்டு.

அடியான் 'அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமின்' எனக் கூறுவானேயானால், எனது அடியான் என்னை புகழ்ந்து விட்டான் என்பதாக உயர்வான அல்லாஹ் கூறுகிறான்.

'அர்ரஹ்மானிர்ரஹிம்' என அவன் கூறினால், என் மீது எனது அடியான் புகழ்ச்சியைக் கூறிவிட்டான் என அல்லாஹ் கூறுகிறான். 'மாலிகி யவ்மித்தீன்' என அவன் கூறினால் எனது அடியான் என்னை உயர்த்தி கௌரவித்து விட்டான் என அல்லாஹ் கூறுகிறான்.

அடுத்து ஒரு முறை என்பால் எனது அடியான் தன்னை ஒப்படைத்து விட்டான் எனக்கூறுகிறான். அவன் 'இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தஈன்' என கூறுவானேயானால் இது எனக்கும் எனது அடியானுக்கும் மத்தியில் உள்ளதாகும். எனது அடியான் எதைக் கேட்டானோ அது அவனுக்கு உண்டு.

'இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம் ஸிராத்தல்லதீன அன் அம்த

அலைஹிம் கைரில் மக்ழூபி அலைஹிம் வலழ்ழால்லீன்’ என அவன் கூறினால் இது என் அடியானுக்குரியது. என் அடியான் எதைக் கேட்டானோ அது அவனுக்கு உண்டு என உயர்வான அல்லாஹ் கூறிவிட்டான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நிச்சயமாக நான் கேட்டிருக்கிறேன் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## தொழுகையில் இயன்றவரை ஓதுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 282**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பள்ளியில் நுழைந்தனர். (அப்போது) ஒரு மனிதர் நுழைந்து தொழுது விட்டு அதன்பிறகு வந்து அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஸலாம் கூறினார். அல்லாஹ்வின் தூதர் (அலைஹிஸலாம்) அவர்கள் பதில் சொல்லிவிட்டு, திரும்பச் சென்று தொழுவீராக! நிச்சயமாக நீர் தொழவில்லை என்றனர். அம்மனிதர் திரும்பிச்சென்று முன்பு தொழுததைப்போன்றே தொழுதுவிட்டு, அதன்பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்பாால் வந்து (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு ஸலாம் கூறினார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உன் மீது ஸலாம் உண்டாகுக, எனக்கூறிவிட்டு அதன்பிறகு திரும்பிச் சென்று தொழுவீராக! காரணம் நிச்சயமாக நீர் தொழவில்லை எனக் கூறினார்கள். இவ்வாறு அந்த மனிதர் மூன்று முறை செய்யும் வரை திரும்ப திரும்ப கூறினார். (அடுத்த அந்த) மனிதர் உண்மையைக் கொண்டு உங்களை அனுப்பி வைத்தவனின் மீது சத்தியமாக! இது அல்லாததை அழகாகச் செய்ய என்னால் இயலாது. ஆகவே எனக்குக் கற்றுத்தாருங்கள் என்றார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ’தொழுகைக்காக நீர் தயாராகிவிட்டால் தக்பீர் கூறுவீராக. அதை அடுத்து குர்ஆனில் உம்முடன் இருப்பவற்றில் (தெரிந்தவற்றில்) இலேசான(குர் ஆனிலிருந்து எதை இலகுவாக ஓத வருமோ,

உமக்கு அ)தை ஓதுவீராக. அதன்பிறகு அமைதியாக ருகூஉ செய்யும்வரை ருகூஉவில் இருப்பீராக. அதன்பிறகு சரியாக நீர் நிற்கும் வரை நிமிர்ந்து விடுவீராக! அதன்பிறகு அமைதியாக சாஷ்டாங்கம் செய்வீராக. அதன்பிறகு அமைதியாக இருப்பு இருக்கின்ற வரை உயர்வீராக. அதன்பிறகு உமது எல்லாத் தொழுகையிலும் அவ்வாறே செய்வீராக' எனக்கூறினர்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**இமாமுக்கு பின்னால் ஓதுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 283**

எங்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் லுஹர் தொழுகை அல்லது அஸர் தொழுகையை தொழ வைத்தார்கள். (தொழுகையை முடித்துக் கொண்டு) எனக்குப்பின்னால் 'ஸப்பிஹிஸ்மரப்பிகல் அஃலா'வை (என்ற அத்தியாத்தை) ஓதியது யார்? எனக்கேட்டனர். (அப்போது) ஒரு மனிதர் நான் எனக்கூறி, அதன்மூலம் நன்மையைத் தவிர வேறு எதையும் நான் நாடவில்லை என்றார். நிச்சயமாக உங்களில் சிலர் அதை ஓதியதன் மூலம் என்னோடு பிணங்கிக் கொண்டனர் எனக்கூறினார்கள்.

**புகழுதல், ஆமீன் கூறுதல் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 284**

இமாம் ஆமீன் கூறினால் நீங்களும் ஆமீன் கூறுங்கள். நிச்சயமாக யாருடைய ஆமீன் அமரர்களின் ஆமீனுக்கு ஒத்து இருக்கிறதோ அவரது பாவத்தில் முந்தியதை அவருக்காக மன்னிக்கப்படுகிறது என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஆமீன்' எனக் கூறக்கூடியவர்களாக இருந்தனர் என இப்னு ஷிஹாப் கூறுகிறார்.

**ஸுபுஹு தொழுகையில் ஓதுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 285**

ஸம்மாக் பின் ஹர்ப் ரளியல்லாஹு அன்ஹு என்பவர் ஜாபிர் பின் ஸம்ரா என்பவரிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகையைப் பற்றிக்கேட்டேன். (அதற்கவர்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை இலோசாகத் தொழுது வந்தார்கள். அவர்களின் தொழுகையைப் போன்று தொழக்கூடியவர்களாக அவர்கள் இருக்கவில்லை எனக்கூறினார்.

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ்ரு(த் தொழுகையி)ல் 'காப் வல்குர்ஆனில் மஜீது'வை (எனும் அத்தியாயத்தை)யும், அது போன்றதையும் ஓதக்கூடியவர்களாக இருந்தனர் என எனக்கு அவர் அறிவித்தார் எனவும் கூறினார்.

## லுஹறிலும், அஸரிலும் ஓதுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 286**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு தொழ வைக்கக்கூடியவர்களாக இருந்தனர். லுஹறிலும் அஸரிலும் முந்திய இரு ரக்அத்துகளில் அல்ஹம்து அத்தியாத்தையும் ஒரு அத்தியாத்தையும் ஓதக் கூடியவர்களாக இருந்தனர். சில சமயங்களில் வசனத்தை எங்களுக்கு கேட்கச் செய்வார்கள். பிந்திய இரண்டு ரக்அத்துகளில் 'அல்ஹம்து' அத்தியாத்தை மட்டும் ஓதக் கூடியவர்களாக இருந்தனர்.
அறிவிப்பவர் : அபூகதாதா ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 287**

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் லுஹர் தொழுகையில் முந்திய இரண்டு ரக்அத்துகளில் ஒவ்வொரு ரக்அத்திலும் முப்பது வசனங்கள் அளவும் பிந்திய இரண்டு ரக்அத்துகளில் பதினைந்து வசனங்கள் அளவும் அல்லது அதில் (முப்பதில்) பாதி அளவு (ஓதக் கூடியவர்களாகவும் இருந்தனர்). அஸர் தொழுகையில் இரு ரக்அத்துகளில் ஒவ்வொரு ரக்அத்திலும் பதினைந்து வசனங்கள் ஓதுகின்ற அளவிற்கும் பிந்திய இரு ரக்அத்துகளில் அதில் பாதி அளவையும் ஓதக்கூடியவர்களாக இருந்தனர்.

அறிவிப்பவர் : அபூஸயீது அல் குத்ரீ ரளியல்லாஹூ அன்ஹூ

**மஃக்ரிபு தொழுகையில் ஓதுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 288**

வல்முர்ஸலாத்தி உர்ஃபன் என்ற அத்தியாத்தை இப்னு அப்பாஸ் ரளியல்லாஹூ அன்ஹூ அவர்கள் ஓதிக் கொண்டிருந்ததை நிச்சயமாக உம்முல் பழ்ல் பின்த்துல் ஹாரிஸ் செவியுற்று விட்டு, எனதருமை மகனே! 'நிச்சயமாக அது (வல்முர்ஸலாத்தி உர்ஃபன் என்பது) தான் மக்ரிபில் அதை நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதுகின்ற போது கடைசியாக நான் செவியுற்றதாகும் என்பதை, இந்த அத்தியாத்தை நீ ஓதியதன் மூலம் எனக்கு நீ நினைவுபடுத்திவிட்டாய் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹூ அன்ஹூ

**கடைசி இஷாவில் ஓதுவது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 289**

முஆது ரளியல்லாஹூ அன்ஹூ அவர்கள் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுது முடித்துவிட்டு அதன்பிறகு வந்து தனது கூட்டத்தாருக்கு இமாமத் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். ஒரு இரவில் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுடன் இஷாத் தொழுகையை தொழுது விட்டு அதன்பிறகு தனது கூட்டத்தாரிடம் வந்து அவர்களுக்கு இமாமாக நின்று தொழுகையை நடத்தினர். (அவ்வாறு தொழுகை நடத்தியபோது) அல்பகாரா அத்தியாத்தை (ஓத) ஆரம்பித்தார். (அப்போது) ஒரு மனிதர் (கூட்டத்திலிருந்து) திரும்பி ஸலாம் சொல்லிவிட்டு அதன்பிறகு அவர் தனியாக தொழுது விட்டு திரும்பிவிட்டார். (அவரைப் பார்த்த ஜனங்கள்) இன்னவரே! நீர் நயவஞ்சகராக ஆகிவிட்டீர் என்றார்கள். அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவ்வாறில்லை. நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களிடம் சென்று இதைப்பற்றி நான் உறுதியாகவே அறிவிப்பேன் எனக்கூறினார். (அவர் கூறியவாரே) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து,

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிச்சயமாக நாங்கள் (வயல்களுக்கு) தண்ணீர் இறைத்து ஊற்றுபவர்கள். பகலெல்லாம் வேலை செய்கிறோம். நிச்சயமாக மஆத் ரளியல்லாஹு அன்ஹு உங்களுடன் இஷாவைத் தொழுதுவிட்டு வருகின்றார். அதன்பிறகு (எங்களுக்கு இமாமாக தொழவைக்கின்ற போது) அல்பகரா அத்தியாத்தை ஓத ஆரம்பித்தார் என்றார். அதைக்கேட்ட அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஅதை நோக்கி முன்னோக்கி வந்து முஆதே! நீர் குழப்பம் செய்கிறீரா?ஷ எனக்கேட்டவிட்டு இன்ன இன்னவற்றை ஓதுவீராக என்றனர்.

வஷ்ஷம்ஷி வளுஹாஹா அத்தியாத்யைும் வள்ளுஹா அத்தியாத்தையும், வல்லைலி இதாய ஃக்ஷா அத்தியாத்தையும் ஸப்பிஹிஸ்மரப்பிக்கல் அஃலா அத்தியாத்தையும் ஓதுவீராக! என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என (ஜாபிர் தமக்கு அறிவித்ததாக உறுதியாகவே அபூஜ்ஜுபைர் நமக்கு அறிவித்தார் என அம்ருவிடம் கூறினேன். அம்ரும் இது போன்றே (கூறினார் என) ஸுப்யான் கூறுகிறார்.

## ருகூவிலும் ஸுஜுதிலும் இமாமை முந்திச் செல்வது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 290

எங்களுக்கு ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகை நடத்தினார்கள். தொழுகையை முடித்துக் கொண்டதும் தங்களது முகத்தை எங்களின் பக்கமாக திருப்பி முன்னோக்கினார்கள். ஷமனிதர்களே! நிச்சயமாக நான் உங்களின் இமாமாக இருக்கிறேன். ஆகவே ருகூவிலும் ஸுஜுதிலும் நிலையிலும் திரும்புவ(ஸலாம் கொடுப்ப)திலும் தொழுகையில் என்னை முந்தாதீர்கள். நிச்சயமாக நான் உங்களை எனக்குப் முன்னும் பின்னும் பார்க்கிறேன் எனக் கூறினார்கள்.
முஹம்மதின் உயிர் யார்வசம் இருக்கிறதோ! அவனின் மீது சத்தியமாக! நான் பார்ப்பதையெல்லாம் நீங்கள் பார்த்தால்

குறைவாகச் சிரிப்பீர்கள். அதிகமாக அழுவீர்கள் என்றனர். (அங்கிருந்தவர்கள்) அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்ன கண்டீர்கள்? எனக்கேட்டனர். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுவனத்தையும் நரகத்தையும் கண்டேன் என்றனர்.

அறிவிப்பவர் : அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு :

இந்த பார்வை அல்லாஹ்வின் அனுமதியோடு இந்நிலையில் மட்டுமே இருந்தது. இதுவன்றி எல்லா நேரங்களிலும் இதுபோன்றே பார்கிறார்கள் என்பதற்கு குர்ஆன் ஹதீஸில் ஆதாரம் இல்லை. ஒரு சிலர் எல்லா நேரங்கள்-நிலைகளிலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் ஆஜராகிக்கொண்டும் இருக்கிறார்கள் என்று கூறியும் அதையே கொள்கையாகக் கொண்டும் உள்ளனர். அல்லாஹ்வின் வேதத்தில் பல நூற்றுக்கணக்கான வசனங்களும் அவற்றிற்கு விளக்கங்களாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய பல நூறு ஹதீஸ்களும் இக்கொள்ளை தவறானது என்றும் இக்கொள்கையை கொண்டிருப்பவர்கள் மன்னிக்கப்பட மாட்டார்கள் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. 'முக்காலத்தின் நிலைகளை அறிகின்ற ஆற்றல் அந்த வல்ல நாயன் அல்லாஹ் ஒருவனைத்தவிர வேறுயாருக்கும் இல்லை'. நபிமார்கள் அலைஹிமுஸலாம் என்பவர்கள் அல்லாஹ்விடத்திலிருந்து அமரர் மூலமாக அல்லது திரைக்கு அப்பாலிருந்து அல்லது மனதில் உதிக்கும் உதிப்பாக-அறிவிப்பாக ஆகிய இம்மூன்றுவழிகளில் உயர்வான அல்லாஹ்விடமிருந்து செய்திகள் அறிவிக்கப்பட்டு அச்செய்திகளை வாங்கி அறிவிக்கக்கூடியவர்களே ஆவார். அல்லாஹ்விடமிருந்து அறிவிப்புகள் கிடைக்காதவரை வானம் பூமி இரண்டிலும் நடக்கக்கூடிய எந்த விஷயத்தைப்பற்றியும் அவர்களால் நிச்சயமாக தெரிந்து கொள்வே முடியாது. வாசகர்கள் இதை தெளிவாக தெரிந்துகொள்ள ஒரு பெரும் சம்பவத்தை மட்டுமே

இங்கு குறிப்பிடுகிறேன். அதன்சுருக்கம்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணுலக பயணத்தை முடித்து திரும்பி மக்கத்துக் குறைஷிகளுக்கு அச்சம்பவத்தை கூறிக்கொண்டு இருந்த போது அவர்களுடைய இரவுப்பயணம் பற்றியும் பைத்துல் முகத்தஸில் உள்ள பல விஷயங்களையும் அடுக்கடுக்காகக் கேட்டனர். அதைச்செவியுற்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்போது ஏற்ப்பட்ட சிரமம் அதற்கு முன் எனக்கு எப்போதும் ஏற்ப்பட்டதே இல்லை ஏனென்றால் அங்கு நான் கண்டவற்றை என் மனதில் நான் இருத்திக்கொள்ளவில்லை. இவ்வகை கஷ்டத்தில் இருந்து என்னை விடுவித்துக்கொள்ள பைத்துல் முகத்தஸை எனக்காக அல்லாஹ் உயர்த்திக் காட்டினான். அப்போது தான் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு என்னால் பதில் கூற முடிந்தது என்ற இந்த சம்பவத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே நமக்கு சொல்லிக்காட்டுகிறார்கள். அதுபற்றிய ஹதீஸ் எண் 80 பதிவாகியுள்ளது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முக்காலமும் மறைவான விஷயங்களும் தெரியும் என யாரோசொல்லி வைத்ததை- அந்தத் தவறான கொள்கையை-இந்த ஆதார அடிப்படையில் அது தவறு தான் என்பதை உணர்ந்து முக்காலத்தையும் அறிந்து கொண்டிருக்கும் பார்த்து கொண்டிருக்கும், பார்த்தவைகளுக்கு பரிகாரம் செய்து கொண்டிருக்கும் சகல வல்லமையுள்ள இந்த அல்லாஹ்வின் மகத்துவத்தைப் புரிந்து அவனிடமே பாவமன்னிப்பு கேட்டு அவனின் முழு அருளைக்பெற அவனே நல்லுதவி செய்வானாக ஆமீன்.

**இமாமுக்கு முன் தலையை உயர்த்துவது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 291**

'(தனது) தொழுகையில் (எவர்) இமாமுக்கு முன் தலையை உயர்த்துகிறாரோ, அவரது உருவத்தை கழுதையின் உருவமாக அல்லாஹ் மாற்றி விடுவதிலிருந்து (அவர்) அச்சமற்று இருக்க மாட்டார்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.
அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**இருகைகளையும் ருகூஉவில் இரு தொடைகளுக்கு மத்தியில் ஆக்கிக்கொள்வது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 292**

அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு அவர்களது வீட்டிற்கு (அல்கமா, அஸ்அது ஆகிய) நாங்களிருவரும் வந்தோம். இவர்கள் உங்களுக்குப்பின் தொழுதார்களா? எனக்கேட்டார். நாங்கள் இல்லை என்றோம். (அதற்கவர்) எழுந்து தொழுங்கள்! என்றார்.பாங்கோ, இகாமத்தோ கூறுமாறு எங்களுக்கவர் கட்டளையிடவில்லை.
அவருக்குப்பின்னால் நிற்பதாகச் சென்றோம். எங்களில் ஒருவரை அவரின் வலப்பக்கமும், மற்றவரை அவரின் இடப்பக்கமும் ஆக்கினார். அவர் ருகூஉ செய்த போது எங்களது கைகளை முட்டுக்கால்களின் மீதாக்கினோம். அதன்பிறகு எங்களது கைகளில் அடித்துவிட்டு அவரது இரு முன்கைகளுக்கு இடையில் சேர்த்து தனது இரு தொடைகளுக்கு மத்தியில் அவ்விரண்டையும் நுழைத்துக் கொண்டார் எனக்கூறினார். அவர் தொழுது விட்டு உங்களுக்கு தலைவர் இருப்பார்(வருவார்)கள், தொழுகையை அதன்நேரத்தை விட்டும் பிற்படுத்துவார்கள், மரணம் சம்பவிக்க (சக்கராத்து நிலையில்) இருக்கும் ஒருவருக்கு அவர் மரணிப்பதற்கு இடையில் இடைவெளி எவ்வளவுகுறைவோ? அவ்வாறு சூரியன் அஸ்தமிக்க நெருங்கும் வரை (அதை) தொழுகையை (முற்றிலும்) பிற்படுத்திவிடுவார்கள். அவ்வாறு அவர்களை செய்யக்கண்டால் தொழுகையை அதன் நேரத்தில் தொழுது கொள்ளுங்கள். அவர்களுடன் தொழும் தொழுகையை நபிலாக ஆக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் மூவராக இருப்பின் அனைவரும் தொழுது கொள்ளுங்கள். அதைவிட அதிகமாக இருப்பின் உங்களில் ஒருவர் இமாமாக இருக்கவும். உங்களில் ஒருவர் ருகூஉ செய்தால் அவரது இரு கொடங்கைகளையும் தொடையின் மீது விரித்து (விலக்கி) வைக்கவும். அவரது இரு

முன்கைகளைச்சேர்த்து (இரு தொடைகளுக்கு மத்தியில்) வைக்கவும். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விரல்கள் மாறுபட்டு இருப்பதை நான் பார்பவனைப்போன்று இருக்கிறேன். அவ்வாறே அவர்களையும் நான் காண்கிறேன் என அப்துல்லா பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : அஸ்வது, அல்கமா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு :

இந்த ஹதீஸில் சில விஷயங்கள் கூறப்பட்டுள்ளது, அதை நிரந்தரமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் செய்யவில்லை அவைகளில் மாறுதல் ஏற்ப்பட்டு விட்டது அதை விளக்கிக் கூறுவது கடமையாதலால் இங்கு அதைக் கூறுகிறோம்.

(1) இமாமின் வலப்புறமும் இடப்புறமும் இருவர் நிற்பது.

இதில் சரியான சுன்னத்து அவ்விருவரும் இமாமுக்கு பின்னால் நிற்பதே. முஸ்னது அஹ்மதில் 1537.:.3.:.116 இலக்கமிட்ட ஹதீஸில் ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் ஹதீஸில் வந்துள்ளது.

(2) கைகளைச் சேர்த்து முன்கைகளை இரு தொடைகளுக்கு மத்தியில் நுழைத்தல்.

இது மாற்றப்பட்டுவிட்டது. அடுத்த ஹதீஸில் தெளிவு செய்யப்பட்டிருப்பது போன்று சுன்னத்தான முறை முட்டுக்கால்களைப் பிடிப்பதாகும்.

(3) பாங்கு, இகாமத்து கூறுமாறு அவர் கூறுவில்லை.

தொழுகையில் தவறுசெய்தவருக்கு விளக்கிக் கூறியபோது அவரை பாங்கு இகாமத்து கூறுமாறு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத்தருகிறார்கள். அதுவே சரியான சுன்னத்தாகும்.

**இரு கைகளை முட்டுக்கால்களின் மீது வைப்பது பற்றியும் இரு முட்டுக்கால்களுக்கிடையில் நுழைத்துக்கொள்ள வேண்டுமென்பது மாற்றப்பட்டுவிட்டது என்பது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 293**

எனது தந்தைக்கு அருகாமையில் நான் தொழுதேன். எனது இரு கைகளையும் எனது இரு முட்டுக்கால்களுக்கும் மத்தியில் ஆக்கிக்கொண்டேன் (அதைப்பார்த்த எனது தந்தை) உனது இரு முன்கைகளையும் உனது இரு முட்டுக்கால்களின் மீது ஆக்கிக்கொள் என எனக்கூறினார். அதற்குப்பிறகு ஒரு முறையும் (முதலில் செய்தது போலவே) அவ்வாறு செய்தேன். எனது இரு கைகளின் மீது அடித்துவிட்டு, இவ்வாறு செய்வதிலிருந்து நாம் தடுக்கப்பட்டு விட்டோம். முன்கைகளை முட்டுக்காலின் மீது வைக்குமாறு கட்டளையிடப்பட்டு உள்ளோம் எனக்கூறினார்.

அறிவிப்பவர் : முஸ்அப் பின் ஸஅது ரளியல்லாஹூ அன்ஹூ

குறிப்பு :

ருகூஉவில் இருகைகளையும் இரு முட்டுக்கால்களின் மீது எதையோப் பிடிப்பது போன்று நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் வைத்திருந்தார்கள் என்பதே இறுதியாக நிருபனமான சுன்னத்தாகும். இரண்டு முட்டுக்கால்களுக்கு மத்தியில் இருகைகளையும் நுழைத்தக்கொள்வது மாற்றப்பட்டுவிட்டது என்ற செய்தி இப்னு மஸ்ஊது ரளியல்லாஹூ அன்ஹூ அவர்களுக்கு கிடைத்ததால் 292-வது ஹதீஸில் கண்டுள்ளவாறே செய்யவேண்டுமென வற்புறுத்தினார்கள். இச்செயல் மாற்றப்பட்டுவிட்ட செய்தி அவர்களுக்கு தெரிந்திருந்தால் நிச்சயமாக முன்பு செய்ததையே செய்யவேண்டுமென இப்னு மஸ்ஊது ரளியல்லாஹூ அன்ஹூ அவர்கள் வற்புறுத்தி இருக்கமாட்டார்கள் என்பதை கவனத்தில் கொள்க

## ருகூஉவிலும் ஸுஜுதுவிலும் கூறப்பட வேண்டியவை பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 294**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்களது ருகூஉவிலும் ஸுஜுதுதிலும், 'ஸுப்ஹான கல்லா ஹும்ம ரப்பனா வபிஹம்திக, அல்லாஹும்மஃக் ஃபிர்லீ' என அதிகமாக கூறக்கூடியவர்களாக இருந்தனர். குர்ஆனில், (உமது இரட்சகனின் புகழைக்கொண்டு தஸ்பீஹும் செய்து

அவனிடமே பாவமன்னிப்பும் கேட்பீராக! என்ற) வசனத்திற்கு விளக்கமாக இதைக் கூறிவந்தார்கள் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

ருகூஉவிலும் ஸுஜுதிலும் திருக்குர்ஆனை ஓதுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 295**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (தங்களின் அறையின்) திரையை விலக்கிய போது ஜனங்களெல்லாம் அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பின்னால் வரிசைகளில் இருந்தனர். அப்போது மனிதர்களே! நபித்துவத்தின் நன்மாராயங்களில் (ஒரு) முஸ்லீம் பார்க்கக்கூடிய அல்லது அவருக்கு காட்டப்படக்கூடிய நல்ல கனவுகளைத் தவிர வேறு எதுவும் எஞ்சியிருக்கவில்லை. ருகூஉ செய்த நிலையில், ஸுஜுது செய்த நிலையில் திருக்குர்ஆனை ஓதவதிலிருந்து நிச்சயமாக நான் தடுக்கப்பட்டுள்ளேன் என்பதை தெரிந்து கொ(ள்ளுங்க)ள். ஆகவே ருகூஉவில் அல்லாஹ்வை மகத்துவப்படுத்துங்கள் (ஸுப்கான ரப்பியல் அளீம்) எனக்கூறுங்கள். ஸுஜுதிலும் துஆவில் சிரத்தையெடுங்கள். (அதிகமாக துஆ செய்யுங்கள்) உங்களுக்கு அங்கீகரிக்கப்படுவதற்கு அது மிக உரியதாகும் எனக்கூறினார்கள்.
அறிவிப்பவர் : இப்னு, அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

ருகூஉவிலிருந்து உயர்ந்தால் (நிமிர்ந்தால்) என்ன கூறவேண்டும் என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 296**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ருகூஉவிலிருந்து தங்களது தலையை உயர்த்தினால் 'ரப்பனா லக்கல்ஹம்து மில் அஸ்ஸமாவாத்திவல் அர்ளி வமா பைனஹுமா, வமில்அ மாஷிஃ(த்)தமின் ஷைஇன் பஅது. அஹ்லத்தனாகி வல்மஜ்தி அஹக்கு மா காலல் அப்து வகுல்லுனா ல(க்)க அப்துன் லாமானிஅ லிமா அஃதைத்த வலா முஃதிய லிமா மனஃத்த வலாயன்ஃபஉ தல்ஜத்தி மின் (க்)கல் ஜத்து' எனக்கூறுவார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயிது அல்குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு

**ஸுஜுதுவின் சிறப்புகளும் அதை அதிகமாக செய்வதை ஆசையூட்டுவதும் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 297**

நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் உரிமை எழுதப்பட்ட தவ்பான் ரளியல்லாஹு அன்ஹு என்பவரைச் சந்தித்து எதை (எச்செயலை) நான் செய்தால் அல்லாஹ் அதன் மூலம் என்னைச் சுவனத்தில் நுழையச் செய்வானோ? அத்தகைய ஒரு செயலைப்பற்றி எனக்கு சொல்வீராக! என்றேன். (அல்லது) செயல்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான ஒரு செயலைப்பற்றி எனக்குத் தெரிவிப்பீராக! என நான் கேட்டேன். இதைச் செவியுற்ற தவ்பான் ரளியல்லாஹு அன்ஹு அமைதியாக (பேசாமல்) இருந்தார். (அதன்பிறகும்) அது பற்றி நான் கேட்டேன். பேசாமலிருந்து விட்டார். மூன்றாம் முறையாக அதுபற்றி நான் கேட்டேன். அதற்கு தவ்பான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள். 'அது பற்றி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் கேட்டேன். அதற்கவர்கள் அல்லாஹ்வுக்கு அதிகமாக ஸஜ்தா செய்வதை கடைபிடித்துக் கொள். நிச்சயமாக அல்லாஹ்வுக்கு நீ ஒரு ஸஜ்தா செய்வதின் மூலம் அல்லாஹ் உனக்கு ஒரு தரத்தை அதிகப்படுத்தியும் அதன்மூலம் உனது தவற்றில் ஒன்றை அழித்துமே தவிர நீ ஸஜ்தா செய்வதில்லை' எனக்கூறினார்கள்.

இதற்கு பிறகு அபுத்தர்தாஉ ரளியல்லாஹு அன்ஹுவை நான் (அறிவிப்பவர்) சந்தித்தேன். இதுபற்றி அவரிடம் கேட்டேன். தவ்பான் ரளியல்லாஹு அன்ஹு கூறியதைப் போன்றே கூறினார்.

அறிவிப்பவர் : மிஃதான் அபீதல்ஹா அல்யஃமரிய்யு

**ஸஜ்தாவில் துஆ செய்வது பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 298**

அடியான் அவனது இரட்சர்களுக்கு மிக அருகாமையில் இருப்பது அவன் ஸஜ்தா செய்த நிலையில்தான். ஆகவே பிரார்த்தனையை அதிகமாகச் செய்யுங்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

எத்தனை (உறுப்புகளின்) மீது ஸஜ்தா செய்வது என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 299

'ஏழு எலும்புகளின் மீது நான் ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிடப்பட்டேன். (அதாவது) நெற்றி (தங்களது மூக்கின் பாலும் சைக்கினை செய்தார்) இருகைகள், இரு(முட்டுக்)கால்கள், இரு பாதங்களின் ஓரங்(விரல்)கள்' (ஆகியவைகளாகும்) நெற்றிக்கும் தரைக்கும் மத்தியில் உடையையோ, (தலை) முடியையோ சேர்த்துக் கொள்ளாமல் இருக்கவேண்டும் என்று நாங்கள் கட்டளையிடப்பட்டோம் என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த அறிவிப்பில் உள்ளது போன்று ஏழு எலும்புகள் என்றும், ஏழின்மீது என்றும் மற்ற அறிவிப்பில் உள்ளது அதன் பொருள்: ஸஜ்தா ஏழு உறுப்புகளின் மீது இருக்க வேண்டும். அந்த ஏழு உறுப்புகளும் தரையில் சரியாக வைக்கப்பட வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். அதற்கு மேல் எட்டாவதாக மூக்கை தரையில் இருக்கச் செய்ய வேண்டும்.

ஸஜ்தாவில் நிதானமாகவும், இரு முழங்கைகளை உயர்த்தியும் இருக்க வேண்டும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 300

'ஸஜ்தாவில் சமமாக (நிதானமாக அதன் உறுப்புகளை) வையுங்கள், உங்களில் யாரும் தனது கொடங்கைகளை நாய் விரிப்பது போல் விரிக்கவேண்டாம்' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

ஸஜ்தாவில் இரு முழங்கைகளையும் தரையில் இருந்து உயர்த்தி இரு புஜங்களையும் விலாபகுதியில் இருந்து தூரமாக்கிக் கொள்வது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 301

“நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், ஸஜ்தா செய்வார்களாயின், அவர்களது அக்குளின் வெள்ளைநிறம் வெளியில் தெரியும் அளவிற்கு, தங்களது இரு கைகளையும் (அதாவது இரு முழங்கைகளையும் தரையிலிருந்து உயர்த்தி, இரு புஜங்களையும் விலாப்பகுதியிலிருந்து) தூரமாக்கிக் கொள்வார்கள்.” என அப்துல்லாஹ்பின் புஹைனா ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

தொழுகையில் அமரும் முறை பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 302

“அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையில் உட்கார்ந்தால் தங்களது இடது பாதத்தை தங்களின் தொடைக்கும் கெண்டைகாலுக்கும் மத்தியில் ஆக்கி தங்களது வலது பாதத்தை விரித்து (படுக்க) வைத்தார்கள். தங்களின் இடது கையை இடது முட்டுகாலின் மீது வைத்தார்கள். தங்களின் வலக்கரத்தை தங்களது வலது தொடையின் மீது வைத்தார்கள் தங்களது விரலால் சைக்கினையும் செய்தார்கள்” என அப்துல்லாஹ் பின் அஜ்ஜுபைர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இரு பாதங்களின் மீது அமருதல் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 303

இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இரு பாதங்களின் மீது அமருவது பற்றி நாங்கள் கேட்டோம். (அதற்கவர்கள்) அது சுன்னத்தாகும் என்று கூறினார். நிச்சயமாக

நாம் அதை ஒரு விருப்பமற்ற செயலாகக் காண்கிறோம் என நாங்கள் கூறினோம். (அதற்கு) மாறாக அ(வ்வாறு செய்வ)து உனது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தாகும் என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : தாவூஸ் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : இந்த ஹதீஸில் வந்துள்ள "இக்ஆஉ" என்பதற்கு பல பொருள்கள் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இரு பொருள்கள் மட்டுமே சரியானதாகும். ஒன்று விலக்கப்பட்டுள்ளது. "அதுவே நாய் அமருவது போன்று பின்பகுதியை தரையில் வைத்து இரு கெண்டைகால்களையும் நட்ட வைத்து தனது இரு கைகளையும் தரையில் ஊன்றிக் கொள்வது" மற்றொன்று ஆகுமாக்கப்பட்ட சுன்னத்தாகும். அதுவே தனது இரு ஸஜ்தாவிற்கு மத்தியில் தனது இரு பின்பகுதிகளையும் பின்னால் ஆக்குவது (முதல் இருப்பில் இருப்பது போன்று இடது காலைப்படுக்க வைத்து வலது காலை நட்டு வைத்து அமருவதாகும்) இவ்வகையைத்தான் இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், "உனது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தாகும்" எனக்கூறினர்.

## தொழுகையில் 'தஷ்ஹ்ஹுத்' (அத்திஹியாத் ஓதுவது) பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 304

அபூமுஸா ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடன் ஒரு தொழுகை நான் தொழுதேன். இருப்பில் அவர் இருந்த போது நன்மையானவற்றைக் கொண்டும், ஜக்காத்தைக் கொண்டும் தொழுகை நிலைபெற்றுவிட்டது எனக் கூட்டத்திலிருந்த ஒருவர் கூறினார். அபூமுஸா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், தொழுகையை முடித்து ஸலாம் கொடுத்துவிட்டுத் திரும்பி இன்ன இன்ன வார்த்தைகளை உங்களில் கூறியவர் யார்? எனக்கேட்டார். கூட்டத்தவர் அமைதியாக (பேசாது) இருந்தனர். இரண்டாம் முறை இன்ன இன்ன வார்த்தைகளை உங்களில்

கூறியவர் யார்? எனக்கேட்டார். கூட்டத்தவர் அமைதியாக (பேசாது) இருந்தனர். ஹித்தானே! நீர் அதைக் கூறியிருக்கலாம் என்றார். இவ்வாறு என்னிடம் கேட்டு என்னை பயமுறுத்தி அழவைத்து விடுவீர் என்பதை நிச்சயமாக பயந்துவிட்டேன் என (ஹித்தான்) கூறினார். (இதற்கிடையில்) கூட்டத்திலிருந்து ஒரு மனிதர் அதை நான் (தான்) கூறினேன். (ஆனால்) நன்மையல்லாது வேறு எதையும் (அதன்மூலம்) நான் நாடவில்லை (எனக்கூறினார்) உங்களது தொழுகையில் எவ்வாறு (என்ன) கூற வேண்டுமென்று உங்களுக்குத் தெரியவில்லை என அபூமூஸா ரளியல்லாஹு அன்ஹு கூறிவிட்டு

“நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு பிரசங்கம் நிகழ்த்தினார்கள். எங்களது வழிமுறைகளை எங்களுக்கு தெளிவு படுத்தினார்கள் எங்களது தொழுகைகளை (எவ்வாறு தொழ வேண்டுமென) எங்களுக்கு கற்றுத் தந்துள்ளார்கள். (அதன் விபரம் நீங்கள் தொழுகைக்காக நின்றால் உங்களது வரிசைகளை சரியாக்கிக் கொள்ளுங்கள். பிறகு உங்களில் ஒருவர் உங்களுக்கு இமாமாக இருந்து தொழுகை நடத்தி தரவும். (ஆகவே) அவர் தக்பீர் கூறினால் நீங்களும் தக்பீர் கூறுங்கள். அவர் ‘கைரில் மக்ளுபி அலைஹிம் வலள்ளாள்ளீன்‘ எனக்கூறினால் நீங்கள் ‘ஆமீன்‘ கூறுங்கள். (அதன் மூலம்) அல்லாஹ் உங்களது பிரார்த்தனைகளை அங்கிகரிக்கின்றான். அவர் தக்பீர் கூறி ருகூஉ செய்தால் நீங்களும் தக்பீர் கூறி ருகூஉ செய்யுங்கள் (காரணம்) நிச்சயமாக இமாம் (தொழுகை நடத்துபவர்) உங்களுக்கு முன்பாக ‘ருகூஉ‘ செய்கிறார். அது (அவர் முதலில் ருகூஉவிற்கு செல்வது) அதற்கு (ருகூஉவிலிருந்து அவருக்குப்பிறகு நீங்கள் உயர்வதற்கு) சமம் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அவர் “ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்“ எனக்கூறினால் நீங்கள் “அல்லாஹூம்மரப்னா ல(க்)கல் ஹம்து“ எனக்கூறுங்கள் உங்களது (கூற்றை) அல்லாஹ் கேட்கி(செவியுறுகி)றான். நிச்சயமாக பரக்கத்துகளை நல்குபவனும் உயர்வானவனுமாகிய அல்லாஹ், தன்னைப்புகழ்ந்த வரை (அவரது கூற்றை) செவியுற்று

விட்டதாக தனது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் நாவின் மூலம் கூறிவிட்டான். (அதன்பிறகு) அவர் தக்பீர் கூறி ஸஜ்தா செய்துவிட்டால் நீங்களும் தக்பீர் ஸஜ்தா செய்யுங்கள். நிச்சயமாக இமாம் உங்களுக்கு முன் ஸஜ்தா செய்கிறார் உங்களுக்கு முன்பு உயர்கிறார். அது (உங்களுக்கு முன் ஸஜ்தாவிற்கு அவர் செல்வது) அதற்கு (நீங்கள் அவருக்குப் பின் ஸஜதாவிற்கு உயருவதற்கு) சமம் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அதன்பிறகு) இருப்பில் உங்களில் ஒருவர் கூறக்கூடிய கூற்றில் முதாலவது "அத்திஹிய்யாத்து அத்தய்யிபாத்து அஸ்ஸலவாத்து அஸ்லாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில் லாஹிஸ்ஸாலிஹீன் அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வரசூலுஹு" வாக இருக்க வேண்டும் எனக்கூறினார்கள் என அபூமூஸா ரளியல்லாஹு அன்ஹு கூறியதாக அறிவிப்பவர் ஹித்தான் பின் அப்துல்லாஹ் அர்ரிகாஷிய்யி ரளியல்லாஹு அன்ஹு

## ஹதீஸ் எண் : 305

(குர்ஆனிலிருந்து ஒரு அத்தியாயத்தைக் கற்றுத்தருவது போன்று) 'தஷஹ்ஹுதை' எங்களுக்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக் கொடுக்கக் கூடியவர்களாக இருந்தனர்.

"அத்தஹிய்யாத்து அல்முபாரகாத்து அஸ்ஸலவாத்து அத்தய்யிபாத்து லில்லாஹி, அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு, அஸ்ஸலாமு அலைனா வலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் ரசூலுல்லாஹி" என்று சொல்லக் கூடியவர்களாக இருந்தனர்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : “குர்ஆனைக் கற்றுத்தருவதைப் போன்று“ என்ற வாசகம் இப்னு ரும்ஹு அவர்களின் அறிவிப்பில் பதிவாகியுள்ளது.

தொழுகையில் எதை கர்ககத்தேடப்பட வேண்டுமோ அது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 306

“ அல்லாஹும்ம இன்னீ அவூதுபி(க்)க மின்அதாபில் கப்ரி வஆதுபி(க்)க மின்ஃபித்னத்தில் மஸீஹித்தஜ்ஜாலி வஅதுபி(க்)க மின்பித்னத்தில் மஹ்யா வல்மமாத்தி அல்லாஹும்ம இன்னி அவூதுபிக்க மினல் மஃஸமி வல் மக்ரம்” என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சயமாக தொழுகையில் துஆ கேட்கக் கூடியவர்களாக இருந்தார்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் துணைவியார் அன்னை ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள்.

நிச்சயமாக தனக்கு அறிவித்ததாக உர்வா பின் அஜ்ஜுபைர் ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார். (மேலும்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! கடன் தொல்லையிலிருந்து தங்களை காக்கத் தேடுவதை மிக அதிகமாக ஆக்கியது எது? என கேட்பவர் கேட்டார். அதற்கவர்கள் நிச்சயமாக ஒரு மனிதன் கடன்பட்டுவிட்டால் அதை நிறைவேற்ற இயலாத நிலைக்கு ஆளானால் பொய் கூறுகிறார், வாக்களிக்கிறார், (அதை நிறைவேற்ற முடியாது) அதற்கு மாற்றம் செய்கிறார். எனக்கூறினார்கள் என்று ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

தொழுகையில் துஆ ஓதுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 307

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், ஒரு

துஆவை எனக்கு கற்றுக் கொடுங்கள் அதை நான் என் தொழுகையில்[1] கூறுவேன் என்றனர். (அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) அல்லாஹும்ம இன்னீளலம்து நஃப்ஸீ, ளுல்மன் கபீரன்[2] வலாயஃபிருத்துனூப இல்லா அன்(த்)த ஃபக்ஃபிர்லிமக்ஃபிர(த்)தன் மின் இன்திக்க வர்ஹம்னீ இன்ன(க்)க அன்(த்)தல் கபூருர்ரஹீம் சொல்லுமாறு கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 மற்றொரு அறிவிப்பில் என் வீட்டில் கூறுவேன் என உள்ளது.

2 மற்றொரு அறிவிப்பில் கஸீரன் என வந்துள்ளது.

## தொழுகையில் ஷைத்தானை சபிப்பது பற்றியும் அவனின் தீமையிலிருந்து காக்கத் தேடுவது பற்றியும் உள்ள பாடம்.

### ஹதீஸ் எண் : 308

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (தொழுகையில்) நின்று "அஊது பில்லாஹிமின்(க்)க", அல்லாஹ்வைக் கொண்டு உன்னைக் கொண்டு உன்னை(உன் தீமையை) விட்டும் காக்கத்தேடுகிறேன் என அவர்கள் கூற நாங்கள் செவியுற்றோம் என அபூதர்தாஉ ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள் மேலும் 'அல்அனுக்க பிலஃனத்தில்லாஹி' "அல்லாஹ்வின் சாபத்தைக் கொண்டு உன்னை நான் சாபமிடுகிறேன்" என மும்முறை கூறினார்கள். மேலும் தங்களது கையை (நீட்டி) எதையோ பிடிப்பதை போன்று விரிக்கவும் செய்தார்கள். தொழுகையை அவர்கள் முடித்துக் கொண்ட பொழுது,அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! தொழுகையில் ஏதோ ஒன்றை தாங்கள் கூற நாங்கள் செவியுற்றோம் (ஆனால்) அதற்கு முன்பு (வரை) நீங்கள் எதையும் சொல்லி நாங்கள் செவியுறவில்லையே! அதோடு உங்களது கையை விரிக்கவும் கண்டோமே! என்றனர். அதற்கு (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்,

அல்லாஹ்வின் எதிரியான ‘இப்லிஸ்‘, நெருப்பின் ஒரு பந்தத்தை எடுத்துக் கொண்டு வந்து என் முகத்தில் ஆக்கு(எறி)வதற்கு வந்தான். அப்போது நான் அல்லாஹ்வைக் கொண்டு உன்னை விட்டும் கார்மானம் தேடுகிறேன் என்று மும்முறை கூறினேன். அதன் பிறகு அல்லாஹ்வின் பூரணமான சாபத்தைக் கொண்டு உன்னை நான் சபிக்கிறேன் என்று மும்முறை கூறினேன். (இதற்கு) பின்னும் அவன் செல்லவில்லை. அதனால் அவனைப் பிடிக்க நாடினேன். நமது சகோதரர் சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் துஆ மட்டும் இல்லாதிருப்பின் (அவன்) கட்டப்பட்டவனாகவே காலை பொழுதை அடைந்திருப்பான். மதினத்துவாசிகளின் குழந்தைகளும் அவனோடு விளையாடிருப்பர் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ தர்தாஉ ரளியல்லாஹூ அன்ஹூ

## அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் மீது ஸலவாத்து சொல்வது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 309

ஸஅது பின் உபாதாவின் மஜ்லிஸில் நாங்கள் அமர்திருக்க, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களி(அவ்வி)டம் வந்தனர். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! “‘கண்ணியமும்,மகத்துவமும் உடைய அல்லாஹ் உங்களின் மீது நாங்கள் ஸலவாத்து கூற வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளான். உங்கள் மீது எவ்வாறு நாங்கள் ஸலவாத்துச் சொல்ல வேண்டும்” என பஷீர் பின் ஸஅது ரளியல்லாஹ் அன்ஹூ கேட்டனர். அதைக்கேட்ட அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் பேசாதிருந்தனர். (இதைப்பார்த்து நிச்சயமாக அவர் கேட்காதிருந்தால் நன்றாக இருந்திருக்குமே என நாங்கள் ஆசைப்பட்டோம். (அந்த அளவிற்குப் போதிருந்து விட்டு) பின் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், “அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா

ஆலி முஹம்மதின் கமா ஸல்லை(த்)த அலா ஆலி இபுறாஷீம வபாரிக் அலா முஹம்மதின், வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா ஆலி இபுறாஷீம ஃபில் ஆலமின் இன்னக்க ஹமீதுன் மஜீது" எனக்கூறுங்கள் (என்று கூறிய பின்) ஸலாம் கூறுவது நீங்கள் (ஏற்கனவே) தெரிந்திருப்பதைப் போன்றே கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபு மஸ்ஊது அல்அன்சாரி ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகையில் ஸலாம் கூறுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 310

"அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் கன்னத்தின் வெண்மையை நான் கானுகின்ற வரை அவர்களது வலப்பக்கமும், அவர்களது இடப்பக்கமும் ஸலாம் கொடுக்க நான் பார்க்கக் கூடியவனாக இருந்தேன்"

அறிவிப்பவர் : ஆமிர் பின் ஸஅது ரளியல்லாஹு அன்ஹுமா

## தொழுகையிலிருந்து ஸலாம் கொடுக்கின்ற போது கையினால் சைக்கினை செய்வது வெறுக்கத்தக்கதாகும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 311

நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுதால் 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ்' 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ்', எனச் சொல்லி கொண்டிருந்தோம் எனக்கூறிவிட்டு மேலும் தனது கையினால் இரு பக்கத்திலும் சைக்கினையும் செய்தார்.

"இதைப்பார்த்த (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) உங்களது கைகளைக் கொண்டு ஏன் எதற்காக இவ்வாறு சைக்கினை செய்கிறீர்கள்? (இன்னொரு

அறிவிப்பில் நிலையில்லாத குதிரைகள் வால்களையும் கால்களையும் (அசைப்பது) போன்று உங்களது கைகளை நீங்கள் உயர்த்தியவாறு இருக்க (இருபுறமும் சைக்கினை செய்ய) உங்களை நான் காண எனக்கு என்ன நேர்ந்தது? என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டு விட்டு, உங்களில் ஒருவருக்குப் போதுமானதெல்லாம் தனது கையை தொடையின் மீது வைத்துக்கொண்டு அதன்பிறகு அவரது வலப்புறமும் இடப்புறமும் இருக்கும் சகோதரரின் மீது ஸலாம் கூறுவார் என்றார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகையிலிருந்து ஸலாம் கொடுத்த பிறகு சொல்லப்பட வேண்டியது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 312

முகீரா பின் ஷுஃபா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் முஆவியா ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எழுதினார்கள்: நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை முடித்து ஸலாம் கொடுத்துவிட்டால் லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ(க்)க லஹு லஹுல் முல்(க்)கு வலஹுல் ஹம்து, வஹுவ அலாகுல்லிஷைஇன் கதீர், அல்லாஹும்ம லாமானிஅ லிமா அஃதை(த்)த வஅலா முஃதிய லிமா மனஃ(த்)த வலாயன்ஃபஉ தல்ஜத்தி மின்(க்)கல் ஜத்து என்றுகூறுவார்கள்.

அறிவிப்பவர் : முகீராபின் ஷுஃபாவினால் உரிமை எழுதி விடப்பட்ட வர்ராத் ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகைக்குப் பிறகு தக்பீர் (கூறுவது) பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 313

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகை முடிந்து விட்டது என்பதை (அவர்கள் கூறும்) தக்பீரின் மூலம் நாங்கள் தெரிந்து கொண்டிருந்தோம் என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறினார்கள்.

## தொழுகைக்குப்பிறகு தஸ்பீஹ், தஹ்மீது, தக்பீர் (கூறுவது) பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 314

யார் ஒருவர் ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் முப்பத்து மூன்று தடவை அல்லாஹ்வை[1] துதித்தாரோ முப்பத்து மூன்று முறை அல்லாஹ்வை[2] புகழ்ந்தாரோ, முப்பத்து மூன்று முறை அல்லாஹ்வை[3] மிகப்பெரியவனாக்கினாரோ அவை 99 ஆகிவிட்ட (பின்) நூறை (100) நிறைவு செய்ய ‘லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ(க்)கலஹு லஹுல் முல்(க்)கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷையின் கதீர்‘ எனக்கூறிவிட்டாரோ அவரது தவறுகள், கடல் நுரை போன்றிருப்பினும் மன்னிக்கப்பட்டுவிடும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 ஸுப்ஹானல்லாஹ் 2 அல்ஹம்து லில்லாஹ் 3 அல்லாஹு அக்பர்

குறிப்பு : அல்லாஹு அக்பர் என்பதையே 34 வது முறையாகச் சொல்லி விடுவது பற்றிய அறிவிப்பும் உள்ளது. இந்த ஹதீஸில் கூறப்பட்ட முறையும் வந்துள்ளது. இவ்விரண்டையும் பேணி நடக்க ஒரு முறை, 34 முறையும் தக்பீர் கூறிவிட்டும் மற்றொரு முறை 33 முறை தக்பீர் கூறிய பின் லாஇலாஹ இல்லல்லாஹ் வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்(க்)கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஷைஇன் கதீர் என்றும்

கூறிக்கொள்வதாகும். இரண்டு ஹதீஸில் வந்துள்ளபடி செயல்பட மேற்கூறப்பட்ட இரண்டு முறையாகவும் என்பது தெளிவாகிறது.

## தொழுகையிலிருந்து வலப்பக்கம், இடப்பக்கம் திரும்புவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 315

தன்னிலிருந்து ஒரு பங்கை உங்களில் யாரும் ஷைத்தானுக்கு ஆக்கிவிட வேண்டாம். நிச்சயமாக அவரின் மீது வலப்பக்கம் (தொழுகையில்) திரும்புவது மட்டும்தான் உரிமையென அவர் காண (கருத) வேண்டாம், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது இடப்பக்கம் திரும்பக்கூடியவர்களாக மிக அதிகமாக நான் கண்டேன் என அப்துல்லாஹ்பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

குறிப்பு : தொழுகையிலிருந்து ஸலாம் கொடுக்க வலது பக்கம் மட்டும் திரும்புவது கடமையென கொள்ள வேண்டாம். இடது பக்கமும் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் திரும்பியிருக்கிறார்கள் என்பதையும் கடமையாகக் கொள்ள வேண்டும்.

## இகாமத்துச் செய்ய மிக உரியவர் யார்? என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 316

கூட்டத்தவரு(ஜமா அத்தினரு)க்கு அல்லாஹ்வின் வேதத்தை அவர்களில் யார் மிக நன்றாக ஓதுகிறாரோ? அவர்தான் இகாமத்துச் செய்வார். குர்ஆனை ஓதவதில் அவர்கள் சமமான நிலையுடையவர்களாயிருப்பின் சுன்னத்தைப் பற்றி அவர்களில் யார் மிகத் தெரிந்தவராக இருக்கிறாரோ அவராவார். சுன்னத்தைப் பற்றி அறிந்த விஷயத்தில் அவர்களெல்லாம் சமமானவர்களாயிருப்பின் ‘ஹிஜ்ரத்‘ செய்ததில் யார் மிக முந்தியவராக இருக்கிறாரோ? அவராவார். ஹிஜ்ரத்திலும் அவர்கள் சமமானவர்களாயிருப்பின் இஸ்லாத்தை ஏற்பதில் யார்

முந்தியவராக இருக்கிறாரோ? அவராவார். ஒரு மனிதர் ஒரு மனிதரின் அதிகாரத்திற்குத் கீழ் இருக்கும் போது (அவர் அனுமதியின்றி இகாமத் செய்ய வேண்டாம்) அவரது வீட்டில் அவருக்காக உள்ள இருக்கையில் அவர் அனுமதியின்றி அமரவேண்டாம் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூமஸ்ஊது அல் அன்ஸாரீ ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : ஒருவர் இருக்கையில் மற்றவர் அமருவது முறையல்ல என்பதையும் தெளிவுபடுத்திவிட்டு அவர் அனுமதியளித்தால் அமரலாம் என்ற உரிமையும் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்கிக் கூறுகிறார்கள்.

ஒரு வீட்டிற்கு நாம் விருந்தினராக சென்றிருக்க தொழுகை நேரம் வந்துவிட்டதல் அவ்வீட்டுக்காரரின் அனுமதியின்றி நாம் தொழுகையை நடத்தி வைப்பதுகூடாது. வீட்டுக்காரர் தகுதியுடையவராக இருந்து அவரே இமமாக நின்று தொழுகையை நடத்தியும் தரலாம். நாமல்லாத மற்றவரை அவர் தகுதியுடையவராக கருதி அந்த மற்றவரையும் தொழுகையை நடத்தி தரவும் கூறலாம். ஆகவே தான் அவரின் அனுமதி அவசியம் என்பதை நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மேற்கண்ட ஹதீஸில் தெளிவுபடுத்திக் காட்டுகிறார்கள். அதுபோலவே ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு தகுதியை அல்லாஹ் தந்திருக்கின்றான். (அது போலவே) ஒவ்வொருவருக்கும் அவரவர்கென அமருவதற்கு ஒரு இடத்தை பிரத்தியோகமாக வைத்திருப்பர் என்பதையும் தெளிவுபடுத்துகிறார்கள்.

## இமாமைப் பின்பற்றுவது, அவருக்குப் பிறகு செயல்படுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 317

“நிச்சயமாக அவர்க(சஹாபாக்க)ள், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழக்கூடியவர்களாக இருந்தனர். (விளக்கம்) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ‘ருகூஉ‘ செய்வார்களானால் அவர்க(சஹாபாகக்)ளும் ‘ருகூஉ‘ செய்வார்கள். (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் ‘ருகூஉ‘விலிருந்து தங்களது தலையை உயர்த்தி ‘ஸமி அல்லாஹு லிமன் ஹமிதஹ்‘ எனக்கூறுவார்களானால் நாங்கள் அவர்களது நெற்றியை பூமியில் வைத்துவிட்டார்கள் என்பதைக்கானும் வரை நின்றவர்களாகவே இருந்துவிட்டு, அதன்பிறகு தான் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களைத் தொடர்வோம்“ என பராஉ ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## இமாம்களுக்கு தொழுகைகளை நிறைவான முறையில் இலேசாக்குமாறு கட்டளை என்பது பற்றய பாடம்.

### ஹதீஸ் எண் : 318

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்பால் வந்து, “நிச்சயமாக நான் ஸுபுஹுத் தொழுகையை இன்னவர் எங்களுக்கு நீட்டி விடுவதன் (நீண்ட அத்தியாங்களை ஓதி தொழவைப்பதன்) காரணமாக (அத்தொழுகையை விட்டும்) பிந்திவிடுகிறேன் எனக்கூறினார். (அதைக்கேட்ட) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அன்றைய தினம் கோபப்பட்ட அளவிற்கு மிகக்கடினமாக (வேறு) எந்த உபதேசத்தின் போதும் கோபப்பட்டுவிட்டதை நான் பார்த்ததில்லை (அவ்வளவு கடுங்கோபப்பட்டு விட்டு) மனிதர்களே! நிச்சயமாக உங்களில் (சிலர்) வெறுப்பை உண்டாக்க கூடியவர்களாக இருக்கிறார்கள். (ஆகவே) உங்களில் யாரேனும் ஜனங்களுக்கு இமமாக தொழுகை நடத்தினால் இலேசாக்கி சுருக்கமாக்கி)க் கொள்ளவும் (காரணம்) நிச்சயமாக வயதானவர்களும், பலஹீனமானவர்களும் தேவையுடையவர்களுமிருப்பர் எனக்கூறினார்கள் என அபூமஸ்ஊது அல் அன்ஸாரீ ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இமாம் நோய்வாய்பட்டுவிட்டால் அவருக்கு பதிலாக (ஒருவரை) ஆக்குவது பற்றியும் அவர் ஜனங்களுக்கு தொழுகை நடத்துவது பற்றியும் தெளிவுபடுத்தும் பாடம்.

ஹதீஸ் எண் : 319

(அறிவிப்பாளராகிய நான்) ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் வியாதியைப் பற்றி எனக்கு நீங்கள் அறிவித்துத் தரலாமா? என அவர்களிடம் கேட்டேன். (அதற்கு) 'ஆம்' எனக்கூறிவிட்டு 'நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கனமாகி (உடல் நலகுறைவாகி) விட்டனர். (அச்சமயம்) ஜனங்கள் தொழுது விட்டார்களா? எனக் கேட்டனர். நாங்கள் 'இல்லை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! அவர்கள் உங்களை எதிர்பார்க்கிறார்கள்' எனக்கூறினோம். குளிக்கும் பாத்திரத்தில் எனக்காக தண்ணீர் வையுங்கள் என்றார்கள். அவ்வாறே செய்தோம். குளித்துவிட்டுப் பிறகு சென்றனர்.

(அப்போது) மயக்கமுற்று விட்டனர். அதன்பிறகு தெளிவடைந்து 'ஜனங்களெல்லாம் தொழுது விட்டார்களா? எனக்கேட்டனர். 'இல்லை! அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்கள் உங்களை எதிர்பார்க்கின்றனர்' எனக்கூறினோம். (அப்போது) குளிக்கும் பாத்திரத்தில் எனக்காக தண்ணீர் வையுங்கள் என்றார்கள். அவ்வாறே செய்தோம். குளித்துவிட்டுப் பிறகு சென்றனர். அப்போது மயக்கமுற்று விட்டனர். பிறகு தெளிந்து ஜனங்களொல்லாம் தொழுது விட்டார்களா? எனக்கேட்டனர். நாங்கள் 'இல்லை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! அவர்கள் உங்களை எதிர்பார்க்கிறார்கள்' எனக்கூறினோம். (அதற்கவர்கள்) குளிக்கும் பாத்திரத்தில் எனக்காக தண்ணீர் வையுங்கள் என்றார்கள். அவ்வாறே செய்தோம். குளித்துவிட்டுப் பிறகு சென்றனர். அவர்களுக்கு மயக்கமேற்பட்டு விட்டது. அதன்பிறகு அவர்கள் தெளிந்து ஜனங்களொல்லாம் தொழுது விட்டார்களா? என்றனர். இல்லை

அலல்ாஹவின் தூதர் அவர்களே! அவர்கள் உங்களை எதிர்பார்கிறார்கள்‘ எனக்கூறினோம்.

பள்ளியில் ஜனங்களெல்லாம் கடைசி இஷாவைத் தொழுவதற்க்காக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்பார்த்தவாறு பள்ளியில் தங்கியிருந்தனர் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள்.

அதன்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களின்பால் ஒரு மனிதரை அனுப்பி மக்களுக்கு தொழுகையை நடத்தித்தருமாறு கூறச்சொன்னார்கள். (அனுப்பி வைக்கப்பட்ட) அவர், அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து ‘நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் நீங்கள் ஜனங்களுக்கு தொழுகையை நடத்தி தருமாறு கட்டளையிடுகின்றனர்‘ எனக்கூறினார். அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் இரக்கமனம் படைத்தவராக இருந்தனர். (எனவே உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து) ‘உமரே! ஜனங்களுக்கு தொழுகையை நடத்தித் கொடுங்கள்‘ என்றனர். அதற்கு உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ‘நீங்கள் தான் அதற்கு மிகுந்த உரிமையுடையவர்கள்‘ என்றனர். ஆகவே அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த நாட்களில் ஜனங்களுக்கு தொழுகையை நடத்தி கொடுத்தனர் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்.

அதன்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களில் இலேசைப் பெற்றதால் (உடல் நலம் சீரானதால்) இரண்டு மனிதர்களுக்கு மத்தியில் (அவர்கள் தாங்கிப் பிடித்துக் கொள்ள) லுஹர் தொழுகைக்காக வெளியேறி(வந்த)னர். அதில் (தாங்கி வந்த இருவரில்) ஒருவர் அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு ஆவார். அப்போது அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்களுக்கு தொழுகை நடத்திக் கொண்டிருந்தனர். (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ்

அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டதும் அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அங்கிருந்து தள்ளிக்கொள்ள முயன்றனர். அவர்களிடம் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தள்ளிச்செல்ல வேண்டாம் என சைகை செய்தனர். தாங்கி பிடித்து அழைத்து வந்த இருவரையும் பார்த்து 'அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு பக்கத்தில் என்னை நீங்கள் (இருவரும் சேர்ந்து) அமரச் செய்யுங்கள்' என்றனர். அதன்படி அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பக்கத்தில் ஒரு விலாப்பகுதியில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை அவ்விருவரும் அமரச்செய்தனர். அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நின்றவாறு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகையைத் தொழுதனர். மக்களெல்லாம் அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் தொழுகையைத் தொழுதனர். (இந்நிலையில்) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அமர்ந்திருக்க (தொழுது கொண்டனர்.)

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் நான் (அறிவிப்பவர்) வந்து நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் நோய்யுற்றிருந்து பற்றி ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் எனக்கு அறிவித்தார்களே அதை எடுத்துக் கூறட்டுமா?' எனக்(அறிவிப்பாளராகிய உபைதுல்லாஹ்) கேட்டேன். அதற்கு அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் 'சரி' எடுத்துக்கூறு என்றனர். ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் (நான்) கேட்ட (மேற் கூறப்பட்டுள்ள) ஹதீதை அப்படியே எடுத்துச் சொல்லிக் காட்டினேன். அதிலிருந்து எதையும் அவர்கள் மறுக்கவில்லை. (எனினும்) 'அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடன் (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்குத் தோள் கொடுத்த) மற்ற மனிதரின் பெயரை (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்களா?' எனக்கேட்டார்கள். நான் 'இல்லை என்றேன். அதற்கு அவர்தான் 'அலி பின் அபீதாலிப்' ஆவார் எனக்கூறினார்.

அறிவிப்பவர் : உபைதுல்லாஹ் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு :
1. அரபியில் 'இஷாத்' தொழுகையை கடைசி 'இஷா' என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

2. நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அமர்ந்து தொழுதனர். அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களை இமாமாக ஏற்றுப் பின்பற்றிக் தொழுதனர். ஜனங்களொல்லாம் அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களை பின்பற்றிக் தொழுதனர் என்பதை அறிந்து கொள்க

## இமாம் பிந்திவிட்டால் அவரல்லாதவர் முந்துவார் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 320

முகீரா பின் ஷுஃபா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் 'தபூக்' (யுத்தத்தில்)கில் கலந்து கொண்டவராவார். (அவர் அறிவிப்பதாவது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது தேவையை நிறைவேற்றுவதற்காக ஃபஜ்ரு தொழுகைக்கு முன்பு (வெளியேறிச்) சென்றார்கள். அவர்களுக்காக (தண்ணீர்) பாத்திரத்தை அவர்களுடன் சுமந்தேன். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் என்பால் திரும்பி வந்ததும் பாத்திரத்திலிருந்து (தண்ணீரை) அவர்களது இரு கைகள் மீதும் ஊற்ற ஆரம்பித்தேன். அவர்களது இருகையையும் மும்முறைக் கழுவினார்கள். அதன்பிறகு தனது முன்கை வழியாக ஜுப்பாவைவெளிப்படுத்த முயன்றார்கள். அவர்களது ஜுப்பாவின் இரு முன்கைகளும் இருக்கமாக இருந்தது. ஜுப்பாவினுள் தங்களது இருகைகளையும் நுழைத்து ஜுப்பாவின் கீழ்பாகத்திலிருந்து தங்களது முன்கையை வெளியாக்கினார்கள். தங்களது முன்கையை முழங்கை மொழி வரை கழுவினார்கள்.

அதன்பிறகு தங்களது இரு காலுறைகளின் மீதும் தடவினர். அதன்பிறகு என்பால் முன் வந்தனர். அடுத்து முகீரா கூறுகிறார்.

(அதன்பிறகு) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் (நானும்) முன்னோக்கி வந்து கொண்டிருந்தேன். அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஜனங்களை முற்படுத்தி அவர்களுக்கு தொழுகை நடத்தி கொண்டிருக்க ஜனங்களை நாங்கள் பெற்றுக் கொண்டோம். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டு ரக்அத்தில் ஒரு ரக்அத்தை மட்டுமே பெற்றுக் கொண்டிருந்தார்கள். (தொழுது கொண்டிருந்த) ஜனங்களுடன் மற்ற ரக்அத்தை தொழுதார்கள். அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸலாம் கொடுத்ததும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையைப் பூர்த்தி செய்து கொள்ள எழுந்தனர். அச்சம்பவம் முஸ்லீம்களை திடுக்கிடச் செய்தது. தஸ்பீஹை அதிகப்படுத்தினார்கள். நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை முடித்துக் கொண்டு அவர்களை முன்னோக்கினர். அதன்பிறகு அழகாகச் செய்தீர்கள் அல்லது நிச்சயமாக சரியாகச் செய்து விட்டீர்கள் எனக்கூறினார்கள். அவர்கள் (ஜனங்கள்) தொழுகையை முதல் நேரத்தில் தொழுதது அவர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக இருந்தது.

---

பாங்கைச் செவியுற்றவர் மீது பள்ளிக்கு வருவது கடமை என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 321

கண் பார்வையற்ற ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிச்சயமாக என்னை பள்ளிக்கு அழைத்து வரும் உதவியாளர் யாரும் எனக்கில்லை (எனக் கூறி) தனக்கு வீட்டில் தொழுது கொள்ள அனுமதி வழங்குமாறு கேட்கிறார். அதைக்

கேட்ட அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், அவருக்கு அனுமதியும் வழங்கிவிட்டனர். அனுமதி பெற்று அவர் திரும்பியபோது அவரை அழைத்து தொழுகையின் அழைப்பை (பாங்கை) செவியுறுகிறீரா? என்று கேட்டனர். அதற்கவர் ஆம்! என்றார். (அதற்கு) பதில் கூறுவீராக! (பள்ளியில் வந்து தொழுவீராக!) என்று கூறினர்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு.

## ஜமாத்தின் சிறப்பு

### ஹதீஸ் எண் : 322

உங்களில் ஒருவர் தனித்துத் தொழுவதை விடவும் ஜமாத்தில் தொழுவது இருபத்தைந்து பங்கிற்கு மேல் அதிகமாகப் பெருவதை விட மிகச்சிறந்ததாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு.

## ஜமாத்தில் தொழுவது நேர்வழியின் வழிமுறைகளில் உள்ளதாகும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 323யு

யாருடைய நயவஞ்சகத்தன்மை அறியப்பட்டுள்ளதோ அந்த நயவஞ்சகரல்லாத, அல்லது நோய்வாய்ப்பட்டவரல்லாத வேறெவரும் (ஜமா அத்து) தொழுகையை விட்டும் பிந்தமாட்டார் என்பதை எங்களில் நான் நிச்சயமாக கண்டு கொண்டேன்.

வியாதிஸ்தராக இருப்பின் இரண்டு மனிதர்களுக்கு மத்தியில் தொழுகைக்கு வருகின்றவரை அவர் (நடந்து வருவார்) நடப்பார்.

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் நேர்வழியின் வழிமுறைகளை எங்களுக்கு கற்றுத்தந்துள்ளனர். நேர்வழியின் வழிமுறைகளில் உள்ளது தான் நிச்சயமாக எந்தப் பள்ளியில் அதற்காக (தொழுகைக்காக) பாங்கு

கூறப்பட்டதோ அதில் தொழுகையை (நிறைவேற்றுவது) என அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

ஜமாத்தில் தொழுவது நேர்வழியின் வழிமுறைகளில் உள்ளதாகும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 323ட

ஒருவர் ஜமாத்தில் தொழுவது அவர் வீட்டில் தொழுவதை விடவும், அவரது கடைத்தெருவில் தொழுவதைவிடவும் இருபதுக்கும் மேற்பட்ட தரங்களை அதிகமாக பெற்றுத்தருகிறது. அதாவது அவர்களில் ஒருவர் ஒளுச் செய்து அதை அழகான முறையில் செய்து விட்டு அவர் மஸ்ஜிதுக்கு வந்தார். அவரைத் தொழுகையை தவிர வேறு எதுவும் கிளப்பி வரச் செய்யவில்லை. அவர் தொழுகையைத் தவிர வேறு எதையும் நாடவில்லை. (எனவே இந்நிலையில்) அவருக்கு அதன் மூலம் ஒரு தரம் உயர்த்தப்பட்டதே தவிர, ஒரு குற்றம் அழிக்கப்பட்டதே தவிர அவர் தனது ஒவ்வொரு (கால்) அடியையும் எடுத்து வைப்பதில்லை. (இவ்வாறு அவர்) பள்ளியினுள் நுழையும்வரை (உண்டு), மேலும் தொழுகை அவரைத் தடுத்துக் கொண்டிருக்கும் காலமெல்லாம் (தொழுது கொண்டிருக்கும்வரை - அவருக்கு நன்மை கிடைத்துக்கொண்டேயிருக்கிறது)

அவர்களில் ஒருவர் எந்த இடத்தில் தொழுதாரோ அந்த இடத்தில் இருக்கும்வரை வானவர்கள் அவரின் மீது ஸலவாத் கூறுகிறார்கள். 'யா அல்லாஹ்! அவருக்கு நீ அருள் செய்வாயாக! யா அல்லாஹ்! அவரது தவ்பாவை (பாவ மன்னிப்பை) அங்கீகரித்தருள்வாயாக!' என அவர் ஒளுவை முறிக்காதவரையிலும் யாரையும் இடைஞ்சல் செய்யாதவரையிலும் இவ்வாறு பிரார்த்தித்த வண்ணம் உள்ளனர் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## இஷாவையும் ஸுப்ஹுவையும் ஜமாத்தில் தொழுவதன் சிறப்பு

### ஹதீஸ் எண் : 324

மஃரிபுக்கு உதுமான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் பள்ளியினுள் நுழைந்து தனியாக அமர்ந்தார்கள். நானும் (அறிவிப்பாளர்) அவர்களிடம் சென்று அமர்ந்தேன். அப்போது அவர்கள், என் சகோதரரின் மகனாரே! “ஜமாத்தாக ஒருவர் இஷாத் தொழுகையை தொழுது விட்டால் அவர் பாதி இரவு தொழுதவரைப் போன்றவராவார்”.

“ஸுபுஹுத் தொழுகையை ஒருவர் ஜமாத்தாக தொழுதுவிட்டால் இரவு முழவதும் தொழுதவரைப் போன்றவராவார்.” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் செவியுற்றிருக்கிறேன் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துர்ரஹ்மான் பின் அபீ அம்ரத்த ரளியல்லாஹு அன்ஹு

## இஷா, ஸுப்ஹுத் தொழுகையை ஜமாத்தில் தொழுவதை விட்டுவிடுவதை கண்டிப்பது (கடினங்காட்டுவது) என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 325

நயவஞ்சகர்களின் மீது மிக கடினமான தொழுகை, இஷாத் தொழுகையும் பஜ்ருத் தொழுகையும் ஆகும். அவ்விரண்டிலும் உள்ளதை (கிடைக்கும் நன்மைகளைப் பற்றி) ஜனங்கள் அறிவார்களேயானால் அவ்விரண்டின்பால் (அதை நிறைவேற்ற) தவழ்ந்து கொண்டாவது வந்து சேருவர்.

ஜனங்களுக்கு தொழுகையை நடத்தித்தர ஒரு மனிதரிடம் நான் கட்டளையிட்டு விட்டு இகாமத்தும் கூறிவிட்டபின்னர் (தொழுகையை ஆரம்பித்த பின்னரும்) தொழுகையை விட்டும் பிந்தி விட்டார்களே அந்த மனிதர்களின்பால் என்னுடன் சில ஆடவர்களை அவர்கள் கையில் விறகுக்கட்டுடன் (இருக்க)

அழைத்துச் சென்று (தொழுகைக்கு வராத) அவர்களது வீடுகளை நெருப்பால் எரித்துக் கொளுத்திவிடுவேன். (இவர்களைப் போன்றவர்கள்) தமக்கு (அங்கே) கொடுத்த (ஆதாயம் எலும்பு கிடைக்கிறது என்று அறிவாரேயானால் அத்(இஷாத்) தொழுகைக்கு ஆஜராவார்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என வேறொரு அறிவிப்பில் அதிகமாக கூறியுள்ளார்

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

## ஹதீஸ் எண் : 326

ஒரு மனிதரை (அழைத்து) ஜனங்களுக்குத் தொழுகை வைக்குமாறு நான் கட்டளையிட்டு விட்டு, அதன்பின் ஜும்ஆ தொழுகையை விட்டும் எவர் பிந்திவிடுகிறாரோ அந்த மனிதர்களின் வீடுகளை நான் நெருப்பை வைத்துக் கொழுத்திவிடுவேன் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜும்ஆ தொழுகையை விட்டுவிட்டு பின் தங்கி விட்டக் கூட்டத்தாரைப்பார்த்து (கடுமையாக) கூறினர் என அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## தொழுகையை அழகாகத் தொழுவது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 327

ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்குத் தொழுகை நடத்தினார்கள். தொழுகையை முடித்து கொண்ட பின்னர், “இன்ன மனிதரே! உமது தொழுகையை நீ அழகாக்கிக் கொள்ள வேண்டாமா? தொழக்கூடியவர் தொழுதால், அவர் எவ்வாறு தொழுகையை நிறைவேற்றுகிறார் என உற்று நோக்க வேண்டாமா? ஒருவர் தொழுவதெல்லாம் அவருக்காக (அவரது பாங்கில் நன்மையைச் சேர்த்துக் கொள்ளவதற்காக)த்தான். நிச்சயமாக அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் எனக்கு முன்னால் (இருப்பதைப்) பார்ப்பது

போன்றே எனக்குப் பின்னாலிருப்தையும் பார்க்கின்றேன்” எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகையில் எல்லாச் செயலகளையும் நிதானமாகவும் அதை முழுமையாகவும் செய்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 328

அல்பரா பின் ஆஜிப் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள்: முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் அவர்களது தொழுகையை அலசினேன். அவர்களது நிலையை (நிலைக்குப்பிறகு) அவர்களது ருகூஉவை அவர்களின் ருகூஉவிற்குப் பிறகு, நிலையில் சமமாக இருந்ததை, அவர்கள் ஸஜ்தாவை, இரு ஸஜ்தாவிற்கு மத்தியில் அவர்களின் அமருதலை, அவர்களின் ஸஜ்தா, ஸலாம் கொடுத்து திரும்புவதற்கிடையில் உள்ள (எல்லா செயல்களும்) கிட்டத்தட்ட சமமானதாக இருந்ததை நான் பெற்றுக்கொண்டேன் எனக்கூறுகிறார்கள்.

### ஹதீஸ் எண் : 329

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்குத் தொழுகை நடத்தியதை நான் கண்டது போன்று உங்களுக்குத் தொழுகை நடத்துவதில் நான் குறை வைக்கமாட்டேன் என அனஸ் ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். அனஸ் அவர்கள் ஒரு காரியத்தைச் செய்துவந்தனர். (ஆனால் அதை) நீங்கள் செய்ய நான் காணவில்லை எனக்கூறிவிட்டு, ருகூஉவிலிருந்து (அனஸ் அவர்கள்) தன் தலையை நிமிர்த்துவார்களாயின் நிலையில் சரியாக நின்றுவிடுவர், முடிவாக (அவரின் இந்நிலையைக் கண்டு) கூறக்கூடியவர், அவர் நிச்சயமாக மறந்துவிட்டார் என்றே கூறிவிடுவர். (முதல்) ஸஜ்தாவிலிருந்து அவர் தலையை உயர்த்தினால் ஸ்திரமாக இருந்து விடுவர் (அவ்வளவு அதிக நேரம் அமர்ந்து விடுகிறார் இதனைப்பார்த்து) கூறக்கூடியவர்

முடிவாக நிச்சயமாக அவர் (மறுமுறை ஸஜ்தா செய்வதை) மறந்தே விட்டார் எனக்கூறிவிடுவார். என்ற இந்த ஹதீஸை அறிவிப்பவர்களில் ஒருவரான தாபித் ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்.

ஹதீஸ் எண் : 330

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் எந்த தொழுகை மிகச் சிறப்புக்குரியது? எனக் கேட்கப்பட்டது. (அதற்கு) நீண்ட நிலையுடைய தொழுகை எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகையில் அமைதிகாக்க வேண்டும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 331

ஒரு நாள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (வீட்டிலிருந்து) வெளியேறி (எங்கள்பால் வந்தனர்) வந்து குதிரைகள் நிலையில்லாது வால்களையும் கால்களையும் (ஆட்டுவதைப்) போன்று உங்களது கைகளை[1] உயர்த்தி (ஆட்டக்கூடி)வர்களாக நான் காண நேர்ந்தது ஏன்? (எனக்கேட்டுவிட்டு) தொழுகையில் அமைதிகாருங்கள். அதன்பிறகு (ஒரு சமயம்) வெளிப்பட்டு எங்களின்பால் வந்து எங்களை வட்டமிட்டவர்களாகக் கண்டனர். உங்களை தனித்தனியாக வட்டமிட்டவர்களாக நான் காண நேர்ந்தது ஏன்? எனக்கூறினார்கள். அதன்பிறகு ஒரு சமயம் எங்களின்பால் வெளிப்பட்டு அமரர்கள் தங்களின் இரட்சகனிடத்தில் அணியாக நிற்பது போன்று நீங்கள் அணியில் நிற்க வேண்டாமா? என்றனர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! அமரர்கள் தங்களது இரட்சகனிடம் அணியில் எவ்வாறு நிற்கிறார்கள் என நாங்கள் கேட்டோம். (அதற்கவர்கள்) முந்திய அணிகளை நிறைவு செய்கிறார்கள் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மற்றொரு அறிவிப்பில் தொழுகையில் ஸலாம் கொடுக்க ‘அஸ்ஸலாமு அலைக்கும்‘, ‘அஸ்ஸலாமு அலைக்கும்‘ என நாங்கள் கூறும் சமயம் எங்களது இரு கைகளை உயர்த்தியவர்களாகக் ஸலாம் கொடுத்துக் கொண்டிருந்தோம். அது தவறானது. அதைச்செய்வதை தவிர்க்க வேண்டும் என்பதை விளக்கிக் கூறியபோது தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘குதிரைகள், நிலையில்லாமல் கால்களையும் வால்களையும் ஆட்டுவது போன்று உங்களது கைகளை உயர்த்தி நீங்கள் ஆட்டிக் கொண்டிருக்க நான் பார்த்திருக்கிறேனே! (உங்களை அவ்வாறு செய்ய வைத்தது எது?‘) எனக் கேட்டார்கள். ஆகவே இது ஸலாம் கொடுப்பதற்கு முன்பு கைகளை ஆட்டுவது கண்டித்துக் கூறப்பட்டது என்பதையும் கவனத்தில் கொள்க.

ஆயினும் ‘அத்தாஹிய்யாத் இருப்பில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருந்தபோது தங்களது ஆள்காட்டி விரலை அசைத்தவாறு துஆ செய்து கொண்டிருக்க நாண் கண்டேன்‘ என வாயில் பின் ஹுஜ்ர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் அபூதாவுதில் பதிவாகியுள்ளது. ‘அத்தாஹிய்யாத் இருப்பில் தொடக்கம் முதல் கடைசி வரை விரலை அசைத்துக் கொண்டிருப்பதை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது. இதை இமாம் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு அவர்களும் அவர்களல்லாத(மற்ற)வர்களும் எடுத்துச் செயல்பட்டிருக்கின்றனர். தொழுகையில் விரலால் சைக்கிணை செய்யலாமா? என அஹ்மது ரஹ்ம(த்)துல்லாஹி அலைஹி அவர்களிடம் கேட்டக்கப்பட்டதற்கு ‘ஆம்! கடினமாக‘ எனக்கூறினர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விரலை அசைக்கவேயில்லை என்ற ஹதீஸ் பதிவாகியுள்ள தொடர் நிலை பெற்று நிற்கவில்லை (சரியானதல்ல) என்பதை அபூதாவுதில்

உள்ள பலஹீனமான ஹதீஸ்களில் நான் (ஷைக் அல்பானி) தெளிவுபடுத்தியுள்ளேன்.

விரலை சைக்கிணைக்குப் பிறகு வைத்து விடுவதற்கும் (அதாவது) 'லாயிலாஹா' வில் தூக்கி 'இல்லல்லாஹ்' வில் போட வேண்டுமென்பதற்கும் நபிவழியில் (சுன்னத்தில்) எவ்வித ஆதாரமில்லை. இந்த ஹதீஸின் தெளிவிற்கு அது ஒரு மாற்றமானதாகும் என்பதை கருத்தில் கொள்க.

தொழுது கொண்டிருப்பவர்க்கு 'ஸலாம்' கூறப்பட்டால் பதில் சைக்கிணை செய்யலாம் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 332

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு தேவையின் நிமித்தம் என்னை அனுப்பி வைத்தார்கள். (அதை முடித்துக் கொண்ட) பின் (வாகனத்தின் மீது) அவர்கள் சென்று கொண்டிருக்க அவர்களிடம் நான் திரும்பி வந்தடைந்தேன். அப்பொழுது (அவ்வாகனத்தின் மீது அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள் என்று குதைபா கூறுகிறார்) அவர்களுக்கு ஸலாம் கூறினேன். என்பால் (ஹதீஸின் சில அறிவிப்புகளில் வந்துள்ளவாறு அவர்களது தலையினால்) சைக்கினை செய்தார்கள். அவர்கள் தொழுகையை முடித்துக் கொண்டு என்னை அழைத்து "நிச்சயமாக நீர் சிறிது ஸலாம் கூறினீர் நான் (அப்பொழுது) தொழுது கொண்டிருந்தேன்" எனக்கூறினார்கள். அந்த சமயம் சூரிய அஸ்தமனத்திசையை முன்னோக்கியவர்களாக அவர்கள் இருந்தனர் என ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

தொழுகையில் பேசுவது மாற்றப்பட்டுவிட்டது என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 333

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நான் தொழுது கொண்டிருந்த பொழுது, கூட்டத்திலிருந்த ஒரு மனிதர் தும்மினார். (அறிவிப்பாளராகிய நான்) யர்ஹமுகல்லாஹ் எனக்கூறினேன். கூட்டத்திலிருந்தவர்களெல்லாம் தங்கள் பார்வையினால் என்னை எறித்தனர். என் தாய் என்னை இழந்து விட்ட கைசேதமே! உங்கள் காரியமென்ன? என்னை ஏன் அவ்வாறு பார்க்கிறீர்கள்? என நான் கூறினேன். அவர்களது கையால் அவர்களது தொடையில் அடித்துக் கொண்டனர். அவர்களெல்லாம் (அப்பார்வையின் மூலம்) நான் பேசாதிருக்க நினைக்கிறார்கள் என்பதை உணர்ந்த போது நான் (என் மீது) கோபப்பட்டு என் நிலையை மாற்றிக்கொண்டு பேசாதிருந்து விட்டேன். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை முடித்துக்கொண்ட போது, என் தாயும் தந்தையும் அவருக்கு சமர்பணமாக, அதற்கு முன்பும் அதற்கு பின்பும் கற்றுத்தரும் விஷயத்தில் அவர்களை விட அழகான, சிறந்த ஒரு கற்றுத்தருபவரை நான் காணவில்லை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவர்கள் என்னை விரட்டவோ என்னை அடிக்கவோ, என்னை பேசவோ இல்லை. அதன் பிறகு நிச்சயமாக இந்த தொழுகை, அதில் மனிதர்களின் எந்தப்பேச்சும் சீரான(முறையான)தல்ல (எனினும்) அது தஸ்பீஹும், தக்பீரும் குர்ஆனை ஓதுவதுமாகும் என்றனர். (அல்லது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியது போன்று)

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நிச்சயமாக நான் அறியாமை காலத்தை விட்டு புதியவன். நிச்சயமாக அல்லாஹ் இஸ்லாத்தை (மார்க்கமாக) அனுப்பிவைத்தான். எங்களில் சிலர் ஜோசியர்களிடம் வருகின்றனர் எனக்கூறினேன். (அதற்கவர்கள்) நீ அவர்களிடம் சொல்லாதீர் என்றனர். எங்களில் சில ஆடவர்கள் சகுனம் பார்க்கின்றனர் என்று கூறினேன். அது அவர்களின் மனங்களில் ஏற்படக்கூடிய ஒன்றாகும், எனவே (அவர்களை எவ்வித செயல்பாடுகளிலிருந்தும்) தடுத்துவிட வேண்டாம் (எந்த செயல்பாடுகளிலிருந்தும் அது உங்களை

நிச்சயமாக தடுத்துவிட வேண்டாம் என இப்னு ஸலா கூறுகிறார்) என்றனர்.

எங்களில் சில ஆடவர்கள் கோடுகளை கிழிக்கக்கூடியவர்களாக இருந்தனர் என்று கூறினேன். அதற்கவர்கள், நபி மார்களில் ஒரு நபி கோடு கிழிக்கக்கூடியவராக இருந்தார். யாரின் கோடு (கிழித்தல்) அக்கோட்டிற்கு ஒத்திருந்ததோ அது தான் எனக்கூறினார்கள். (அந்த நபி போட்ட கோட்டிற்கு ஏற்றவாறு போடுவதற்கு, நமக்கு அது பற்றிய அறிவில்லை, ஆகவே அது நமக்கு நடக்க முடியாத விஷயம் என்று கூறி நடைபெறாத ஒரு காரியத்தை இதற்கு ஒப்பிட்டுக்கூறி செய்ய வேண்டாம் என்பதை விளக்குகிறார்கள்)

என்னிடம் ஒரு அடிமை பெண் இருந்தாள். (அவள்) உஹது மலைப்பக்கமும் ஜவானிய்யா பகுதியிலும் ஆடுகளை மேய்(ப்பது வழக்கம்)த்துக் கொண்டிருந்தாள். ஒரு நாள் சென்று பார்க்கும் பொழுது அவள் மேய்த்துக் கொண்டிருந்த ஆடுகளிலிருந்து ஒரு ஆட்டை ஓநாய் கொண்டு சென்றுவிட்டது. நானும் ஆதமுடைய மக்களில் ஒரு மனிதன் தான், அவர்கள் கைசேதப்படுவது போன்று நானும் கைசேதப்பட்டேன். ஆயினும் (கோபம் மிகுந்ததின் காரணமாக) நான் என் கையை விரித்து அவள் முகத்தில் வேகமாக அடித்து விட்டேன். இவ்விஷயம் (எனக்கு) மிகப்பெரியதாக இருந்ததின் காரணமாக (இது பற்றிக் கூறி கேட்க) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் வந்தேன். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அப்பெண்ணை உரிமை விட்டு விடட்டுமா எனக்கேட்டேன். (அதற்கு) அப்பெண்ணை என்னிடம் கொண்டுவாரும் எனக்கூறினார். (அதற்கிணங்க) நானும் அப்பெண்ணை (அழைத்துக் கொண்டு வந்தேன். அப்பெண்ணிடம் அல்லாஹ் எங்கிருக்கிறான்? எனக் கேட்டனர். (அப்பெண்) வானத்தில் எனக்கூறினாள். (உடனே) அப்பெண்ணை உரிமை விட்டுவிடுவீராக! நிச்சயமாக அவள் விசுவாசங் கொண்டவளாக இருக்கிறாள் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : முஅவியா பின் அல்ஹகம் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : அல்லாஹ் வானத்தில் இருக்கிறான் அர்ஷின் மீது சரியாக உயர்ந்திருக்கிறான் என்பதே குர்ஆன் ஹதீஸ்களின் தெளிவு. தனது சிருஷ்டிகளில் எதற்கும் ஒப்பற்ற அவனை சரியாக புரிந்து கொள்ளாது தூணிலும் இருக்கிறான் துரும்பிலுமிருக்கிறான் எங்கும் வியாபித்திருக்கிறான்,அமைந்து இருக்கிறான் அர்ஷின் மீது சரியாக அமர்த்திருக்கிறான் என்றெல்லாம் பொருள் கூறவோ கருத்துக் கூறவோ நமக்கு யாருக்கும் அல்லாஹ் உரிமை தரவே இல்லை. காரணம்:- ‘குல்ஹுவல்லாஹு‘ அத்தியாத்தின் இறுதியில் அவனுக்கு நிகராக எவரும் இல்லை என்றும், அவனைப் போன்று எதுவுமே இல்லை என்றும் தன்னைப்பற்றி அல்லாஹ் தெளிவாக கூறியிருக்க அவனுக்கு ஒரு உவமையை கற்பித்து மனதில் வந்த அல்லது கேள்விப்பட்ட எல்லாப் பொருளையும் விட்டுவிட்டு, “அல்லாஹ் அவனுக்கே உண்டான தகுதிக்கொப்ப அர்ஷின் மீதிருக்கிறான் எனக்கூறியும் கொள்கையாகக் கொண்டுமிருப்பதே சரியானதாகும். ஆகவே குர்ஆன் ஹதீஸ்களில் தெளிவில் நிருபனமான, ஸஹாபா ரளியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன் அவர்களும் அவர்களைப்பின்பற்றிய முந்திய நல்லவர்களான ஸலபுஸ்ஸாலிஹின்களின் கொள்கையாகும், இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹ் அலைஹி அவர்களிடம் அல்லாஹ் அர்ஷின் மீதிருப்பதைப் பற்றிக் கேட்கப்பட்டதற்கு அவன் அர்ஷின் மீதிருக்கிறான் என்பது அறியப்பட்டதாகும் எவ்வாறு என்பது யாருக்கும் தெரியாததாகும். எவ்வாறு என்ற கேள்வியே ‘பித்அத்‘தாகும், அல்லாஹ் அர்ஷின் மீதிருக்கிறான் என்பதை கொள்கையாக ஏற்று நம்பிக்கை கொள்வது கடமையாகும் எனக்கூறினார்கள். அவ்வாறே நமது ஈமானிருக்க அல்லாஹ் நல்லுதவி செய்வானாக!.

## ஹதீஸ் எண் : 334

“இறைவனுக்காக பணிந்தவர்களாக (தொழுகையில்) நில்லுங்கள்” என்ற வசனம் இறங்கும் வரை தொழுகையில் நாங்கள்

பேசிக்கொண்டிருந்தோம், ஒருவர் அவர் அருகில் தொழுகையில் இருப்பவரோடும் பேசிக்கொண்டிருப்பார். (இவ்வசனம் இறங்கியபின்) வாய் பொத்தி பேசாதிருக்குமாறு நாங்கள் கட்டளையிடப்பட்டோம். பேசுவதிலிருந்து தடுக்கப்பட்டு விட்டோம் என ஜைது பின் அர்க்கம் ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

## தொழுகையில் தேவைக்காக தஸ்பீஹ் கூறுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 335

(தொழுகையில் தவறு ஏற்பட்டு விட்டால் அதை நினைவுபடுத்த) “தஸ்பீஹ் (கூறுவது) ஆடவர்களுக்கும், கைதட்டுவது[1] பெண்களுக்குரியதாகும்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 பெண்கள் கைதட்டுவது நம் வழக்கத்தில் கைதட்டுவது போன்றதல்ல. மாறாக ஒரு கையின் மேல்பகுதியின் மீது மறு கையின் உள்பகுதியினால் தட்டவேண்டும்.

## தொழுகையில் இருக்கும் போது வானத்தின் பால் பார்வையை உயர்த்துவது தடுக்கப்பட்டது என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 336

“தொழுகையில் துஆ செய்யுமிடத்து அவர்களது பார்வைகளை வானத்தின்பால் உயர்த்துகிறார்களே அந்த சமூகத்தவர்கள் (அதை) முடித்துக் கொள்ள(விட்டுவிட)வும். அல்லது அவர்களது பார்வைகள் பறிக்கப்பட்டுவிடலாம்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## தொழுது கொண்டிருப்பவருக்கு முன் செல்வது கடினமான குற்றம், என்பது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 337

ஜைதுபின் காலித் அல்ஜுஹனீ ரளியல்லாஹு அன்ஹு என்பவர் அபூஜுஹைம் என்பவரிடம் "தொழுது கொண்டிருப்பவருக்கு முன்னால் நடந்து செல்வதைப்பற்றி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், (அவர்) என்ன கேள்விப்பட்டார்" என்பதை கேட்டுவர புஸ்ரு பின் ஸயீது என்பவரை அனுப்பினார்.

"தொழுது கொண்டிருப்பவருக்கு முன் செல்பவர் தன் மீது என்ன தண்டனை உண்டு எனத் தெரிந்து கொள்வாரானால், தொழுபவருக்கு முன் அவர் கடந்து (குறுக்கே) செல்வதைவிட, நாற்பதுகள் நிற்பது அவருக்குச் சிறந்ததாக இருக்கும்" என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஜுஹைம் கூறினார்.

(நாற்பது என்பது) நாற்பது நாட்களா? நாற்பது மாதமா? அல்லது நாற்பது வருடங்களா, எனக்குத் தெரியவில்லை என அபுந்நள்ரு கூறுகிறார்.

அறிவிப்பவர் : புஸ்ருபின் ஸயீது ரளியல்லாஹு அன்ஹு

### தொழும் போது குறுக்கே செல்வதை தடுப்பது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 338

தொழும் போது ஜனங்கள் (குறுக்கே) நடந்து செல்வதிலிருந்து (தடுப்புக்கு) மறைத்துக் கொள்ளும் மறைப்பை (வைத்து) ஆக்கியதன் பின் ஒரு சமயம் ஜும்ஆ நாளன்று நான், அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடன் இருக்க அவர் (அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு) தொழுது கொண்டிருக்கும் போது பனூ அபீ முஐத் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு வாலி மனிதர் வந்து (தொழுது கொண்டிருந்த) அவருக்கு முன் தாண்டிச் செல்ல முயன்றார். (தன் முன் அவர்) செல்லாது தடுப்பதற்க்காக (அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு) அவர்கள், அவரது தொண்டைக் குழியில்

தட்டினார்கள். (அவர் சுற்றும் முற்றும்) பார்த்தார்(இருப்பினும் அவருக்கு) வெளியேற வேறு வழி கிடைக்கவில்லை. (எனவே) அவர் திரும்பி வந்து (மீண்டும் அவரை கடந்து செல்ல முயன்ற போது) முந்திய தடவையை விட மிகக்கடுமையாக அவரது குரல் வலையில் (கையை வைத்து) தட்டி(ள்ளி)னார். தள்ளப்பட்ட அவர் நிலையாக நின்று விட்டார். (நின்றவாறு) அபூஸயீதுல் குத்ரியிடம் சண்டையும் போட்டார். அப்பொழுது அவரை அங்கிருந்த மக்கள் (சண்டையிடுவதிலிருந்து) அவரைத் தடுத்தனர். (அடுத்து) மர்வான் அவர்களிடம் நுழைந்து அவர் (தனக்கு) நிகழ்ந்த(விபரத்தை)க்கூறி முறையிட்டார்.

அடுத்து அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு மர்வானிடம் நுழைந்தார் (வந்தார்) என அறிவிப்பாளர் கூறுகிறார். மர்வான், அவரிடம் உமக்கும் உன் சகோதரரின் மகனுக்கும் (இடையில்) என்ன நடந்தது, அவர் உம்மைப்பற்றி (இங்கு) முறையிட்டுக் கொண்டு வந்தார் எனக்கூறினார். அதைக்கேட்ட அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு அவர்கள்

“உங்களில் யாரேனும் தொழுதால், ஜனங்களிலிருந்து (தன்னை மறைத்துத்(தடுத்)துக் கொள்ளும்) ஒரு மறைப்பை ஆக்கிக் கொள்வார். அவர் அவ்வாறு மறைப்பை ஆக்கியதன் பின் யாரேனும் அவருக்கு முன் (அவரை) கடந்து செல்ல (முயற்சித்தால்) அவரது தொண்டைக்குழியில் கையைவைத்துக் தட்ட(ள்ள)வும். அவர் மறுத்தால் அவரைக் கொல்லவும்”. நிச்சயமாக அவர் ஷைத்தானாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் கேட்டேன் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஸாலிஹ் அஸ்ஸமான் ரளியல்லாஹு அன்ஹு

## தொழுபவர் மறைத்துக்[1] கொள்வது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 339**

நாங்கள் தொழுது கொண்டிருக்கும் போது எங்களுக்கு முன் கால்நடைகள் நடந்து சென்று கொண்டிருக்கும். (எனவே) அது பற்றி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்க(ளிடம் கேட்டோம்)ளுக்குக் கூறினோம். (அதற்கு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) வாகனத்தின் பின் பகுதியிலிருக்கும் குச்சி போன்றது உங்களில் ஒருவருக்கு முன்பாக, இருக்க, எது அவருக்கு முன்பாக நடந்து சென்றாலும் (அது) அவருக்கு எவ்வித இடையூறும் செய்யாது (அவருடைய தொழுகை வீணாகாது) என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என தல்ஹா பின் உபைதுல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

குறிப்பு : 1 தடுப்பை (மறைப்பை) ஆக்குவதன் நோக்கம்- தொழுபவர் தன் பார்வையை உள்ளடக்கிக் கொள்வதற்கும், தொழுபவருக்கு சமீபமாக செல்பவரை தடுப்பதற்காகும்.

## ஈட்டியின் தலைப்பகுதியை மறைப்பாக வைத்து அதன்பால் தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 340**

பெருநாளன்று (தொழுகையை நடத்திதர) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளியே வருவார்களாயின் அவர்களுக்கு முன்பாக ஈட்டியின் தலைப்பாகம் நட்டு வைக்கப்படும்.

அதன்பால் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், ஜனங்களெல்லோரும் அவர்களுக்குப் பின்னாலும் (நின்று) தொழுவார்கள். பயணத்திலும் அது போன்றே செய்வார்கள். அங்கிருந்து (அதை அடிப்படையாக வைத்துத்) தான் தலைவர்களும் (அவ்வாறு செய்ய) எடுத்துக் கொண்டார்கள்.

குறிப்பு : வாகனத்தில் தொழுபவர் தனக்கு முன் செல்பவரைத் தடுக்க மறைப்பாக ஆக்கித் தொழுதல் என்பதே இதன் கருத்து.

ஹதீஸ் எண் 340ல் ஈட்டியின் தலைப்பகுதியை மறைப்பாக வைத்து தொழுதுள்ளனர் என உள்ளது. இவையாவற்றுக்கும் கருத்து இவைகளை மறைப்பாக வைத்து தொழுதுள்ளனர் என்பதே அல்லாமல் ஈட்டிக்கோ மாட்டுக்கோ அல்லது மறைப்பாக ஆக்கப்படும் பொருள்களுக்கோ வணக்கமல்ல என்பதை கவனத்தில் கொள்க!

| | | |
|---|---|---|
| | | |

## வாகனத்தின் பால் தொழுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 341

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது வாகனத்தை குறுக்கிலாக்கி (மறைப்பாக வைத்து) அதன்பால் தொழக்கூடியவர்களாக இருந்தனர்.

அறிவிப்பவர் : இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹு

## மறைப்பிற்கு அப்பால் தொழுது கொண்டிருப்பவருக்கு முன்பு நடந்து செல்லுதல் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 342

தோலினால் தயாரிக்கப்பட்ட சிவப்பு நிறமுடைய குப்பாவினுள் (கூடாரத்தினுள் இருக்க) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அவ்ன் பின் அபீஜுஹைபாவின் தந்தை கண்டார்.

ஒளு செய்யும் பாத்திரத்தை பிலால் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளியே கொண்டு வர நான் கண்டேன். (அப்போது) ஜனங்களெல்லோரும் அப்பாத்திரத்தின்பால் விரைந்து செல்வதையும் கண்டேன். அப்(பாத்திரத்)திலிருந்து எதை யார் பெற்றாரோ? அதை அவர் தடவிக் கொண்டார். அதிலிருந்து கிடைக்கப் பொறாதவர் தன்னுடன் இருந்தவரின் கையின் ஈரத்திலிருந்து எடுத்துக் கொள்கிறார்.

அதன்பின் பிலால் ரளியல்லாஹு அன்ஹுவை நான் கண்டேன். (அவர்) ஒரு ஈட்டியை வெளியில் கொண்டு வந்து அதை நட்டு வைத்தார். (அது சமயம்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் சிவப்பு ஆடை (கீழும் மேலும்) அணிந்தவர்களாக (அவ்வாடையை) கிரண்டைகால் வரை உயர்த்தியவர்களாக வெளி வந்து, அந்த ஈட்டியின் பால் (அவ்வீட்டியை மறைப்பாக ஆக்கி) ஜனங்களுக்கு இரண்டு ரக்அத் தொழவைத்தார்கள். (அது சமயம்) ஜனங்களையும் கால்நடைகளையும் ஈட்டிக்கு அப்பால் செல்ல நான் கண்டேன் என அவ்ன் பின் அபீ ஜிஹைபா தன் தந்தை கூறியதாக அறிவிக்கிறார்.

## தொழுகையில் இடுப்பில் கைவைத்து கொள்வது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 343

இடுப்பில் கைவைத்து கொண்டு தொழுவதை நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சயமாக தடுத்துள்ளார்கள் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## தொழுகையில் தனக்கு முன்பாக ஒருவர் துப்பிக்கொள்வது விலக்கப்பட்டதென்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 344

மஸ்ஜிது முன்பாக காரை எச்சிலை நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கண்டார்கள். (கண்டதும்) ஜனங்களை நோக்கி வந்து “உங்களில் ஒருவர் தனது இரட்சகனுக்கு முன்பாக நின்று, அவனுக்கு முன்னால் நின்று காரித்துப்புகிறாரே! அவரின் விஷயம் என்ன? எனக்கேட்டார்கள்.

உங்களில் ஒருவர் அவர் (உங்களால்) வரவேற்கப்பட்டு, (பின்) அவர் முகத்தில் துப்பப்படுவதை அவர் விரும்புவாரா? உங்களில் யாருக்கேனும் துப்ப நேரிட்டால் தனது இடது பக்கம் காலுக்கு

கீழே துப்பிக் கொள்ளவும். அவ்வாறு செய்ய சாத்தியமில்லையெனில் இவ்வாறு செய்யவும், (அதாவது) தனது உடையின் ஒரு பகுதியில் துப்பி மறு பகுதியை அதன்மீது வைத்துத் தேய்த்தனர். என அல் காசிம் வர்ணித்துக்காட்டி இவ்வாறு அவர் செய்யவும் என்றார்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகையில் கொட்டாவி (வரும்போது) அதை அடக்கிக் கொள்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 345

உங்களில் தொழுகையில் யாருக்கேனும் கொட்டாவி வந்தால் இயன்ற அளவு அதை அடக்கிக் கொள்ளவும். (காரணம்) நிச்சயமாக ஷைத்தான் (வாயின் வழியாக) உள்ளே நுழைந்து விடுகிறான்.

முற்றொரு அறிவிப்பில் தனது கையினால் வாயின் மீது (வைத்துத்) தடுக்கவும். காரணம் நிச்சயமாக ஷைத்தான் உள்ளே நுழைந்து விடுகிறான்.

அறிவிப்பவர் : அபூ ஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகையில் (இருக்கும் போது) குழந்தைகளை சுமந்து கொள்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 346

உமாமா பின்த் அபுல் ஆஸை (அதாவது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் மகளார் ஜைனபின் மகளை தங்களின் தோளின் மீது சுமந்தவர்களாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனங்களுக்கு இமாமத் செய்ய (அறிவிப்பாளர்) கண்டேன். அவர்கள் ருகூஉ செய்தால் அ(க்குழந்)தை(யை) (கீழே) விட்டு விட்டு, சுஜுதுவிலிருந்து உயர்ந்தால் மீண்டும் திருப்பி (எடுத்து)க்

கொள்வார்கள் என அபூக(த்)தாதா அல் அன்ஸாரி ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

## தொழுகையில் (நெற்றியை) தடவிக்கொள்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 347

“பள்ளியில் (தொழும்போது) ஒட்டிக்கொண்டிருக்கும் பொடிக்கற்களை நெற்றியிலிருந்து (துடைத்துக் கொள்வது பற்றி) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூற(கேட்)கப்பட்டது. அவசியமாக நீ செய்(தடவிக்கொள்)வதென்றால் ஒரே முறை மட்டுமே” (செய்யலாம்) எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : முஐகிப் ரளியல்லாஹு அன்ஹு

## காரை எச்சிலை செருப்பி(ன் அடிப்பாகத்தி)ல் துப்பி மறு செறுப்பைக் கொண்டு தேய்த்துக் கொள்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 348

அப்துல்லாஹ் பின் ஷிக்கீர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் நான் தொழுதேன். (அப்போது ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) காரி உமிழ்ந்து (தனது செருப்பைக் கொண்டு) தனது செருப்பினால் தேய்த்துக் கொண்டார்கள் எனக்கூறுகிறார்கள்.

## தொழும்போது தலை முடியைக் கட்டிக்கொள்வது தடுக்கப்பட்டது என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 349

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்துல்லாஹ் பின் அல் ஹாரிஸ் ரளியல்லாஹு அன்ஹு என்பவரை, அவர் தலை (முடி) பின் பகுதியில் சுருட்டிக் கட்டப்பட்டதாக (கொண்டையிடப்பட்டதாக இருக்கும் நிலையில்)

அவர் தொழுது கொண்டிருக்கக் கண்டார். அதை அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டதுமே எழுந்து (சென்று) அக்கொண்டையை அவிழ்த்து விட்டு விட்டார். அவர் (அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் தொழுகையை முடித்துக் கொண்டு இப்னு அப்பாஸ் அவர்களின் முன் வந்து, என் தலைமுடியை (இவ்வாறு அவிழ்த்து விட) உங்களுக்கு என்ன (அவசியம்) நேர்ந்தது? என்றார். அதற்கு இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், இதற்கு உதாரணம்(கை கால்கள்) கட்டப்பட்ட நிலையில் தொழுபவரைப் போன்றது தான். கை கால்கள் கட்டப்பட்ட நிலையிலும், முடியை முன்னால் சுருட்டி வைத்து தொழுவது தடுக்கப்பட்டதாகும். இது போன்று தான் குடுமியைக் கட்டிக் கொண்டு தொழுவதும் என்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நிச்சயமாக நான் கேட்டிருக்கிறேன் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ரளியல்லாஹு அன்ஹு

## உணவு தயாராக இருக்கும் நிலையில் தொழுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 350

இரவு சாப்பாடு வைக்கப்பட்டு(விட்ட) நிலையில் தொழுகை நேரமும் வந்து விட்டால் (மக்ரிபு நேரம் வந்ததுமே அக்கால மக்கள் இரவு உணவை சாப்பிட்டு வந்தனர்.)
அந்நிலைக்கொப்பத்தான் மக்ரிபு தொழுகைக்கு முன்பு இரவு சாப்பாட்டை முடித்துக் கொள்ளுங்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்) மஃரிபு தொழுகையை தொழுமுன் அதை (சாப்பிட) ஆரம்பித்து விடுங்கள். உங்களது இரவு சாப்பாட்டை (முடிப்பதை) விட்டும் அவசரப்படாதீர்கள்.

சாப்பாட்டை முடித்துக் கொண்டு தொழுகைக்கு செல்லுங்கள். சாப்பாட்டை தயாராக வைத்துக் கொண்டு அதை உண்ணுவதைத் தவிர்த்து விட்டு ஒருவர் தொழ ஆரம்பித்துவிட்டால் அவரது

கவனம் சாப்பாட்டின் பக்கமே இருக்கும். நிம்மதியாக அவர் தொழுகையை நிறைவேற்ற முடியாது. ஆகவே தான் இவ்வாறு செய்யுமாறு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 மக்ரிபு நேரம் வந்ததுமே அக்காலமக்கள் இரவு உணவை சாப்பிட்டு வந்தனர். அந்நாளைக்கொப்பத்தான் மக்ரிபு தொழுகைக்கு முன்பு இரவு சாப்பாட்டை முடித்துக் கொள்ளுங்கள் என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(தொழுகையில் செய்யவேண்டிய கடமையான ஒன்றை) மறந்து விட்டதற்காக தொழுகையில் (அதற்காக) ஸஜ்தா செய்ய வேண்டுமென்ற (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்களின் கட்டளை பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 351

உங்களில் ஒருவர் அவரது தொழுகையில் சந்தேகப்பட்டு, அவர் தொழுதது மூன்றா? அல்லது நான்கா? என அவருக்கு தெரியாது போய்விட்டால் சந்தேகப்பட்டதை விட்டு விட்டு உறுதியாகத் தெரிவதைவைத்து (விடுபட்டதை) நிறைவு செய்யவும். அதன்பிறகு ஸலாம் கொடுப்பதற்கு முன் இரண்டு ஸஜ்தாக்களை அவர் செய்து கொள்ளவும். ஒரு வேளை அவர் ஐந்தாக தொழுதிருப்பாரேயானால் இந்த ஸஜ்தாக்கள் அவர் தொழுகையை இரட்டையாக்கி விடுகிறது. மூன்றுக்கு மேல் நான்கை நிறைவு செய்து அவர் தொழுதிருந்தால் அவ்விரு ஸஜ்தாக்களும் ஷைத்தானுக்கு இழிவை உன்டாக்கி (மண்ணைக் கவ்வ வைத்து) விடுகிறது என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஸயீதுல் அல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

## ஹதீஸ் எண் : 352

மதியத் தொழுகைகளாகிய லுஹர், அஸர் இவ்விரண்டிலொன்றை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்குத் தொழவைத்து இரண்டு ரக்அத்தில் ஸலாம் கொடுத்துவிட்டு, பிறகு பள்ளியின் கிப்லா பகுதியில் இருந்த ஈச்சமரத்தின் அடிப்பாகத்திற்கு வந்து கோபம் கொண்ட நிலையில் அதன்பால் சாய்ந்து கொண்டனர். கூட்டத்திலே அபூபக்கர், உமர் ரளியல்லாஹு அன்ஹுமா இருவரும் இருந்தனர். இது (விடுபட்டது) பற்றி, பேசுவதற்கு (அவ்விருவரும்) பயந்தனர். ஜனங்களெல்லோரும் தொழுகை குறைக்கப்பட்டுவிட்டது எனக்கூறிக்கொண்டு துரிதமாக வெளியேறினர். (அவர்களில்) துல்யதைன் என்பவர் எழுந்து வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தொழுகை குறைக்கப்பட்டுவிட்டதா அல்லது நீங்கள் மறந்து விட்டீர்களா? எனக்கேட்டனர். (அதைச் செவியுற்ற) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் வலப்பக்கமும் இடப்பக்கமும் நோட்டமிட்டு விட்டு துல்யதைன் என்ன கூறுகிறார் என (மற்றவர்களிடம்) கேட்டார்கள். அதற்கவர்கள் நீங்கள் இரண்டு ரக்அத்தை தவிர தொழவில்லை என அவர் உண்மையே உரைத்தார் என்றனர். (அதன்பிறகு) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (விடுபட்ட) இரண்டு ரக்அத்தை தொழுது ஸலாம் கொடுத்து அதற்குப் பிறகு தக்பீர் கூறி ஸஜ்தா செய்து பிறகு தக்பீர் சூறி உயர்ந்து தக்பீர் கூறி ஸஜ்தா செய்த பிறகு தக்பீர் கூறி நிமிர்ந்தனர்.

இன்னும் ஸலாம் கொடுத்தனர். என இம்ரான் பின் ஹுஸைன் அவர்கள் வழியில் எனக்கு அறிவிக்கப்பட்(டது)டேன் என இந்த ஹதீஸை அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அறிவித்த முஹம்மது பின் சீரின் ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

‘குர்ஆன் ஸுஜுது‘ (ஸஜ்தா திலவாத்து) பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 353

“நிச்சயமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் குர்ஆனை ஓதக்கூடியவர்களாக இருந்தனர். ஸஜ்தா உள்ள அத்தியாத்தை ஓதி (அதற்கென) ஸஜ்தா செய்வார்கள். நாங்களும் அவர்களுடன் ஸஜ்தா செய்வோம். எங்களில் சிலருக்கு தனது நெற்றியை வைக்க இடம் கிடைக்காத அளவிற்கு ஆகிவிடும்” என இப்னு அப்பாஸ் உமர் ரளியல்லாஹு அன்ஹுமா அறிவிக்கிறார்கள்.

## ஹதீஸ் எண் : 354

அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடன் இஷாத் தொழுகையை நான் (அறிவிப்பாளர்) தொழுதேன். ‘இதஸ்ஸமா உன் ஷக்கத்‘ என்பதை ஓதி அத்தொழுகையின் ஸஜ்தாசெய்தார். (அதற்கு நான்) இதென்ன ஸஜதா எனக்கேட்டேன். (அதற்கவர்) இதை ஓதியதற்க்காக அபுல்காசீம் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னால் (நான் தொழுத போது) ஸஜ்தா செய்திருக்கிறேன் அவர்களை நான் (மறுமையில்) சந்திக்கும் வரை அதை (ஓதும் பொழுதெல்லாம்) அதனைக் கண்டு தவறாமல் விடாது ஸஜ்தா செய்தவனாகவே இருப்பேன் என கூறியதாக அபூராபிஉ ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

### ஸுபுஹு தொழுகையில் குனூத் ஓதுவது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 355

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ்ரு தொழுகையில் கிராஅத்தை முடித்து தக்பீர் கூறி (ருகூஉவிலிருந்து) ‘ஸமி அல்லாஹு லிமன் ஹமிதஹ், ரப்பானா வல(க்)கல் ஹம்து‘ எனக்கூறியவாறு தலையையும் உயர்த்திய பின் நின்றவாறே “யா அல்லாஹ்! வலீத் பின் அல் வலீதையும், ஸலமாபின் ஹிஷாமையும், அய்யாஷ் பின் அபீரபீஆவையும் மூமின்களில் பலஹீனமானவர்களையும் ஈடேற்றம் பெறச் செய்(காப்பாற்று)வாயாக!

யா அல்லாஹ்! முளர் கூட்டத்தவர் மீது உன் தண்டனையைக் கடினப்படுத்துவாயாக! யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் காலத்தில் ஏற்பட்ட கடும் பஞ்சத்தைப் போன்ற (ஒரு) பஞ்சத்தை அவர்களுக்கு உண்டாக்குவாயாக! யா அல்லாஹ்! லிஹ்யானையும், ரிஃலானையும், தக்வானையும் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் மாறு செய்துவிட்ட உஸய்யாவையும் நீ சபிப்பாயாக! (உன் சாபத்தை அவர்களின் மீது இறக்குவாளாக!) எனக்கூறக்கூடியவர்களாக இருந்தனர்.

“காரியத்தில உமக்கேதுமில்லை, அவர்களது தவ்பாவை அவன் அங்கீகரிக்கும் வரை, அல்லது அவர்களை அவன் தண்டிக்கும் வரை (ஏனெனில்) அவர்கள் நிச்சயமாக அக்கிரமக்காரர்களாக இருக்கின்றனர்.” என்ற இந்த வசனம் இறக்கப்பட்ட பொழுது நிச்சயமாக அதை அவர்கள் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் விட்டு விட்டார்கள் என எங்களுக்கு எட்டியது என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

## ளுஹரிலும், அதல்லாத மற்ற நேரங்களிலும் ‘குனூத்‘ ஓதுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 356

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகையை உங்களுக்கு (நான்) நெருக்கமாக்கிக் காட்டுவேன் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

ளுஹரிலும், இஷாவிலும் ஸுபுஹுத் தொழுகையிலும் அவர்கள் ‘குனூத்‘ ஓதக்கூடியவர்கயாக இருந்தார்கள். விசுவாசிகளுக்கு துஆ செய்பவர்களாகவும் காபிர்களை லஃனத்து செய்பவர்களாகவும் இருந்தனர் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

## மஃக்ரிபில் ‘குனூத்‘ ஓதுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 357

“நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஸுபுஹு(த்தொழுகையி)லும் மஃரிபிலும் குனூத் ஓதக்கூடியவர்களாக இருந்தனர்.” என அல்பராஉ பின் ஆஜிப் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஃபஜ்ரில் இரு ரக்அத்துகள் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 358

ஃபஜ்ரு உதயமாகி (பாங்கு சொல்லப்பட்டு) விட்டால் இலேசான இரண்டு ரக்அத்துகளையல்லாது வேறு எதையும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழமாட்டார்கள் என ஹப்ஸா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஃபஜ்ரு இரண்டு ரக்அத்தின் சிறப்பு என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 359

ஃபஜ்ரின் இரண்டு ரக்அத்துகள் துன்யாவையும் அந்த துன்யாவில் உள்ள அனைத்தையம் விட மிகச் சிறந்ததாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஃபஜ்ரின் இரு ரக்அத்துகளில் ஓதுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 360

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ்ருடைய இரு ரக்அத்துகளில் ‘குல்யா அய்யுஹல் காஃபிருன்‘ அத்தியாத்தையும் ‘குல்வல்லாஹு அஹது‘ அத்தியாத்தையும் ஓதக்கூடியவர்களாக இருந்தார்கள் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஃபஜ்ரின் இரண்டு ரக்அத்து (தொழுகை)க்குப் பிறகு படுத்து (உருளுதல்) எழுதல் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 361

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ்ரின் இரண்டு ரக்அத்தை தொழுதுவிடுவார்களாயின் நான் விழித்திருந்தால் என்னோடு பேசிக்கொண்டிருப்பார்கள். இல்லையெனில் விலாப்பக்கம் படுத்துப் புரளுவார்கள் என அன்னை ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஃபஜ்ரு தொழுகைக்குப் பிறகு தொழுத இடத்தில் அமருதல் பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 362

ஸம்மாக் பின் ஹர்ப் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். நான், ஜாபர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் நீர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் உட்காரக்கூடியவராக இருந்தீரா? எனக் கேட்டேன்.

(அதற்கு) ஆம்,அதிகமாக எந்த முஸல்லாவில் (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஸுப்கைத் தொழுகிறார்களோ அல்லது காலைத் தொழுகையைத் தொழுகிறார்களோ அதிலிருந்து சூரியன் உதயமாகும் வரை எழுந்திருக்க மாட்டார்கள். சூரியன் உதயமாகி விட்டால் எழுந்து விடுவார்கள். (ஸஹாபாக்கள் ரளியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன்) அறியாமைக்கால காரியங்களை அதுபற்றி பேசி சிரித்து கொண்டிருப்பார்கள். (அதை கேட்கும் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) புன்முறுவல் பூக்க சிரி(ப்பார்)த்தார்கள் என்று கூறுகிறார்.

’ளுஹாத்’ தொழுகை பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 363

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை, ளுகாத் தொழுகையை அறவே (நேமமாக) தொழுக நான் கண்டதில்லை (ஆயினும்) அத்தொழுகையை உறுதியாகவே தொழுகிறேன். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (ஒரு சில) செயல்களை செய்ய விருப்பட்டவர்களாக இருக்கவே (அவ்வாறுஇருப்பினும்) (செய்யாது) விட்டுவிடுவார்கள் (காரணம்) அதை ஜனங்கள் எடுத்து (வேகமாகச்) செயல்பட்டு (அதன்காரணமாக) அது (இறைவனால்) கடமையாக்கப்பட்டு விடுமோ என அஞ்சியதால் தான் என அன்னை ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

’ளுஹாத’ தொழுகை’ இரண்டு ரக அத்துகள் என்பது பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 364

உங்களில் ஒவ்வொருவரின் உடம்பிலுள்ள அனைத்து எலும்புகள், அதனின் இணைப்புகள் யாவற்றிற்கும் ஒவ்வொரு காலைப் பொழுது வரும் போதும் தர்மம் செய்வது கடமையாகும். (அது யாதெனில்) ஒவ்வொரு “சுப்ஹானல்லாஹ்வும்” தர்மமாகும். ஒவ்வொரு “அல்ஹம்துலில்லாஹ்வும்” தர்மமாகும், ஒவ்வொரு “லாயிலாஹா இல்லல்லாஹ்வும்” தர்மமாகும், ஒவ்வொரு “அல்லாஹ் அக்பரும்” தர்மமாகும். நல்லதை ஏவுவதும் தர்மமே! தீயதைத் தடுப்பதும் தர்மம் தான். அவை யாவற்றுக்கும் ஈடாக இரண்டு ரக அத்துகள் ’ளுஹாவின்’ போது தொழுகிறாறோ அது போதுமானதாயிருக்கும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூதர்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

’ளுஹாத்’ (தொழுகை) நான்கு ரக அத்துகள் என்பது பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 365

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'ளுஹாத்' தொழுகையை நான்கு ரக அத்துகளாக தொழுதுள்ளனர். அல்லாஹ் நாடிய அளவிற்கு அதிகப்படுத்தியுமுள்ளனர். என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

'ளுஹாத்' தொழுகை எட்டு ரக அத்துகள் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 366

அப்துல்லாஹ் பின் அல் ஹாரிஸ் ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'ளுஹா' நபிலை தொழுதார்களா? என எனக்கு அறிவிக்கும் ஒருவரை ஜனங்களுக்கு மத்தியில் பெற்று விட வேண்டுமென யார் யாரையோ கேட்டேன். (ஆனால்) அது பற்றிக்கூறும் எவரும் கிடைக்கவில்லை. ஆயினும் அபூதாலிபின் மகள் உம்முஹானீ ரளியல்லாஹு அன்ஹா அவர்கள்,

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கா வெற்றியின் போது, பகல் உயர்ந்த போது ஒரு துணியைக் கொண்டு வந்து அவர்களுக்கு மறைப்பாக ஆக்கப்பட்டது. (அதன் பிறகு) குளித்தார்கள். பின் எட்டு ரக அத்துகளைத் தொழுதார்கள்.

அவர்கள் அத்தொழுகையில் நிலையில் நின்றதுதான் அதிகமா? அல்லது ருகூவு? அல்லது ஸுஜுதா? என்பது எனக்குத் தெரியவில்லை. அவையாவும் ஒன்றுக்கொன்று சமமாக இருந்தது. அ(து போன்ற)த் தொழுகையை முன்போ, அதற்கு பின்போ அவர்கள் தொழுக நான் காணவில்லை என எனக்கு அறிவித்தார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் ரளியல்லாஹு அன்ஹு

’ளுஹாத்’ தொழுகையை பற்றிய உபதேசம் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 367

ஒவ்வொரு மாதத்திலும் மூன்று நாட்கள் நோன்பு நோற்க வேண்டுமென்றும், ளுஹா(வின் போது) இரண்டு ரக அத்துகள் தொழ வேண்டும் எனறும், நான் உறங்கும் முன் ’வித்ரு’ தொழுக வேண்டுமெனவும் எனது உற்ற நண்பர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்கு வஸிய்யத்துச் செய்தார்கள் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

’அவ்வாபீன்’ தொழுகை பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 368

நிச்சயமாக! ஜைது பின் அல் அர்(க்)கம் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு சாராரை ளுஹா நேரத்தில் தொழுகக் கண்டார்கள், அப்போது அவர், இந்த நேரமல்லாத வேறு நேரத்தில் தொழுவது, நிச்சயமாக! மிகச் சிறந்ததாகும் என்று, அவர்கள் அறிந்து (கொண்டு) விட்டனர். என்பதை தெரிந்து கொள், நிச்சயமாக! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் “அவ்வாபீன் தொழுகை என்பது, ஒட்டகக்குட்டிகள் (சுட்டமணலின் சூடு தாங்காமல் தரையிலிருந்து) எழுந்து விடும் நேரத்தில் தொழும் தொழுகையாகும் என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அல்காஸிம் அஷ்ஷைபானீ ரளியல்லாஹு அன்ஹு

யார் இறைவனுக்காக ‘ஸஜ்தா‘ செய்கிறாரோ அவருக்கு ‘சுவர்க்கம்‘ உண்டென்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 369

‘ஸஜ்தா‘(வின் ஆயத்தை)வை ஆதமின் மகன் ஓதிவிட்டு (அதற்குரிய) ‘ஸஜ்தா‘வை அவர் செய்துவிட்டதனால் ஷைத்தான் (அவரை விட்டும்) விலகி நின்று, “அவனுக்கு வந்தகேடே!” (அபூகுறைப்பின் அறிவிப்பில்: எனக்கு வந்தகேடே! என உள்ளது.) ஆதமின் மகன் ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிடப்பட்டான். (அதையேற்று) அவன் ஸஜ்தா செய்துவிட்டான். (ஆகவே) அவனுக்கு சுவனம் (உண்டு) தான் நான் (ஆதமுக்கு) ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிடப்பட்டுள்ளேன். (அதையேற்காது) நான் என்னை ஸஜ்தா செய்வதிலிருந்து விலக்கிக் கொண்டேன். (ஆகவே) எனக்கு நரகம் தான் எனக்கூறியவனாக அவன் அழுகிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

## இரவிலும், பகலிலும் (ஃபர்ளல்லாத) பனிரெண்டு ரக்அத்துகளை தொழுவதன் சிறப்பு பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 370

ஒவ்வொரு நாளிலும் ஃபர்ளல்லாத பனிரெண்டு ரக்அத்துகளை எந்த (ஒரு) முஸ்லிமான அடியானும் அல்லாஹ்விற்க்காக தொழுவதில்லை. அல்லாஹ் அவருக்கு சுவனத்தில் ஒரு வீட்டை கட்டியே தவிர அல்லது அவருக்கு சுவனத்தில் ஒரு வீடு கட்டப்பட்டே தவிர என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நிச்சயமாக (தான்) செவியுற்றதாக, நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் துனைவியார் உம்மு ஹபீபா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள். (அவ்வாறு அறிவித்தன்) “பிறகு நான் தவறாது அத்தொழுகையைத் தொழுது கொண்டிருந்தேன்“ என (அன்னை) உம்மு ஹபீபா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அம்ரு (இப்னு அவ்ஸ் ரளியல்லாஹு அன்ஹு) அவர்க(ளும்) “அதன்பின் நான் தவறாமல் அத்தொழுகையைத்

தொழுகலானேன்" எனக்கூறியிருக்கிறார். நுஃமான் (பின்ஸாலிம் ரளியல்லாஹு அன்ஹு) அவர்களும் அவ்வாறே கூறியிருக்கிறார்கள். (மேற்கூறிய அறிவிப்பில் ஒவ்வொரு நாளும் என வந்துள்ளது போன்று) வேறு ஒரு அறிவிப்பில் "பகலிலும் இரவிலும்" என வந்துள்ளது.

## இரு பாங்குகளுக்கு (பாங்குக்கும் இகாமத்திற்கும்) இடையில் ஒரு தொழுகை உண்டு என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 371

"இரு பாங்குகளுக்கும் (பாங்குக்கும் இகாமத்திற்கும்) இடையில் ஒரு தொழுகை உண்டு." அதை, மும்முறை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். மூன்றாம் முறையில், விருப்பட்டவருக்கு என்றார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ்பின் முகஃப்பல் அல்முஜனிய்யு ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகைக்கு முன்பும், அதற்குப்பிறகும் நஃபில் தொழுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 372

லுஹருக்கு முன் இரண்டு ரக்அத்துகளையும் அதற்குப்பிறகு இரண்டு ரக்அத்துகளையும், மஃக்ரிபுக்கு பிறகு இரண்டு ரக்அத்துகளையும் இஷாவிற்குப்பிறகு இரண்டு ரக்அத்துகளையும் ஜும்ஆவிற்குப்பிறகு இரண்டு ரக்அத்துகளையும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் நான் (இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹு) தொழுதேன். (ஆனால்) 'மஃக்ரிபு, இஷா, ஜும்ஆ' (ஆகியவற்றின் சுன்னத்துகளை) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன், அவர்களது இல்லத்தில் தொழுதிருக்கிறேன் என இப்னு, உமர் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## இரவிலும், பகலிலும் நஃபில் தொழுவது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 373

அப்துல்லாஹ் பின் ஷகீக் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் (கூறுகிறார்கள்) நான் ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் தொழுகை பற்றி-அவர்களது உபரி (நஃபில்) வணக்கங்கள் பற்றிக் கேட்டேன், அதற்கு (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா) அவர்கள் என் வீட்டில் லுஹருக்கு முன் நான்கு ரக்அத்துகள் தொழுது விட்டு, அதன்பின் (வீட்டிலிருந்து) வெளியேறி(ச் சென்று) ஜனங்களுக்கு தொழுகை நடத்துவார்கள், அதன்பின் (வீட்டினுள்) நுழைந்து, இரண்டு ரக்அத்து தொழுவார்கள். (அடுத்து) மஃக்ரிபை ஜனங்களுக்கு தொழ வைப்பார்கள். அதன்பின் (வீட்டினுள்) நுழைந்து இரண்டு ரக்அத்துகள் தொழுவார்கள். (அதுபோலவே) இஷாத் தொழுகையை ஜனங்களுக்குத் தொழ வைத்து (முடித்துக் கொண்டு) (என்வீட்டில்) நுழைந்து இரண்டு ரக்அத்துகள் தொழுவார்கள். (மேலும்) இரவில் ஒன்பது ரக்அத்துகள் 'வித்ரு' உள்பட தொழக்கூடியவர்களாக இருந்தனர்.

இரவு நேரங்களில் (சில இரவுகளில்) நீண்ட நிலை உடையவர்களாக(வும்) (சில) இரவுகளில் நீண்ட இருப்பை உடையவர்களாகவும் தொழுது வந்தனர்.

(நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் நின்ற நிலையில்[1] கிராஅத் ஓதுவார்களானால் நின்ற நிலையிலேயே 'ருகூஉம்', சுஜூதும்' செய்வார்கள், அமர்ந்த நிலையில் ஓதுவார்களானால், அமர்ந்தே 'ருகூஉம்', சுஜூதும்' செயவார்கள். 'ஃபஜ்ரு' உதயமாகி விட்டால்[2] இரண்டு ரக்அத்துகளைத் தொழுவார்கள் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் ஷகீக் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 நின்று தொழ ஆரம்பிப்பார்களானால் அத்தொழுகையின் ரக்அத்துகளை நின்றே தொழுவார்கள்,

உட்கார்ந்து தொழுவார்களானால், அத்தொழுகையளின் ரக்அத்துகளை உட்கார்ந்தே தொழுது முடிப்பார்கள் என்பதாகும்.

2 ஃபஜ்ருக்கு பாங்கு சொல்லிவிட்டால்

பள்ளியில் நஃபில் தொழுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 374

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், பள்ளியில் பாயினால்[1] சுற்றிலும் மறைத்து (அதனுள் தொழுவதற்காகவு)ம் தொழும் போது (தன்னை), அவர்களைக் கடந்து செல்பவர்களை (விட்டும் தடுத்து). மறைத்து கொள்வதற்காகவும் ஒரு சிறிய அறையை ஆக்கிக் (அமைத்து)க் கொண்டார்கள். அதனுள் தொழுவதற்க்காக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (வீட்டை விட்டுப்) புறப்பட்டு வெளியேறி வந்தனர். (அப்போது) ஜனங்களை அவர்களைத் தொடர ஆரம்பித்து அவர்களும் வந்து அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுகையைத் தொழுதனர் என அறிவிப்பாளர் கூறுகிறார்.

அதன்பின் “(அடுத்து) இரவு(த் தொழுகைக்ாக) ஜனங்களொல்லாம் வந்து ஆஜராயினர். அவர்களை விட்டும், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் பிந்தி விட்டனர். அதாவது அவர்கள் வரவில்லை (என) அறிவிப்பாளர் கூறுகின்றார்.

(இதனால் அங்கு) வந்திருந்த (மக்கள்) சப்தத்தை உயர்த்தினர். பொடிகற்களையும் வாசலில் எறிந்தனர். அது சமயம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள். கோப முற்றவாறு (தங்கள் வீட்டிலிருந்து) வெளிவந்து அவர்களிடம் (கூறுகின்றர்கள்). உங்களின் (இச் செயல்) இவ்வாறே இருக்குமானால் (அதன் காரணமாக) அதை உங்களின் மீது (இறைவனால்) கடமையாக்கப்பட்டு விடுமோ என நான் என்னி (அஞ்ச) வேண்டியுள்ளது. (எனவே) (இது போன்ற உபரித்

தொழுகையை) உங்களது இல்லங்களில் கடைபிடித்துத் தொழுங்கள். (ஏனெனில்) மனிதனின் தொழுகையில் சிறந்தது கடமையாக்கப்பட்டதை (பர்ளை)த் தவிர (பாக்கி உபரி தொழுகையை) அவன் (தன்) வீட்டிலாகும். (வீட்டில் தொழும் தொழுகையாகும்).

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், பள்ளியில் ஒரு சிறிய அறையை பாயினால் ஆக்கிக் கொண்டனர் என மற்றொரு அறிவிப்பவில் உள்ளது.

குறிப்பு : 1 கஸஃபத் என்றும் ஹஸீர் என்றும் சந்தேகத்தில் அறிவிப்பாளர் கூறுகிறார். இரண்டிற்கும் பொருள் பாய்தான்.

வீடுகளில் நஃபில் (ஃபரளல்லாத தொழுகைகளை) தொழுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 375

உங்களில் ஒருவர் பள்ளியில் தொழுகையை முடித்துக் கொண்டால் தனது தொழுகையில் ஒரு பகுதியை தனது வீட்டிற்க்காக ஆக்கி கொள்ளவும். காரணம் நிச்சயமாக அல்லாஹ் அவரது தொழுகையின் நிமித்தம் அவரது வீட்டில் நன்மையை அருளக்கூடியவனாக இருக்கிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு

‘உங்களில் ஒருவர் சுறுசுறுப்பாக இருக்கும் வரை அவசியம் (நின்று) தொழுகவும். அவர் சோர்வடைந்து விட்டால் அவர் அமர்ந்து விடவும்‘ என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 376

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் பள்ளியினுள் நுழைந்தனர். (அப்போது அங்குள்ள)

இரு தூண்களுக்கு மத்தியில் நீண்ட கயிறு ஒன்று (கட்டப்பட்டு) இருந்தது. (அதைக்கண்ட நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) இது என்ன? எனக்கேட்டனர். (இது) ஜைனப் ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்காக! அவர்கள் (தொழும்போது) சோர்வடைந்து விட்டாலோ, அசதி ஏற்ப்பட்டு விட்டாலோ அதை பிடித்துக் கொள்வார்கள் எனக்கூறப்பட்டது. (அதற்கு) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், ‘அதை அவிழ்த்து விடுங்கள். உங்களில் ஒருவர் அவருக்கு சுறுசுறுப்பு உள்ளவரை (நின்று) தொழுது கொள்ளவும். அவருக்கு சோம்பல், அசதி, ஏற்பட்டால் அமர்ந்து விடவும்‘ எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

‘செயல்களில் மிக விருப்பமானது அல்லாஹ்விடம் அவற்றில் நிரந்தரமானதாகும்‘ என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 377

உம்முல் முஃமினீன் ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் நான் கேட்டேன். ‘உம்முல் முஃமினீன் அவர்களே! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் செயல்கள் எவ்வாறு இருந்தது? நாட்களில் எதையேனும் பிரத்தியேகப்படுத்தி (எச்செயலையும் செய்யக் கூடியவராக) இருந்தனரா?‘ எனக்கேட்டதற்கு ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் (அவ்வாறு ஏதும்) இல்லை. அவர்களது செயல்கள் (யாவும்) நிரந்தரமாக (எப்போதும் போல்தான்) இருந்தது. எனினும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (செயல்களில்) சக்தி பெற்ற அளவிற்கு உங்களில் யார் சக்தி பெற்றிருக்கிறார்? எனக் கூறினார்கள் என அறிவிப்பாளராகிய அல்கமா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

‘செயல்களில் எது இயலுமோ? அதை எடுத்துக் கொள்ளுங்கள்‘ என்பது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 378

ஹவ்லா பின்த் துவைத் பின் ஹபீப் பின் அப்துல் உஜ்ஜா (எனும் பெண்மனி) அன்னை ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் பால் சென்றனர். (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுமிருந்தனர். (அப்போது) 'இவள்தான் அல் ஹவ்லா பின் துவைத் (என அறிமுகம் செய்து) நிச்சயமாக இந்தப்பெண் இரவெல்லாம் உறங்குவதில்லை' என (ஜனங்கள்) எண்ணுகிறார்கள். என நான் (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறினேன்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் '(என்ன?) அந்தப்பெண் இரவெல்லாம் உறங்குவதில்லையா?' என வினவிட்டு உங்களால் இயன்ற அளவிற்குள்ள செயல்களை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது சக்தியமாக! நீங்கள் சோர்வடையும் வரை அல்லாஹ் சோர்வடையமாட்டான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

### நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 'தொழுகை', அவர்களது 'துஆ' பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 379

எனது சிறிய தாயார் மைமுனா ரளியல்லாஹு அன்ஹா அவர்களுடன் அவர்களது வீட்டில் (அல்லாஹ்வின்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இபாதத்துகள் வணக்கங்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டி) ஓரிரவு தங்கியிருந்தேன். இரவில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எழுந்து தங்கள் தேவைக்கு (மலம், சிறுநீர் கழிக்க) வந்து விட்டு அதன்பின் தங்களது முகத்தையும் கைகளையும் கழுவிய பின்

உறங்கிவிட்டார்கள். அதன்பிறகு எழுந்து (கட்டி வைக்கப்பட்டிருந்த) தண்ணீர் பையின் பால் வந்து அதன் வாய்க்கட்டை அவிழ்த்து (அதிலிருந்து) இரு ஒளுவிற்கு இடைப்பட்ட (அதாவது தண்ணீரை அதிகமாகவுமின்றி குறைவாகவுமின்றி அளவோடு உபயோகித்து) ஒரு ஒளுவை நேர்த்தியாக செய்தனர். அதன்பிறகு (தொழுகைக்காக) நின்று தொழ ஆரம்பித்தனர். அப்போது நான் எழுந்து, நிச்சயமாக நான் உஷாராகி அவர்களைக் கண்காணிக்கின்றேன் என்பதை அவர்கள் பார்த்து விடுவதை வெறுத்ததன் நிமித்தம் சோம்பல் முறித்துக் கொண்டேன். அதன்பின் ஒளுவும் செய்து கொண்டு (வந்தேன் அப்போது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்)அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

எனவே நான் அவர்களின் இடது பக்கத்தில் (சென்று) நின்றேன். அப்போது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எனது கையைப்பிடித்து சுற்றவைத்து (தங்களது) வலது பக்கம் ஆக்கினார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் இரவுத் தொழுகையானது பதிமூன்று (13) ரக்அத்துகளாக நிறைவு பெற்றன. அதன்பின் படுத்து கொரட்டை விட்டு உறங்கினார்கள். அவர்கள் உறங்கும் போது கொரட்டை விடுவார்கள். அதன்பின் பிலால் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் வந்து அவர்களிடம் தொழுகையைப் பற்றி அறிவித்த போது (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் எழுந்து (அப்படியே) ஒளுச் செய்யாது தொழுதனர். அவர்களது துஅவில்

யாஅல்லாஹ்! எனது இதயத்தில் ஒளியை ஆக்குவாயாக!
எனது பார்வையில் ஒளியை ஆக்குவாயாக!
எனது செவியில் ஒளியை ஆக்குவாயாக!
எனது வலப்புறம் ஒளியை ஆக்குவாயாக!
எனது இடப்புறம் ஒளியை ஆக்குவாயாக!
எனது மேலிருந்து ஒளியை ஆக்குவாயாக!
எனக்கு கீழ் ஒளியை ஆக்குவாயாக!
எனக்கு முன்னால் ஒளியை ஆக்குவாயாக!
எனக்கு பின்னால் ஒளியை ஆக்குவாயாக!

ஒளியை மகத்தானதாக எனக்கு ஆக்கி (அருள்) வாயாக! எனக்கூறிக் கொண்டிருந்தனர் என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹூ அன்ஹூ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

என் மனதில் ஏழு வார்த்தைகளை நான் வைக்கிறேன். ஆயினும் அதை நான் மறந்து விட்டேன். அப்பாஸின் மக்களில் சிலரை நான் சந்தித்தேன். அவைகளை எனக்கு கூற ஆரம்பித்து அஸபீ, வலஹ்மீ, வத(ம்)மீ, வஷஃரீ ஆகிய (ஐந்து வார்த்தைகளையும் அதன்பிறகு) இரண்டையும் கூறினார் என குரைப் ரளியல்லாஹூ அன்ஹூ அவர்கள் அறிவிக்கின்றனர்.

குறிப்பு : 1 மேற்கூறிய ஹதீஸில் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் உறங்கி விழித்தவாறு சென்று தொழுத நிகழ்ச்சி பிறிதொரு ஹதீஸில் விளக்கப்பட்டுள்ளபடி, இது நபிமார்களுக்கு மட்டும்தான் பொருந்தும் என்பதை முஸ்லீம்கள் நினைவில் கொள்ளவும்.

2 குரைப் ரளியல்லாஹூ அன்ஹூ அறிவிக்கும் ஏழு வார்த்தைகளைப் பற்றிய ஹதீஸில் உள்ளவை நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களது ‘துஆ‘வில் உள்ள வார்த்தையாகும்.

## ஹதீஸ் எண் : 380

இரவில் தொழுவதற்காக எழுந்தால் இலேசான இரண்டு ரக்அத்துகளைக் கொண்டு தங்களது தொழுகையை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஆரம்பிப்பார்கள் என ஆயிஷா ரளியல்லாஹூ அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹூ அன்ஹா

இரவில் எழுந்ததும் தொழுகைக்காக நின்றால் நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதும் துஆ

**ஹதீஸ் எண் : 381**

நடு இரவில் தொழுகத் தயாரானால் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “யா அல்லாஹ்! உனக்கே புகழ் அனைத்தும் உரித்தாகுக! நீயே வானங்கள், பூமி ஆகியவற்றின் ஒளியாக இருக்கிறாய், உனக்கே எல்லாப் புகழும்! நீயே வானங்களையும் பூமியையும் நிலை நிறுத்தி வைப்பவன்! உனக்கே எல்லாப்புகழும்! நீதான் வானங்கள் பூமி அவற்றிலிருப்பவை அனைத்திற்கும் இரட்சகன்! நீதான் உண்மையானவன்! உனது வாக்கு உண்மையானது! உனது கூற்று உண்மையானது! உன் சந்திப்பு உண்மையானது! சுவனம் உண்மையானது! நரகம் உண்மையானது! இறுதி நாள் உண்மையானது! யா அல்லாஹ்! உனக்கே நான் முற்றிலும் சிரம்பணிந்தேன். (என்னை நான் உன்னிடமே முழுமையாக ஒப்படைத்துவிட்டேன்)

உன்னைக் கொண்டே நான் ஈமான் கொண்டுள்ளேன். உன்னைக் கொண்டே வழக்குத் தொடர இருக்கிறேன். உன்னிடமே தீர்ப்பைத் தேடிவர இருக்கிறேன். நான் முற்படுத்தியவற்றையும், பிற்ப்படுத்தியவற்றையும் நான் மறைந்திருந்தவற்றையும் நான் பகிரங்கப்படுத்தியவற்றையும், நீ எனக்கு மன்னித்தருள்வாயாக! நீதான் எனது (இலாஹ) ஏகன்! என்னால் வணங்கப்படுபவன், வணங்கப்படுபவன் உன்னையன்றி வேறெவருமில்லை எனக் கூறக்கூடியவர்களாக இருந்தார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு

**இரவுத் தொழுகையின் முறையும், அதன் ரக்அத்துகளின் எண்ணிக்கையும் பற்றிய பாடம்.**

**ஹதீஸ் எண் : 382**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இரவில் 13 ரகஅத்துகள் தொழுவார்கள். அதில் ஐந்து ரக்அத்தை கொண்டு ‘வித்ரு‘ தொழுவார்கள். அதன் (ஐந்தாவதின் ரக்அத்தில்) கடைசியிலே தவிர (இடையில்)

அவற்றில் எந்த ரக்அத்திலும் (இடை இருப்பு) உட்காரமாட்டார்கள், என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

## இரவுத் தொழுகை இரண்டு இரண்டு ஆகும், இரவின் கடைசிப்பகுதியில் 'வித்ரு' ஒரு ரகஅத்தாகும், என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 383

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் இரவுத் தொழுகைப்பற்றி நிச்சயமாக கேட்டார், அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், "இரவுத் தொழுகை இரண்டு இரண்டாகும். உங்களில் ஒருவர் ஃபஜ்ருத் தொழுகையை (தவறிவிடுவதை) பயந்தால் ஒரே ஒரு ரக்அத்து தொழுது விடவும், (ஏனெனில்) அவர் முன்பு தொழுது விட்டாரே அதற்கு (இது) 'வித்ராக' ஆகிவிடும் என கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹுமா

## இரவுத் தொழுகை, நின்ற நிலையிலும் அமர்ந்த நிலையிலும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 384

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை இரவுத் தொழுகையில் உட்கார்ந்து எதையும் ஓதக்கூடியவர்களாக நான் காணவில்லை, எதுவரையெனில், அவர்களுக்கு வயதாகிவிட்ட போது, அமர்ந்து ஓதிக்கொண்டிருந்தார்கள், (அவ்வாறே) ஓதிக்கொண்டிருக்கும் அத்தியாத்தில் முப்பது அல்லது நாற்பது ஆயத்து (வசனங்கள்) மீதமிருப்பின் (அப்போது) எழுந்து நின்று அவைகளை ஓதி முடித்து அதன்பின் ருகூஉ செய்வார்கள் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றனர்.

இரவு முழுவதும் ஒருவர் தூங்கிவிட்டு அதில் அவர் தொழாமலிருப்பது வெறுக்கத்தக்கதாகும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 385

இரவில் தூங்க ஆரம்பித்து அதிகாலைப் பொழுதை அடையும் வரை தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதர் பற்றி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறப்பட்டது. (அதற்கவர்கள்) அந்த மனிதர் தான் அவரது ஒரு காதில் அல்லது அவரது இரு காதுகளில் ஷைத்தான் சிறுநீர் கழிக்கப்பட்டவராவார் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹு அன்ஹு

தொழுகையில் தூங்கி விழுந்தால் அவர் உறங்கிவிடவும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 386

“உங்களில் ஒருவர் தொழகையில் தூங்கி விழ ஆரம்பித்தால், அவரது தூக்கம் (நீங்கிப்) போகும் வரை அவர் உறங்கிவிடவும். (காரணம்) நிச்சயமாக உங்களில் ஒருவர் தூங்கி விழுந்த நிலையில் தொழுவாரோயானால் (அல்லாஹ்விடம்) பாவமன்னிப்புக் கேட்கப்போய் தன்னையே ஏசிக்கொள்வார்” என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அறிவிக்கிறார்கள்.

ஷைத்தானின் முடிச்சுக்ளை அவிழ்க்கக்கூடியவை என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 387

உங்களில் ஒருவர் தூங்க ஆரம்பித்தால் அவர் தூங்கும் போது அவரது தலைப்பகுதியில் ஷைத்தான் மூன்று முடிச்சுகளைப் போடுகின்றான். ஒவ்வொரு முடிச்சின் மூலமும் நீண்ட இரவு உண்டு என அவரின் மீது அவன் அடிக்கின்றான். (ஆகவே

தூங்கிய அவர்) விழித்து அல்லாஹ்வை நினைவு கூறிவிட்டால் ஒரு முடிச்சு அவிழ்ந்து விடுகிறது.

அவர் ஒளுச்செய்து விடுவாராயின் அவரை விட்டு இரண்டாவது முடிச்சம் அவிழ்ந்து விடுகிறது. அவர் தொழுது விட்டால் எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்து விடுகின்றன. சுறுசுறுப்பானவராக நல்ல மனமுடையவராக அவர் காலைப் பொழுதை அடைந்து விடுகிறார். அவ்வாறு இல்லாவிட்டால் தீயமனம் உடையவராக சோம்பேறியாக காலைப் பொழுதை அடைந்து விடுகிறார் என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் எத்தி வைக்கிறார்கள்.

## இரவில் ஒரு நேரம் உண்டு அதில் பிரார்த்தனை அங்கீகரிக்கப்படும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 388

நிச்சயமாக இரவில் ஒரு நேரமுண்டு அந்நேரத்திற்கு ஏற்றாற்போல் முஸ்லிமான அடியான்: அல்லாஹ் அவருக்கு அதைத் தந்ததைத்தவிர (வேறு) எந்த நன்மையும் கேட்பதில்லை அது ஒவ்வொரு இரவிலுமாகும் என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு

## இரவின் கடைசிப்பகுதியில் ‘துஆ‘, ‘திக்ரு‘ செய்வதை ஆசையூட்டுவது பற்றியும் அவை அந்நேரத்தில் அங்கீகரிக்கப்படும் என்பதைப் பற்றியும் உள்ள பாடம்.

### ஹதீஸ் எண் : 389

பரக்கத்துகளை நல்குபவனும், உயர்வானவனுமாகிய அல்லாஹ் ஒவ்வொரு இரவிலும் இரவின் மூன்றாம் பகுதி முடிந்தபின் முதல் வானத்தின் பால் இறங்குகிறான். (இறங்கிய அவன்)

“நான் தான் அரசன்! நான் தான் அரசன்! என்னை அழைப்பவர் யார்? அவருக்கு நான் பதில் கூறுவேன்! என்னிடம் கேட்பவர் யார்? அவருக்கு அதை நான் கொடுக்கிறேன்! என்னிடம் பாவமன்னிப்பு கேட்பவர் யார்? அவரது பாவத்தை நான் பொறுத்து மன்னித்து விடுகிறேன்! (எனக்கூறுகிறான்) ஃபஜ்ரு உதயமாகும்வரை நிச்சயமாக அல்லாஹ் இவ்வாறு இருந்து கொண்டிருக்கிறான்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

## இரவுத் தொழுகையின் முழுமையும், அதைத் தொழாமல் தூங்கிவிட்டவர்பற்றியும், நோயாளி அதை நிறைவேற்றுவது பற்றியும் உள்ள பாடம்.

### ஹதீஸ் எண் : 390

ஸஅது பின் ஹிஷாம் ரளியல்லாஹ் அன்ஹு என்பவர் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்ய விரும்பி மதினாவிற்கு முன்னோக்கி வந்தார். அங்கு அவருக்குரிய நிலத்தை விற்று அதன் மூலம் போர் கருவிகள் குதிரைகளில் ஆக்கி (வாங்கி) இறப்பெய்தும் வரை ரோமாபுரியுடன் போர் செய்ய விரும்பினார். மதினா வாசிகளில் சில மனிதர்களை (இது சம்பந்தமாக) சந்தித்தார். (அவ்வாறு செய்வதிலிருந்து) அவரை அவர்கள் தடுத்துவிட்டனர். மேலும் ஆறு கூட்டத்தவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிரோடு இருந்தபோது இவ்வாறு செய்ய விரும்பினர். (ஆனால்) அல்லாஹ்வின் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களை தடுத்துவிட்(டனர்)டு என்னில் உங்களுக்கு முன்மாதிரி இல்லையா? எனவும் கூறினர் என அவருக்கு தெரிவித்தனர். இவ்விசயத்தை அவர்கள் அவருக்கு தெரிவித்த பொழுது, தலாக் - (விவாகரத்து) செய்திருந்த தனது மனைவியை திருப்பிக்கொண்டார். (மீண்டும் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்) அப்பெண்ணை மீண்டும் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டதற்கு அவர்களை சாட்சியாகவும் ஆக்கினார். (அதன்பிறகு) இப்னு அப்பாஸ் இடம் வந்து அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்

அவர்களுடைய ‘வித்ரை‘ பற்றி கேட்டார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் வித்ரை பற்றி பூமியிலிருப்பவர்களில் மிகத்தெரிந்த ஒருவரைப்பற்றி உமக்கு அறிவித்துத்தரட்டுமா? எனக் கேட்டார்கள். (அதற்கு) யார்? எனக் கேட்டார். (அதற்கு) ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா எனக் கூறினார். அவர்களிடம் சென்று (அதைப்பற்றி) அவர்களிடம் கேட்டுவிட்டு அதன்பிறகு என்னிடம் வந்து என்ன திருப்பி (பதில்) கூறினார்கள் என்பதை தெரிவிப்பீராக என்றார்கள். (அதற்கொப்ப) அவர்கள் பால் நடக்க ஆரம்பித்தேன். (அப்போது) ஹக்கீம் பின் அஃப்லஹ் என்பவரிடம் வந்து அவரையும் என்னோடு வர (கூறினேன்) வேண்டினேன். (அதற்கவர்) நான் அவர்களுக்கு நெருக்கமானவர் அல்ல இவ்விரு கூட்டத்தாருக்கு மத்தியில் எதையும் கூறுவதிலிருந்து அவர்களை நான் தடுத்திருந்தேன். அவ்விரு கூட்டத்தவரில் (நான் கூறியதை) தவிர்த்துவிட்டு (அவர்களது முடிவுப்படி) சென்றுவிட்டனர். மேலும் அவரின் மீது சத்தியம் செய்துவிட்டதாகவும் கூறுகிறார். (அதன்பிறகு) அவர் வந்தார். (நாங்களிருவரும்) ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்கள்பால் நடந்தோம் அவர்களிடம் (உள்ளே செல்ல) அனுமதியும் கேட்டோம். எங்களுக்கு அனுமதியும் வழங்கிவிட்டனர். அவர்களின்பால் நுழைந்தோம். ஹக்கீமா? எனக் கேட்டு அவரைத் தெரிந்தும் விட்டனர். அவர் ஆம்! என்றார். உம்முடன் இருப்பவர் யார்? எனக் கேட்டனர். ஸஅது பின் ஹிஷாம் என்றார். இப்னு பின் ஹிஷாமா? என்றனர். இப்னு ஆமீர் எனக் கூறினார். (அதைக் கேட்டதும்) அவருக்கு அல்லாஹ் அருள் செய்ய வேண்டினர். அவர் விஷயத்தில் நன்மையாகவே கூறினார். ‘உஹது‘ தினத்தன்று தாக்கப்பட்டார் என கதாதா ரளியல்லாஹ் அன்ஹு கூறினார். விசுவாசிகளின் தாயே! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் குணங்களைப்பற்றி எனக்கு கூறுங்கள் என நான் கேட்டேன். (அதற்கவர்கள்) நீ குர்ஆனை ஓதவதில்லையா? என்றார்கள். நான் ஆம்! என்றேன். நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் குணங்கள் குர்ஆனாக(வே) இருந்தது எனக் கூறினர்.

அங்கிருந்து எழுந்துவிடவும், நான் இறப்பெய்தும்வரை எதைப்பற்றியும் யாரிடத்திலும் கேட்கக்கூடாது என்றும் நாடினேன். அதன்பிறகு எனக்கு ஏதோ (கேட்க) தோன்றியது. (அப்போது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் இரவு வணக்கம் பற்றி எனக்கு அறிவித்து தாருங்கள் என்றேன். (அதற்கவர்கள்) 'யா அய்யுஹல் முஜ்ஜமில்' என்பதை நீர் ஓதுவதில்லையா? எனக் கேட்டனர். நான் 'ஆம்! ' என்றேன். நிச்சயமாக கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ் இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் இரவு வணக்கத்தை விதியாக்கி இருந்தான். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்களது தோழர்களும் ஒரு வருடம் இரவில் வணக்கம் செய்தனர். அதன் முடிவை பனிரெண்டு மாதங்கள் வானத்தில் அல்லாஹ் (நிறுத்தி) பிடித்து வைத்து கொண்டான். முடிவாக இந்த அத்தியாயத்தின் இறுதியில் இலகுவானதை அல்லாஹ் இறக்கிவைத்து இரவு வணக்கம் கடமையாக இருந்து பிறகு நஃபிலாக ஆகிவிட்டது எனக் கூறினர். விசுவாசிகளின் தாயே! அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் 'வித்ரை' பற்றி எனக்கு அறிவித்துக் கொடுங்கள் என்று நான் கேட்டேன். (அதற்கவர்கள்) நாங்கள் (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்களது பல் துலக்கும் குச்சியையும் ஒளு செய்வதற்குரிய தண்ணீரையும் அவர்களுக்காக தயாராக்கி வைப்போம். இரவில் எப்பொழுது அவர்களை எழுப்ப அல்லாஹ் நாடினானோ? அப்போது அவர்களை தூக்கத்திலிருந்து எழுப்புவான். (தூக்கம் என்பது சிறு மரணம் என்பது போன்றதாகும்) ஆகவே தான் இறந்தவர்களை எழுப்புவதைப் போன்று எழுப்புவான் என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறார்கள்) (அவ்வாறு எழுந்த அவர்கள்) பல் துலக்கி ஒளுவும் செய்து ஒன்பது ரக்ஆத்துகள் தொழுவார்கள். எட்டாவது ரக்அத்தில் தவிர (வேறு எதிலும்) அதில் அமரமாட்டார்கள். அல்லாஹ்வை நினைவுகூறி அவனைப்புகழ்ந்து அவனிடம் பிரார்த்தித்துவிட்டு, ஸலாம் கொடுக்காமல் அதன் பிறது எழுந்து ஒன்பாதவது ரகஅத்தைத் தொழுதுவிட்டு அதன்பின் அமர்ந்து அல்லாஹ்வை நினைவு

கூறிவிட்டு, அவனைப் புகழ்ந்து அவனிடம் பிரார்த்தித்துவிட்டு, அதன்பிறகு எங்களுக்கு கேட்பது போன்று உறுதியாக ‘ஸலாம்‘ கொடுப்பார்கள். அவ்வாறு ‘ஸலாம்‘ கொடுத்துவிட்டு அமர்ந்தவாறு இரண்டு ரக்அத் தொழுவார்கள். அவைகள் பதினோரு ரக்அத்துகளாகும் எனதருமை மகனே! எனக்கூறினர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வயதாகியபொழுது, உடம்பில் சதை கூடியபோது “ஏழு ரக்ஆத்” ‘வித்ரு‘ தொழுவார்கள். இரண்டு ரக்அத்தில் முதலில் அவர்கள் செய்தது போன்று செய்தனர். (ஆக) அவைகள் “ஒன்பது” என என்னருமை மகனே! அல்லாஹ்வின் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு தொழுகையை தொழுவார்களாயின் அதை நிரந்தரமாக (தொடர்ந்து) செய்ய விரும்புவர். இரவு தொழுகையைத் தொழ முடியாது அவர்களுக்கு தூக்கம் மிகைத்து விட்டால் அல்லது (உடலில்) வலி இருந்தால் மறுநாள் பகலில் பனிரெண்டு ரக்அத்துகள் தொழுவார்கள். நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் “ஒரே இரவில் குர்ஆன் முழுவதையும் ஓதிவிட்டார்களென்றோ? காலைப்பொழுதை அடையும் வரை இரவு முழுவதும் தொழுது கொண்டிருந்தார்களென்றோ? ரமலான் அல்லாத மாதத்தில் முழுமாதமும் நோன்பு நோற்றார்களென்றா? (உறுதியாக) எனக்குத் தெரியாது (எனவும் கூறினார்கள்). ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் இதைக்கேட்டபிறகு) இப்னு அப்பாஸ் ரயிளல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்று அதை அவரு (இப்னு அப்பாஸு)க்குத் தெரிவித்தேன். அதைக்கேட்ட (இப்னு அப்பாஸ் ரயிளல்லாஹு அன்ஹு) அவர்கள் உண்மை கூறினர் என்றனர். (அடுத்து) நான் அவர் (ஆயிஷா ரயிளல்லாஹு அன்ஹா)களை நெருங்கக் கூடியவனாக, அல்லது அவர்களிடம் நுழையக்கூடியவனாக இருந்திருப்பின் இவ்விஷயத்தை என்னிடம் நேருக்கு நேர் பேசுகின்ற வரை அவர்களிடம் நான் வந்திருப்பேன் என்றார். (அதற்கு) நீர் (ஆயிஷா ரயிளல்லாஹு அன்ஹா) அவர்களிடம் செல்ல மாட்டீர் என எனக்குத் தெரிந்திருந்தால் இந்த விஷயத்தை உமக்கு நான் தெரிவித்திருக்க மாட்டேன் என்றேன் எனக் கூறினார்.

அறிவிப்பவர்: ஜுராரா ரயிளல்லாஹு அன்ஹு அறிவித்ததாக கதாதா ரயிளல்லாஹு அன்ஹு

குறிப்பு : இப்பெரும் பலனுள்ள விஷயத்தை அங்கே செல்லாததால் நீர் இழக்க நேரிட்டுவிடும் என்பதை அவர்களுக்கு உணர்த்தவும், இவ்வாறு பலனுள்ள விஷயங்களைக் கேட்டு தெரிந்து கொள்ள அவர்கள் செல்ல வேண்டுமென்பதையும் கருத்தில் கொண்டு தான் இத்தொடரை அவரிடம் அறிவிப்பவர் கூறினார் என்பதை கருத்தில் கொள்க.

‘வித்ரு‘ தொழுகை பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 391

“அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு இரவிலும், இரவின் முதல் பகுதியிலும், அதன் பகுதியிலும், அதன் கடைசிப்பகுதியிலும் ‘வித்ரு‘ தொழுதிருக்கிறார்கள். அவர்களின் ‘வித்ரு‘ இரவின் கடைசிப்பகுதியிலும் முடிவுறும்“ என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

‘வித்ரு‘ (தொழுகை), ‘ஃபஜ்ரின்‘ இரண்டு ரக்அத்துகள் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 392

இப்னு உமர் அவர்களிடம், ஃபஜ்ரு தொழுகைக்கு முன் இரண்டு ரக்அத்துகள், அதில் கிராஅத்தை (ஓதுதலை) நான் நீட்ட(மாக இருக்கச் செய்ய) வேண்டுமா? எனக்கூறுங்கள் என நான் கேட்டேன். (அதற்கவர்கள்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இரவில் இரண்டு ரக்அத்தாகத் தொழுவார்கள். (கடைசியில்) பின் ஒரு ரக்அத் ‘வித்ரு‘ தொழுவார்கள் என்றனர். (அதற்கு) நான் நிச்சயமாக இது பற்றிக் கேட்கவில்லை எனக் கூறினேன். (அதற்கவர்கள்) நிச்சயமாக நீர் விபரமற்றவர்! நான் விஷயத்தை முழுமையாக கூறும்வரை நீ என்னை விட்டுவை (குறுக்கிடாமலிரு)க்க

வேண்டாமா? (எனக் கூறிவிட்டு) “அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இரவில் இரண்டிரண்டு ரக்அத்தாக தொழுவார்கள். ஒரு ரக்அத் ‘வித்ரு’ம் தொழுவார்கள். ‘ஃபஜ்ரு’ க்கு முன்பு இரண்டு ரக்அத்தும் தொழுவார்கள். நிச்சயமாக ‘இகாமத்து’ அவர்களது இருகாதுகளில் இருப்பதுபோன்று (அதாவது மிக சுருக்கமமாக அந்த இரண்டு ரக்அத்தையும்) தொழுவார்கள் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் ஸீரின் ரளியல்லாஹ் அன்ஹு

யார் கடைசி இரவில் எழுந்திருக்க மாட்டார் என பயந்தாரோ அவர் முதல் இரவிலேயே ‘வித்ரு’ தொழுது கொள்ளட்டும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 393

“யார் கடைசி இரவில் எழுந்திருக்க முடியாது என பயப்பட்டாரோ? அவர் முதல் இரவிலேயே ‘வித்ரு’ தொழுது கொள்ளவும் யார் அத(இரவி)ன் கடைசியில் எழுந்திருக்க ஆசை (விருப்பம்) கொண்டிருக்கிறாரோ? அவர் கடைசி இரவில் வித்ரு தொழுது கொள்ளவும். நிச்சயமாக இறுதி இரவில் தொழும் தொழுகையில் ‘அருள் மலக்குகள் ஆஜராகிறர்கள். (ஆகவே) அது மிகச்சிறப்பிற்குரியதாகும்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் ரளியல்லாஹ் அன்ஹு

ஸுபுஹை, (அதிகாலைப் பொழுதை) நீங்கள் அடையுமுன் ‘வித்ரு’ தொழுது விடுங்கள் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 394

“ஸுபுஹை, (அதிகாலைப் பொழுதை) நீங்கள் அடையுமுன்பே வித்ரை தொழுது விடுங்கள்” என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயீது அல்குத்ரீ ரளியல்லாஹ் அன்ஹு

## தொழுகையில் குர்ஆன் ஓதுவதன் சிறப்பு பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 395

கொழுத்த பருத்த கர்ப்பமான மூன்று ஒட்டகங்களை அவர் (தம்) குடும்பத்தினர்கள்பால் திரும்புகின்றபோது பெற வேண்டுமென உங்களில் யாரேனும் விரும்புகிறாரா? என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறின(கேட்டா)ர்கள். அதற்கு, நாங்கள் ஆம்! என்றோம். மூன்று வசனங்கள் அதை அவர் தொழுகையில் ஓதுவது, (அது) அவருக்கு கொழுத்த பருத்த கர்ப்பமான மூன்று ஒட்டகங்களை விட மிகச்சிறந்ததாகும் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

## ஒரே ரக்அத்தில் ஓதப்படும் இரு அத்தியாயங்களுக்கு நிகரானவைகள் பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 396

ஒரு நாள் ஃபஜ்ரு தொழுகையை முடித்துக் கொண்டு (அதிகாலை நேரத்தில்) அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹ் அன்ஹு அவர்களிடம் சென்று வாயிலில் ஸலாம் கூறினோம் எங்களுக்கு (உள்ளே வர) அனுமதியளித்து விட்டார். (ஆயினும்) நாங்கள் வாசலில் கொஞ்சம் நின்றோம். (இதற்கிடையில்) ஒரு அடிமைப்பெண் வீட்டிலிருந்து வெளியாகி நீங்கள் உள்ளே நுழைய வேண்டாமா? எனக்கூறினாள். (அதைக்கேட்ட) நாங்கள் உள்ளே நுழைந்தோம். அப்போதவர் அமர்ந்தவாறு ‘தஸ்பீஹ்‘ செய்து கொண்டிருந்தார். உங்களுக்கு உள்ளே வர அனுமதி கொடுத்த பின்னரும் நீங்கள் உள்ளே வர தடையாக இருந்தது எது? என கேட்டார். (அதற்கு) இல்லை, ஆயினும் வீட்டில் யாராவது சிலர் உறங்கிக்கொண்டிருப்பார்களோ? என நினைத்தோம் எனக்கூறினோம். இப்னு உம்மு மஃபதுவின் குடும்பத்தினர். (ஸலாமை) மறந்தவர்களென நினைத்தீர்களா?

எனக்கூறினார். அதன்பிறகு அவர் ‘தஸ்பீஹ்‘ செய்தவாறு சூரியன் உதயமாகிவிட்டதென எண்ணி எங்கள் பக்கம் வந்தார். அடிமைப்பெண்ணே! சூரியன் உதயமாகி விட்டதா எனப்பார்? என்றார். அப்பெண் பார்த்தபோது சூரியன் உதயமாகிவிட்டிருந்தது. அப்போதவர், இந்த நமது நாளில் (நமது குற்றங்களுக்காக) நம்மைப் பிடிக்காமல் மன்னித்து காலைப்பொழுதை எழச் செய்தானே அந்த அல்லாஹ்விற்கே புகழனைத்தும் உரித்தாகுக! எனக்கூறினார். (நமது பாவங்களின் காரணமாக நம்மை அழித்துவிடாது விட்டு விட்டானே என அவர் கூறியதாக நான் எண்ணுகிறேன் என மஹ்தீ கூறினார்.) சென்ற இரவில் பல நீண்ட அத்தியாயங்களை நான் ஓதினேன் என எங்களில் ஒரு மனிதர் கூறினார். அதற்கு அப்துல்லாஹ் பாட்டு பாடியது போல்[1] அதிவேகமாக ஓதினார் எனக்கூறினார். தெரிந்து கொள்! நிச்சயமாக நாம் குர்ஆனை ஓதக்கேட்டிருக்கிறோம். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் சேர்த்து ஓதிக்கொண்டிருந்த நீண்ட அத்தியாயங்களில் பதினெட்டையும் ‘ஹாமீம்‘ எனத்தொடங்கும் அத்தியாத்தில் இரண்டையும் நான் மனனம் செய்திருக்கிறேன் (என்றார்.)

அறிவிப்பவர் : அபீவாயில் ரளியல்லாஹ் அன்ஹு

குறிப்பு : 1 குர்ஆனை ஓதும் முறை பற்றி அல்லாஹ் தன் திருமறையிலும் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது சுன்னத்தில் விளக்கி கூறியுள்ள முறைப்படி வசனங்களை நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்தி, உயர்த்த வேண்டிய இடங்களில் உயர்த்தி அச்சரங்களை சரியாக உச்சரித்து ஒவ்வொரு வசனமாக நிதானமாக ஓத வேண்டும். இதற்கு மாற்றமாக ஓதியதைக்கேட்ட அவர் பாட்டுபாடியது போன்று எனக்குறிப்பிடுகிறார்.

## ரமளான் தொழுகைப்பற்றி வந்துள்ளது என்பது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 397**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இரவின் நடுப்பகுதியில், (வீட்டிலிருந்து) வெளியாகி பள்ளியில் தொழுதார்கள். (சில) ஆடவர்கள், அவர்களோடு (அவர்களது தொழுகையைத்) தொழுதனர். காலையில் ஜனங்களெல்லாம் அதுப்பற்றிப் பேசிக்கொண்டனர். அதற்காக அவர்களை விட மிக அதிகமானவர்கள் திரண்டு விட்டனர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இரண்டாவது இரவிலும் (அறையிலிருந்து) வெளியே வந்து, (தொழுதனர்) ஜனங்களும் அவர்களோடு (அவர்களது தொழுகையைத்) தொழுதனர். அடுத்த நாள் ஜனங்களெல்லாம் அதுபற்றிக் கூறிக்கொண்டனர். மூன்றாவது இரவு பள்ளியில் தொழுபவர்கள் அதிகமாகி விட்டனர். (அறையிலிருந்து) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் வெளியேறி(த் தொழுக) ஜனங்களும் அவர்களோடு தொழுகையை நிறைவேற்றினர். நான்காவது இரவின் போது பள்ளியில் வந்திருப்பவர்களை தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு பள்ளி இயலாமலாகிவிட்டது. கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆனால் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (அறையை விட்டு) வெளியேறி வரவில்லை அப்போது சில ஆடவர்கள் தொழுகை! எனக்கூறி சப்தமுமிட்டனர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஃபஜ்ரு தொழுகைக்காக வெளியேறும் வரை வெளியேறி வரவில்லை. ஃபஜ்ரு தொழுகையை நிறைவேற்றிவிட்டு ஜனங்களின் பால் முகத்தைத் திருப்பினர். 'அஷ்ஹது' ஓதிவிட்டு அதன்பிறகு நேற்றிரவு நடந்த உங்களின் விஷயம் எனக்கு மறைந்த(தெரியாத)தல்ல. ஆயினம் உங்கள் மீது இரவுத் தொழுகை கடமையாக்கப்பட்டுவிட்டால் அதை நிறை வேற்றுவதிலிருந்து நீங்கள் இயலாதவர்களாகிவிடுவீர்களோ? என நான் பயந்தேன் எனக்கூறினார்கள். பிறிதொரு அறிவிப்பில் அது ரமளானில் நடந்தேறியதாக உள்ளது என வந்துள்ளது.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹு

ரமளானில் (வணக்கங்கள்) தொழுவது பற்றியும் அது பற்றி (மனிதர்களுக்கு) ஆர்வமூட்டுவது பற்றியுமுள்ள பாடம்.

**ஹதீஸ் எண் : 398**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ரமளான் மாதத்தில் கண்டிப்புடன் தொழுக வேண்டுமென இல்லாமல் (விருப்பப்பட்டு) தொழுவது பற்றி ஆசையூட்டி, “யார் ரமளானில் (அது உண்மை அதை நிறைவேற்றுவதால் நண்மை உண்டு என) நம்பிக்கை கொண்டவராக, தூய நிலையி(முகஸ்துதியையோ, அதல்லாத மற்ற எதையும் விரும்பாம)ல் அல்லாஹ்விற்கென விரும்பி நன்மையைப் பெற தொழுவாரேயானால் அவரது முந்திய பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்படுகிறது” என கூறுவார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இறப்பெய்தினர். காரியம் அவ்வாறே இருந்தது. அதன்பிறகு அபூபக்ரு ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் கிலாபத்திலும், உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்களின் கிலாபத்தின் தொடக்க காலத்திலும் காரியம் அவ்வாறே இருந்தது என அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

ஜும்ஆவின் பாடங்கள்

இந்த சமூகத்தவர், ஜும்ஆ நாளின் விஷயத்தில் நேர்வழி பெற்றிருத்தல் பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 399**

நாம் (இம்மையில்) கடைசியானவர்கள். மறுமைநாளில் முதலாமவர்கள். (அதாவது) நாம்தான் சுவனம் செல்பவர்களில் முதாலவதாக இருப்போம் என்றாலும் ‘நிச்சயமாக அவர்கள் நமக்கு முன்பு வேதம் அளிக்கப் பெற்றவர்களே!‘ நாம் அவர்களுக்குப் பிறகு அவ்வேதத்தை அளிக்கப்பெற்றோம்.

(எனினும்) அவர்களோ கருத்து வேறுபாடு கொண்டு விட்டனர். (ஆனால்) எதில் அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்களோ? அவ்விஷயத்தில் உண்மையின்பால் (அல்லாஹ்) நமக்கு நேர்வழி காட்டி விட்டான். இந்த நாள் தான் அவர்கள் எதில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்ளோ? அதுவாகும். அந்நாளைப்பற்றி அல்லாஹ் நமக்கு நேர்வழிகாட்டி விட்டான். (அதுவே) ஜும்ஆ நாளாகும்! இன்றைய தினம் நம்மவர்களுக்குரியதாகும். நாளை (சனிக்கிழமை) யூதர்களுக்கு உரியதாகும். நாளைய மறுதினம் (ஞாயிறு) கிறிஸ்தவர்களுக்கு உரியதாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு கூறுகிறார்கள்.

ஜும்ஆ நாளின் சிறப்பு பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 400

சூரியன் உதயமான நாளில் மிகச்சிறந்த நாள் ஜும்ஆ நாளாகும். அதில் (அந்நாளில்) தான் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் படைக்கப்பட்டனர். அந்நாளில்தான் சுவனத்தில் நுழைவிக்கப்பட்டனர். (பின்னர்) அதே நாளில் (தான்) அதிலிருந்து வெளியேற்றப்பட்டனர். மறுமை நாளானது ஜும்ஆ நாளல்லாது மற்ற நாட்களில் நிலை நிற்காது (வராது) என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு அறிவிக்கிறார்கள்.

## ஜும்ஆவின் பாடங்கள் ஹதீஸ் எண் : 401-420

ஜும்மா தினத்தன்று (துஆ அங்கீகரிக்கப்படும்) அந்நேரம் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 401

“நிச்சயமாக ‘ஜும்ஆ‘வில் (ஜும்ஆ நாளில்) ஒரு நேரமுண்டு, அந்நேரத்திற்கு ஒரு முஸ்லிம் தொழுகையிலிருக்க[1] அதை அவருக்கு அல்லாஹ் தந்ததை தவிர எந்த நன்மையையும் அவர் அல்லாஹ்விடம் கேட்பதில்லை” என அபுல் காஸிம் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

தனது கையினால் அந்நேரத்தை குறைத்து அர்ப்ப சொர்ப்பமானது எனக்காட்டினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1. “தொழுகைக்காக காத்திருப்பவர் தொழுகையில் இருக்கிறார்” என்ற நபிமொழிக்கொப்ப ‘அஸர்‘ தொழுத ஒருவர் ‘மக்ரிபை‘ எதிர்பார்த்துத் தொழ உள்ளார். ஆகவே அக்கருத்தில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வார்த்தையைக் கூறியிருக்கிறார்கள் என்றும்,

2.‘யுஸல்லீ‘ என்ற அரபி வார்த்தைக்கு துஆ கேட்கிறார் என்ற பொருளும் உண்டு. ஆகவே துஆ கேட்கிறார் - கேட்டவராக என்றும் ‘காயிமுன்‘ நின்றவராக என்பதற்கு அதைத்தொடர்ந்து செய்பவராக என்றும் ஆகிய இருகருத்துக்கள் குர்ஆன் ஹதீஸின் தெளிவில் உங்கள்முன் வைக்கப்பட்டுள்ளது.

ஹதீஸ் எண் : 402

ஜும்ஆ தினத்தன்று ‘துஆ‘ அங்கீகரிக்கப்படும் நேரம் பற்றிய விஷயத்தில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி

வஸல்லம் அவர்கள் கூறியதாக உமது தந்தை அறிவிக்கும் அறிவிப்பை நீர் கேள்விப்பட்டதுண்டா? என அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள், (அபுமூஸா அல் அஷ்அரியாகிய) என்னிடம் கேட்டனர். அதற்கு நான் 'ஆம்' "அந்நேரம் (என்பது) இமாம் மிம்பரில் அமர்ந்(த)து (முதல்) தொழுகை நிறைவுபெறும் வரைக்குமுள்ள இடைப்பட்ட நேரமாகும்" என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறக்கூடியவர்களாக இருந்ததை நான் செவியுற்றேன் என்றேன்.

அறிவிப்பவர் : அபுமூஸா அல் அஷ்அரி ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் அபுபுர்தா ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடன் நின்று விட்டது. நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் வரை இத்தொடர் சென்றடையவில்லை. ஆகவே 'ஜும்ஆ' நாளன்று 'துஆ' அங்கீகரிக்கப்படும் நேரம் "அந்நாளின் கடைசி நேரமாகும்" என ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு மற்றும் அவரல்லாத மற்றவர்களின் அறிவிப்பில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் வரை சேர்ப்பிக்கப்பட்ட சரியான ஹதீஸ்களில் தெளிவாக வந்துள்ளன. அவையாவும் அது அந்நாளின் கடைசி நேரம் என்பதையே உறுதிப்படுத்துகிறது.

## ஜும்ஆ தினத்தொழுகையிலும் ஃபஜ்ரு தொழுகையிலும் ஓதக்கூடியது ( என்ன? ) என்பது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 403

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஜும்ஆ' நாளன்று 'ஃபஜ்ரு' தொழுகையில் "அலீஃப், லாம், மீம், தன்ஜீலுஸ்ஸஜ்தாவை (அத்தியாயத்தை)யும் ஹல் அதா அலல் இன்ஸானி ஹீனும் மினத்தஹ்ர்" என்பதையும் ஓதக்கூடியவர்களாக இருந்தனர். அது(போன்றே) நிச்சயமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஜும்ஆ' தொழுகையில் 'அல்ஜும்ஆ' அத்தியாயத்தையும், "அல்

முனாஃபிகீன்” அத்தியாயத்தையும் ஓதக்கூடியவர்களாக இருந்தனர்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு

‘ஜும்ஆ‘விற்காக குளிப்பது பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 404

ஒரு சமயம் உமர் பின் கத்தாபு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ‘ஜும்ஆ‘ நாளன்று பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது உஸ்மான் பின் அஃப்பான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நுழைந்தனர். அப்போது உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் (உஸ்மான் ரளியல்லாஹு அன்ஹு) அவர்களைக் குறுக்கீடு செய்து பாங்கு கொடுக்கப்பட்ட பின் பிந்திவிடுகிறார்களே அந்த ஆடவர்களின் காரியமென்ன? எனக் கேட்டனர். (அதற்கு) உஸ்மான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், “விசுவாசிகளின் தலைவர் அவர்களே! நான் பாங்கை கேட்டபிறகு ஒளுச் செய்வதைவிட வேறு எதையும் அதிகமாக செய்யவில்லை. (ஒளுச் செய்து விட்டு) அதன் பிறகு (தொழுகைக்கு) முன்னோக்கி வந்துவிட்டேன்” எனக்கூறினார். அதற்கு உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ‘ஒளுவையா?‘ (எனக் கூறிவிட்டு) ‘உங்களில் ஒருவர் ஜும்ஆவிற்காக வந்தால் குளித்துக் கொள்ளவும்‘ என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்றை நீங்கள் செவியுற்றதில்லையா? எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

‘ஜும்ஆ நாளன்று நறுமணம் பூசுவதும் பல் துலக்குவதும் பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 405

“பருவமடைந்த ஒவ்வொருவரின் மீதும் ‘ஜும்ஆ‘ நாளன்று குளிப்பதும், பல் துலக்குவதும் உண்டு. நறுமணத்தில் அவருக்கு எது சாத்தியமோ அதை அவர் தேய்த்துக் கொள்வர்”. என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்ததாக, அபூஸயிது அல்குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

குறிப்பு : ‘ஜும்ஆ‘ நாளன்று குளிப்பது கடமையா? அல்லது சுன்னத்தா? முஸ்தஹப்பா? என பல ஹதீஸ்களை முன்வைத்து அலசிப்பார்த்து, அது கடமையானதல்ல என்பதை அக்கலை வல்லுனர்களான உலமாக்கள் தெளிவு செய்துள்ளார்கள். அது கடமையல்ல என்பதை மேலே உள்ள 404வது ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது. அது கடமையாக இருந்திருப்பின் உஸ்மான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒளு செய்து வந்ததை உமர் ரளியல்லாஹு அன்ஹு மறுத்திருக்க வேண்டும். ஆனால் மறுக்கவில்லை. “யாரேனும் ஒளு செய்து கொண்டால் அதுவே நல்லதாகும். இன்னும் யாரேனும் குளித்துக் கொண்டால் குளிப்பது மிகச்சிறந்ததாகும்” என்ற ஹதீஸ் ஹதீஸ் கிரந்தங்களில் பதிவாகியுள்ளது. அதன் தரம் அழகானதாகும். அதுவும் இந்த ஹதீஸையே தெளிவு செய்கிறது.

‘ஜும்ஆ நாளன்று முன்நேரத்தின் சிறப்பு‘ பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 406

‘ஜும்ஆ‘ நாளன்று பள்ளி (தொழுமிடங்)களின் வாயில்களின் ஒவ்வொரு வாசலிலும் முதலாமவர்களை, அதையடுத்தவர்களை (என்று) வரிசைக்கிரமமாக அமரர்(மலக்கு)கள் எழுதுகிறார்கள். இமாம்(மிம்பரில்) அமர்ந்து விட்டால் (எழுதிய) ஏடுகளைச் சுருட்டிக் கொள்கின்றனர். (இமாம் கூறும்) உபதேசத்தை செவிமடுக்க வந்துவிடுகின்றனர்.

ஜும்ஆவிற்கு முதல் நேரத்தில் வருபவருக்கு உதாரணம் ஒட்டகத்தை அன்பளிப்புச் செய்தவரைப் போன்றவராவார். அதன்பிறகு (வருபவர்) ஒரு மாட்டை அன்பளிப்புச் செய்தவரைப் போன்றவராவார். அதன்பிறகு (வருபவர்) ஒரு கடா

ஆட்டை அன்பளிப்புச் செய்தவரைப் போன்றவராவார். அதன்பிறகு (வருபவர்) ஒரு கோழியை அன்பளிப்புச் செய்தவரைப் போன்றவராவார். அதன்பிறகு (வருபவர்) ஒரு முட்டையை அன்பளிப்புச் செய்தவரைப் போன்றவராவார் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள்.

## சூரியன் உச்சியிலிருந்து சரிந்தபொழுது ஜும்ஆ தொழுகை என்பது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 407

“சூரியன் உச்சியிலிருந்து சரிந்து விட்டால் நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் ‘ஜும்ஆ‘வைத் தொழுது விடுவோம். அதன்பின் (சுவர்களின்)[1] நிழல்களைத் தேடியவர்களாகத் திரும்புவோம்.”

அறிவிப்பவர் : ஸலமா பின் அல் அக்வஉ ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1. ஜும்ஆவை நிறைவேற்றிவிட்டு நிழல்களில் ஒதுங்கி நடக்க நிழலைத் தேடுவோம். சுவர்களுக்கு இலேசான நிழல் விழும். ஆனால் நடந்து செல்பவர் நிழல் பெருமளவிற்கு இராது. இந்த ஹதீஸின் மொத்தக் கருத்து யாதெனில், சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்ததுமே தாமதிக்காது முதல் நேரத்திலேயே ஜும்ஆவைத் தொழுதிருக்கிறார்கள் என்பதாகும்.

### ஹதீஸ் எண் : 408

சிலர் ஸஹ்ல் பின் ஸஅது ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து ‘மிம்பர்‘ எந்தக்கட்டையில் தயார் செய்யப்பட்டது?. என்பது பற்றி சந்தேகத்தைக் கிளப்பிக் கொண்டனர். “அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நிச்சயமாக அது எந்தக் கட்டையினால் (தயார் செய்யப்பட்டது) ஆனது என்பதையும் யார் அதைச் செய்தது? என்பதையும் நான்

அறிவேன். அதன்மீது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அமர்ந்த முதல் நாளன்று அவர்களை நான் கண்டேன்'' எனவும் கூறினார். 'அபுல் அப்பாஸ் அவர்களே! அவ்வாறெனில் (அதைப்பற்றி) எங்களுக்குத் தெரிவியுங்கள்' என நான் (அறிவிப்பாளர்) கூறினேன். (அதற்கவர்) 'அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு பெண்ணின்பால் (ஒருவரை) அனுப்பினார். (நிச்சயமாக அந்நாளில் அப்பெண்ணுடைய பெயரையும் அபுல் அப்பாஸ் அவர்கள் குறிப்பிட்டுக் கூறினார்கள் என்பதாக அறிவிப்பவர் குறிப்பிடுகிறார்)

'தச்சு வேலை செய்யும் உமது அடிமையைப் பார்ப்பீராக! (பார்த்துக் கூறுவீராக1). எதன் மீது நான் (நின்று அல்லது அமர்ந்து) ஜனங்களோடு பேசுவேனோ அதற்கென்று சில கட்டைகளினால் அவர் எனக்கு (படிகளைக் கொண்ட ஆசனம்) செய்யட்டும்' என்றார்கள். (அதற்கிணங்க) இந்த மூன்று படிகள் உள்ளதை (மிம்பரை) அவர் செய்தார். அதன்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அதுபற்றிக் கட்டளையிட அது இந்த இடத்தில் வைக்கப்பட்டது. அது கடினமான மரங்கள்[1](ளில் இருந்து வெட்டி எடுத்துச் செய்யப்பட்டதாகும்).

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அதன்மீது நின்று தக்பீர் கூற நான் கண்டிருக்கிறேன். ஜனங்களெல்லாம் அவர்களுக்குப்பின் 'தக்பீர்' கூறினர். அவர்கள் மிம்பர் மீது இருக்க அதன்பிறகு மேலே உயர்ந்தார்கள். (அடுத்த படியில் ஏறினார்கள்) பின்னால் இறங்கி மிம்பரின் மீது ஸஜ்தா செய்தார்கள். அதன்பிறகு தொழுகையை முடிக்கும்வரை மீண்டும் (முதலில் நின்ற படிக்கே) திரும்பி விட்டார்கள். (தொழுகையை முடித்துக் கொண்டு) பின்னர் ஜனங்களை முன்னோக்கி 'ஜனங்களே! நிச்சயமாக நான் இதைச் செய்ததெல்லாம் நீங்கள் என்னைப் பின்பற்றவும், என் தொழுகையை நீங்கள் (சரியாக) தெரிந்து கொள்ளவும் தான்' எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹாஜிம் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1. அம்மரங்கள் அவாலி நகர்பகுதியில் அதிகமாக இருந்தது.

## குத்பாவில் கூறப்பட வேண்டியவைப் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 409

‘ஷனூஆ‘ கூட்டத்தைச் சேர்ந்த மனிதர்களில் உள்ள ‘ளிமாத்‘ என்பவர் நிச்சயமாக மக்காவை நோக்கி வந்தார். பைத்தியம், ஜின், ஷைத்தான் (பிடித்தவர்)களுக்கு ஓதிப்பார்ப்பவராக அவர் இருந்தார். மக்காவாசிகளில் அறிவீனர்கள், ‘நிச்சயமாக முஹம்மது பைத்தியக்காரரே!‘ எனக் கூறிவந்தார்களே அதைச் செவியுற்றார். நான் அந்த மனிதரைப்பார்த்தால் “அல்லாஹ் அவருடைய நல் ஆரோக்கியத்தை ஒரு வேளை என் கைகளினால் நல்கலாம்” எனக்கூறி நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களைச் சந்தித்து ‘முஹம்மதே! உமக்கு பிடித்திருக்கும் ஜின், பைத்தியம் ஆகியவற்றிக்கு நான் ஓதிப்பார்க்கிறேன். நிச்சயமாக அல்லாஹ் எனது இருகரங்களில் அவன் நாடியோருக்கான ஆரோக்கியத்தை நல்கியுள்ளான். உனக்கும் அது வேண்டுமா? எனக் கேட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், “இன்னல் ஹம்த லில்லாஹி நஹ்மதுஹு வநஸ்தஈனுஹு மன்யஹ்திஹில்லாஹு ஃபலாமுளில்லலஹு வமன்யுள்லில் ஃபலாஹாதியலஹு வஅஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீ(க்)கலஹு வஅன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு அம்மாபஃது”[1] எனக் கூறினார்கள். இதைக்கேட்ட ‘ளிமாத்‘ இந்த சொற்றொடர்களை மீண்டும் எனக்குக் கூறுவீராக என்றார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மூன்று முறை திரும்பத் திரும்ப அச்சொற்றொடர்களைத் கூறினர். (அதைக் கேட்ட ளிமாத்) “ஜோசியர்களின் கூற்றையும், சூனியம் செய்பவர்களின் கூற்றையும், கவிஞர்களின் கூற்றையும் நான் செவியுற்றிருக்கிறேன். உமது இக்கூற்றைப் போன்று நான்

செவியுற்றதே இல்லை'' எனக்கூறினார். (பின்னர்) அலைகளை கிழித்துக் கொண்டு ஆழ்கடலை அவ்வார்த்தைகள் அடைந்து விட்டன. ஆகவே உங்களது கையைத் தாருங்கள். இஸ்லாத்தை நான் உடன்படிக்கை செய்து (ஏற்றுக்) கொள்கிறேன் எனக்கூறினார். அவரோடு (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்)அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டனர். (அப்போது) உமது கூட்டத்தவர்களின் மீது (இஸ்லாத்தை எடுத்துக்காட்ட வேண்டுமே) என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மூவர் கொண்ட ஒரு குழுவை அனுப்பினார்கள். அவரு(ளிமாத்து)டைய கூட்டத்தவருக்கு மத்தியில் அவர்கள் சென்றனர். அக்குழுவிற்குரியவர் தன் சேனையரிடம் 'இக்கூட்டத்தவர்களிடமிருந்து எதையாவது பெற்றீர்களா? எனக்கேட்டார். (அதற்கு) கூட்டத்திலிருந்த ஒருவர் 'சுத்தம் செய்ய உபயோகிக்கும் ஒரு பாத்திரத்தை நான் எடுத்துள்ளேன்' என்றார். அதற்கவர் 'அதை திருப்பிக் கொடுத்துவிடுவீராக! காரணம், நிச்சயமாக இவர்கள் 'ளிமாத்'தின் கூட்டத்தவராவார்' எனக் கூறினார்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

குறிப்பு : 1 அச்சொற்றொடரின் பொருள்:

“நிச்சயமாக புகழ் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியதாகும்! அவனை நாம் புகழ்கிறோம். அவனிடத்திலேயே உதவியும் தேடுகிறோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை (யாராலும்) வழி கெடுக்க முடியாது. அவன் யாரை வழி கெடுத்து விட்டானோ அவருக்கு யாராலும் நேர்வழி காட்ட முடியாது. வணங்கப்படுபவன் அல்லாஹ்வையன்றி வேறெவருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையில்லை. நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய (உரிய) அடியாரும் அவனது தூதருமாக இருக்கிறார்கள்''

குத்பாவில் சப்தத்தை உயர்த்துவதும், அதில் (என்ன) சொல்வது என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 410

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'குத்பா' பிரசங்கம் செய்வார்களாயின், அவர்களது இருகண்களும் சிவந்துவிடும் சப்தம் உயர்ந்துவிடும். அவர்களது கோபம் மிகுந்துவிடும். முடிவாக "காலைப்பொழுதை அடைந்துவிட்டீர்கள்! மாலைப்பொழுதை அடைந்துவிட்டீர்கள்! எதிரிகளை ஜாக்கிரதையாக கண்காணியுங்கள்! என படையினரை படைத்தலைவர் எச்சரிக்கை செய்பவரைப் போன்று ஆகிவிடுவார்கள்". இன்னும் நானும் மறுமைநாளும் இவ்விரண்டைப்போன்று தங்களது நடுவிரல் ஆட்காட்டிவிரல் இரண்டுக்குமிடையில் சேர்த்தனர் எனக்கூறினர். மேலும் அதன்பிறகு, செய்திகளில் மிகச்சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். நேர்வழியில் மிகச்சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் நேர்வழியாகும். காரியங்களில் கெட்டது அவற்றில் புதியவைகளாகும். ஒவ்வொரு (அனாச்சாரமும்) பித்அத்தும் வழிகேடாகும் எனவும், அதன்பிறகு ஒவ்வொரு முஃமினானவருக்கும் (விசுவாசிக்கும்) அவரை விட நான் உரியவனாக இருக்கிறேன். யார் பொருளாதாரத்தை விட்டுச் சென்றாரோ அது அவரது குடும்பத்தினருக்குரியதாகும். யார் கடனை அல்லது (வசதி எதுவுமில்லாத) குடும்பத்தை விட்டுச் சென்றாரோ அது என்பாலும், என்மீது என் பொறுப்பிலுமாகும் எனவும் கூறுக்கூடியவர்களாக இருந்தனர்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு

குத்பா பிரசங்கத்தை சுருக்கிச் செய்வது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 411

'அம்மார் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் குத்பா பிரசங்கத்தை மிகச்சுருக்கமாகவும், மனங்களில் பதியக்கூடியதாகவும்[1] செய்து முடித்தனர்'. அவர்கள் (குத்பா பிரசங்கத்தை முடித்து) கீழே இறங்கியதும், அபுல்யக்ழான் அவர்களே! நிச்சயமாக நீர் மனங்களில் பதிகின்றவாறும்

சுருக்கமாகவும் பிரசங்கம் செய்து விட்டீர். (ஆயினும்) கொஞ்சம் நீட்டியிருந்தால் (நன்றாக இருந்திருக்குமே!) எனக்கூறினார். அதற்கவர் "ஒரு மனிதர் தொழுகையை நீட்டமாகத் தொழவைப்பதும், குத்பா பிரசங்கத்தை சுருக்கிக் செய்வதும் அவர் மார்க்க அறிவு படைத்தவர் (தான்) என்பதற்கு அடையாளமாகும். ஆகவே தொழுகையை நீட்டுங்கள், குத்பாவை சுருக்கமாகக் கூறுங்கள், நிச்சயமாக பிரசங்கத்தில் ஒரு சூனியமிருக்கிறது"[2] என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நிச்சயமாக நான் கேட்டேன் எனக்கூறுகிறார்.

அறிவிப்பவர் : அபூவாயில் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : இதற்கு இரண்டு கருத்துகள் கூறப்படுகின்றது

1. இதை கேட்கக்கூடியவர்களின் மனதை ஈர்த்து அதில் நின்று நிலைத்து செயல்படவைத்து விடுகிறது என்பதே இதன் கருத்தாகும் இதுவே சரியானதாகும். இவ்வார்த்தையை நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் பாராட்டிக் கூறியிருக்கிறார்கள்.

2. சூனியத்தின் மூலமாக தவறான காரியங்களைச் செய்து பாவங்களைச் சம்பாதிப்பது போன்று தவறான வழிகளுக்கு ஈர்க்க வார்த்தைகளை அடுக்கி மனதில் படுவது போல் செய்து மனதைத் திருப்புவது இக்கருத்து சரியானதல்ல.

## குத்பா பிரசங்கத்தில் நீக்கக்கூடாதவை பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 412

ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் பிரசங்கம் செய்தார். அல்லாஹ்விற்கும் இன்னும் அவனது தூதருக்கும் யார் வழிபட்டாரோ அவர் நிச்சயமாக நேர்வழியடைந்து விட்டார். "அவ்விருவருக்கும்[1] யார் மாறு செய்தாரோ? அவர் வழி தவறிவிட்டார்" எனக்கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி

வஸல்லம் அவர்கள், “பிரசங்கம் செய்பவர்களில் கெட்டவர் நீரேயாகும் (எனக்கூறிவிட்டு) அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் என்று கூறுவீராக” எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அதிய்யா பின் ஹாதிம் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : இவ்வாறு இருவரையும் இணைக்காமல் தனித்தனியே கூறவேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

## மிம்பரின் மீது குத்பாவில் குர்ஆன் ஓதுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 413

நம் அடுப்பும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் அடுப்பும்[1] (ஏறக்குறைய) இரண்டு வருடம் அல்லது ஒரு வருடம் சொச்சம் ஒன்றாகவே இருந்தது “காஃப் வல் குர்ஆனில் மஜீது” (எனும் அத்தியாத்தை) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் நாவிலிருந்தே தவிர நான் எடுத்து(அறிந்து)க் கொள்ளவில்லை. ஜனங்களுக்கு பிரசங்கம் செய்கின்ற போது மிம்பரில் ஒவ்வொரு ஜும்ஆவிலும் அதை ஓதக்கூடியவர்களாக இருந்தனர் என்று உம்மு ஹிஷாம் பின்த் ஹாரிசா பின் நுஃமான் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

குறிப்பு : அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் வீடும் என் வீடும் மிக அருகில் இருந்தது. ஆகவே அங்கு நடப்பவற்றையும் அங்குள்ள நிலைகளையும் தெரிந்து கொள்வது சாத்தியம் என்பதை இதன் மூலம் குறிப்பிடுகிறார் என்பதே இதன் கருத்தாகும்.

## குத்பாவில் விரலால் சைக்கிணை செய்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 414

உமாரா பின் ருஜபா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், பிஷ்ரு பின் மர்வானை, மிம்பரில் அவரது இரு கைகளையும் உயர்த்தியவராக[1] இருக்கக் கண்டார். (அப்படிக் கண்ட அவர்)

இந்த இருகைகளையும் அல்லாஹ் கெட்டதாக்கி வைப்பானாக! (எனக்கூறிவிட்டு) நிச்சயமாக நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை, அவர்களது கையால் இவ்வாறு செய்வதைவிட அதிகப்படுத்தியவர்களாக நான் காணவில்லை (எனக்கூறி) தனது ஆள்காட்டி சைக்கிணை செய்து காட்டினார்.

அறிவிப்பவர் : ஹுஸைன் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 மிம்பரில் இமாம் குத்பா ஓதும் போது அவரது இருகைகளை உயர்த்துவதை விட்டுவிடுவதே சுன்னத்தாகும் அவ்வாறு துஆ செய்யும் பொழுது கலிமா விரலால் சைக்கிணை செய்வதே சுன்னத்தாகும் என்பது தெளிவு

2 நபி ல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மழைத்தொழுகையின் போது தங்களது இருகைகயையும் அவர்களது அக்குளின் வெள்ளை தெரிகின்ற அளவிற்கு உயர்த்தினார்கள். ஆகவே, குத்பாவில் உயர்த்தலாம் என சிலர் கூறுகின்றனர். மழைத்தொழுகையில் செய்ததை மற்ற சமயங்களில் செய்யவில்லையென்பதால் பிந்தியதை கைவிட்டுவிட்டு முந்தியதை வைத்து செயல்பட்டு நன்மை பெற அல்லாஹ் அருள்செய்வானாக ஆமீன்.

### குத்பாவில் அறிவைக்கற்றுத் தருவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 415**

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் பிரசங்கம் செய்து கொண்டிருக்க அவர்கள் பால் சென்றடைந்தேன். (அப்போது) அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அறிமுகமில்லாத, தன்மார்க்கம் என்ன? என்று தெரியாத ஒரமனிதர் வந்து, அவரது மார்க்கத்தைப் பற்றிக் கேட்கிறார் என்று கூறினேன். (அப்போது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது குத்பாவை விட்டு விட்டு என்பால் வந்தடைந்தனர். (அவர்கள் அமருவதற்க்காக) ஒரு நாற்காலி கொண்டுவரப்பட்டது அதன் கால்கள் இருப்பினால் இருந்தது

என நான் எண்ணுகிறேன். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அதன் மீது அமர்ந்து, அவர்களுக்கு எதை அல்லாஹ் கற்றுக் கொடுத்தானோ அவற்றிலிருந்து எனக்குக் கற்றுதந்து விட்டு அதன்பிறகு (திரும்பவும் விட்ட) அவர்களது பிரசங்கத்தைக் கூற வந்து அதன் இறுதியை நிறைவு செய்தனர் என அபூ ரிஃபாஆ ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்.

அறிவிப்பவர் : அபூ ரிஃபாஆ ரளியல்லாஹு அன்ஹு

## ஜும்ஆவில் இரு குத்பாக்களுக்கிடையில் அமருவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 416

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் நின்றவாறு ‘குத்பா‘ பிரசங்கம் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். (முதல் ‘குத்பா‘வை முடித்துக் கொண்ட) பிறகு அமருவர். அதன்பிறகு எழுந்து நின்றவர்களாகவே ‘குத்பா‘ ஓதுவார்கள். அவர்கள் அமர்ந்தவாறு ‘குத்பா‘ ஓதினார்கள் என யாரேனும் எனக்குத் தெரிவித்தால் அவர் பொய் கூறிவிட்டார். அல்லாஹ்வின் மீது சத்தியமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் இரண்டாயிரம் தொழுகைகளை விட மிக அதிகமாகவே நான் தொழுதுள்ளேன் என கூறினார்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு

## தொழுகையையும் குத்பாவையும் (நீட்டாது குறுக்காது) நிதானமாக செய்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 417

ஜாபிர் பின் ஸமுராவாகிய நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுதிருக்கிறேன். அவர்களது தொழுகை நீட்டமில்லாமலும்,

ரொம்பச் சுருக்கமில்லாமலும் இருந்தது. (அது போலவே) அவர்களது குத்பாவும் நீட்டமில்லாமலும், ரொம்பச் சுருக்கமில்லாமலும் இருந்தது என ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

ஜும்ஆ நாளன்று இமாம் குத்பா ஓதும் போது (யாராவது) நுழைந்தால் (இரண்டு ரக்அத்து) தொழுவார் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 418

ஜும்ஆ தினத்தன்று அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மீம்பரின் மீது அமர்ந்திருக்க, சுலைக் அல்கத்தஃபானீ (என்பவர்) வந்து (இரண்டு ரக்அத்து) தொழுமுன் அமர்ந்து விட்டார். (அப்பொழுது அவரைப்பார்த்து) இரண்டு ரக்அத்து தொழுது விட்டீரா? என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். (அதற்கவர்) இல்லை! என்றார். “எழுந்து அவ்விரு ரக்அத்துகளையும் தொழுவீராக” எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹுமா

குத்பாவை கேட்க வேண்டி வாய்ப் பொத்தியிருப்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 419

“ஜும்ஆ தினத்தன்று இமாம் ‘குத்பா‘ ஓதிக் கொண்டிருக்கும் போது உம்முடன் இருப்பவரை வாய்ப்பொத்தி இரு(ம்)! என நீர் கூறினால் நிச்சயமாக (ஜும்ஆவை) வீணடித்து விட்டீர்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

ஜும்ஆ நாளன்று யார் குத்பாவை செவியுற்று வாய்பொத்தி இருந்தாரோ அவரது சிறப்பு பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 420

யார் குளித்துவிட்டு, அதன் பிறகு ஜும்ஆவிற்கு வந்து, (அல்லாஹ்வினால்) அவருக்கு ஏற்படுத்தப்பட்டதை தொழுதுவிட்டு, அவர் குத்பா பிரசங்கத்தை முடிக்கும்வரை வாய் பொத்தி இருந்து (விட்டு) அவரோடு தொழுதும் விட்டால், அவருக்கு அடுத்த ஜும்ஆவிற்கும் இடையில் (அதற்கு) மேலும் அதிகமாக மூன்று நாட்களுக்கும் (அவரில் ஏற்படும் சிறிய பாவங்கள்) அவருக்காக மன்னிக்கப்படுகிறது.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

| | | |
|---|---|---|
| | | |

## இரு பெருநாட்கள், பிரயாணியின் தொழுகை

அவர்கள் வியாபாரத்தை அல்லது வீண் காரியத்தை பார்த்து விடுவார்களானால் உங்களை நின்ற நிலையில் விட்டு விடுவர் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 421

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ‘ஜும்ஆ‘ தினத்தன்று நின்றவாறு குத்பா ஓதிக்கொண்டிருந்தார்கள். (அப்பொழுது) ஷாம் தேசத்திலிருந்து (தானியங்களைச் சுமந்த) ஒட்டகங்கள் வந்து சேர்ந்தன. (அச்சமயத்தில்) பனிரெண்டு ஆடவர்களைத் தவிர (மற்ற) ஜனங்களெல்லாம் அதன்பால் சென்று விட்டனர். (அப்பொழுது தான்) “அவர்கள் வியாபாரத்தை அல்லது வீண் காரியத்தை பார்த்து விடுவார்களானால், உங்களை நின்ற நிலையில் விட்டு

விட்டு அதன்பால் சென்று விடுவர்'' என்ற 'அல்ஜும்ஆ' அத்தியாயத்திலுள்ள இவ்வசனம் இறக்கப்பட்டது.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லா ரளியல்லாஹு அன்ஹுமா

குறிப்பு : 1 வெளிநாட்டிலிருந்து வியாபார பொருட்களை சுமந்து வந்த ஒட்டகங்களைக் கண்டதும் வியாபார நோக்கில் அவர்கள் சென்றுவிட்ட நிலையைக் குறிக்கவே. தானியங்களை சுமந்த ஒட்டகங்கள் வந்து சேர்ந்தன என ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

'ஜும்ஆ' தொழுகையில் (எதை) ஓதப்பட வேண்டுமென்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 422

இரண்டு பெருநாட்களிலும், 'ஜும்ஆ' விலும் ''ஸப்பிஹிஸ்ம ரப்பி(க்)கல் அஃலா'' (என்ற அத்தியாத்தை)தையும் ''ஹல் அதாக்க ஹதீஸில் ஃகாஷியா'' (என்ற அத்தியாத்தையும்)வையும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதக்கூடியவர்களாக இருந்தனர். 'ஜும்ஆ'வும், 'ஈதுப்பெருநாளும்' ஒரே தினத்தில் ஒன்று சேர்த்து (வந்து) விட்டாலும் அவ்விரண்டு அத்தியாயங்களை(க் கொண்டே)யே அவ்விரு தொழுகைகளிலும் அவர்கள் ஓதக்கூடியவர்களாகவும் இருந்தனர்.

அறிவிப்பவர் : நுஃமான், பின் பஷீர் ரளியல்லாஹ் அன்ஹுமா

ஜும்ஆவிற்குப் பிறகு பள்ளியில் தொழுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 423

''ஜும்ஆவிற்குப் பிறகு, நீங்கள் தொழுதால் நான்கு (ரக்அத்) தொழுங்கள்'' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

உம்மை ஏதாவதொன்று அவசரப்படுத்தினால் பள்ளியில் இரண்டு (ரக் அத்துகளை) தொழுவீராக! (வீட்டிற்கு) திரும்பினால் இரண்டு ரக் அத்து தொழுவீராக என ஸுஹைல் கூறினார் என மற்றொரு அறிவிப்பில் வந்துள்ளது

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹ் அன்ஹு

## ஜும்ஆவிற்குப் பிறகு வீட்டில் தொழுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 424

அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் 'ஜும்ஆ' தொழுகையைத் தொழுதுவிட்டால் (அங்கிருந்து வீட்டிற்கு) திரும்பி(ச் சென்று) இரண்டு ரக்அத்துகள் வீட்டில் தொழுவார்கள் அதன்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறு தான் செய்தார்கள் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹு

## 'ஜும்ஆவிற்குப் பிறகு பேசும் வரை அல்லது வெளியாகும் வரை தொழுக வேண்டாம்' என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 425

ஸாயிப் பின் உக்த் நமிர் என்பவருக்கு தொழுகையில் ஏற்பட்ட ஒரு விஷயத்தை, முஆவியா பார்த்திருந்தாரே அது பற்றி கேட்க நிச்சயமாக நாஃபிஉ பின் ஜுபைர் என்பவர் (அம்ருபின் நாபிஜ) அனுப்பி வைத்தார்.

(அப்போது அஸ்ஸாயிப் அவர்கள்) மக்ஸூராவில் (பள்ளியில் கல்லால் கட்டப்பட்ட அறையில்) 'ஜும்ஆ'வை நான் தொழுதேன். இமாம் ஸலாம் கொடுத்ததும் என்னிடத்திலிருந்து எழுந்து (அடுத்த தொழுகையைத்) தொழுதேன். ஆவர் (முஆவியா) உள்ளே நுழைந்ததும் என்பால் (ஒருவரை அனுப்பி தம்மிடம் வருமாறு கூறி) அனுப்பினார். (நான் அவரிடம்

சென்றதும்) நீ செய்ததை மீண்டும் செய்யாதே! என்றார். ‘ஜும்ஆவை நீ தொழுதால் நீ பேசும் வரை அல்லது நீ வெளியாகும் வரை(வேறு) தொழுகையைக் கொண்டு அதோடு நீர் சேர்க்க வேண்டாம்‘. காரணம், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அதைக் கொண்டு (அவ்வாறு செய்யுமாறு) கட்டளையிட்டார்கள். (அதாவது) எத்தொழுகையாயினும் பேசும்வரை அல்லது வெளியாகும் வரை வேறொரு தொழுகையைக் கொண்டு நாங்கள் சேர்க்க வேண்டாமென (கட்டளையிட்டார்கள்)

அறிவிப்பவர் : உமர் பின் அதாஉ ரளியல்லாஹு அன்ஹு

ஜும்ஆவை விட்டு விடும் விஷயத்தில் கடுங்கண்டனம் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 426

‘ஜும்ஆ‘ களை விட்டு விடுகிறார்களே அவர்கள் அவ்வாறு விடுவதிலிருந்து கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ளவும். அல்லது (அவ்வாறு செய்யவில்லையெனில்) அல்லாஹ் அவர்களது இதயங்களின் மீது முத்திரையிட்டு விடுவான். அதன்பிறகு அவர்கள் மறதியாளர்களில் ஆகிவிடுவார்கள் என மிம்பரின் கட்டளைகளின் மீது இருந்தவாறு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறக்கேட்டதாக அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களும் அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களும் ஹக்கம் பின் மீனாஉ ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அறிவித்தனர்.

## இரு பெருநாட்கள்

## இரு பெருநாட்களில் பாங்கையும் இகாமத்தையும் விட்டுவிடுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 427

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஒருமுறை இருமுறையல்லாத (பல சந்தர்பங்களில்) பாங்கும் இகாமத்துமின்றி இரு பெருநாள் தொழுகைகளை நான் தொழுதிருக்கிறேன் என ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

## இரு பெருநாள் தொழுகையும் குத்பாவுக்கு முன்பு தொழவேண்டும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 428

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், அபூபக்ரு, உமரு, உஸ்மான் (ரளியல்லாஹு அன்ஹும் அஜமஈன்) ஆகியோருடன் நான் நோன்பு பெருநாள் தொழுகைக்கு ஆஜராகியிருக்கிறேன். அவர்களனைவரும் அத்தொழுகையை குத்பாவுக்கு முன் தொழக் கூடியவர்களாக இருந்தனர். அதன் (தொழுகையை முடித்துக் கொண்ட) பிறகு குத்பா ஓதக்கூடியவர்களாக இருந்தனர்.

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ‘குத்பா‘வை முடித்துக் கொண்டு இறங்கி, தங்களது கையினால் சைக்கினை செய்து ஆடவர்களை அமரச்செய்யும் போது நான் (அதனைப்) பார்க்க கூடியவனைப் போன்று இருக்கிறேன். அதன்பிறகு அவர் (ஆண்)களுக்கு மத்தியில் (இருந்து) புறப்பட்டு பெண்களை முன்னோக்கி (பெண்கள் அமர்ந்திருக்கும் பகுதிக்கு) வந்து சேர்ந்தனர். (அப்பொழுது) அவர்களுடன் பிலால் ரளியல்லாஹு அன்ஹும் இருந்தனர்.

“நபியவர்களே! மூஃமினான பெண்கள் அல்லாஹ்விற்கு எதையும் இணையாக்கமாட்டார்கள் என உங்களிடம் உடன்படிக்கை செய்து கொள்ள வருவார்களாயின்” என்ற வசனத்தை முடியும் வரை ஓதிவிட்டு, நீங்கள் (அவ்வாறு) அதன்மீது தானே இருக்கீறிர்கள் எனக்கேட்க, அப்பெண்களில் ஒருவர் அல்லாஹ்வின் நபியவர்களே! ஆம்! என்றார். அப்பெண்ணைத்தவிர மற்றெவரும் அவர்களில் பதில் கூறவில்லை. அப்பெண் யாரென்று அச்சமயத்தில் அறியப்படவுமில்லை அப்போது (நபி

ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் “தர்மம் செய்யுங்கள்” என்றனர். (அப்போது) பிலால் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களது (புடவை) ஆடையை விரித்து, எனது தாய் தந்தையர் உங்களுக்கு அர்பணமாகட்டும். வாருங்கள், (தாருங்கள்) என்றனார்கள். அப்பெண்கள் (தாங்களணிந்திருந்த) பெரும் மோதிரங்களையும் (சாதாரண சிறிய) மோதிரங்களையும் பிலால் ரளியல்லாஹு அன்ஹு விரித்திருக்க ஆடையில் போட்டனர்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு

இரு பெருநாள் தொழுகையில் ஓதப்பட வேண்டியவை பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 429

(ஈதுல்)அள்ஹா, பித்ரு (ஆகிய பெருநாள்) தொழுகைகளில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதி வந்தது (அத்தியாங்கள்) பற்றி அபூவாகித் அல்லைதியிடம், உமர் பின் கத்தாபு ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நிச்சயமாக கேட்டார்கள். (அதற்கவர்) அவ்விரண்டு (தொழுகையி)லும் “காஃப் வல் குர்ஆனில் மஜீதுவையும், இக்தரபதிஸ் ஸாஅ(த்)து வன்ஷக்கல் கமரு” வையும் ஓதக்கூடியவர்களாக இருந்தனர் எனக்கூறினார்.

அறிவிப்பவர் : உபைதுல்லாஹ் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹுமா

பெருநாள் தொழுகை தொழுமிடத்தில் அத்தொழுகைக்கும் முன்பும், அதற்குப் பின்பும் தொழுவதை விட்டு விட வேண்டும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 430

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ‘ஹஜ்ஜுப்‘ பெருநாள் அல்லது ‘நோன்புப்

பெருநாள‘ன்று (வீட்டிலிருந்து) புறப்பட்டு (வந்து பெருநாள் தொழுகை) இரண்டு ரக்அத்து தொழுதனா். அதற்கு முன்போ அதற்கு பிறகோ அவா்கள் தொழவில்லை. அதன் பிறகு பிலால் ரளியல்லாஹு அன்ஹு அவா்களுடனிருக்க பெண்களிடம் வந்து, தா்மம் செய்யுமாறு அவா்களுக்கு கட்டளையிட்டனா்.

பெண்(கள்) தங்கம் மற்றும் வெள்ளியிலான சிறிய வளையம் மற்றும் காதணிகளை போட்ட(னா்)து. கழுத்தில் அணியும் பெரிய மாலைகளையும் போட்ட(னா்)து.

அறிவிப்பவா் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : பெண்கள் போட்டனா். போட்டுக் கொண்டே இருந்தனா் என்ற வாசகம் வேறொரு அறிவிப்பில் பதிவாகியுள்ளது. ஆனால் இந்த ஹதீஸில் ஒரு பெண்ணைக் குறிப்பிட்டு மாத்திரம் உள்ளதால் இரண்டு வாா்த்தைகளின் பொருளையும் சோ்த்துக் கொள்ளும் முறையில் போட்டது (போட்டனா்) என மொழி பெயா்த்துள்ளேன்.-மொழிபெயா்ப்பு அசிரியா்.

## இரண்டு பெரு நாட்களில் பெண்கள் (பெரு நாள் தொழுகைக்காக) புறப்பட்டு வருதல் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 431

பருவமடைந்த, பருவமடைய இருக்கின்ற திருமணம் தாமதமாகி தந்தை வீட்டிலேயே இருக்கும் பெண்கள் திரைக்கு அப்பாலிருக்கும் பெண்கள் ஆகியோரை ஈதுல் பிஃத்ரு ஈதுல் அள்ஹா ஆகிய (இரண்டு பெரு) நாட்களில் (தொழுகைக்காக) வெளியேற்றுமாறு அல்லாஹ்வின் தூதா் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவா்கள் எங்களுக்கு கட்டளையிட்டாா்கள். ஆகவே (அவா்களில்) மாதவிலக்கு வரும் பெண்கள் தொழுகையை தவிா்பாா். “நன்மையானவற்றுக்கும் முஸ்லீம்களின் துஆவிற்கும்[1] அவா்கள் ஆஜராகவும்” (என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவா்கள் கூறினா். அப்போது எங்களில் ஒரு பெண்) ‘அல்லாஹ்வின் தூதா் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவா்களே! எங்களில் ஒருத்திக்கு முகம், நெஞ்சு, முதுகு ஆகிய

பகுதிகளை மறைக்கும் மறைப்புத்துணி இல்லாதிருப்பின்?'......(என்ன செய்வது? எனக்கேட்டாள்) அதற்கவர்கள் ‘‘அவர்களது சகோதரி தனது மறைப்புத்துணியிலிருந்து அவளுக்கு அணிவிக்கட்டும்’’ எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : உம்மு அ(த்)திய்யா ரளியல்லாஹு அன்ஹா

குறிப்பு : 1 இந்த ஹதீஸில் இடம்பெறும் ‘தஃவத்‘ என்ற அரபிச் சொல்லுக்கு பொருத்தமான பொருள் ‘துஆ‘ என்பதேயாகும். ஏனெனில் ‘துஆ‘வை ‘தஃவத்‘ என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் போது நாம் அதற்கு வேறு பொருள் கொள்வது தவறல்லவா? ‘வதஃவது தின்னூன்‘ என்பதற்கு யூனூஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ‘துஆ‘ என சரியான ஹதீஸில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார் என்பதை கவனத்தில் கொள்க

## ஈதுப் பெருநாளன்று சிறு பெண்கள் கூறிய கூற்று பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 432

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (வீட்டினுள்) நுழைந்தார்கள். (அப்போது அவ்ஸ் கஜ்ரஜ் கூட்டத்தவர்களுக்கு மத்தியில் அறியாமைக் காலத்தில் நடந்த போர்களில் பாடப்பட்ட பாடல்களை) என்னிடம் இரு சிறு பெண்கள் பாடிக்காட்டிக் கொண்டிருந்தனர். (நுழைந்த நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) படுக்கையில் படுத்து தங்களது முகத்தை (அப்புறம்) திருப்பிக் கொண்டனர். (அது சமயம்) அபூபக்ரு ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் நுழைந்து என்னை விரட்டினர். ஷைத்தானின் (கை தட்டலோடு கூடிய) ராகங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டிலா? எனக்கூறினார்கள். (இதைக்கேட்ட) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ‘அவ்விருவரையும் விட்டு விடுங்கள்‘ எனக்கூறினர். (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்)

அவர்கள் மறந்திருந்த சமயம் (பார்த்து) அவ்விரு பெண்களையும் கிள்ளிவிட்டேன். அவ்விருவரும் வெளியேறிவிட்டனர். அன்று பெருநாளாக இருந்தது. கருப்பர்கள் விளையாட்டுப் போர் சாதனங்களை வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தனர். (அப்போது) நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை கேட்டிருக்க வேண்டும் அவ்வாறு இல்லையெனில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே என்னைப்பார்த்து பார்க்க ஆசைப்படுகிறாயா? எனக்கேட்டிருக்க வேண்டும். (அதற்கு) நான் ஆம் எனக்கூறினேன். என்னைத் தங்களுக்குப் பின்னால் நிற்க வைத்துக் கொண்டனர். என் கன்னம் அவர்களது கன்னத்தின் மீது இருந்தது. அப்போது அவர்கள் பனீ அர்பிதா அபிஸீனியப் பிள்ளைகளே! நான் சோர்வடைந்து விடும்வரை, உங்கள் விளையாட்டில் ஈடுபடுங்கள் எனக்கூறியவர்களாக இருந்தனர். (நான் சோர்வடைந்துவிட்டதைப் பார்த்து) உனக்குப் போதுமா? என்றார்கள் நான் ‘போதும்‘ எனக் கூறினேன். ‘சென்று விடு‘ எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா

## பிரயாணியின் தொழுகை

### அமைதியாக இருக்கும் நிலையில் பிரயாணி தொழுகையைக் குறைத்துக் தொழுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 433**

“நிராகரித்து விட்டார்களே அவர்கள் உங்களைக் குழப்பத்தில் ஆக்கி விடுவார்கள் என நீங்கள் பயந்தால் (நான்கு ரக் அத்து தொழுகையை இரண்டு ரக்அத்து தொழுகையாக) சுருக்கித் தொழுவது உங்கள் மீது குற்றமல்ல” என்ற வசனத்தைப் பற்றி உமர் பின் கத்தாபிடம் நான் கேட்டேன். நிச்சயமாக ஜனங்கள் (பாதுகாப்பு) அபயம் பெற்று விட்டார்கள். (அல்லவா? அவ்வாறிருக்க நான்கை இரண்டாக ஏன் சுருக்கித் தொழ வேண்டும் என்ற கருத்தில் ‘நிச்சயமாக ஜனங்கள் அபயம் பெற்று விட்டார்கள்‘ என்ற கூற்று இடம் பெற்றுள்ளது இதைக்

கேட்ட அவர்கள்) நீர் எதைப்பற்றி ஆச்சரியப்பட்டீரோ? அதைப்பற்றி நானும் ஆச்சரியப்பட்டு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டேன். அதற்கவர்கள் அது தர்மமாகும் உங்கள் மீது அல்லாஹ் அதை தர்மம் செய்துள்ளான். அவனது தர்மத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : யஃலாபின் உமய்யா ரளியல்லாஹ் அன்ஹா

## ஹதீஸ் எண் : 434

பிரயாணம் அல்லாத (செந்த ஊர் அல்லது சொந்த ஊர் போன்ற ஊரில் இருக்கும்) போது தொழுகையை நான்கு ரக்அத்தாகவும், பிரயாணத்தில் இரண்டு ரக்அத்தாகவும் பயந்த சமயத்தில் ஒரு ரக்அத்தாகவும் நிறைவேற்ற உங்களது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் நாவின் மூலம் அல்லாஹ் தொழுகையை கடமையாக்கி உள்ளான் என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரளியல்லாஹ் அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள்.

### பிரயாணத்தின் போது எந்த அளவில் தொழுகையை குறைத்துத் தொழ வேண்டுமென்பது பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 435

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் மதினாவிலிருந்து மக்காவிற்கு புறப்பட்டோம். (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) திரும்பி வரும்வரை (நான்கு ரக் அத்து தொழுகைகளை) இரண்டிரண்டாக தொழுது கொண்டனர் என ஒருவர் (ஒரு அறிவிப்பவர்) கூறினார். மக்காவில் எத்தனை நாட்கள் தங்கி இருந்தார்களெனக் கேட்டேன்? ‘பத்து நாட்கள்‘ என்றார்.

“மதினாவிலிருந்து ஹஜ்ஜிற்கு நாங்கள் புறப்பட்டோம்” என மற்றொரு அறிவிப்பில் உள்ளது.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

‘மினா‘வில் (நான்கு ரக் அத்து தொழுகையை) இரண்டு ரக் அத்தாக சுருக்கிக் கொள்வது‘ பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 437

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களும், அபூபக்ரு, உமர், உஸ்மான் (ரளியல்லாஹு அன்ஹும் அஜ்மாஈன்) ஆகியோரும் மினாவில் எட்டு அல்லது ஆறு வருடங்கள் (ஹஜ்ஜுக்குப் போகும் போது) மினாவில் பிரயாணியின் தொழுகையை தொழுதனர். இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள், மினாவில் இரண்டு ரக்அத்து தொழுதுவிட்டு தங்களது படுக்கைக்கு வறுவர். ‘எனது சிறிய தந்தையே! அதற்குப்பிறகு இரண்டு ரக்அத்து தொழுதால்?------‘ என்றேன். அவ்வாறு செய்வதாக இருப்பின் தொழுகையை நிறைவாக தொழுதிருப்பேன் என்றார்கள் என ஹஃபஸ் அதாவது இப்னு ஆஸிம் ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்.

பிரயாணத்தில் இரு தொழுகைகளை சேர்த்துத் தொழுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 438

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவசரமாக பயணம் புறப்பட்டுவிட்டால் ‘ளுஹரை‘ ‘அஸரின்‘ முதல் நேரம் வரை பிற்படுத்தி அவ்விரு தொழுகைகளையும் சேர்த்துத் தொழுவார்கள். (அதைப் போலவே) மக்ரிபை பிற்படுத்தி அதையும் இஷாவையும் சேர்த்து செம்மேகம் மறையக்கூடிய சமயத்தில் தொழுவார்கள் என அனஸ்பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

ஊரில் இருக்கும்போது இரு தொழுகைகளை சேர்த்துத் தொழுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 439

மழை இல்லாத சமயத்திலும், பயமற்ற நிலையிலும் மதினாவில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் 'ளுஹரையும்' அஸரையும்', மேலும் 'மக்ரிபையும்' 'இஷாவையும்' சேர்த்துத் தொழுதுள்ளார்கள் என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களிடம், (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் ஏன் அவ்வாறு செய்தார்கள்? என்பதாக நான் (வகீஉ) கேட்டேன். அதற்கவர்கள் தங்களது உம்மத்தவர்களை சிரமப்படுத்தாமலிருக்கவே (அவ்வாறு தொழுதார்கள்) எனக் கூறினார்கள் என வகீஉவின் ஹதீஸில் வந்துள்ளது.

இப்னு, அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்களிடம், 'ஏன் (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) அவ்வாறு செய்ய நாடினார்கள்?' என கேட்கப்பட்டது. அதற்கவர்கள் 'அவர்களது உம்மத்தவர்களுக்கு சிரமம் ஏற்படாமலிருக்க நாடினார்கள்' எனக்கூறினார்கள் என்பதாக அபீமு ஆவியாவின் ஹதீஸில் வந்துள்ளது.

## 'மழையின் போது இருப்பிடத்திலேயே தொழுது கொள்வது' பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 440**

குளிர் காற்று மழை ஆகியவை உள்ள இரவுகளில் நிச்சயமாக இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள் தொழுகைக்கு அழைத்து அதன் இறுதியில் 'உங்களது இருப்பிடங்களிலேயே தொழுது கொள்ளுங்கள் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். (உங்களது) இருப்பிடங்களிலேயே தொழுது கொள்ளுங்கள் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்' எனக் கூறினார்கள். அதன்பிறகு ''குளிர் உள்ள இரவில், பயணத்தில் மழையுள்ள இரவில் உங்களின் இருப்பிடங்களிலேயே தொழுது கொள்ளுங்கள் எனக்கூறுமாறு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (தொழுகைக்கு)

அழைப்பவருக்கு கட்டளையிடக் கூடியவர்களாக இருந்தார்கள்” எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு, உமர் ரளியல்லாஹு அன்ஹுமா

## ஜனாஸாவின் சட்டங்கள் பற்றிய நூல் ஹதீஸ் எண் : 441--500

'பிரயாணத்தின் போது நஃபில் தொழுகைகளை விட்டு விடுவது' பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 441

மக்காவிற்கு செல்லும் வழியில் இப்னு, உமர் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்களுடன் நான் (ஹஃபஸ் பின் ஆஸிம் ரளியல்லாஹு அன்ஹு) இருந்தேன். எங்களுக்கு அவர் ளுஹர் தொழுகையை இரண்டு ரக்அத்தாக தொழ வைத்தார். அதன்பிறகு வாகனத்திற்கும் அவரும் நாங்களும் முன்னோக்கி வந்தோம். அவரும் அமர்ந்தார். நாங்களும் அமர்ந்தோம். (அவர்) எங்கு தொழுதாரோ அந்த இடத்தின் பக்கம் அவரது கவனம் சென்றது. அப்போது (அவ்விடத்தில்) சில மனிதர்களை நிற்கக் கண்டார்கள். (அதைப்பார்த்து விட்டு) 'இவர்கள் என்ன செய்கிறார்கள்?' எனக்கேட்டார். (அதற்கு அவர்கள்) நஃபில் தொழுகிறார்கள் என நான் கூறினேன். (அதற்கவர் நஃபில் தொழக்கூடியவனாக நான் இருப்பின் என் தொழுகையை நிச்சயமாக நிறைவாக்கியிருப்பேன் எனக்கூறினார்.

என் சகோதரரின் மகனே! நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் பிரயாணத்தில் இருந்திருக்கிறேன். அவர்கள் இறப்பெய்தும் வரை (பிரயாணத்தில்) இரண்டு (ரக் அத்து)க்கு மேல் தொழவில்லை. அடுத்து அபூபக்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடன்

பிரயாணத்தில் இருந்திருக்கிறேன். அவர்கள் இறப்பெய்தும் வரை அவர்களும் (பிரயாணத்தில் இரண்டு (ரக்அத்துகளு)க்கு மேல் தொழவில்லை. அதன்பின்னர் உதுமான் ரளியல்லாஹு அன்ஹு அவர்களுடன் பிரயாணத்தில் இருந்திருக்கிறேன். அவர்கள் இறப்பெய்தும் வரை இரண்டு ரக்அத்துக்கு மேல் தொழவில்லை நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களில் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது என அல்லாஹ் திட்டமாக கூறியிருக்கிறான் என இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹஃபஸ் பின் ஆஸிம் ரளியல்லாஹு அன்ஹு

பயணத்தில் வாகனத்தின் மீதிருந்தவாறே நஃபில் தொழுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 442

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், வாகனத்தின் மீதிருந்தவாறே அது எத்திசையிலிருப்பினும் நபில் தொழக்கூடியவர்களாக இருந்தார்கள். ‘வித்ரை‘யும் அதன் மீதிருந்தவாரே தொழுவார்கள். ஆயினும் பர்ளான தொழுகையை அதன் மீதிருந்தவாறு தொழமாட்டார்கள்.

அறிவிப்பவர் : இப்னு, உமர் ரளியல்லாஹு அன்ஹுமா

பயணத்திலிருந்து முன்னோக்கி (திரும்பி) வந்தால் அவர் பள்ளியில் இரண்டு ரக்அத்து தொழுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 443

நான், (ஜாபிர்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் போருக்குப் புறப்பட்டேன். எனது ஒட்டகம் என்னைத் தாமதிக்க வைத்து எனக்கு கஷ்டத்தையும் கொடுத்துவிட்டது. எனக்கு முன்பாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் வந்தடைந்து

விட்டனர். நான் காலையில் வந்தடைந்து பள்ளிக்கு வந்தேன். (அப்போது அங்கே) பள்ளியின் வாசலில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களைப் பெற்றுக் கொண்டேன். நீர் புறப்பட்டது முதல் இப்போது தான் வந்தடைந்தீரா? எனக்கேட்க நான் ‘ஆம்‘ என்றேன்.

‘உனது ஒட்டகத்தை விட்டுவிட்டு (பள்ளியினுள்) நுழைந்து இரண்டு ரக்அத்து தொழுதுவிடு‘ என்றார்கள். நான் நுழைந்து தொழுதுவிட்டு அதன் பிறகு திரும்பி விட்டேன்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹுஅன்ஹுமா

## போரில் பயந்த நிலையில் தொழும் தொழுகை பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 444

‘ஜுஹைனா‘ என்ற இடத்தில் ஒரு கூட்டத்தாரோடு நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் (சேர்ந்து) போர் செய்தோம். (அப்போது) அவர்கள் (எதிரிகள்) எங்களைக் கடுமையாகக் கொன்று விட்டார்கள். நாங்கள் ‘ளுஹர்‘ தொழுகை தொழுத போது அவர்கள் தொழுது கொண்டிருக்கும்போது ஒரே அடியாக நாம் அவர்களின் மீது சாய்ந்து (தாக்கி) விட்டால் அவர்களை வேறோடு அழித்துவிடலாம் என இணை வைக்கக்கூடியவர்கள் கூறினர். அது பற்றிய (விபரத்தை) ஜீப்ரில் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு கூறிவிட்டனர். அதைப்பற்றி அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு நினைவுபடுத்தினர். தொழுகை(யை நிறைவேற்ற வேண்டிய) நேரம் வரும், அது அவர்களுக்கு (தங்களின்) மக்களை விட மிக விருப்பமானதாகும். (அப்போது தாக்கி விடலாம்) என நிச்சயமாக அவர்கள் கூறினர்.

அஸர் தொழுகை(யின் நேரம்) வந்த போது இரு அணிகளாக நாங்கள் அணிவகுத்து நின்றோம். இணை வைப்பவர்கள் எங்களுக்கும் கிப்லாவுக்குமிடையில் இருந்தனர்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தக்பீர் கூறினார்கள். நாங்களும் தக்பீர் கூறினோம். அவர்கள் ருகூஉ செய்தார்கள். நாங்களும் ருகூஉ செய்தோம். அதன்பிறகு அவர்கள் ஸஜ்தா செய்தார்கள். அவர்கள் (ஸஜ்தாவிலிருந்து) எழுந்ததும் இரண்டாவது வரிசையில் உள்ளவர்கள் ஸஜ்தா செய்தனர். அதன்பிறகு முந்திய வரிசைகளில் இருந்தவர்கள் பிந்திக்கொள்ள இரண்டாவது வரிசையில் இருந்தவர்கள் முதல் இடத்திற்கு வந்து நின்றுவிடுகிறார்கள். (அப்போது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தக்பீர் கூறினார்கள். நாங்களும் தக்பீர் கூறினோம். அவர்கள் ருகூஉ செய்தார்கள். நாங்களும் ருகூஉ செய்தோம். அதன்பிறகு ஸஜ்தா செய்ய முதல் அணியில் இருந்தவர்கள் அவர்களுடன் ஸஜ்தா செய்கின்றனர். (அப்போது) இரண்டாவது அணியினர் நின்று விடுகின்றனர். இரண்டாவது அணியினர். ஸஜ்தா செய்து முடிக்கும் போது எல்லோரும் அமர்ந்து விடுகின்றனர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இரு அணியினருக்கும் சலாம் கூறிவிடுகின்றனர் என்பதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் அதன்பிறகு இந்த உங்களது தலைவர்கள் தொழுவதை போன்று, என ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு பிரத்யோகமாகக் கூறினர் என அபுஜ்ஜுபைர் கூறுகிறார்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹுமா

## சூரிய கிரகணத் தொழுகை பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 445

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழ ஆரம்பித்து நிலையை மிக நீட்டினார்கள். அதன்பிறகு ‘ருகூஉ‘ செய்தார்கள். ‘ருகூஉஜ‘ மிக நீட்டினார்கள் அதன்பிறகு ‘ருகூஉ‘ விலிருந்து தங்களது தலையை உயர்த்தினார்கள் நிலையில் நீண்ட நேரம் நின்றார்கள். முன் நிலையை விட இது மிக குறைவானதாக இருந்தது. அதன்பிறகு (இரண்டாவது முறையாக) ‘ருகூஉ‘ செய்து ‘ருகூஉவை‘ மிக நீட்டினார்கள். அது முதல் ருகூஉஜவிடக் குறைவானதாக இருந்தது. அதன்பிறகு ‘ஸஜ்தா‘ செய்தனர். ஸஜ்தாவை முடித்துக் கொண்டு எழுந்த நிலையில் நீண்ட நேரம் நின்றனர். முந்திய நிலையை விட அது குறைவாக இருந்தது. அதன்பிறகு ‘ருகூஉ‘  செய்தார்கள். ‘ருகூஉவை‘ நீண்ட நேரம் செய்தார்கள். முந்திய ‘ருகூஉவை‘விட இது குறைவாக இருந்தது. அதன் பிறகு ருகூவிலிருந்த தங்களது தலையை உயர்த்தி நின்றார்கள். நிலையை நீட்டினார்கள். முந்திய நிலையை விட இது குறைவாக இருந்தது. அதன்பிறகு ‘ஸஜ்தா‘ செய்தார்கள். அதன்பிறகு தொழுகையை முடித்துக்கொண்டு திரும்பினார்கள். (கிரகணம் நீங்கி) சூரியனில் வெளிச்சம் ஏற்ப்பட்டுவிட்டது. அப்போது ஜனங்களுக்கு பிரசங்கம் செய்யத் தொடங்கி..... அல்லாஹ்வைப் புகழ்ந்து  போற்றினர். அதன்பிறகு நிச்சயமாக சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவைகளாகும். நிச்சயமாக அவை இரண்டும் யாருடைய மரணத்திற்காகவோ அல்லது யாருடைய பிறப்புக்காகவோ அவைகளில் கிரகணம் ஏற்படாது. அவையிரண்டிற்கும் அந்நிலை ஏற்பட நீங்கள் கண்டால் (அல்லாஹ்வை) உயர்வுபடுத்துங்கள். (தக்பீர் கூறுங்கள்) இன்னும் அல்லாஹ்விடம் (அது நீங்க) துஆ செய்யுங்கள் தொழுகவும்.... செய்யுங்கள். தர்மம் செய்யுங்கள் முஹம்மதின் உம்மத்தவர்களே! அல்லாஹ்வின் அடியான் விபச்சாரம் செய்யின், அவனது அடியாள் விபச்சாரம் செய்யின் அல்லாஹ்வைவிட மிகுந்த ரோஷமுடையவர் முஹம்மதின் உம்மத்தவர்களே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் அறிந்தவற்றை நீங்கள் அறிவீர்களானால் நிச்சயமாக அதிகமாக அழுவீர்கள் நிச்சயமாக குறைவாய்ச்

சிரிப்பீர்கள். தெரிந்து கொள்(ளுங்கள்) நான் எத்தி வைத்து விட்டேனா? (என பிரசங்கம் செய்தனர்.)

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

குறிப்பு : இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ளபடி நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் சூரிய கிரகணத் தொழுகையை ஒவ்வொரு ரக்அத்திலும் இரண்டு ருகூஉ செய்து தொழுதுள்ளார்கள் என்பது தெளிவு. ஆக அத்தொழுகையை இரண்டு ரக் அத்து நான்கு ருகூஉகள் கொண்டது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதையடுத்த 446 ஹதீஸில் வந்துள்ளது போல் அல்ல. அந்த அறிவிப்பு தனிப்பட்டதாகும். 445 வது ஹதீஸில் ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிப்பில் உள்ளதே மிகச் சரியானதாகும் என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம்.

சூரிய கிரகணம் ஏற்பட்ட போது நான்கு ஸஜ்தாக்கள் செய்து எட்டு ரக்அத்துகளை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுதார்கள்.

ஹதீஸ் எண் : 446

சூரிய கிரகணம் ஏற்பட்ட போது நான்கு ஸஜ்தாக்கள் செய்து எட்டு ரக்அத்துகளை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுதார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

‘மழைக்காக தொழும் தொழுகை‘ பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 447

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுமிடத்திற்கு வந்து (மழை பெய்யச் செய்யுமாறு வேண்டினர்.) பிரார்த்தனை செய்ய விரும்பிய போது கிப்லாவை முன்னோக்கி தங்களது மேலாடையை திருப்பினர்.

என அப்துல்லாஹ் பின் ஜைது அல் அன்ஸாரி ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்.

மற்றொரு அறிவிப்பில், ஜனங்களின் பால் தங்களது முதுகை ஆக்கி கிப்லாவை முன்னோக்கி அல்லாஹ்விடம் துஆ செய்தனர் (அதன்பிறகு) மேலாடையைத் திருப்பினர். அதற்குப்பிறகு இரண்டு ரக்அத் தொழுதனர் என உள்ளது.

## ஹதீஸ் எண் : 448

எங்களையும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களையும் மழை பிடித்துக் கொண்டது. அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது ஆடையை உடலின் சில பகுதிகளிலிருந்து மழை (நீர் நன்றாக)ப்படும் அளவிற்கு நீக்கினர். (அப்போது) ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? என நாங்கள் கேட்டோம். தனது இரட்சகனின் படைப்பில் அது (மழையானது) புதியதாகும் என்பதற்காக! என உரைத்தனர்.

அறிவிப்பவர் : அனஸ் ரளியல்லாஹு அன்ஹு

'காற்று, மேகம் ஆகியவற்றின் போது காக்கத் தேடுவதும், மழையின் போதும் மகிழ்ச்சி அடைவதும்' பற்றிய பாடம்.

## ஹதீஸ் எண் : 449

காற்று கடுமையாகிவிட்டால் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், "அதன் நன்மையையும் அதனால் ஏற்படும் (அது தாங்கி வரும்) நன்மைகளையும், எந்த நன்மைக்காக அது அனுப்பபட்டதோ, அதையும் உன்னிடம் நிச்சயமாக நான் கேட்கிறேன். இன்னும் அதன் தீமை அதனால் ஏற்படும் தீமைகள், இன்னும் எத்தீமைகளுக்காக அது அனுப்பப்பட்டதோ? அத்தீமை ஆகியவற்றிலிருந்து உன்னிடம் காக்கத்தேடுகிறேன் என கூறுவார்கள்.

வானத்தில் மேகம் கூடி இடிமின்னல்களோடு மழை பொழிய தயாராகி விட்டால் அவர்களின் நிறம் மாறிவிடும். (அப்போது) வெளியில் செல்வார்கள். உள்ளே நுழைவார்கள். முன்னே செல்வார்கள். பின்னே வருவார்கள். (இவ்வாறு இருக்க) மழை பெய்துவிட்டால் கவலை போய் மகிழ்ச்சி ஏற்பட்டு விடும் அதை அவர்களின் முகத்தில் தெரிந்து கொள்வேன்.

நான் அதுபற்றிக் கேட்டேன். ஆது கூட்டத்தினர் கூறியது போன்று அது இருக்கலாம் ஆயிஷாவே! என்றனர். அது (மேகங்கள்) அவர்களது பள்ளத்தாக்குகளை நோக்கி குறுக்கிட்டு வந்ததை அவர்கள் பார்த்தபோது வாகனத்தின் உச்சியில் குறுக்கிட்டுவந்த இம்மேகம் எங்களுக்கு மழையைக் கொண்டுவரும் என அவர்கள் (ஆது கூட்டத்தினர்) கூறினர்.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

குறிப்பு : 1 இம்மாதிரி மேகங்களுக்குப்பிறகு அல்லாஹ் மழையை பெய்யவைக்கிறான் என்பதே இதன் கருத்து.

## கிழக்குத் திசைக்காற்று மற்றும் மேற்கு திசைக்காற்று பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 450

‘கிழக்குத் திசைக்காற்றின் மூலம் வெற்றியளிக்கப்பட்டேன். மேற்குத் திசைக்காற்றினால் ஆது கூட்டத்தினர் அழிக்கப்பட்டனர்‘ என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

# ஜனாஸாவின் சட்டங்கள் பற்றிய நூல்

## வியாதியஸ்தர்களை வினவுதல் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 451

நாங்கள் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுடன் வீற்றிருந்தோம். அச்சமயம் அன்ஸாரிகளிலிருந்து ஒரு மனிதர்

அவர்களிடம் வந்து ஸலாம் கூறினார். (கூறிவிட்டு) அவர் திரும்பியதும் சென்று விட்டார்.

(அவர்களுடன் இருந்த அன்ஸார்களில் ஒருவரை நோக்கி) அன்ஸாரி சகோதரரே! எனது சகோதரர் ஸஅது பின் உபாதா எவ்வாறு உள்ளார்? என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், நன்றாக உள்ளார் எனக்கூறினார். (அப்போது) உங்களில் அவரை நலம் விசாரிக்க செல்பவர் யார்? எனக் கேட்டார்கள். (கேட்டுவிட்டு) அவர்கள் எழவும் செய்தார்கள். நாங்களும் எழுந்தோம். நாங்கள் பத்துக்கும் அதிகமானவர்கள் (அவர்களுடன்) இருந்தோம். எங்களின் கால்களில் செருப்புகளோ, காலுரைகளோ, (தலையில்) தொப்பிகளோ, (உடலில்) சட்டைகளோ, (அணிந்து) இருக்கவில்லை. (இந்நிலையில்) கரடு முரடான அந்தப்பகுதியில் நாங்கள் நடந்து முடிவாக அவரிடம் வந்தடைந்தோம். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களுடனிருந்த அவர்களது தோழர்களும், அவர்பால் நெருங்கும்வரை அவரைச் சுற்றியிருந்த அவரது கூட்டத்தவர்கள் பிந்தி(தள்ளி)க் கொண்டனர்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹு அன்ஹுமா

## மய்யித்தினிடத்திலும் வியாதியஸ்தரிடமும் சொல்லப்பட வேண்டியவைகள் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 452

வியாதியஸ்தரை நலன் விசாரிக்க, இறப்பெய்தியவரை (பார்த்துவர) நீங்கள் சென்றால் நன்மையானவற்றையே (நல்ல துஆக்களையே) கூறுங்கள். நிச்சயமாக அமரர்கள் நீங்கள் கூறுக்கூடியவற்றிற்கு ‘ஆமின்‘! கூறுகிறார்கள்.

அபூஸலமா மரணித்த பொழுது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் வ(ந்தேன்)து அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! நிச்சயமாக அபூஸலமா இறப்பெய்திவிட்டார் எனக்கூறினேன். யா அல்லாஹ்!

எனக்கும் அபூஸலாமாவுக்கும் பாவமன்னிப்புச் செய்வாயாக! அவரிலிருந்து எனக்கு அழகான ஒரு முடிவை அதன்(பின்னனியில்) தந்தருள்வாயாக! எனக்கூறுமாறு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அதற்கொப்ப) அவ்வாறே நானும் கூறினேன். அவரைவிட மிகச்சிறந்தவர்களான முஹம்மது ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை எனக்கு அல்லாஹ் அவருக்குப்பிறகு நல்கினான் என உம்முஸலமா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

## மரணம் சம்பவிக்க இருப்பவர்களுக்கு லாஇலாஹ இல்லல்லாஹுவை சொல்லிக் கொடுத்து நினைவுபடுத்துதல் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 453

உங்களில் இறப்பெய்தப்போகும் (சக்ராத்) நிலையில் இருப்பவர்களுக்கு “லாயிலாஹ இல்லல்லாஹு (என்ற கலிமா)வை நினைவுபடுத்துங்கள்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஸயீதுல் குத்ரீ ரளியல்லாஹு அன்ஹு

## அல்லாஹ்வின் சந்திப்பை யார் விரும்புகிறாரோ அவரது சந்திப்பை அல்லாஹ் விரும்புகிறான் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 454

அல்லாஹ்வின் சந்திப்பை யார் விரும்பி விட்டாரோ, அவரது சந்திப்பை அல்லாஹ்வும் விரும்பி விடுகிறான், யார் அல்லாஹ்வின் சந்திப்பை வெறுத்து விட்டாரோ அவரது சந்திப்பை அல்லாஹ்வும் வெறுத்து விடுகிறான் (என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதும்) அல்லாஹ்வின் நபியவர்களே! மரணத்தை வெறுப்பது தானா? நாம் அனைவரும் மரணத்தை வெறுக்கிறோமே என நான் கேட்டேன். அதற்கவர்கள் அவ்வாறல்ல எனினும் மூமினானவர், அல்லாஹ்வின் அருளையும் அவனின் பொருத்தத்தையும், அவனது சுவனத்தையும் கொண்டு நற்செய்தி கூறப்பட்டால் அல்லாஹ்வின்

சந்திப்பை அவர் விரும்பி விடுகிறார். (அது போன்றே) அல்லாஹ்வும் அவரது சந்திப்பை விரும்பி விடுகிறான்.

நிச்சயமாக நிராகரிப்பவன் அல்லாஹ்வின் தண்டனை பற்றியும், அவனது கோபத்தை பற்றியும் நற்செய்தி கூறப்பட்டால் அல்லாஹ்வின் சந்திப்பை அவனும் வெறுத்து விடுகிறான். (அது போன்றே) அல்லாஹ்வும் அவனை சந்திக்க வெறுப்படைந்து விடுகிறான் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா கூறுகிறார்கள்.

ஷுரைஹ் பின் ஹானீ (என்பவர்) அபூஹுரைரா அறிவித்தாக ஒரு அறிவிப்பில் கீழ்வருமாறு அறிவிக்கிறார்கள்.

“அல்லாஹ்வின் சந்திப்பை யார் விரும்பி விட்டாரோ! அவரது சந்திப்பை அல்லாஹ்வும் விரும்பி விடுகிறான், அல்லாஹ்வின் சந்திப்பை யார் வெறுத்து விட்டாரோ அவரது சந்திப்பை அல்லாஹ்வும் வெறுத்து விடுகிறான்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என்று அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். (என்ற கூற்றை எடுத்துக்கொண்டு ஷுரைஹ் பின் ஹானீ ரளியல்லாஹு அன்ஹு) கீழ்வருமாறு கூறுகிறார்.)

ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களிடம் நான் வந்து விசுவாசிகளின் தாயே, அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் பற்றி (மேற்கூறப்பட்ட) ஹதீஸை கூறிவிட்டு, அது அவ்வாறே இருப்பின் நாமெல்லாம் நாசமாகி விட்டோம் என்று கூறினேன். (அதற்கு) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்றின் மூலம் நாசமாகக் கூடியவன் நாசமாகிவிட்டான் என்றீரே அது எந்தக் கூற்று! என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா கேட்டனர். அதற்கவர், அல்லாஹ்வின் சந்திப்பை யார் விரும்பிவிட்டாரோ அவரது சந்திப்பை அல்லாஹ் விரும்பி விடுகிறான். யார் அல்லாஹ்வின் சந்திப்பை வெறுத்து விட்டாரோ, அவரது சந்திப்பை அல்லாஹ்வும் வெறுத்து விடுகிறான். நம்மவர்களில் எவருமில்லை அவர் மரணிப்பதை வெறுக்கக்கூடியவராகவே

தவிர எனக்கூறினார். (அதற்கு ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள்) அதை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தான் கூறியிருக்கிறார்கள். (ஆனால்) அதற்கு நீர் கொண்ட கருத்தைப் போன்றல்ல. எனினும் பார்வை நீண்டு உயர்ந்து விட்டால், மேல் மூச்சு கீழ்மூச்சு ஏற்பட்டு மனதில் தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டால், முடி நட்டுவிடுமேயானால், விரல்களெல்லாம் மடங்கி சுருங்கி விடுமானால் (இவ்வாறெல்லாம் ஏற்பட்டு மரணம் வந்து விடும் என்பது உறுதியாகி விட்ட நிலையில்) அல்லாஹ்வின் சந்திப்பை யார் விரும்புகிறாரோ அவரது சந்திப்பை அல்லாஹ் விரும்புகிறான் என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள் எனக்கூறுகிறார்.

## மரணம் சம்பவிக்கும் போது உயர்வான அல்லாஹ்வைப்பற்றி நல்லெண்ணம் கொள்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 455

“அல்லாஹ்வைக் கொண்டு அவரது எண்ணத்தை அழகானதாக ஆக்கியவராகவே அன்றி நிச்சயமாக உங்களில் எந்த ஒருவரும் மரணிக்க வேண்டாம்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களது மரணத்திற்கு மூன்று (நாட்களு)க்கு முன்பு கூறியதை நான் செவியுற்றேன் என ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்.

## மய்யித் இருக்குமிடத்திற்கு ஆஜரானால் மய்யித்தின் கண்களை மூடி விடுவதும் அதற்காக துஆ செய்வதும் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 456

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அபூஸலமா (மரணத்தருவாயிலிருந்த போது)விடம் நுழைந்(அருகில் வந்)தார்கள். அவரது பார்வை மேல் நோக்கி விட்டது. ஆகவே அதை ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் மூடினார்கள். அதன்பிறகு “நிச்சயமாக உயிர் கைப்பற்றப்பட்டு விட்டால் பார்வை அதை தொடர்கிறது”[1] எனக்கூறினார்கள். (உடனே) அவர் குடும்பத்தவர்களிலுள்ள மக்கள் பெரும் சப்தமிட்டனர். அப்போது (உங்களுக்காக) நலவானவற்றைக்

கொண்டே தவிர துஆ செய்யாதீர்கள், ஏனெனில் அமரர்கள் உங்களது கூற்றுக்கு ஆமீன் கூறுகிறார்கள் எனக்கூறினார்கள்.

அதன்பிறகு “யா அல்லாஹ்! அபூஸலாமாவிற்கு பாவமன்னிப்புச் செய்வாயாக நேர்வழி பெற்றவர்களில் அவரது தரத்தை உயர்த்துவாயாக. மீதமிருப்பவர்களில் அவருக்குப்பிறகு அவரை (இழந்தற்குரிய) பகரத்தை நல்குவாயாக அகிலங்களின் இரட்சகனே! எங்களுக்கும் அவருக்கும் பாவமன்னிப்புச் செய்வாயாக அவரது கப்ரில் அவருக்கு விஸ்தீரனத்தை நல்கி அதில் ஒளியை ஆக்குவாயாக” எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : உம்மு ஸலமா ரளியல்லாஹு அன்ஹா

குறிப்பு : 1. உயிர் இறுதியாக உடலிருந்து கண்கள் வழியாகவே வெளியேறுகிறது. அவ்வாறு வெளிப்பட்ட உயிரை கண்கள் பார்த்தவாறு நின்று விடுகிறது.

## மய்யித்தை மறைத்து (மூடி) வைப்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 457

“அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் இறப்பெய்திய போது (யமன் நாட்டைச் சேர்ந்த போர்வைகளில் ஒரு போர்வையை) துணியைக்கொண்டு மறைத்து (மூடி) வைக்கப்பட்டிருந்தார்கள்” என மூஃமின்களின் அன்னை ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்.

## மூஃமின்களின் உயிர்கள், காஃபிர்களின் உயிர்கள் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 458

மூஃமினான மனிதரின் உயிர் (உடலிருந்து) வெளிப்பட்டுவிட்டால் இருமலக்குகள் அதை பெற்று (வானத்திக் பால்) உயர்த்தி (கொண்டு செல்)கின்றனர். (வானத்தின்பால் அம்மலக்குகள் அந்த உயிரை உயர்த்திக்கொண்டு செல்லும்பொழுது) அவ்வுயிர் நறுமணம் உடையதாக ஆகிறது. (அந்நறுமணம்) கஸ்தூரியின் மணத்தைப்போன்று இருப்பதாக ஹம்மாது ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

(அவ்விரு மலக்குகளும் அவ்வுயிரை வானங்களுக்கு எடுத்துச் செல்லும் பொழுது) வானத்திலிருப்பவர்கள் நல்ல உயிர், பூமிப்பகுதியிலிருந்து வந்தது, (ஆகவே உயிரே) உன் மீதும், நீ எந்த உடலிருந்து வாழ்ந்து வந்தாயோ? அதன்மீதும் அல்லாஹ் அருள் செய்வானாக! எனக்கூறுகிறார்கள். (அதன்பிறகு) அதை அவர்கள் அதனின் இரட்சகனின் பால் கொண்டு செல்கின்றனர். (அங்கே) அதை அதற்குரிய கடைசித் தவணையின்பால் கொண்டு செல்லுங்கள் என அவன் (அல்லாஹ்) கூறுவான்.

நிச்சயமாக காஃபிருடைய (உடலிருந்து) உயிர் வெளிப்பட்டு விட்டால், அதன் துர்நாற்றத்தைப் பற்றியும், அதற்கு ஏற்படும் சாபத்தைப் பற்றியும் ஹம்மாது ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

“பூமிப்பகுதியிலிருந்து வந்த இது கெட்ட உயிராகும் என வானத்தையுடையவர்கள் (அமரர்கள்) கூறுவர். (அப்போது) அதன் கடைசி தவணை வரை கொண்டு செல்லுங்கள் எனக் கூறப்படும் என (அறிவிப்பாளர்) கூறுகிறார். (அச்சமயத்தில்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் மேலிருந்த மிருதுவான துணியை தங்களின் மூக்கின்மேல்[1] இவ்வாறு எடுத்துப் போட்டனர்” என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

குறிப்பு : 1. மூக்கின் மேல் (ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வைத்தற்குரிய காரணம்:- காஃபிரானவரின் உயிரை எடுத்துச் செல்லும் போது ஏற்படும் கடும் துர்நாற்றத்தின் நிலையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு காட்டப்பட்டது அதை அவர்கள் நுகர்ந்தனர். அதன் காரணமாகவே துணியை மூக்கின் மேல் வைத்தனர்.

## மனிதர்கள் வெறுக்கும் துன்பமானது திடீரென்று ஏற்பட்ட பொழுது பொறுத்திருத்தல் அது ஏற்பட்ட முதல் தருணத்திலாகும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 459

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “தனது குழந்தை இறந்துவிட்டால் அழுது

கொண்டிருந்த ஒரு பெண்ணின்பால் வந்தனர். (அப்போது அப்பெண்ணிடம்) அல்லாஹ்வை பயந்து கொண்டு பொறுத்துக் கொள்வாயாக! எனக் கூறினார்கள். அதற்கு அப்பெண், என் துன்பம் பற்றி நீங்கள் பொருட்படுத்தமாட்டீர்கள் (காரணம் அது உங்களுக்கு ஏற்படவில்லையே) எனக் கூறினாள். (அதன்பின் அங்கிருந்து) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் சென்றுவிட்ட போது, அப்பெண்ணிடம் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களாவர் எனக்கூறப்பட்டது. (அதைக்கேட்டதுமே) மரணம் போன்றது (பயம்) அவளை பிடித்துக் கொண்டது. (உடனடியாக) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டு வாசலுக்கு வந்தாள் (ஆனால்) ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் வீட்டு வாசலில் காவல்காரர்கள் யாரையும் அ(ப்பெண்)வள் பெறவில்லை, (இருக்கவில்லை) (அப்போது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! உங்களை நான் (இன்னாரென்று) தெரிந்து கொள்ளவில்லை எனக் கூறினாள். அதைக் கேட்ட(அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்)அவர்கள், "எதிர்பாரத நிலையில் துன்பங்கள் ஏற்படும் முதல்தருணத்தில்தான் பொறுமையை (கடைபிடிக்க வேண்டும்)" எனக்கூறினர். அல்லது "எதிர்பாரத துன்பங்கள் ஏற்படும் முதல்நேரத்தில் தான் என்றனர்."

## யாருக்காவது பிள்ளைகள் இறந்து அதற்குரிய (பலனை) கணக்கை அவர் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 460

மூன்று பிள்ளைகள் உங்களில் யாருக்கேனும் இறப்பெய்தியதை (அல்லாஹ்விடம் கிடைக்கும் நன்மையை நாடி) அவள் பொறுத்துக் கொண்டாள் (அதன் நிமித்தம்) அவள் சுவனத்தில் நுழைந்துவிடுவதை தவிர வேறில்லை என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அன்ஸார்களின் பெண்களில் சிலரிடம் நிச்சயமாக கூறினார்கள். (அதைக்கேட்ட) அவர்களிலிருந்த ஒரு பெண், அல்லாஹ்வின் தூதர்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே!, அல்லது இரண்டு (பிள்ளைகளாக) இருந்தாலுமா? எனக் கேட்டார். அல்லது இரண்டுக்கும்தான் எனக்கூறினார்கள்.

முஸ்லிம்களில் யாருக்கேனும் பிள்ளைகளில் மூன்று இறப்பதில்லை, சத்தியத்திற்குப் பரிகாரமாக அவரை நரக நெருப்பு தொடாது இருப்பதை தவிர, என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரை உயர்த்தப்பட்ட சரியான தொடரில் வந்துள்ளது.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : சத்தியத்திற்கு பரிகாரம் என்பதன் கருத்து

அல்லாஹ் செய்த சத்தியத்தை நிறைவேற்றுகின்றானே அந்த அளவிற்கு நீங்கலாக என்பது கருத்து.

‘உங்களில் ஒவ்வொருவரும் நரகத்திற்கு வந்ததே (நுழைந்தே) தவிர இல்லை‘ என்ற அல்லாஹ்வின் கூற்றுக்கிணங்க ஒவ்வொருவரும் வரும்போது இவரும் வருவார். ஆனால் இவர் விஷயத்தில் நரகம் எந்த தீமையும் செய்யாது மாறாக அவருக்கு குளிராகவும் சாந்தியை நல்கக்கூடியதாகவும் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இருந்தது போன்று மாறிவிடும்.

மேற்கூறப்பட்ட கருத்தை வலியுறுத்தி அல்லாஹ்வின் கூற்றுக்கொப்ப இவரும் நரகத்தில் நுழைவார். ஆனால் இவருக்கு தண்டனை இருக்காது என்பதே இதன் கருத்தாகும்.

## துன்பத்தின்போது சொல்லப்படுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 461**

ஒரு அடியார் தனது துன்ப நேரத்தில் “இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் அல்லாஹும்ம அஜிர்னீ பீமுஸீபத்தி வக்லுப்லீ கைரன் மின்ஹா” என்று சொல்வார். அதன் நிமித்தம் அல்லாஹ் அவரது துன்பத்துக்கு நற்கூலி நல்கி அதைவிட சிறந்ததை அவருக்கு பகரமாக தந்தே தவிர எந்த ஒரு அடியாருக்கும் துன்பம் ஏற்படுவதில்லை என

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்ல நான் கேட்டேன்.

அபூஸலமா இறப்பெய்திவிட்ட சமயம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளையிட்டது போன்று நான் கூறினேன். அபூஸலாமாவைவிட மிகச்சிறந்தவர்களான அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை எனக்கு அல்லாஹ் பகரமாகக் தந்தான் என உம்முஸலமா அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : உம்முஸலமா ரளியல்லாஹு அன்ஹா

மரணம் சம்பவிக்க இருப்பவரிடம் அழுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 462

ஸஅது பின் உபாதா தனக்குரிய முறையீட்டைக் கூறினார்கள். அப்துல் ரஹ்மான் பின் அவ்ப், ஸஅது பின் அபீ வக்காஸ், அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரளியல்லாஹு அன்ஹும் அஜ்மஈன்) உடனிருக்க அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அவரை விசாரிக்க வந்தனர். அவரிடம் வந்தபோது அவர் மயக்கத்தில் இருந்தார். (ஆகவே) அவர் முடிந்து (மரணித்து) விட்டாரா? எனக்கேட்டார்கள். அதற்கு (அங்கிருந்தவர்கள்) இல்லை என்றனர். (அப்போது) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அழுதார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அழுததைக் கண்ட கூட்டத்தினரும் அழுதனர். (அப்போது) கேட்க மாட்டீர்களா? தெரிந்து கொள்ளுங்கள்.

கண்கலங்கி நீர் வடிப்பதற்காகவோ, மேலும் மனதால் கவலைப்படுவதற்காகவோ, நிச்சயமாக அல்லாஹ் தண்டிக்க மாட்டான். ஆயினும் இதன் காரணம்- என்று தனது நாவின் பால் சுட்டிக்காட்டி- தண்டிக்கிறான் அல்லது அருள் செய்கிறான் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹு அன்ஹுமா

(மய்யித்திற்காக) ‘ஓலமிட்டு அழுவதில் கண்டிப்பு‘ பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 463

‘எனது உம்மத்தில் நான்கு காரியங்கள் அறியாமைக் காலக் காரியங்களில் உள்ளவையாகும். அவைகளை அவர்கள் விடமாட்டார்கள். (அவையாவன) வம்சா வழியைக் கூறி பெருமைப்படுதல், மனிதர்கள் (உயர்வான குடும்பப்) பாரம்பரியங்களை குறை கூறுதல், நட்சத்திரங்களைக் கொண்டு மழைப் பெய்யத் தேடுதல், (ஒப்பாரியிட்டு) ஓலமிட்டு அழுதல் (முதலியவைகளாகும்).

“ஓலமிட்டு அழும் பெண் அவள் மரணத்திற்கு முன்பு தவ்பாச் செய்யவில்லையாயின் மறுமை நாளில் அவளை(க் கொண்டுவந்து) நிறுத்தப்படும். அவள்மேல் தாரினால் வார்க்கப்பட்ட[1] சட்டை (அணிவிக்கப்பட்டு) இருக்கும்.” என நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபுமாலிக் அல் அஷ்அரி ரளியல்லாஹ் அன்ஹீ அவர்கள் அறிவிக்கிறார்கள்.

குறிப்பு : 1 இது போன்றே இதே கருத்துப்பட இதற்கடுத்து ‘ஜரப்‘ என்ற வார்த்தை இடம்பெற்றுள்ளது ஆயினும் அதன் மூலத்தை கவனிக்கும்பொழுது இச்சட்டையை அவளுக்கு அணிவிக்கப்பட்ட பிறகு உடலில் ஒரு விதமான அரிப்பு ஏற்பட்டு சிரமப்படுத்தப்படுவாள் என்ற பொருள் உண்டு என்பதும் தெளிவாகிறது.

## தன் குடும்பத்தில், பந்தத்தில் யாருக்காவது மரணம் சம்பவித்த போது கன்னங்களில் அடித்துக்கொண்டவர்களும் அல்லது பாக்கெட்(சட்டை)களை கிழித்துக் கொண்டவர்களும் நம்மைச் சார்ந்தவரல்ல என்பது பற்றிய பாடம்

ஹதீஸ் எண் : 464

“கன்னங்களில் அடித்துக் கொண்டவர்களும் அல்லது பாக்கெட்(சட்டை)களை கிழித்துக் கொண்டவர்களும் அல்லது அறியாமை கால வார்த்தைகளைக்கூறி அதன்பால் அழைத்தவரும் நம்மைச் சார்ந்தவரல்லர்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்

அப்துல்லாஹ் பின் மஸ்ஊது ரளியல்லாஹ் அன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மற்றொரு அறிவிப்பில் கிழித்துக் கொண்டு அழைத்தவன் நம்மைச் சார்ந்தவனல்ல என வந்துள்ளது.

## உயிரோடிருப்பவர் அழுவதால் மய்யித்துதண்டிக்கப்படுகிறது என்பது பற்றிய பாடம்

### ஹதீஸ் எண் : 465

“உயிரோடிருப்பவர் அழுவதன் காரணமாக நிச்சயமாக மய்யித்து தண்டிக்கப்படுகிறது” என அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள், ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்களுக்கு கூறியதை (தாம்) கேட்டதாக அம்ரா பின்த் அப்துர்ரஹ்மான் அறிவிக்கிறார். (ஆனால் இதைக் கேட்ட) ஆயிஷா ரளியல்லாஹ் அன்ஹா அவர்கள் அபூ அப்துற்ரஹ்மான் அவர்களை அல்லாஹ் மன்னிப்பானாக! நிச்சயமாக அவர் பொய் கூறவில்லை, எனினும் அவர் மறந்திருக்கலாம், அல்லது அவர் தவறு செய்திருக்கலாம் என்றனர்.

(நடந்த நிகழ்ச்சி யாதெனில்) ஒரு யூதர் பெண்ணின் கப்ர் அருகாமையில் நபி ஸல்லல்லாஹ் அலைஹிவஸல்லம் அவர்கள் சென்ற பொழுது அவளுக்காக அழப்படுவதை (சிலர் அழுவதைப் பார்த்த) அவர்கள், அவளுக்காக அவர்கள் (அச்சிலர்) அழுகின்றார்கள். நிச்சயமாக அவளது கப்ரில் அவள் தண்டிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறாள் என்றார்கள்.

அறிவிப்பவர் : அம்ரா பின்த் அப்துற்ரஹ்மான் ரளியல்லாஹ் அன்ஹுமா

குறிப்பு : ஒலமிட்டு அழுவதாலும், ஒலமிட்டு அழ வேண்டுமென இறந்தவரால் சொல்லி வைக்கப்பட்டு அதை நிறைவேற்ற ஒலம், ஒப்பாரி வைப்பதாலுமே, மய்யித் தண்டிக்கப்படுகிறது (என்பதே இதன் கருத்தாகும்) என்பதை மற்றொரு ஹதீஸ் தெளிவு செய்கிறது

இறப்பெய்தியவர் நல்லவராக முஃமீனாக இருப்பின் உலகத் துன்பங்களிலிருந்து ஒய்வு பெற்றுவிடுகிறார், கெட்டவராக

இருப்பின் அவரிலிருந்து மற்றவர்களும் மற்றவைகளும் ஓய்வு பெற்றுவிடுகின்றனர் என்பது பற்றிய பாடம்

**ஹதீஸ் எண் : 466**

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் ஒரு ஜனாஸாவை எடுத்துச் செல்லப்பட்ட(பொழு)து, முஸ்தரிஹ், முஸ்தராஹ் மின்ஹு எனக் கூறினார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! அவ்வாறென்றால் என்ன எனக் கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், "முஃமினான அடியார் (இறப்பெய்தியதன் மூலம்) உலகத்துன்பங்களிலிருந்து அவர் ஓய்வு பெற்றுவிடுகிறார். (ஆனால்) கெட்ட அடியார் (இறப்பெய்தியதன் காரணமாக மற்ற) அடியார்(மனிதர்)களும் நகரங்களும், மரமும், கால்நடைகளும் அவரின் (தீமையிலிருந்து) ஓய்வு (விடுதலை) பெற்று விடுகின்றன" என்று கூறினார்கள் என அபூகதாதா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் செய்தி அறிவிக்கக்கூடியவராக இருந்தார்.

மய்யித்தை கழுவுவது பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 467**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் மகளார் ஜைனப் ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் இறப்பெய்திய பொழுது, (அவர்களை குளிப்பாட்டும் விஷயத்தில்) ஒற்றைப்படையில், மூன்று அல்லது ஐந்து (என) அவர்களைக் குளிப்பாட்டுங்கள், ஐந்தாவது முறையில் கற்பூரத்தை அல்லது கற்பூரத்தில் கொஞ்சத்தை ஆக்குங்கள் என எங்களுக்குக் கூறிவிட்டு அவர்களைக் குளிப்பாட்டி முடித்துவிட்டால் எனக்குத் தெரிவியுங்கள் எனவும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (குளிப்பாட்டி முடித்துக் கொண்டதும்) அவர்களுக்கு தெரிவித்தோம். (அதன்பிறகு) அவர்கள், உடலோடு அணிவிக்கக்கூடிய ஒரு துணியைத் தந்தார்கள், அத்துணியை அவர்களுக்கு நாங்கள் அணிவித்தோம்.

அறிவிப்பவர் : உம்மு அதிய்யா ரளியல்லாஹு அன்ஹு

மய்யித்திற்கு கபனிடுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 468

மிகத்தூய்மையான வெள்ளை நிறமுள்ள மூன்று நூல் துணிகளில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கபனிப்பட்டார்கள். அதில் தலைப்பாகையோ சட்டையோ இல்லை. (ஆயினும்) கீழாடை மேலாடை இரண்டும் ஒரே துணியில் அமைந்த ஒன்றை அதில் அவர்களை கபனிப்படுவதற்காக வாங்கப்பட்டது, ஜனங்களுக்கு ஒரு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்திவிட்டது. அவர்களை கபனிடுவதற்காக வாங்கப்பட்ட கீழாடை மேலாடை இரண்டும் ஒரே துணியில் உள்ள (அதில்) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களைக் கஃபனிடுவது கைவிடப்பட்டு மிகத்தூய்மையான வெள்ளைநிறமுள்ள மூன்று துணிகளில் அவர்களுக்கு கபனிடப்பட்டது. ஆகவே ஒரே துணியில் கீழாடை, மேலாடை உள்ள அதை அப்துல்லாஹ் பின் அபூபக்கர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் எடுத்துக்கொண்டு, என்னை அதில் கபனிடப்படும் வரை மிக உறுதியாக அதை நான் தேக்கிவைப்பேன் என்றார். அதன்பிறகு, அல்லாஹ் தனது நபிக்கு பொருத்தப்பட்டிருந்தால் அவர்களை அதில் கபனிடச்செய்திருப்பான் அவ்வாறில்லை என்கின்றபோது அதை எனக்கு கபனிடப்பட்டு கொள்ள நான் விரும்பவில்லை எனக்கூறி அதை விற்று அதன் கிரயத்தை தர்மம் செய்துவிட்டார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

மய்யித்திற்குரிய கபனை அழகாக இடவேண்டும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 469

நிச்சயமாக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு நாள் பிரசங்கம் செய்தனர். (அப்போது) தனது தோழர்களில் ஒரு மனிதர் இறப்பெய்தி, பற்றாத கபன் அவருக்கு இடப்பட்டு இரவில் அடக்கமும் செய்விக்கப்பட்டு விட்டார் என்ற

(விஷயத்தை) கூறிவிட்டு (இரவில் ஒரு மனிதர் இறப்பெய்திவட்டால்) அவருக்கு தொழுகை நடத்தப்படும் வரை (இரவிலேயே) அடக்கப்படுவதைக் கண்டித்தார்கள். அவ்வாறு செய்ய (எந்த) மனிதராவது நிர்பந்திக்கப்பட்டாலே தவிர.

'உங்களில் ஒருவர் தன் சகோதரருக்கு கபனிட்டால் அவரது கபனை (பற்றாக் குறையாக இடாது, நிறைவாக) அழகாக இடவும்' எனவும் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1) இரவில் மய்யித்தை தொழவைக்காமல் அடக்கப்படுவதைத்தான் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கண்டித்தார்கள். ஏனெனில் பள்ளியை சுத்தம் செய்த பெண்ணை அல்லது பையனை இரவில் அடக்கி விட்ட செய்தியைக் கூறியபோது ஏன் இரவில் அடக்கம் செய்தீர்கள் என்றோ அல்லது செய்யக்கூடாது என்றோ கூறவில்லை. ஆகவே தொழ வைத்து அடக்கம் செய்ய வேண்டும் என்பது தெளிவாகிறது.

2) சில மய்யித்தை (அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்) கொஞ்சமும் தாமதம் செய்ய இயலாத நிலைக்கு ஆளாகிவிடுகிறது. அவ்வாறு இருப்பின் அடக்கலாம் என்பது தெளிவு.

3) இரவில் அடக்கம் செய்வதை தவிர்த்தால் பகலில் அதிக எண்ணிக்கையுடையவர்கள் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு என்பதை தெரிவிக்க இரவில் செய்வதை தவிர்க்கவும் எனக் கூறியிருக்கலாம்.

ஜனாஸாவைத் துரிதப்படுத்துதல் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 470

"ஜனாஸாவைத் துரிதப்படுத்துங்கள்[1] அது நல்லதாக இருப்பின் எதன்பால் (கப்ரின் பால்) அதை முற்படுத்துகிறீர்களோ (எனகூறியிருக்கலாம்) அது (அதற்கு) நலவாக இருக்கும் அதல்லாததாக இருப்பின் உங்களது கழுத்து(த்தோல்)களிலிருந்து

இறக்கிவைத்து விடுவது (அதற்கு) தீமையாக[2] இருக்கும்'' என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்.

குறிப்பு : 1) ஜனாஸாவை எடுத்துசெல்லும் பொழுது நடையில் துரிதம் காட்டுவதாகும் என்பதே இதன் கருத்தாகும்.

2) அது அல்லாஹ்வின் அருளிலிருந்து தூரமாக்கப்பட்டதாகும் என்பதே இதன் கருத்து.

## ஜனாஸாவை பெண்கள் பின் தொடர்ந்து செல்வது தடுக்கப்பட்டதாகும் என்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 471

ஜனாஸாவை பெண்கள் பின் தொடர்வதிலிருந்து நாங்கள் தடுக்கப்பட்டோம். (ஆனால்) எங்களுக்கு கண்டிப்பாக அதை (ஜனாஸாவை பின் தொடர்வதை) செய்யப்பட்ட வேண்டுமென்பதில்லை என உம்மு அதிய்யா கூறுகிறார்கள்.

அறிவிப்பவர் : உம்மு அதிய்யா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : தடையென்பது சாதாரனமனதாகும், ஹராமல்ல என்பதை அறியவும்.

## ஜனாஸாவிற்காக எழுந்து நிற்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 472

ஒரு ஜனாஸா சென்றது (ஒரு ஜனாஸாவை மக்கள் எடுத்துச் சென்றனர்.) அதன் பொருட்டு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (எழுந்து) நின்றனர், (அதைப்பார்த்து) நாங்களும் எழுந்து நின்றோம். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! அது யூதப்பெண்ணின் ஜனாஸாவாகும் எனக்கூறினோம். (அதற்கவர்கள்) மரணம் என்பது நிச்சயமாக திடுக்க(ம் தரும் செய்தியாகும்)மாகும். ஆகவே ஜனாஸாவை (எடுத்துச் செல்லக்) கண்டால் அதன் நிமித்தம் எழுந்து நில்லுங்கள் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்துல்லாஹ் ரளியல்லாஹு அன்ஹுமா

ஜனாஸாவிற்கு எழுந்து நிற்பது மாற்றப்பட்டுவிட்டது என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 473

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை (ஜனாஸாவிற்காக) எழுந்திருக்கக்கண்டு நாங்களும் எழுந்தோம். (ஆனால் பின்பு) ஜனாஸாவிற்காக அவர்களும் அமர்ந்தார்கள், நாங்களும் அமர்ந்தோம் என அலி ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

மய்யித்திற்கு தொழுகை நடத்தும் சமயம் இமாம் எங்கு நிற்க வேண்டும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 474

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின்னால் நான் (ஜனாஸா தொழுகை) தொழுதேன். உம்மு கஅபு என்பவரின் (பிரவசத் தொடரில்) பிரசவச்சமயத்தின் போது இறப்பெய்தி விட்டனர். அவருக்காக நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகை நடத்தினர். அப்பொழுது அவரின் (மய்யித்தின்) மத்தியில் நின்றார்கள் என ஸமுரா பின் ஜுன்துப் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஜனாஸாவிற்கு தக்பீர் கூறுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 475

நஜாஷியின் மரணம் பற்றி, என்றைக்கு அவர் இறப்பெய்தினாரோ அன்றைய தினமே மக்களுக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தெரிவித்து விட்டனர். அவர்களோடு தொழுமிடத்திற்குப் புறப்பட்டு வந்தோம். (பிறகு ரஸூல் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) நான்கு தக்பீர்களை கூறி(தொழுகை நடத்தி)னார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

ஐந்து தக்பீர்கள் கூறுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 476

ஜைது (என்பவர்) எங்களது ஜனாஸாக்களுக்கு நான்கு தக்பீர் கூறக்கூடியவராக இருந்தார். ஒரு ஜனாஸாவின் போது ஐந்து தக்பீர் கூறிவிட்டார். (அது பற்றி) அவரிடம் நான் (அறிவிப்பாளர்) கேட்டேன். அதற்கவர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்வாறு தக்பீர் கூறியிருக்கிறார்கள் எனக் கூறினார்.

அறிவிப்பாளர் : அப்துர்ரஹ்மான் பின் அபூலைலா ரளியல்லாஹு அன்ஹுமா

மய்யித்திற்காக துஆ செய்வது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 477

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு ஜனாஸாவிற்கு தொழுகை நடத்தினார்கள். அத்தொழுகையில் ஜனாஸாவிற்காக அவர்கள் ஓதிய துஆவை நான் மனனம் செய்து விட்டேன்.

[1]“அல்லாஹும்மக்பிர்லஹு வர்ஹம்ஹு வஆபிஹி வஅபு அன்ஹு, வஅக்ரிம் நுஜுலஹு வவஸ்ஸிஉ முத்கலஹு, வக்ஸில்ஹு பில்மாஇ வத்தல்ஜி வல்பரதி வநக்கிஹி மினல் கதாயா கமா-னக்கைத்தஸ்ஸவ்பல் அப்யழ மினத்தனஸி, வஅப்தில்ஹுதாரன் கைரன் மின்தாரிஹி, வஅஹ்லன் கைரன் மின் அஹ்லிஹி வஜவ்ஜன் மின் ஜவ்ஜிஹி, வஅத்கில் ஹுல் ஜன்னத்த வஅஇத்ஹு மின் அதாபில்கப்ரி அவ்மின் அதாபின்னார்” என அவர்கள் கூறக்கூடியவர்களாக இருந்தனர். முடிவாக நான் அந்த மய்யித்தாக இருக்கவேண்டுமென ஆசைப்பட்டேன்.

அறிவிப்பவர் : அவ்ஃப் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு : 1 யா அல்லாஹ்! அவருக்கு பாவமன்னிப்புச் செய்து, அருளும் செய்து இன்னும் அவருக்கு ஆபியத்தையும் கொடுத்து அவரை, அவர் தங்குகின்ற இடத்தை கண்ணியமானதாக்கி வைப்பாயாக! தண்ணீர் கொண்டும், ஐஸ்கட்டி கொண்டும், ஆலங்கட்டி கொண்டும் அவரை கழுவுவாயாக! மிக வெண்மையான புடவையை அழுக்கிலிருந்து சுத்தப்படுத்துவதைப் போன்று அவரைத் தவறுகளிலிருந்து சுத்தமாக்குவாயாக! அவர்

(உலகில் குடியிருந்த) வீட்டை விடச்சிறந்த வீடாக, அவரது குடும்பத்தாரை விடச் சிறந்த குடும்பமாக, அவரது மனைவியை விடச் சிறந்த மனைவியாக, அவருக்கு மாற்றிக் கொடுப்பாயாக! அவரை சுவனத்தில் பிரவேசிக்கச் செய்வாயாக! அவரை கப்ரின் வேதனையிலிருந்து காப்பாற்றுவாயாக! அல்லது நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுவாயாக!

## மய்யித்திற்கு பள்ளியில் தொழுகை நடத்துவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 478

ஸஅது பின் அபீவக்காஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் இறப்பெய்திய பொழுது, நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவிமார்கள் அவருக்கு அவர்கள் தொழுகை நடத்த வேண்டுமென்பதற்காக அவரது ஜனாஸாவை பள்ளிக்குக் கொண்டு வருமாறு (ஒருவரிடம் சொல்லி) அனுப்பினார். (அவர்கள் கூறியதற்கிணங்க அவ்வாறே) அவர்களும் செய்தனர். நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் (மனைவிமார்கள் ரளியல்லாஹு அன்ஹு அன்ஹுன்ன இருந்த) அறைகளுக்கு அருகாமையில் அவரது (ஜனாஸா கொண்டு வந்து) வைக்கப்பட்டது. அவர்களெல்லோரும் அவரது ஜனாஸாவிற்கு தொழுகை நடத்தினர்.

பள்ளியில் உட்காரும் இடங்கள் (உள்ள) பகுதியிலிருக்கும் ஜனாஸாக்களைக் கொண்டு செல்லும் வாயில் வழியாக வெளியே அவரைக் கொண்டு வரப்பட்டது. (அதற்குப்பிறகு) அவர்களது இச்செயலை (சில) மனிதர்கள் குறைகூறியதாக அவர்களுக்கு செய்தி எட்டியது. (அதாவது) ஜனாஸாக்களை பள்ளியினுள் நுழைவிக்கப்பட (கொண்டுவர) வேண்டியதில்லை என அவர்கள் கூறிய கூற்று ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் எட்டியது.

மனிதர்களுக்கு எது பற்றி தெரியவில்லையோ அது விஷயத்தில் குறை கூற அவர்களை அவசரப்படுத்தியது எது? ஜனாஸாவை பள்ளியினுள் கொண்டு வந்ததைப் பற்றி அவர்கள் நம்மீது குறை கூறிவிட்டனர். (ஆனால் ஸுஹைல் பின் பைளாஉ ரளியல்லாஹு அன்ஹு என்பவருக்கு பள்ளியினுள் வைத்தே தவிர அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்

அவர்கள் (வேறெங்கும்) தொழவைக்கவில்லை (என்ற விஷயம் ஏன் அவர்களுக்கு தெரியாமல் போய்விட்டது) எனக்கூறினார்கள். அறிவிப்பவர் : ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா

‘கப்ரின் மீது தொழுகை நடத்தப்படுவது‘ பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 479

பள்ளியை கூட்டிப்பெருக்கிக் கொண்டிருந்த ஒரு கருப்புப்பெண்ணை அல்லது ஒரு வாலிபரை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் காணாததால் அவளை அல்லது அவரைப்பற்றி கேட்டனர். அதற்கு (அங்கிருந்தவர்கள்) அவள் அல்லது அவ்வாலிபர் இறப்பெய்திவிட்டதாக கூறினார்கள். அதைக் கேட்ட நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (இதைப்பற்றி) எனக்கு நீங்கள் தெரிவித்திருக்க வேண்டாமா? எனக்கூறிவிட்டு அவளின் அல்லது அவ்வாலிபரது கப்ரை எனக்கு காட்டுங்கள் என்றனர். (அங்கிருந்தவர்கள் அப்பெண்ணுடைய அல்லது அவ்வாலிபருடைய மய்யித்து விஷயத்தை பெரிதாகக் கருதாமையால் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறாமல் இருந்துவிட்டனர் என்பதாக அறிவிப்பவர் கூறுகிறார்) (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதற்கிணங்க) அவளது அல்லது அவ்வாலிபரது கப்ரை காண்பித்தனர். அதன்மீது (அக் கப்ருக்கு அருகில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்)அவர்கள் தொழுது விட்டு.

நிச்சயமாகக் இந்தக் கப்ருகள் அதை உடையவர்களுக்கு இருளால் நிரப்பட்டுள்ளது எனது தொழுகையினால் அவர்களது கப்ரில் நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு பிரகாசத்தை நல்குகிறான் எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

குறிப்பு :

மய்யித்து தொழுகை உரியவருக்கு அத்தொழுகை தவறிவிடுமானால் அம்மய்யித்தின் கப்ருக்கு சென்று மய்யித்துத் தொழுகை நடத்துவது ஆகும் என்பதற்கு இந்த ஹதீஸ்

ஆதாரமாகும். ஆனால் மற்ற தொழுகைகளை கப்ருகளின்பால் தொழுவது தடுக்கப்பட்டதாகும் என்பதை மற்றொரு ஹதீஸில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள் என்பதை கவனத்தில் கொள்க.

தற்கொலை செய்து கொண்டவர் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 480

“அகலமான அம்புகளால்[1] தன்னை (தற்)கொலை செய்து கொண்ட ஒரு மனிதரை நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொண்டுவரப்பட்டது. அந்த மனிதருக்கு (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் (ஜனாஸா) தொழுகை தொழ வைக்கவில்லை” என ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

குறிப்பு : 1 குறுக்கில் அகலமில்லாத நீட்டமான அம்பின் கூர்மையைக் கொண்டு என்ற பொருளும் “மஷ்கஸ்“ என்பதற்கு கையாளப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்க

தற்கொலை செய்து கொண்டவருக்கு மய்யித்த தொழுகை ஆகுமா? ஆகாதா?

இக்கேள்விக்கு இங்கு பதில் சொல்லியே ஆகவேண்டும் என்ற நிலைக்கு இப்போது கேள்விகள் எழுந்துள்ளன. ஆகவே கூடாது என்பவர்களின் கூற்றை அலசுவோம்.

அகலமான அம்பினால் தற்கொலை செய்து கொண்ட ஒருவரை நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் கொண்டுவரப்பட்டது. அவர்கள் தொழவைக்கவில்லை.

இந்த ஹதீஸில் எவ்வித அப்பழுக்குமில்லை. (இந்த ஹதீஸை) ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு அறிவிப்பதாக ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

இந்த ஹதீஸின் துனுக்கை கையில் எடுத்துக் கொண்டு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழவைக்கவில்லை ஆகவே நாங்களும் தொழவைக்க மாட்டோம் என்கின்றனர். வேறு எந்த ஆதாரத்தையும் காட்டவில்லை.

இப்போது தொழுகை நடத்துவது கூடும் என்பது பற்றிய கூற்றின் ஆதாரங்களைப் பார்ப்போம்.

(1) ஸுனன் நஸாயீயில் ‘அம்மா அனபலாஉ ஸல்லீ அலைஹி‘ ஆகவே நான் அவருக்குத் தொழுகை நடத்தவில்லை என்ற வாசகம் பதிவாகியுள்ளது.

அறிவிப்பவர்கள் : ஸிமாக் ரளியல்லாஹு அன்ஹு, ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு

நான் நடத்தவில்லை என்று கூறிய நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றவர்களை நடத்த வேண்டுமென்றோ? அல்லது வேண்டாமென்றோ? கூறினார்களா? கடன்பட்டவருக்கு மற்றவர்களை தொழவைக்கச் சொன்னது போல- என்ற கேள்வி எழுகிறது.

அக்கேள்விக்கு பதிலாக அதே ஸுனன் நஸாயீயில், (பக்கம் 66ல் பாகம் 4ல்) ‘மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழவைக்கவில்லை. ஆனால் ஸஹாபாக்கள் தொழுகை நடத்தினர் என உள்ளது. ஆகவே மற்றவர்களுக்கு எச்சரிக்க நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தொழ வைக்கவில்லை. ஆனால் ஸஹாபாக்கள் தொழுததை மறுக்கவுமில்லை. எனவே தொழலாம்.

(2) தற்கொலை செய்து கொண்டு இறந்த அம்மனிதரை துபைல் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் தமது கனவில் காண்கிறார்கள். அவர் அழகான தோற்றத்தில் இருக்கிறார். ஆனால் அவர் தனது இரு கைகளையும் மறைத்துக் கொண்டவராக இருக்கக் காண்கிறார். உமது இறைவன் உம்மை என்ன செய்தான் எனக் கேட்கிறார். அதற்கவர் நான் அவனது நபியின் பால் ஹிஜ்ரத் செய்ததன் நிமித்தம் என் பாவத்தைப் பொறுத்துவிட்டான். அவ்வாறெனில் உன் கைகளை நீ மறைத்து வைத்திருக்க உம்மை நான் காண்கிறேனே? என்றார். நீர் தாமதமாக கெடுத்துக் கொண்டதை நாம் சீராக்கப் போவதில்லை என எனக்குக் கூறப்பட்டது எனக் கூறினார். இக்கனவை துபைல், ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறினார். அதைக் கேட்டதுமே அல்லாஹ்வின் தூதர்

ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் யா அல்லாஹ்! அவரது இரு கைகளுக்காக அப்பாவத்தைப் பொறுத்தருள்வாயாக எனக்கூறினார்.

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ அங்கீகாரத்திற்கு உரியதாகும். ஆகவே தற்கொலை செய்து கொண்டவர் என்று தெரிந்ததும் மன்னிப்புக்காக துஆ செய்கிறார்கள் என்பது தெளிவு. அதோடு இதை ஆதரமாக வைத்து, இறந்தவர்களுக்கு துஆ செய்வது தானே தொழுகை ஆகவே தொழுகை நடத்தலாம். நடத்துவது குற்றமில்லையென ஹதீஸ் கலை வல்லுநர்கள் கூறுகின்றனர்.

## ஜனாஸாத் தொழுகை தொழுவது, அதைத் தொடர்வது ஆகியவற்றின் சிறப்பு பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 481

“யாரேனும் ஒருவர் ஒரு ஜனாஸா(விற்காக) தொழ வைக்கப்படும் வரை ஆஜராகியிருந்தால் அவருக்கு ஒரு கிராத் (நன்மை) உண்டு. அந்த ஜனாஸாவை அடக்கப்படும்வரை யார் ஆஜராகியிருந்தாரோ அவருக்கு இரண்டு கிராத் நன்மை உண்டு” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு கூறினார்கள்.

“இரண்டு கிராத்துகள்” என்ன என்று (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு பிரமாண்டமான இரு மலைகளைப் போன்றதாகும் எனக்கூறினார்கள்.

## யாருடைய ஜனாஸாவின் மீது (நபர்கள்) தொழுகின்றார்களோ அந்நபர் விஷயத்தில் அவர்கள் பரிந்துரை செய்விக்கப்படுவார்கள் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 482

எந்த மய்யித்தாக இருப்பினும் முஸ்லீம்களில் ஒரு கூட்டம் அக்கூட்டத்தவர்களின் எண்ணிக்கை நூறை எத்திவிடுகிறது. (அவ்வாறிருக்க) அவர்களனைவரும் அவருக்காக தொழுது பரிந்துரை செய்கிறார்களில்லை, அவர் விஷயத்தில் அவர்களது பரிந்துரை, (அல்லாஹ்வினால்) அங்கீகரிக்கப்பட்டதே தவிர என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்.

யாருக்காக நாற்பது நபர்கள் (ஜனாஸா தொழுதார்களோ) அவர்களது தொழுகையின் துஆவின் மூலம், அவர் விஷயத்தில் அவர்களின் பரிந்துரை அங்கீகரிக்கப்படும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 483

இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹா அவர்களின் மகனார் ‘குதைத்‘ என்ற இடத்தில் அல்லது அஸ்பான் என்ற இடத்தில் இறப்பெய்திவிட்டார். (அப்போது தன்னுடன் இருந்தவரைப் பார்த்து) குறைபே! அவருக்காக (தொழுகை நடத்த) ஜனங்களில் எத்தனை பேர்கள் கூடியுள்ளார்கள் எனப்பாருங்கள் என்றார்கள். (இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் அவர் கூற்றுகிணங்க) நான் (குறைப்) வெளியே சென்று பார்த்தேன். மனிதர்களில் ஒரு கூட்டத்தார் அவருக்காக (அந்த மையித்திற்காக) கூடியிருந்ததை அவருக்கு நான் தெரியப்படுத்தினேன். அப்பொழுதவர்கள், அவர்(வந்திருக்கும் ஜனங்)கள் நாற்பது பேர் இருப்பார்களா? எனக் கேட்டார்கள். (அதற்கு) குறைப் ஆம்! என்றார். (பின்) அவரை (மையித்தை) வெளியே கொண்டு வாருங்கள் என்றார். முஸ்லிமான ஒரு ஆடவர் (மனிதர்) இறப்பெய்தி அவர் ஜனாஸாவை அல்லாஹ்விற்கு எவ்வஸ்துவையும் இணை வைக்காத நாற்பது ஆடவர்கள் தொழவைப்பதில்லை. அவர்களின் (துஆவை) பரிந்துரையை அவர் விஷயத்தில் அங்கீகரித்தே தவிர எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா

இறந்தவர்களில் யாரைப்பற்றி நன்மையானவற்றைக் கொண்டு புகழப்பட்டதோ, அல்லது தீமையைக் குறித்து இகழப்பட்டதோ அவர் பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 484

ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டபொழுது அது பற்றி நன்மையாக கூறப்பட்டது. (அதற்கு) “கடமையாகி விட்டது, கடமையாகிவிட்டது, கடமையாகிவிட்டது” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

(வேறு) ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்படும் பொழுது அது பற்றி தீமையாக பேசப்பட்டது. (அதற்கு) “கடமையாகி விட்டது, கடமையாகிவிட்டது, கடமையாகிவிட்டது” என (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

அப்போது உமர் ரளியல்லாஹ் அன்ஹு அவர்கள் என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணம் ஆகட்டும். ஒரு ஜனாஸா எடுத்துச் செல்லப்பட்டு அது பற்றி நன்மையாக கூறப்பட்ட போது கடமையாகி விட்டது, கடமையாகிவிட்டது, கடமையாகிவிட்டது என மும்முறை கூறினீர்கள். ஜனாஸா கொண்டு செல்லப்படும் பொழுது அது பற்றி தீமையாக பேசப்பட்டது. கடமையாகி விட்டது, கடமையாகிவிட்டது, கடமையாகிவிட்டது என மும்முறை கூறினீர்கள். (அதன் பொருள் என்ன) எனக் கேட்டார்கள்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், நீங்கள் யாரைப்பற்றி நன்மையாக கூறினீர்களோ அவருக்கு சுவனம் கடமையாகிவிட்டது. நீங்கள் யாரைப்பற்றி தீமையாக கூறினீர்களோ அவருக்கு நரகம் கடமையாகிவிட்டது. நீங்கள்தான் பூமியில் அல்லாஹ்வின் சாட்சியாளார்கள், நீங்கள்தான் பூமியில் அல்லாஹ்வின் சாட்சியாளார்கள், நீங்கள்தான் பூமியில் அல்லாஹ்வின் சாட்சியாளார்கள் எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹ் அன்ஹு

## ஜனாஸா தொழுகையை முடித்துக் கொண்டு விட்டால் தொழுகையை நிறைவேற்றியவர் வாகனத்தின் மீது ஏறி வரலாம்

### ஹதீஸ் எண் : 485

இப்னு தஹ்தாஹ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஜனாஸா) தொழுகை நடத்தினர். (அது முடிந்தபின்) எதுவும் விரிக்கப்படாத நிலையில் ஒரு குதிரை அவர்களுக்காக கொண்டுவரப்பட்டது. ஒரு மனிதர் அக்குதிரையை பிடித்திருக்க அதன்மீது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏறினார்கள். அவர்களை (ஏற்றிக்கொண்டு) அக்குதிரை தன் பாதங்களை நெருக்கமாக வைத்து நடந்தது. நாங்கள் அவர்களுக்குப் பின்னால் தொடர்ந்து விரைந்தோம். கூட்டத்திலிருந்த ஒரு மனிதர், “இப்னு தஹ்தாஹ்விற்காக சுவனத்தில் எத்தனையோ ஈச்சங்குலைகள் தொங்கவிடப்பட்டுள்ளன என்றும், அல்லது அதை அவர் உண்ணுவதற்கு தகுந்தார்போல் நெருக்கமாக வைக்கப்பட்டுள்ளது என்றும், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக” கூறினார்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் ஸமுரா ரளியல்லாஹு அன்ஹு

### ஹதீஸ் எண் : 486

“அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ரில் சிவப்பு விரிப்பு ஒன்று ஆக்கப்பட்டது [1](விரிக்கப்பட்டது)” என இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா கூறுகிறார்கள்.

குறிப்பு : 1 நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் சிவப்பு நிற விரிப்பு ஒன்றை விரிக்கவும், அதை அணிந்து கொள்ளவும் செய்து வந்தார்கள். அவர்களுக்குப் பிறகு மற்றெவரும் அதை அணிவதை வெறுத்த, நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களால் உரிமை எழுதப்பட்ட ஷக்ரான் ரளியல்லாஹு அன்ஹு என்பவர். அவ்விரிப்பை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களை அடக்கம் செய்வதற்கு முன் கப்ரினுள் விரித்து விட்டார். அதல்லாமல்,

“இந்த விரிப்பை என் கப்ரில் விரித்து விடுங்கள். நிச்சயமாக நபிமார்களின் உடல்களை பூமி தின்னுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை (விலக்கப்பட்டுள்ளது) எனக் கூறினார்கள்.” (அறிவிப்பவர் : ஹஸன் ரளியல்லாஹு அன்ஹு) என்ற இந்த கட்டளைப்படியும் விரிக்கப்பட்டதாகும். ஆனால் மற்றவர் எவருக்கும் எந்த வித விரிப்பு விரிப்பதற்கோ, தலையணை வைப்பதற்கோ, மார்க்கத்தில் அனுமதியில்லை, அது வெறுக்கப்பட்டதாகும் என்பதை கவனத்தில் கொள்க. காரணம் மய்யித்திற்காக அதன் கப்ரின் உள்ளே அதற்குக்கீழ் எதையும் ஆக்குவதை இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹுமா அவர்கள் வெறுத்துள்ளார்கள் என்பது பைஹகீயில் பதிவாகியுள்ளது.

## கப்ரின் ஓரத்தில் உட்பகுதியில் குழிபறித்து (அக்குழியை) செங்கற்களை (அடுக்கி) வைப்பது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 487

எனது கப்ரின் ஓரத்தில் குழிபறித்து[1] எனக்கு வையுங்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு செய்யப்பட்டதைப் போன்று செங்கற்களை ஆக்கு(நட்டுவையு)ங்கள் என எந்த நோயினால் இறப்பெய்தினாரோ அப்போது ஸஅது பின் அபீவக்காஸ் ரளியல்லாஹு அன்ஹு கூறினார் என ஆமிர் பின் ஸஅது ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

குறிப்பு : 1 கப்ரின் உள்ளே ஒரு ஓரப்பகுதியை மய்யித்தை உள்ளே வைத்து அதன் ஓரத்தை செங்கற்களால் அடைத்து விட்டு பின்னர் மண்ணைத்தள்ளி குழியை மூடிவிடுவதாகும். இவ்வகை குழிக்குப் பெயர்தான் அரபியில் ‘லஹத்‘ எனக்கூறுவர். இவ்வகை குழியை தனக்கு தோண்ட வேண்டுமென ஸஅது பின் அபீவக்காஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஸஹாபா (ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மஈன்களின் ஏகோபித்த முடிவின்படி இவ்வகைக் குழியைத்தான் தோண்டி அடக்கம் செய்தனர். அவர்களுடைய கப்ரின் ஓரத்தை அடைக்க,

வைக்கப்பட்ட செங்கற்களின் எண்ணிக்கை ஒன்பதாகும்.
ஷரஹ்நவவீ பாகம் 7, பக்கம் 34

கப்ருக்களை சமமாக ஆக்க வேண்டுமென்ற கட்டளை பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 488

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எதைச் செய்ய என்னை அனுப்பினார்களோ? அதைச்செய்ய உன்னை நான் அனுப்ப வேண்டாமா? (அதுதான்) "உருவங்களை, சிலைகளை அழிக்காமல் விட வேண்டாம் என்றும், உயரமான கப்ருக்களை சமமாக ஆக்காமல் விட வேண்டாம்" என்றும் எனக்கு (அபுல் ஹய்யாஜ் அல் அஸதிய்யு) அலிபின் அபீதாலிப் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூல் ஹய்யாஜ் அல் அஸதிய்யு ரளியல்லாஹு அன்ஹு

கப்ருகள் மேல் கட்டிடம் கட்டுவதும் சுண்ணாம்பு பூசுவதும் வெறுக்கத்தக்கதாகும் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 489

"அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், கப்ருக்கு சுண்ணாம்பு பூசுவதையும், அதன்மீது உட்காருவதையும், அதன்மீது கட்டிடம் கட்டுவதையும் தடுத்துள்ளனர்"

அறிவிப்பவர் : ஜாபிர் ரளியல்லாஹு அன்ஹு

ஒரு மனிதர் இறப்பெய்திவிட்டால் அவரது இருப்பிடம் காலையிலும் மாலையிலும் அவருக்குக் காட்டப்படுகிறது என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 490

நிச்சயமாக உங்களில் ஒருவர் இறப்பெய்திவிட்டால் அவரது இருப்பிடம் (எது என) காலையிலும் மாலையிலும் அவருக்கு காட்டப்படுகிறது. அவர் சுவனவாசியாக இருப்பின் சுவனவாசிகளில் (காட்டப்படுகிறது). அவர் நரகவாசிகளில் இருப்பின் நரகவாசிகளில் (காட்டப்பட்டு) மறுமை நாளைக்காக

அவனின்பால் அல்லாஹ் உன்னை எழுப்பும் வரையிலும் இதுவே உனது இருப்பிடம் எனக் கூறப்படும்.

அறிவிப்பவர் : இப்னு உமர் ரளியல்லாஹு அன்ஹுமா

அடியான் கப்ரில் வைக்கப்பட்டிருந்தால் இரு மலக்குகள் கேள்வி கேட்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 491

நிச்சயமாக, அடியான் அவனது கப்ரில் வைக்கப்பட்டு(விட்டால்) அவனது தோழர்களெல்லாம் திரும்பிவிடின் (திரும்பிச் செல்லும் போது) அவர்களது செருப்பின் காலடி ஓசைகளை. நிச்சயமாக உறுதியாகவே அவர் (அடக்கம் செய்யப்பட்ட மனிதர்) கேட்கிறார். (மற்றொரு அறிவிப்பில் அவர்கள் திரும்பிவிடுவார்களாயின் என்று உள்ளது.) அவரிடம் இரு மலக்குகள் வந்து அவரை உட்காரவைக்கின்றனர். அம்மனிதரைப்பற்றி நீ என்ன சொல்லிக்கொண்டிருந்தாய் என அவரிடம் அவ்விருவரும் கேட்பார்கள். (அப்போது) முஃமினானவர் நிச்சயமாக, "அவர் அல்லாஹ்வின் அடியார் என்றும், அவனுடைய தூதர் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன்" எனக்கூறுவார். (அப்போது) அவருக்கு நரகத்தில் (இருந்த) உனது இருப்பிடத்தைப் பார். அதை சுவனத்தில் உனது இருப்பிடமாக அல்லாஹ் மாற்றிவிட்டான். அவ்விரண்டு(இருப்பிடங்களையு)ம் அவர் காண்பார் என அல்லாஹ்வின் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள். அவரது கபர் எழுபது முழம் அளவிற்கு விஸ்தரிக்கப்படும். (மறுமை நாளைக்காக) அவர்கள் எழுப்பப்படும் வரை அதன்மீது பச்சை பசுமையாக ஆக்கப்படும் (நிரப்பப்படும்) என நமக்குக் கூறப்பட்டது என கதாதா ரளியல்லாஹு அன்ஹு கூறுகிறார்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு

விசுவாசங் கொண்டவர்களை நிலையான கூற்றைக் கொண்டு இம்மை வாழ்க்கையிலும் மறுமையிலும் நிலைப்படுத்திவைக்கிறான் என அல்லாஹ்வின் கூற்றானது நிச்சயமாக அது 'கப்ரிலாகும்' என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 492

விசுவாசங் கொண்டவர்களை நிலையான சொல்லைக்கொண்டு அல்லாஹ் நிலைப்படுத்தி வைக்கிறான் என்ற அவனின் கூற்று, கப்ரில் வேதனைப்பற்றி (அது உண்டென நிரூபணம் செய்ய) இறங்கியதாகும் என நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக பராஉ பின் ஆஜிப் ரளியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்.

கப்ரில் வைக்கப்பட்ட அவரிடம் உமது இரட்சகன் யார்? எனக்கேட்கப்படும். அதற்கவர் என்னுடைய இரடசகன் அல்லாஹ் என்றும், எனது நபி முஹம்மது ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் எனவும் கூறுவார். அதுதான் விசுவாசங்கொண்டவர்களை “நிலையான கூற்றைக் கொண்டு இம்மை வாழ்க்கையிலும் மறுமையிலும் அல்லாஹ் நிலைப்படுத்தி வைக்கிறான்” என்ற கண்ணியமும் மகத்துவமும் பொருந்திய அல்லாஹ்வின் கூற்றாகும்.

அறிவிப்பவர் : அல்பராஉ ஆஜிப் ரளியல்லாஹு அன்ஹு

கப்ரின் வேதனை - அதை விட்டும் காக்கத் தேடுவது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 493

ஒரு சமயம் ‘பனின் நஜ்ஜாரு‘க்குரிய தோட்டத்தில் நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களுக்குரிய கழுதையின் மீது அமர்ந்திருந்தனர். அ(க்கழுதை)து அவர்களைச் சாய்த்து கீழே தள்ளிவிட எத்தனித்தது. அங்கே ஆறு அல்லது ஐந்து அல்லது நான்கு கப்ருக்கள் இருந்தன. (ஜுரைரிய்யு இவ்வாறு தான் கூறுகிறார்) (அப்போது) நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் “இந்த கப்ருகளுக்குரியவர்ள் யாவர் என யாருக்கு தெரியும் எனக்கேட்டனர். (அப்போது) ஒரு மனிதர் ‘நான்‘ (எனக்குத் தெரியும்) என்றார். “இவர்களெல்லாம் எப்பொழுது இறப்பெய்தியவர்கள்” எனக்கேட்டார்கள். (அதற்கவர்) இவர்களெல்லாம் இணை வைக்கக்கூடிய (அறியாமைக்) காலத்தில் இறப்பெய்திவிட்டனர் என்றார். (அதற்கு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) நிச்சயமாக

இந்த சமூகத்தவர்கள் அவர்களது கப்ரில் சோதனைக்குள்ளாக்கப்படுகிறார்கள். 'நீங்களும் அடக்கம் செய்யப்படாமல் இருக்க மாட்டீர்கள்' என்பதை பற்றி நான் பயப்படாவிட்டால் கப்ரின் வேதனையிலிருந்து எதை நான் செவியுறுகிறேனோ உங்களுக்கும் கேட்கவைக்கும் படியாக அல்லாஹ்விடம் நிச்சயமாக 'துஆ' செய்திருப்பேன் எனக்கூறினார்கள். அதன்பிறகு எங்களை நோக்கி வந்து "நரக வேதனையிலிருந்து அல்லாஹ்வை கொண்டு காவல் தேடுங்கள்" எனக் கூறினர். (அப்போது) அவர்கள் 'அல்லாஹ்வைக் கொண்டு நரக வேதனையிலிருந்து நாங்கள் காக்குமாறு கார்மானம் தேடுகிறோம்' என்றனர்.

"கப்ரின் வேதனையிலிருந்து அல்லாஹ்வைக் கொண்டு கார்மானம் தேடுங்கள் என (நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள்) கூறினார்கள்". (அதற்கு) அவர்கள் "கப்ரின் வேதனையிலிருந்து அல்லாஹ்வைக் கொண்டு நாங்கள் காக்கத் தேடுகிறோம்" எனக் கூறினார்கள்.

"வெளியாகி இருக்கின்ற, இன்னும் மறைந்திருக்கின்ற குழப்பங்களிலிருந்து காக்கத் தேடுங்கள்!" என்றனர். (அதற்கவர்கள்) வெளியாகி இருக்கின்ற, மறைந்திருக்கின்ற எல்லாக் குழப்பங்களிலிருந்தும் அல்லாஹ்வைக் கொண்டு நாங்கள் காக்கத் தேடுகிறோம்" என்றனர்.

தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்து அல்லாஹ்வைக்கொண்டு காவல் தேடுங்கள் என்றார்கள். (அதற்கவர்கள்) தஜ்ஜாலின் குழப்பங்களிலிருந்து அல்லாஹ்வைக் கொண்டு காவல் தேடுகிறோம் என்றனர்.

அறிவிப்பவர் : ஜைதுபின் தாபித் ரளியல்லாஹு அன்ஹு

யூதப்பெண், அவள் கப்ரில் தண்டனை கொடுக்கப்படுகிறாள் என்பது பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 494

சூரிய அஸ்தமனத்திற்குப்பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் (வெளியில்) புறப்பட்டுச் சென்றார்கள். (சென்ற அவர்கள்) ஒரு சப்தத்தைக்

கேட்டுவிட்டு “யூதப்பெண் ஒருத்தி, அவள் கப்ரில் வேதனை செய்ய(தண்டிக்க)ப்பட்டுக் கொண்டிருக்கிறாள்” எனக் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ அய்யூப் ரளியல்லாஹு அன்ஹு

### கப்ருகளை ஜியாரத்து செய்வதும் அதை உடையவர்களுக்காக பாவமன்னிப்புக் கேட்பதும் பற்றிய பாடம்.

**ஹதீஸ் எண் : 495**

நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்களின் அன்னையாரின் கப்ரை ஜியாரத்துச் செய்தார்கள். (அப்போது) அவர்கள் அழுதார்கள், அவர்களைச் சுற்றி இருந்தவர்களையும் அழச்செய்தார்கள்! (அதன்பின்)

“எனது இரட்சகனடம் (என் அன்னை) அவர்களுக்காக பாவமன்னிப்புக் கேட்க நான் அனுமதி கோறினேன். எனக்கு அவன் அனுமதி வழங்கவில்லை. அவர்களது கப்ரை காண (சந்திக்க) அனுமதி கேட்டேன், எனக்கு அனுமதியளித்தான். ஆகவே கப்ருகளை ஜியாரத்துச் செய்யுங்கள். நிச்சயமாக அது மரணத்தை நினைவுபடுத்துகிறது” எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

**ஹதீஸ் எண் : 496**

“கப்ருகளை ஜியாரத்துச் செய்வதிலிருந்து உங்களை நான் தடுத்திருந்தேன். அவைகளை ஜியாரத்துச் செய்யுங்கள். மூன்று நாட்களுக்கு மேல் குர்பானி இறைச்சிகளை சேமித்து வைக்கவேண்டாம் என உங்களை நான் தடுத்திருந்தேன். உங்களுக்கு எவ்வாறு தோன்று (வசதிப்படு)கிறதோ அவ்வாறு சேமித்து வைத்துக்கொள்ளுங்கள். சில பாத்திரங்கள், அல்லாதவற்றில் பழங்களை ஊறவைப்பதை நான் தடுத்திருந்தேன். எல்லாப்பாத்திரங்களிலும் (வைத்துப்) பாருங்கள், போதைத்தருபவற்றை அருந்தாதீர்கள்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

கப்ராளிகளுக்கு ஸலாம் கூறுதல், அவர்களின் மீது அருள்கோரல், அவர்களுக்காக பிரார்த்தித்தல் ஆகியவை பற்றிய பாடம்.

ஹதீஸ் எண் : 497

என்னைப்பற்றி, என் தாயைப்பற்றி ஒரு செய்தியை அறிவிக்கட்டுமா?என முஹம்மது பின் கைஸ் என்பவர் ஒரு நாள் கூறினார். (அதைக் கேட்ட நாங்கள்) அவரை ஈன்ற தாயைப்பற்றிய செய்தியைத் தான் அவர் நாடு(சொல்ல நினைக்கி)றார் என நாங்கள் நினைத்தோம். (ஆனால் அவர்) என்னைப்பற்றி, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி உங்களுக்கு செய்தியை அறிவிக்கட்டுமா? என ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள் எனக்கூறினார். (அதற்கு) நாங்கள் ஆம்! எனக் கூறினோம். அதற்கவர்,

எனது இரவாக (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) தங்கும் முறையாக இருந்த போது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் என்னுடன் (தங்கி) இருந்தனர். பின் (வெளியில் சென்று) திரும்பி (வந்து) தங்களது மேலாடையை (கழற்றி) வைத்து விட்டு, தங்களது இரு காலனிகளையும் கழற்றி தங்களது கால்களுக்கு கீழ் வைத்தனர். தங்களது மேலாடையின் ஒரு பகுதியை தங்களது (படுக்கையின்) விரிப்பில் விரித்துவிட்டு படுத்துக் கொண்டனர். கொஞ்ச நேரமல்லாதே தவிர (அவர்கள்) படுத்திருக்கவில்லை. (பின்) நான் தூங்கிவிட்டதாகவும் எண்ணினர். (அதனால்) மெதுவாக தங்களது மேலாடையை எடுத்துக் கொண்டு மெதுவாக காலணிகளையும் மாட்டிக்கொண்டு, கதவை மெதுவாக திறந்து கொண்டு வெளியேறினர். அதன்பின் கதவையும் மெதுவாக சாத்திவிட்டனர்.

(உடனே நான் எழுந்து) என் சட்டையை நான் போட்டுக்கொண்டு (முகத்தையும்) மூடிக்கொண்டு என் கீழ் ஆடை(யை சரி செய்து அதன்) மூலம் என்னை மறைத்துக் கொண்டு அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றி நடந்தேன். அவர்கள் 'பகீ'யை வந்தடைந்து அங்கே நீண்ட நேரம் நின்றார்கள். அதன்பிறகு தங்களது கைகளை மும்முறை உயர்த்திவிட்டுத் திரும்பினார்கள்.

நானும் திரும்பினேன். அதன்பின் (அவர்கள்) துரிதமாகச் சென்றார்கள். நானும் துரிதமாக (பின் தொடர்ந்து) சென்றேன். இன்னும் வேகமாக (அவர்கள்) நடந்தார்கள். நானும் (அதே போன்று) வேகமாக நடந்தேன். அதைவிட வேகமாக நடந்தார்கள். நானும் அதை விட வேகமாக நடந்து அவர்களை முந்திக்கொண்டு (வீட்டினுள்) நுழைந்து நான் படுத்துக் கொண்டேன். (அப்போது) அவர்களும் (வீட்டினுள்) நுழைந்தனர். வேகமாக நடந்ததின், காரணமாக (எனக்கு) மூச்சு இறைக்க, வயிறு மேலும் கீழும் ஏறி இறங்குவதைப் பார்த்து, வேகமாக ஓடிவந்தவருக்கு ஏற்பட்ட நிலை போன்றிருந்ததைப் பார்த்து, ஆயிஷாவே! உனக்கு என்ன நேர்ந்தது? எனக்கேட்டார்கள். (அதற்கு) நான் ஒன்றுமில்லை எனக் கூறினேன். (அதற்கவர்கள்) நிச்சயமாக நீ எனக்கு (இது பற்றி) தெரிவிக்க வேண்டும். இல்லையென்றால் செய்திகளை அறிந்தவனும் நுட்பமானவனுமான அவன் (அல்லாஹ்) எனக்கு அறிவிப்பான் என்றனர்.

(உடனே) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களே! எனது தந்தையும் தாயும் தங்களுக்கு அர்ப்பணம் என நான் கூறிவிட்டு (நடந்த) விஷயத்தைக் கூறிவிட்டேன் என (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா) அவர்கள் கூறுகிறார்கள். (அப்போது) எனக்கு முன்பாக நான் கண்ட கருப்பு உருவம் நீ தானே எனக்கேட்டார்கள். (அதற்கு) நான் ஆம்! என்றேன். (அப்போது) தங்களது முன்கையினால் எனது நெஞ்சின் மேல் ஒரு அடி அடித்து விட்டார்கள். அது என்னை நோவினை செய்துவிட்டது. அதன்பிறகு, அல்லாஹ்வும் அவனது தூதரும் உனக்கு அநீதி இழைப்பார்களென நீ எண்ணி விட்டாயா? எனக்கேட்டனர். ஜனங்கள் எவ்வளவு தான் மறைத்தாலும் அல்லாஹ் நிச்சயமாக அறிந்து கொள்வான் என (ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹு) கூறினார்கள். (அதற்கு நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம்) அவர்கள், ஆம்! என்று கூறிவிட்டு, நிச்சயமாக ஜிப்ரில் அலைஹிஸலாம் அவர்கள் உன்னைப்பார்த்த சமயம் என்னிடம் வந்து என்னை அழைத்துவிட்டு உன்னை விட்டும் அவர் தன்னை மறைத்துக் கொண்டார். அவருக்கு நான் பதில் கூறினேன். ஆனால், அதை

நான் உன்னிடமிருந்து மறைத்து விட்டேன். நீ உறங்குவதற்கு துணிகளை எடுத்துவிட்ட சமயத்தில், அவர் (ஜிப்ரீல்) உள்ளே நுழையத்த தயாராக இல்லை. (மேலும்) நான், நீ தூங்கிவிட்டதாக எண்ணி உன்னை எழுப்புவதை நான் வெறுத்தேன். மேலும் என்னைப் பார்த்து வெறுப்பாகிவிடுவாயோ? எனவும் (நான்) பயந்தேன் எனக்கூறினார். அதன்பிறகு, நிச்சயமாக உமது இரட்சகன் ‘பகீஉ‘வாசிகளிடம் வந்து அவர்களுக்காக பாவமன்னிப்புக் கேட்குமாறு கட்டளையிடுகிறான் எனவும் கூறினார். அப்போது, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்களுக்கு (பகீஉ வாசிகளுக்கு) நான் என்ன கூற வேண்டுமெனக் கேட்டேன்? அதற்கவர்கள் “அஸ்ஸலாமு அலா அஹ்லியத்தியாரி மினல் மூஃமினீனவல் முஸ்லிமீன வயர்ஹமல்லாஹுல் முஸ்தக்திமீன மின்னாவல் முஸ்தஉகீரீன வஇன்னா இன்ஷா அல்லாஹு பி(க்)கும் லாஹிகூன்” எனக்கூறினார்கள்.

## கப்ருகளின் மீது அமர்வதும் அதன்மேல் தொழுவதும் பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 498

உங்களில் ஒருவர் நெருப்பின் மீதமர்ந்து அவரது உடை எரிந்து அவரது உடல் வரை அந்நெருப்பு வந்து விடுவது, கப்ரின் மீது அமர்வதைவிட அவருக்கு அது சிறந்ததாகும் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு

### ஹதீஸ் எண் : 499

“கப்ரின் மீது உட்காரதீர்கள், அதன்பால் தொழாதீர்கள்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூமர்ஸத் அல் கனவீ ரளியல்லாஹு அன்ஹு

## நல்ல மனிதர் அவரைப்பற்றி புகழப்படுவது பற்றிய பாடம்.

### ஹதீஸ் எண் : 500

ஒரு மனிதர் நலவானவற்றை செய்கிறார். அவரை மனிதர்கள் புகழ்கிறார்கள், அவரைப்பற்றி எனக்குச் சொல்லுங்கள் என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “அது மூஃமீனான மனிதருக்கு துரிதமாகக் கிடைக்கும் சுபச் செய்தியாகும்” எனக்கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூதர்ரு ரளியல்லாஹு அன்ஹு

| | | |
|---|---|---|
| | | |